# மனிதரில் எத்தனை நிறங்கள்!

(சொல்லோவியம்)

வைரமுத்து சிவராசா

ஜேர்மனி / 2019

வெளியீடு: ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம்

# மனிதரில் எத்தனை நிறங்கள்

(சொல்லோவியம்)

•

என்னை உருவாக்கிய பெற்றோருக்கு
இம்மலர் சமர்ப்பணம்

## வைரமுத்து சிவராசா

"மண்" சஞ்சிகை ஆசிரியர்
புகலிடச்சாதனையாளர்
யேர்மனி

17.05.2019

28/6/19

யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்க வெளியீடு:

V. Sivarajah
Am Windhövel 18a
47249 Duisburg
Germany
Tel: +49 203 8073898
E-Mail: v.sivarajah@arcor.de

# வாழ்த்துரை...



உடுவை.எஸ்.தில்லை நடராசா

தமிழ்மணி, கலைமணி
நாடகச்செம்மல், கலாகீர்த்தி

முன்னாள் அரசாங்க அதிபர்
கல்விஅமைச்சின் முன்னாள்
மேலதிகச் செயலாளர்

## வலிமை மிக்க சமுதாயம் அமைவதற்கான பதிவுகள் "மனிதரில் எத்தனை நிறங்கள்"

பிறந்து வளர்ந்த நாட்டிலிருந்து புலம் பெயர்ந்த பலர் புலம் சிதறி வாழும் நாடுகளில் தமக்குத்தேவையானதும், வசதியானதுமான வாழ்வை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வருகையில் நண்பர் திருமிகு. வைரமுத்து சிவராசா தான்பிறந்த மண்ணையும் அங்கு வாழும் மக்களையும் இடைவிடாமல் நேசித்துக்கொண்டிருக்கிறார் என்பதையும், தாய்மண்ணில் அவர்கள் வாழ்வை வளமாக்க எவ்வகையான பங்களிப்பை தான் வழங்கலாம் என்பதையும் யோசித்திக் கொண்டிருக்கிறார் என்பதையும் அவருடன் வைத்திருக்கும் நேரடித்தொடர்புகள் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது..

யேர்மனிக்குச் செல்வதற்கு முன்பாக சிவராசாவைப் பற்றியும் அவரது இலக்கியப் பங்களிப்பு தொடர்பாகவும் ஓரளவு தான் அறிந்து கொண்டேன். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பாக யேர்மனிக்கு முதல் தடவையாக யேர்மன் தமிழ் கல்விச் சேவை விழாவுக்கு சென்றிருந்த வேளை என்னோடு மிக மிக அன்பாகவும் மரியாதையாகவும் பழகி என்னைத் தனது இல்லத்துக்கு அழைத்துச் சென்றார். அவர் தொடர்ச்சியாக வெளியிட்டு வரும், கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழாக வெளிவரும் "மண்" சஞ்சிகை என்னைப் பெரு வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியது. புலம் பெயர்ந்து வாழும் திறமையான புலமையாளர்களை இனம் கண்டு அவர்களோடு இடையறாத தொடர்பு கொண்டு, பொதுவாக இளைஞர்களுக்கும்

குறிப்பாக வளரும் இளஞ்சிறார்களுக்கும் பெரிதும் பயன்தரத்தக்க படைப்புகளை பெற்று "மண்" சஞ்சிகையின் மதிப்பையும் தரத்தையும் உயர்த்தி வெளியிட்டு வருகிறார். இது வரை வெளியான 195 இதழ்கள் உலகின் பல பகுதிகளுக்குச் சென்றதும் சாதனைதான்.

திருக்குறள் போன்ற அறிவு நூல்களுக்கும் உடல் நலம் உள நலம் ஆகியவற்றுக்கு முக்கியம் அளிக்கும் கதை கட்டுரை கவிதைகளை வெளியிட்டு வருவதோடு, உண்மையாக உதவிகள் தேவைப்படுவோருக்கும் நிதி உதவி உட்பட வேறும் பல உதவிகளும் செய்து வருகிறார். குறிப்பாக வன்னிப்பகுதியில் இயங்கிக் கொண்டிருக்கும் ஆதரவற்றோர் அமைப்புகளுக்கு பலவகையாலும் உதவிக்கரம் நீட்டிக் கொண்டிருப்பதை கிளிநொச்சி வவுனியா மன்னார் போன்ற இடங்களுக்கு கடமைநிமித்தம் சென்றபோதும் தெரிந்து கொள்ள முடிந்தது.

கிடைப்பதையும் கொடுப்பதையும் சரியாகவும் தெளிவாகவும் (Accountability and Transparency) பேணி வருவதைக்குறிப்பிட்டே ஆக வேண்டும். ஏனென்றால் சிலர், யார் யாருக்கெல்லாமோ கொடுக்கப்போகின்றோம் என உதவிகளைப் பெற்றாலும் யாருக்கு கொடுத்தோம் என்பதை இரகசியகமாகவே வைத்திருப்பார்கள். சிவராசா அதிலிருந்து மாறுபட்டவர். கொடுக்கல் வாங்கலை இருபகுதியினரும் அறியத்தக்கவகையில் கடிதங்களோடும் படங்களோடும் வெளிப்படுத்தி வருகிறார்.

"மனிதரில் எத்தனை நிறங்கள்" என்ற தலைப்பைக் கொண்ட இந்நூலில் வை.சிவராசாவால் எழுதப்பட்ட ஐம்பது ஆக்கங்களும் அருமையான படைப்புகள். எனது பார்வையில் தனியான நூல் தொகுப்பு ஒன்றில் இடம் பெற்ற பயனுள்ள பல்சுவை மிக்க பதிவுகளாக இவற்றை கருதவேண்டும் போலத் தோன்றுகிறது. அவரது எழுத்துக்களில் வரும் மாந்தரையும் சம்பவங்களையும் பார்க்கின்றபோது எங்கள் வாழ்விலும் சந்தித்த சிலரும் அவர்களின் நோக்கும் போக்கும் நினைவுக்கு வருவது இயல்பாகவே தெரிகிறது.

"பெற்றோரே என் தெய்வங்கள்" என்னும் தலைப்பிலமைந்த முதலாவது ஆக்கமே எனது உள்ளத்தை உருக்கியது. சராசரி பெண்கள் சந்தித்த நெருக்கடிகளை அப்டியே தந்துள்ளார்.- பெண்களின் வயிற்றில் ஒரு குழந்தை கருத்தரித்து இருக்கும். பின்னால் ஒரு வயது மூன்று வயதுப்பிள்ளைகள் தாயாரின் சேலையைப்பிடித்துக்கொண்டு நிற்பார்கள்.

இதற்கிடையில் அடுப்பில் வேகும் சோற்றில் கஞ்சியை வடித்தெடுக்க வேண்டும். வேலைக்களைப்பில் ஓடோடி வரும் கணவனுக்கு உணவு பரிமாறுவதுடன் அவன் தேவைகளையும் கவனிக்கவேண்டும். மற்றவர் நலன் பேணி உணவு படைக்கும் தாயாருக்கு பல வேளைகளில் எதுவுமே கிடைப்பதில்லை.

இப்படியாக பல உண்மைச்சம்பவங்களை இந்நூலில் காணலாம் இது மட்டுமல்லவே- ஒரு மகள் கல்யாணமாகி கருவுற்றிருப்பாள்- இன்னொரு மகளுக்கு மாப்பிள்ளை தேடும் படலம், சின்ன மகள் பூப்படைந்திருப்பாள். அவளின் தேவைகளையும் நிறைவேற்றிக்கொண்டு மற்றதையும் பார்க்க வேண்டும். அக்காலத்தில் நிலவிய சமூக அநீதிகளையும் சாதிய ஒடுக்கு முறைகளையும் உள்ளபடி காட்டுகின்றார்.

உண்மையில் அக்கால பாடசாலை ஆசிரியர்களின் பண்பு,ஆற்றல்-அறிவு-ஆளுமை-பழக்க வழக்கங்கள், சமூக நலன் நோக்கிய அன்புடன் சேர்ந்த கண்டிப்பு எல்லாம் அவர்களை மாதிரியாக் கொண்டு (Role Model) பின்பற்றத்தக்கவை. சிவா குறிப்பிடும் "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு", "தாய் பிள்ளை என்றாலும் வாயும் வயிறும் வேறு", "உறவு உறவு என்றாலும் பறியில் கை வையாதே" , "அண்ணன் தம்பி என்றாலும் எண்ணிக்கொடு" ஆகிய அந்தக்கால வாக்கியங்கள் மட்டுமல்ல-வாலிப வயதுக்கோளாறால் ஏற்பட்ட வருத்தங்கள் பூவரசம் தடியால் பொலிசார் வழங்கிய தண்டனைகள் எல்லாவற்றையும் எழுதி, அக்கால நிகழ்வுகளை மனத்திரையில் சித்திரமாக்கிக் காட்டுகின்றார். சிவாவின் தனித்துவமான தமிழ் நடையை மட்டுமல்ல, ஆங்காங்கே தொட்டுக்காட்டும் நகைச்சுவையும் நன்கு ரசிக்கும்படியாக அமைந்துள்ளது.

சற்று முன்கோபியான நிர்வாக அதிகாரி,முன்னாள் அரசாங்க அதிபர் மார்க்கண்டு ஐயா சிவாவின் நெஞ்சில் வாழும் வழிகாட்டி. லண்டனில் வாழும் திருமிகு மார்க்கண்டுவுடன் அடிக்கடி தொலைபேசி மூலம் அவரது சுகநலன் விசாரிக்கும் சிவா, யேர்மனிக்குச் செல்லும் வேளைகளில் அவருக்கும் எனக்கும் தொடர்புகளை எற்படுத்தி எங்களைத் திருப்தியடைய வைப்பதும் அவரது உயர்ந்த பண்புக்கு அடையாளம்.

இவ்வுலக வாழ்க்கைக்கு பணம் தேவைதான் என தெளிவாகச் சொல்லும் நூலாசிரியர்-"பணம் பணம்" என்று அலைந்து அலங்கோலப்படுவோரையும், திருமதியாக வாழ வைக்க வேண்டிய பெண்களை, செல்வியாக கொடுமைப்படுத்தும் சம்பவங்களை சுட்டிக்காட்டி, சமூகப் பொறுப்புகளை உயர்த்தும் அதே வேளை ,சாத்திரம் சாத்திரம் என நேரத்தையும் பணத்தையும் விரயம் செய்வோரையும் சாடுகின்றார்.

கல்விக்கும் உழைப்புக்கும் மதிப்பு கொடுக்கத்தூண்டும் வைரமுத்து சிவராசாவின் எழுத்துக்கள் மாற்றுத்திறனாளிகளுக்கும் வலிமையும் வாழ்வும் வழங்கும்படி வற்புறுத்துகின்றார்.ஒரே வார்த்தையில் சொல்வதானால் நம்மோடு வாழ்ந்த பல நிறத்தவரை மனக்கண்முன் நிறுத்தி, இப்போது எம்மத்தியில் உள்ளோரையும் உள்ளவற்றையும் அவதானித்து வருங்காலத்தில் சமூகத்துக்கு பயனுள்ளவரகளாக வருவதை உறுதிப்படுத்துவதே உயர்ந்த வாழ்வு. துணிந்து பல தகவல்களைப் பதிவாக்கிய வைரமுத்து சிவராசாவுக்கு மனம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்து எதிர்வரும் காலத்தில் இன்னும் பல பணிகள் ஆற்றிட அன்புடன் கூடிய வாழ்த்துக்கள்!..

## E.Ratnam



Justice of Peace
Senior Lecturer Gr.1
B.com (Hons) H.N.Dip.Acc.MAAT
N.C.Bs, M.Phil, Reding PhD.
University of Jaffna


## ஆசியுரை...

மனித வாழ்க்கையில் அவர் இருக்கின்ற வாழ்க்கை வடிவத்தினைத் தீர்மானிக்கிறது. வாழ்வின் நோக்கங்களை நிர்ணயிக்கின்றது. தமிழ் மக்கள் இலங்கையில் ஏனைய இனங்களைப்போல சம உரிமையுடன் வாழவேண்டும் என்பதற்காக 1948ல் சுதந்திரமடைந்திருந்ததிலிருந்து ஜனநாயக வழிகளில், தார்மீக நீதியில் ஆயுதப்போராட்ட வடிவில் தந்திரோபாய அரசியல் போன்ற நிலைகளில் மக்களும் இளைஞர்களும் அரசியல்வாதிகளும் இணைந்து உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் போராடினார்கள்.

இந்த அணுகுமுறைகளால் தமிழினம் பல்வேறு துன்பங்களையும் இழப்புக்களையும் அனுபவித்தமை வரலாறாகும். இதனால் தமிழர்கள் பல்வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர். இன்று இவர்களை மூன்று நிலைகளில் வகுத்து நோக்கலாம். முதலாம் நிலையினர் 60 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் பொருளாதார நலன்களைப் பாதுகாக்கும், அதேவேளை தனது இனத்தின் இழப்புக்களுக்கு தங்களால் செய்யக்கூடிய கடமைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இரண்டாம் நிலையினர் அந்த நாடுகளில் ஓரளவு மொழி அறிவைப்பெற்று சாதாரண பதவிகளிலும் நடுத்தரப் பதவிகளிலும் பெரும்பாலானோர் பணியாற்றுகின்றார்கள். இவர்கள் உறவுகளுடன் ஓரளவு தொடர்பை வைத்திருக்கின்றார்கள். மூன்றாம் நிலையினர் சிறுவயதில் வெளிநாட்டிற்குச் சென்றவர்களாகவோ அல்லது அங்கே பிறந்து வளர்ந்தவர்களாகவோ இருக்கின்றனர்.

இவர்கள் குறிப்பிட்ட நாட்டின் மொழியைக் கற்றவர்களாகவும் அந்த நாட்டுக் கலாச்சார விழுமியங்களைப் பின்பற்றுபவர்களாகவும் பெரும்பாலானோர் இருக்கின்றனர். பல துறைகளில் கற்றவர்களாகவும் இருக்கின்ற இவர்கள் எமது நாட்டின் உறவுகளுடன் தொடர்புகளைப் பேணுவதற்கு மொழியும் நேரமும்

தடையாக இருக்கின்றன. எமது கலாச்சார விழுமியங்களைப் பின்பற்றுவதில் ஆர்வம் மிகக் குறைந்தளவில் காட்டுகின்றனர். புலம்பெயர் தமிழர்களில் முதலாம் நிலையிலுள்ள திரு வைரமுத்து சிவராசா அவர்கள் நாவற்குழியில் பிறந்து வளர்ந்து யேர்மனியில் வசித்துவருகிறார். கடந்த 30 வருடங்களாக தமிழ்மக்கள் எதிர் நோக்குகின்ற சவால்கள் அவலங்கள் யாவற்றையும் அறிந்தவராகவே இருக்கின்றார். யாழ்ப்பாணத்தில் வசித்தபோது கூட்டுறவுத்துறையில் பணியாற்றி நிர்வாகிகள், மக்கள், அங்கத்தவர்கள் ஆதரவைப் பெற்றவர். ஈழநாடு பத்திரிகையிலும் 10 வருடங்கள் கடமைபுரிந்தவர் என்பதை நான் அறிவேன்.

பாதுகாப்புக்கருதி யேர்மனிக்குப் புலம்பெயர்ந்தாலும் அங்கு பல பதவிகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றி இருக்கின்றார்."மண்" என்ற பெயர்கொண்ட சஞ்சிகையின் பிரதான ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகப் பல வருடங்களாக இருந்து வருகின்றார். தமிழ்க் கல்விச்சேவையின் உறுப்பினராகப் பணிபுரிகின்றார். போரினால் அவதியுறும் நலிந்த தாயக மக்களுக்குத் தமது சஞ்சிகையூடாக உதவிவருகின்றார்.

சமூகப்பணிகளுடன் கல்வி, எழுத்து, சிறுகதை, கட்டுரை, கவிதை, இலக்கியம் போன்ற துறைகளில் தன்னால் இயன்ற சேவைகளையும் பங்களிப்புகளையும் வழங்கிவருவது பெருமைக்குரிய விடையமாகும். அந்தவகையில் "மனிதரில் எத்தனை நிறங்கள்" என்ற நூல்மூலம் 50 அம்சங்களை உள்ளடக்கி வெளிவந்திருப்பது பாராட்டுக்குரிய விடையமாகும். இவருடைய இந்த நூல் எமது நாட்டில் மட்டுமல்ல புலம்பெயர் நாடுகளிலும் வரவேற்பைப் பெறும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இவரது பணிகள் சிறப்பாகத் தொடர எல்லோரது ஆதரவையும் வேண்டுவதுடன் இறைவனையும் பிரார்த்திக்கிறேன்!...

- நன்றி -

இ.இரத்தினம்

சிரேஸ்ட விரிவுரையாளர்,


யாழ் பல்கலைக்கழகம்

**01.03.2019**

தமிழ் எழுத்தாளர் சங்கம் - யேர்மனி

**Tamilischer Schriftsteller Verein – Deutschland**

**Tamil Writers Association – Germany**



## வாழ்த்துரை...

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகைசெய்தல் வேண்டும்-என்ற மகாகவி சுப்ரமணியபாரதியின் பேரவாவை, உலகளவில் இன்று நிறைவேற்றிக்கொண்டிருக்கின்ற பலரில் புலம்பெயர்ந்து வந்தபின்பும் தனது இலச்சியமாக பயணித்துவருபவர்களில் திரு.வைரமுத்து சிவராசா அவர்களும் ஒருவர் என்று இங்கு உறுதியாக்குறிப்பிடுதல் சிறப்பு. கடந்த முப்பது ஆண்டுகளுக்குமேலாக இலக்கியம் படைத்துவருகின்ற திரு.சிவராசா அவர்களின் மூன்றாவது படைப்பாக இந்நூல் வெளிவருவதில் மிகவும் மகிழ்வெய்துவதுடன், இவரின் இந்நூல் யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வெளியீடாக உங்கள் கரங்களில் தவழ்வதையிட்டு பெருமையும் கொள்ளுகின்றேன்.

இதனைத்தவிர யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைமைப் பொறுப்பில் நீண்டகாலமாகப் பணியாற்றி, செவ்வனே பலவேலைத்திட்டங்களையும் சிறப்புற நிறைவேற்றியுள்ளதுடன் சங்கத்தின் ஆலோசகராக தொடர்ந்தும் பயணித்துக்கொண்டிருக்கும் திரு.வை.சிவராசா அவர்களின் இந்நூலுக்கு வாழ்த்துரை வரைவதில் பெருமையும் பெருமகிழ்வும் கொள்ளுகிறேன்.

இவர், மண் கலையிலக்கிய சஞ்சிகையின் ஆசிரியபீடத்திலிருந்து ஆற்றுகின்ற பணிகளும் ஆசிரியதலையங்கத்தின் கீழ்வரைகின்ற பத்தி எழுத்துக்களும் மிகவும் காத்திரமானதாகவும் நிதர்சனமானதாகவும் அமைந்திருப்பதனைப் பலரும் அறிந்திருப்பார்கள். அச்சஞ்சிகையின் மூலம் கலை இலக்கியத்தோடு மனிதநேயப்பணிகளையும் மேற்கொள்ளுமிவர், ஐரோப்பிய எல்லைகளைத்தாண்டி ஆசிய அமெரிக்க அவுஸ்ரேலியக்கண்டங்களில் வாழுகின்ற தமிழுள்ளங்கள் பலரின் இல்லங்களில் இவரது எழுத்தின் வீச்சு பரவியுள்ளமை என்பது பெருமைப்படவேண்டியதொன்றாகும்.

இவரின் இந்நூலானது, கட்டுரை வடிவைத்தாண்டியும் தாண்டாமலும்: சிறுகதை மரபில் விலகியும் விலகாமலும், ஒருசொற்கோலமாக மிளிர்வதை நான் வியப்போடு பார்க்கிறேன். இதனை அழகிய சொல்லோவியம் என்று சொல்லுவதில் தவறில்லை என்றெண்ணுகிறேன். "மனிதர்களில் எத்தனை நிறங்கள்" என்ற இந்தச் சொல்லோவியத்தில், இவர் தரிசித்த மனங்களை வாசித்து அந்தந்த வர்ணங்களால் வரைந்த ஓவியமாகவே இந்நூலை நான் காண்கிறேன். மனங்களை வாசிப்பதென்பது மிக அபூர்வமான திறமையாகும்.

இது மனோதத்துவ நிபுணர்களுக்குச் சாத்தியமான விடயமாகும். இங்கு படைப்பாளியாக இலக்கியவாதியாக ஊடகவியலாளராக பரிணமிக்கும் ஒருவருக்கு அது வாய்த்திருப்பதென்பது ஆச்சரியம் பூச்சொரியும் நிகழ்வே. இங்கு திரு.வ.சிவராசா அவர்கள், தனது திறந்த உள்ளத்தில் பயணித்த மாந்தர்களின் மனங்களை வாசித்து இந்நூலில் பதியமிட்டு வியப்போடு சிந்திக்கும் வண்ணம் எம்முன் உலாவவிட்டுள்ளார். இதனை ஒரு புது முயற்சியாகவே நான் பார்த்து மகிழ்கிறேன். இதுபோன்ற இன்னும் பலமுயற்சிகளில் அவர் தொடர்ந்து ஈடுபடவேண்டுமென்ற வேண்டுகோளை முன்வைப்பதோடு, எமது சங்கத்தின் உறுப்பினர்கள் சார்பில் மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நன்றிகளோடு!...

அம்பலவன்புவனேந்திரன்

தலைவர்

ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம்

**01.04.2019**

# அணிந்துரை...



க.அருந்தவராஜா. M.Ed

ஆசிரியர் ஆலோசகர்

எழுத்தாளர்

ஜெனீவா

சுவிற்சர்லாந்து

நாடறிந்ததேசப்பற்றாளன், சமூகசேவகன், இலக்கியவாதி, சஞ்சிகை ஆசிரியரென தன்னைப் பல்வேறு தளங்களினூடாக இனங்காட்டியவரும் "மண்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திரு. வைரமுத்து சிவராஜா அவர்களின் "மனிதரில்எத்தனைநிறங்கள்" என்ற நூலுக்காக அணிந்துரை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

புலம்பெயர்ந்த வாழ்க்கையில் பணம், பொருள் பெற்றுபலம் பொருந்தி வாழ்ந்தாலும் அவர் மனங்களில் தாய் நிலம்பற்றிய ஏக்கங்களும் கவலைகளும் மனத்தைக் கசிந்துருக்கி காயப்படுத்திக் கொண்டேயிருக்கும். பலர் அந்தக்காயங்களை ஆற்றுவதற்காகப் பசுமையான நினைவுகளைத் தங்களுக்குள்ளாகவே மீட்டி மீட்டிப் பார்த்து இன்புறுவர். வேறுசிலர் அவற்றை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறிக்கூறிக் களிப்படைவர். சிலர்மட்டும்தான் நினைவுகளை கதைகளாக கவிகளாக எழுத்துருவில் மற்றவர்களின் காண்பியலுக்குக் கொண்டுவருகின்றனர். இத்தகைய காண்பியலுக்கு உள்ளாகும் எழுத்துக்களில் காலம் கடந்தும் வாழும் வரலாற்று ஆவணங்களாக தேசமெங்கும் கொண்டு செல்லப்படும். அந்தவகையில்"மனிதரில்எத்தனைநிறங்கள்" என்றநூல் காலங்கடந்தும் தேசங்கள் கடந்தும் வாழும் என்பது என்நம்பிக்கை.

சுமார் நாநூறு ஆண்டுகளுக்குமுன் தமிழ்நாட்டிலிருந்து தமிழர்கள் ஐரோப்பியர்களால் ஒப்பந்தக்கூலிகளாக உலகின் பல

நாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டனர். இன்று அவர்களில் பலர் தம்தாய் மொழியை இழந்துவிட்ட துயர நிலையை நாம்காண்கிறோம். அவர்கள் பலமாதங்களாகக் கடற்தண்ணீரில் கண்ணீர்ப்பயணங்களை மேற்கொண்டும் தமக்கு அறிமுகமில்லாத புதிய இடத்தில் புதியவாழ்க்கையை தொடங்கிய காலங்களில் எத்தனை துயரினை அடைந்திருப்பர்? அவர்களின் இரட்டை நிலை துன்பியல் வாழ்க்கையின் வரலாறுகளை எந்தவித ஆவணங்களாலும் அறியமுடியாமல் போனமை துரதிர்ஷ்டமே. இதேபோலத்தான் ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வுகளின் பின் காலப்போக்கில் வரலாறுகள் மறைக்கப்படும் அல்லது மறக்கப்படும். மறைக்கப்படுவது நினைக்கப்படுவதற்காகவே அவை எழுதப்படுகின்றன.

இன்னும் எழுபது ஆண்டுகளின் பின் புலம்பெயர்தேசங்களில் தமிழ் எழுத வாசிக்கத்தெரியாத தமிழர்கள்தான் வாழப்போகின்றார்கள் என்று அறியப்பட்டாலும் திரு. சிவராஜா போன்றோர்களின் எழுத்துக்கள் எதிர்காலத்தில் வீடுகளிலும் நூலகங்களிலும் ஒரு திண்மநிலையில் இருக்கப்போகின்றன. ஆயினும் உலகின் எந்த மொழியிலும் மொழிமாற்றம் செய்யக்கூடியநிலையில் அது திரவநிலைக்குமாறும் தன்மையைக் கொண்டிருக்கும் என்பது ஆறுதலானவிடயமாகும்.

திரு. சிவராஜா அவர்கள் இந்தநூலினூடாக தன்னுடைய வாழ்க்கையைப் பதிவுசெய்திருப்பதோடு அந்தச்சம்பவங்கள் அக்காலத்தைக் குறித்துக்காட்டும் காலக்கண்ணாடியாக விளங்கி நிற்கிறது. தன்னுள் ஒளியூட்டி வழிகாட்டிச் சென்ற செல்கின்ற பெருந்தகைகளை இந்நூலினூடாக வெளிக்காட்டுகின்றார். அந்நூலினை வாசிப்பவர்கள் அதனைப் பின்பற்றி முன்நகர்ந்து செல்லவேண்டும் என்ற விருப்பம் கொண்டுள்ளதனை அவரது எழுத்துக்கள் வெளிக்காட்டிநிற்கின்றன. பெற்றோரைப் போற்றல், சகோதரர்களிடம் அன்பு காட்டுதல், மூத்தோரை மதித்தல், கற்றோரை நாடல் போன்ற வாழ்வியல் விழுமியங்களைத் தனது வாழ்க்கை அனுபவங்களூடாக மற்றோருக்கு ஆணியடித்து ஏற்றுவது போல உறுதியாகக் கூறிச்செல்கிறார்.

இன்றைய சமூகச்சூழலில் மூத்தோரை மதிக்காமை, போதைக்கு அடிமையாதல், பாலியல் வன்கொடுமைகள் போன்ற சமூகப் பிறழ்வுகள் அதிகம் ஏற்படுவதற்கு தனிமனிதருக்கான நன்நடத்தைகளில் ஏற்பட்ட பின்னடைவே காரணமாகியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் "மனிதரில்எத்தனைநிறங்கள்" என்ற நூல் எப்படி இந்தச் சமூகத்தில் வெற்றி கொள்ளலாம் என்ற படிப்பினையை குறிப்பாக இளைஞர் யுவதிகளிடம் ஏற்படுத்தும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

நூலாசிரியர் அறிவுஜீவிகளையும், பண்புடைமை வாதிகளையும் நல்ல நண்பர்களையும் தேடிச்சென்றிருப்பது அவரது பதிவுகளில் தெரிகிறது. இந்தத் தேடல்கள் யாவும் தன்னை ஒளியூட்ட, வழிகாட்ட எடுத்துக்கொண்ட முயற்சிகளாகும். தேடுதல்களே அவரது முன்னேற்றத்துக்கான படிக்கற்களாக அமைந்துள்ளன என்பதை ஆணித்தரமாகக் கூறிச்செல்கிறார்.

தான் தேடிக் கொண்ட நண்பரான விஜயகுலசிங்கம் என்பவர் அனுப்பிவைத்த விமானப் பயணச்சீட்டு தன்னை ஜேர்மனிவரை வரவழைத்ததுடன் தனது வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்று நண்பனுக்கான நன்றியறிதலைக் கூறிச்செல்கிறார். நன்றிமறவாமை என்ற வள்ளுவன் அதிகாரத்தின் கருவை நாம் திரு. சிவராஜாவின் எழுத்தில் காண்கிறோம். மதம் மறந்து சாதி பேதம் துறந்து இஸ்லாமிய நண்பர்களுடனும் சாமானிய மக்களுடனும் உறவுகொள்ளும் உன்னத பண்பை இந்நூலில் பார்க்கிறோம். " யாதும்ஊரேயாவரும்கேளிர் " என்ற சங்ககால உன்னத பண்பு புலம்பெயர்கால எழுத்துக்களிலும் நூலாசிரியர் சிவராஜா அவர்கள் பதிவிட்டுச்செல்கிறார்.

ஒருகதை எழுதப்படும்போது அதன் சுவைக்காகவும் அழகுக்காகவும் எழுத்தாளர்கள் பொய்களையும் கற்பனைகளையும் கலந்து விடுவதுண்டு ஆனால் இந்நூலாசிரியர் பொய்ம்மைக்கு இடம்கொடாது கற்பனைக்குத் துணைபோகாது தனது கதையை உள்ளதை உள்ள படியே வெளிக்காட்டியிருக்கிறார். பூவரசம் தடியால் அடிவாங்கியதையும் படலைகளுக்குக் கல்லெறிந்த கதைகளையும் வெட்கப்படாமல் குறிப்பிடுகிறார். இந்த உண்மைத் தன்மைகளை அவர் கதைகளில் மட்டும் காட்டாமல் தனது நிஜவாழ்க்கையிலும் கடைப்பிடித்து வாழ்வதை அவருடன் நெருங்கிப் பழகுபவர்கள் நன்கு அறிவர். தாயார் எதிர்நோக்கிய துன்பியலை அவர் வெளிக்காட்டும் முறை வாசிப்பவர் மனங்களையோ சிக்கவைப்பதோடு கண்ணீர் மல்கவைக்கும் என்பதில் ஐயமில்லை. " வயிற்றிலே ஒரு கரு,சேலைத்தலைப்பிலே இரு சிறுகுழந்தைகள், முற்றத்தில் விளையாடும் மற்றப்பிள்ளைகள் இந்த நெருக்குவாரங்களுக்கு மத்தியில் நெருப்பு அடுப்பிலிருந்து கஞ்சிவடிக்கவேண்டும் "என்ற அம்மாவின் வார்த்தைகளுக்குப் பின் எத்தனை துயரங்கள் நிறைந்திருக்கும் என்பது நோக்கத்தக்கது. ஒரு ஐரோப்பிய நாடொன்றில் பல குழந்தைகள் பெற்றால் அரசு பல உதவி நலத்திட்டங்களை அக்குடும்பத்துக்கு வழங்குவதோடு அவர்களைப் பாராட்டிப் பரிசில்கள் வழங்கியிருக்கும்.

ஆனால் அதுவே ஈழத்தில் எதிர்மறையாக நோக்கப்பட்டு நோகடிக்கப்பட்டிருக்கும். தாயைத் தெய்வமாக வணங்கும் வழிபாட்டு முறையைப்போல திரு. சிவராஜா அவர்களின் தாய்பற்றிய பதிவுகாணப்படுகின்றது. இன்றுதாயகத்தில் தமிழர்கள் வீடுகள் கம்பீரமாக நிமிர்ந்துநிற்க அதனுள் வயது முதிர்ந்த ஒருவர் அல்லது இருவர் தள்ளாடி வாழ்ந்து வருவதைக்காண்கிறோம். இன்றைய ஈழ நிலச் சூழலில் தமிழர்கள் அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதை இந்நூல் சொல்லாமல் சொல்லிச் செல்வதுபோல் உள்ளது.

புலம்பெயர்ந்த எழுத்தாளன் தான் தங்கிவாழும் சூழலோடு தன் கதைகளைப் படைத்தலும் அல்லது கதைக் கருவை சமூகச் சூழலில் இருந்து பிடுங்கி எடுத்தாலும் அந்தக்கதைகளின் பின்னணியில் தாயக நிலவாசனைகளை கலந்துவிடுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இந்நூலாசிரியரின் கதைகள் பொதுவாக இரு மண் கலந்த கதைக்களமாகத் தென்பட்டாலும் தமிழ்பண்பாட்டுக் கலாசாரம் என்ற இரட்டை நில ஒற்றைவழிப் பண்பாட்டுப் பாலமாகத் தொடர்ந்து செல்வது வரவேற்கத்தக்கது. ஐரோப்பாவில் பண்பாட்டு சிதைவுகளுக்குள்ளாகும் தமிழ் நபர்களை அடையாளம் காணும் ஆசிரியர் அவர்கள் கதைகளூடாக சமூகத்துக்கு வெளிக்காட்டுகிறார். பொதுவாக விவாகரத்து எனும் விவகாரம் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் தற்பொழுது தொற்றிக்கொண்டுள்ளது. இதனை "விவகாரத்து எனும்வினை" என்ற கதையூடாகக் கோடிட்டுக் காட்டுகிறார்.

பிரச்சினைகளை எடுத்துக்காட்டும் ஆசிரியர் அவற்றிற்கு தீர்வுகளையும் முன்வைக்கிறார். வெளிநாட்டு மாப்பிளைக்கு வாழ்க்கைப்பட்டு, தன்வாழ்க்கையின் இன்பங்கள் அனைத்தையும் இழந்து, உறவுகளுக்காக மாடாய் உழைத்து பின்குடிகாரக் கணவனிடமிருந்து விவாகரத்து பெற்று மீண்டும் செல்வியாக தாயகம் திரும்பும் பெண்ணின் அவல நிலை புலம்பெயர்ந்த வாழ்க்கையின் பெண்ணியம்சார் துன்பியலை வெளிக்காட்டுகிறது. புகலிடநாடுகளில் திருமணத்துக்காகவரும் பெண்கள் மொழி தெரியாததால் பல ஏமாற்றங்களுக்குள்ளாகின்றனர். கணவன் மனைவி என்ற உன்னத உறவில் தன்மனைவிக்குப் பொய்சொல்லி ஏமாற்றி பலதடவைகள் கருக்கலைப்பு செய்கின்றான் கணவன். இறுதியில் கருக்கலைப்பு இரட்டைக் கொலைக் குற்றமாகச் சுமத்தப்பட்டு அவன்சிறையில் அடைக்கப்படுகின்றான். அதன்பின் மனைவி தனிமையில் வாழ்வதோடு இருபெண்குழந்தைகளைத் தத்தெடுத்து இலட்சியப் பெண்ணாக வாழ்ந்துகாட்டுவதை "சிசு" என்ற தலைப்பில் உண்மைக்கதையை சமூகத்துக்கு வெளிச்சம்போட்டுக் காட்டுகிறார் நூலாசிரியர்.

ஐம்பது கட்டுரைகளாகத் தரப்படுள்ள இந்நூலின் எல்லாப் பதிவுகளும் மனிதநேயத்தைப் ,பற்றியதாகவே உள்ளன. ஆசிரியரின் மனிதம் சார்ந்த செயற்பாடுகளும் வாழ்க்கை முறைகளும் அவரை சமூக மேம்பாட்டை விரும்பி நிற்கும் மனிதராக இனம் காட்டி நிற்கின்றது. சொல்லிலும் செயலிலும் சமூகமும் அதன் முன்னேற்றமும் பற்றியே சிந்தித்து செயற்பட்டு வாழ்ந்துவரும் நூலாசிரியரின் பிறந்த நாளையொட்டி இந்நூல் வெளிவருவது மிகப் பொருத்தமானதாகும்.

புலம்பெயர் நாடுகளில் தங்கிவாழும் தமிழர்கள் நீர்போல் தேங்கி வாழாமல் அதன் ஓட்டம் போல் சீரிய செல் நெறியைபின் பற்றி வாழ்தல் வேண்டும் என்பதை இந்நூல் உறுதிப்படுத்திக்கூறுகின்றது. புகலிட வாழ்வையும் தாய்நில ஏக்கங்களையும் கருப்பொருளாகக் கொண்டுள்ள இந்நூல் உண்மையின் தரிசனங்களாக இருப்பதாலும் இலகுமொழி நடையில் அமைந்திருப்பதனாலும் வாசிப்பவர் மனங்களை யோசிக்கவைக்கும் என்பது எனது நம்பிக்கையாகும். வாழ்க்கைக்கு வழிகாட்டிச் செல்லும் "மனிதரில்எத்தனைநிறங்கள்" என்ற இந்நூலை அனைவரும் வாசித்துப் பயன்பெறவேண்டும் என்பதோடு நூலாசிரியருக்கு எனதுபாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

\- நன்றி -

## முகவுரை....

# மனிதரில் எத்தனை நிறங்கள்

பூமிப்பந்தின் பரிணாம வளர்ச்சியில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியதே மனித இனமாகும். ஆதாம் ஏவாள்தான் மனித இனத்தின் தோற்றுதலுக்குக் காரணம் என நம் மதங்களும், இலக்கிய இதிகாசங்களும் புராணங்களும் எடுத்துரைக்கின்றன. மனிதன் இவ்வுலகில் படைக்கப்படாவிடின் இந்த உலகம் எப்படி இருந்திருக்கும் என எண்ணும்போது நமக்கு ஆச்சரியம் பிறக்குதல்லவா. உலகில் மனித சக்தியும் மனித வளங்களுமே மாபெரும் சக்தியாக விளங்குகின்றன. இந்த உலகத்தைச் சிருஷ்டிப்பதும் அதாவது ஆக்குவதும் அழிப்பதிலும் மனித சக்தியானது முக்கிய பங்கு வகிக்கின்றது என்றால் அது மிகையாகாது.

இப்படிப்பட்ட மனித தோற்றத்தில் பல்வேறுபாடுகள் காணப்படுகின்றன. இனம், நிறம், மதம், மொழி, நாடு, பிரதேசம், கலை, கலாச்சாரம், பாரம்பரியம், பண்பாடு, சாதியம் போன்ற விடையங்களில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு நிலப்பரப்பு, காலநிலை, பௌதீகச்சூழல், புவியியல், அரசியல், பொருளாதார அடிப்படையில் மனிதர்களிடையே பல வேறுபாடுகள் காணப்பட்டாலும், அன்பு, பாசம், உணர்வு, இரக்கம், பரிதாபம், ஆசை, இன்பம், துன்பம் போன்ற பல விடையங்களில் ஒற்றுமை நிலவுகின்றன. இவை யாவும் இயல்பாகவே மனிதப் பழக்க வழக்கங்களுடன் ஒன்றிப்போவதை நாம் காண்கின்றோம்.

இங்கு "மனிதரில் எத்தனை நிறங்கள்" என்ற தலைப்பில் இந்த நூல் அமைகின்றது. தாயகத்தில் நான் வாழ்ந்தது முப்பது ஆண்டுகள். புலம்பெயர் தேசமான ஜேர்மனியில் முப்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்து கடந்துவிட்டன. இக்காலகட்டங்களில் பல, நிற, மொழி, இன மக்களுடன் பேசிப் பழகி ஒன்றித்து வாழ்ந்த அனுபவங்கள் எண்ணிலடங்காதவையே. மனிதர்கள் அனைவரும் ஒரே தோற்றப்பாடாய் இருந்தாலும் அவர்களின் உள்ளங்களில் ஆழத்தை யாராலும் அறியவே முடியாது. இதுதான் மனித சக்தியின் பிரமாண்டமான படைப்பாகும். உள்ளக்கிடக்கைகளை ஆழமாக உட்புகுந்து பார்த்தால் பலவகையான மனிதரின் வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளலாம். அவை நல்லவையாகவும் இருக்கலாம் கெட்டவையாகவும் இருக்கலாம்.ஆனால் பலவித கொள்கைகள், கடமைகள், நோக்கங்கள், செயற்பாடுகள் கொண்ட பலவகையான மனிதர்களை நான் பார்த்திருக்கிறேன், பழகியிருக்கிறேன், அவர்களுடன் ஒன்றாய் வாழ்ந்திருக்கிறேன், அவர்களுடன் சேர்ந்து வேலை செய்திருக்கிறேன். இதனால் அவர்களின் அறிவு, ஆற்றல், அனுபவம், திறமைகளை நான் உள்வாங்கி என்

வாழ்க்கைப் பாடமாகக் கற்று உயர்ந்திருக்கிறேன்.

அதே வேளை நன்மை-தீமை, நல்லது-கெட்டது எவை என அறிந்து எனது வாழ்க்கையைச் செப்பனிட்டிருக்கிறேன். இப்பூமியில் பிறக்கும் ஒவ்வொரு மனிதருக்கும் இறப்பு என்பது நிட்சயிக்கப்பட்ட உண்மையான விடையமாகும். இந்த இடைப்பட்ட காலச் சக்கரத்தில் மனித வாழ்வு சிறப்படைவதும் உண்டு. வீழ்வதும் உண்டு. ஒவ்வொரு மனிதனின் சிந்தனை, முயற்சி, தேடல், கடின உழைப்பு போன்றவற்றில் உயர்ந்துவிட்டால் வெற்றி என்னும் கனியும் வெகு இலகுவாகக் கிடைத்துவிடும். வாழ்வதற்காக நாம் உழைக்கவேண்டும் என்ற உன்னத இலட்சியத்தில் பலர் வாழ்ந்து வெற்றி பெற்றாலும் சிலர் சோம்பேறிகளாக வாழ்ந்து வாழ்வில் தோல்வியைத் தழுவிக்கொள்கிறார்கள்.

எனது வாழ்நாளில் அதாவது பாடசாலைக்காலம் தொட்டு தொழில், பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, கலை, இலக்கியம், எழுத்துத்துறை, சமூகசேவை, கல்வி, விளையாட்டு போன்ற துறைகளில் பல மனிதர்களைச் சந்தித்திருக்கிறேன். அவர்களோடு பேசிப் பழகி உண்டு குடித்து உறங்கி ஒன்றாக வாழ்ந்திருக்கிறேன். இன்னும் பலரின் வாழ்க்கை முறைகளைப் படித்திருக்கிறேன். நேரில் கண்டிருக்கிறேன், சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர்களிடம் பல அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். இந்தவகையான பல்வேறுபட்ட மனிதரின் அனுபவங்களைக் கொண்டே "மனிதரில் எத்தனை நிறங்கள்" என்ற இந்நூலை உங்கள் முன்னே படைத்துள்ளேன். இங்கே மனிதரில் எத்தனை நிறங்கள் என்பது நான் கண்டு பேசியது, பழகியது, படித்தது, வாழ்ந்தது போன்ற பல அனுபவங்களை அதாவது மனிதரின் குண இயல்புகளையே எடுத்துக் கூறியுள்ளேன்.

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு இயல்பை, குணாதிசயங்களைக் கொண்டிருப்பான். இந்தக் குண இயல்புகள் நாம் வாழும் சமூகத்துடன் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. அவை நன்மைகளாகவும்தீமைகளாகவும் இருந்து சமூகத்துக்குக் கேடுகளையும் நன்மைகளையும் விளைவிக்கலாம். எனவே நான்கண்ட மனிதர்களின் குண இயல்புகள் மனித சமூத்துக்கு எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என ஆராய்வதற்காகவே மனிதரின் குணங்களை மனிதரின் நிறங்கள் என்ற தலைப்பில் எழுதியுள்ளேன். ஆகவே நீங்களும் இந்த நூலைப் படித்து அறிந்து தெரிந்து நல்லவற்றை எடுத்துக்கொண்டு வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். இந்த நூலை வாசித்துவிட்டு உங்கள் மனங்களை நெருடிய விடையங்களை என்னோடு பகிர்ந்து கொள்ளுங்கள். நல்ல விடையங்களை உங்கள் உறவுகள் நட்புக்களுக்கு எடுத்துக்கூறி சந்தோஷமாக வாழவேண்டும் என்பதே எனது பேரவாவாகும்!...இப்புத்தகத்தை வாசிக்கும் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்!... நன்றி!... -ஆசிரியர்-

# உள்ளடக்கம்

02-05 வாழ்த்துரை
06-07 ஆசியுரை
08-09 வாழ்த்துரை
10-14 அணிந்துரை
15-16 முகவுரை
17 உள்ளடக்கம்
18-21 பெற்றோரே என் தெய்வங்கள் - 1
22-24 வழிகாட்டிகள் - 2
25-26 ஆசிரியர்ப்பெருந்தகை - 3
27-29 பகுத்தறிவாளர் - 4
30-33 பிரதேச காரியாதிகாரி - 5
34-35 சாதாரண மனிதர் - 6
36-38 படைப்பாளி - 7
39-41 மக்கள் சேவையே மகேசன் சேவை - 8
42-44 சைவப் பிரியர் - 9
45-47 உடுவை என்ற உயிர்ப்புள்ள மனிதன் - 10
48-50 குளப்படிப் பையன் - 11
51-53 நாற்பது ஆண்டுகள் கடந்த நட்பு - 12
54-55 பூவரசம்தடியும்பொலிசும் - 13
56-58 இஸ்லாமிய நண்பர்கள் - 14
59-61 நகைச்சுவை மன்னன் - 15
62-63 முதலுதவி - 16
64-66 பிச்சைக்காரர் - 17
67-70 மொழி - 18
71-73 வருத்தப்படாத வாலிபர் சங்கம் - 19
74-76 வெள்ளிவிழா - 20
77-79 காசு விழுங்கி - 21
80-82 நேயம் - 22
83-85 கல்மனங்கள் - 23
86-88 ஆதங்கம் - 24
83-85 கல்மனங்கள் - 23
86-88 ஆதங்கம் - 24
89-91 பணம், பணம் - 25
92-94 டாக்டர், டாக்டர் - 26
95-97 என்னசாதி - 27
98-100 செல்வியாகவே - 28
101-103 அன்பு இல்லையேல் - 29
104-106 அம்மா - 30
107-109 நம்பர்,சாத்திரம் - 31
110-112 விவாகரத்துஎன்னும்வினை - 32
113-116 பேசிய மனங்கள் - 33
117-119 ஏமாறேதே...ஏமாற்றாதே - 34
120-122 பொறுமையின் சிகரம் - 35
123-124 உலக நட்பு வட்டம் - 36
125-127 போதைவஸ்த்து - 37
128-130 போராளிகள் - 38
131-133 ஏங்கித்தவிக்கும்மனசுகள் - 39
134-136 மாற்றுத்திறனாளிகள் - 40
137-139 ஒரு கலைஞனின் இறுதிப் பயணம் - 41
140-143 சிசு - 42
144-146 அன்பு ஊற்றுக்கள் - 43
147-148 அழகு தேவதை - 44
149-150 ஏனோ? தானோ? - 45
151-153 சாதனைப் பெண்மணி - 46
154-155 பொய்சொல்லாதேபாப்பா - 47
156-157 இளம் சந்ததிகளில்சிலர் - 48
158-160 நவீன அடிமைகள் - 49
161-164 வெள்ளிவிழாநாயகர்கள் - 50
165- -நன்றிகள்

# 1 - பெற்றோரே என் தெய்வங்கள்

மனிதரில் எத்தனை நிறங்கள் என்ற நூலில் முதலிடம் பிடிப்பவர்கள் என் பெற்றோர்களே. ஏனெனில் அவர்கள் இல்லாவிடின் நான் இல்லை. என்னைக் கருவூட்டி, ஆக்கி, ஆளாக்கி, கல்வியூட்டி, நல்வழிப்படுத்திய பிரமாக்கள். தியாக தீபங்கள் என் பெற்றோர் என்றால் அது மிகையாகுமோ. கருவூட்டி, உயிரூட்டி, உதிரம்கொட்டி, பாலூட்டி, சீராட்டி, அறிவூட்டி, உலகைக்காட்டி என்னையும் மனிதராக்கிய என் பெற்றோர்களே எனக்கு முதல் உறவு. முதல் கல்லூரி, முதல் ஆசிரியர், முதல் வழிகாட்டி, முதல்வர்களாவர். அவர்களைப் பற்றியே முதலில் எழுதுவது சிறப்பாகும்.

என் தாயவள் பட்டப்படிப்புப் படிக்கவில்லை. அந்தக் காலத்தில் எட்டாம் வகுப்பென்றால் இந்தக்காலத்து பல்கலைக்கழகப் படிப்புக்குச்சரி என்று சொல்லலாம். சிறுவயது தொடக்கம் இளவயதுவரை மிகத்துடிப்பானவர் என்றும் நல்ல அழகான கட்டுடல் கொண்டவர் என்றும் பின்னர் நான் அறிந்துகொண்டிருக்கிறேன். இந்தக் கட்டுடல்தான் காரணமோ தெரியவில்லை பதினேழு வயதில் திருமணமாகி 14 பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டார். ஒன்பது ஆண் ஐந்து பெண் எனப்பெற்றவள் எவ்வளவு வேதனைகள் துயரங்கள்பட்டு, இரத்தம் கொட்டிப் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து வாழவைத்திருக்கிறார். எனது தந்தையாரின் விருப்பத்தை இல்லை எண்ணாது பூர்த்தி செய்திருக்கிறார்.

எவ்வளவு தியாகம் இல்லற வாழ்வில் நல்லறமாகவே வாழ்திருக்கிறார். அந்தக் காலத்தில் நான் பிறந்த கிராமத்திலும் காதல் முளைகொள்ள தங்கள் திருமணம் கட்டாயத் திருமணமாக முடிந்ததாக எனது தாயார் சொல்லக் கெள்விப்பட்டிருக்கிறேன். ஆண்டவன் படைப்பில் பெண்ணானவள் எவ்வளவு உயர்ந்த இடத்தில் இருக்கிறாள். படைத்தலில் முக்கிய பங்கு இவளுக்குரியதே. அதிலும் பெண்ணானவள் தாயாகும்போது மேலும் பல சிறப்புக்களைப் பெறுகிறாள். ஆனால் இன்றைய உலகில் பெண்ணுக்குக் கிடைக்கும் மதிப்பு என்ன. வயது வேறுபாடில்லா பாலியல் கொடுமைகள், அடிமைத்தனம், கொத்தடிமை, 'தொழில் சம்பள வேறுபாடுகள், சமய

சாத்திர வேறுபாடுகள், அறியாமை எனச்சமூகக் கொடுமைகளின்பட்டியல் நீண்டு வளர்ந்துகொண்டு செய்வதற்கு என்ன காரணம் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

அந்தக்காலத்திலும் இக்கொடுமைகள் இருந்ததும் உண்மைதான். ஆனால் இன்றைய வளர்ந்த விஞ்ஞான உலகிலும் பெண்களுக்கெதிராக கொடுமைகள் சர்வசாதாரணமாக நடைபெற்றுவருவது வேதனைக்குரிய விடையமாகும். இப்படிப்பட்ட பல ஒடுக்குமுறைகளைச் சந்தித்தவர்கள்தான் என் பெற்றோர்கள். அத்தனை வலிகளையும் சுமைகளையும் தாண்டி இத்தனை பிள்ளைகளையும் பெற்று வளர்த்துப் பிள்ளைகளுக்கு வேண்டிய அத்தனை நல்ல விடையங்களையும் அவ்வப்போது சரிவரச் செய்து முடித்திருக்கிறார்கள் என்னும் போது அவர்களின் தியாக உணர்வுகளை உச்சத்தில் வைத்தே மதிக்கவேண்டும்.

இந்தக் காலத்தில் ஒன்று இரண்டு பிள்ளைகளைப் பெற்றுவிட்டு ஐயோ!..குய்யோ!... எனக்குளறி அழுகிறார்கள். ஆனால் பதின்நான்கு பிள்ளைகளைப் பெற்ற என் தாயார் ஒரு சாதனைப் பெண்ணாகவே நான் பார்க்கிறேன். எனது தாயார்-தந்தையார் குடும்பம் பெரிய பணக்காராக் குடும்பமும் அல்ல. சாதாரண தொழிலாளர் குடும்பம்தான் எனது குடும்பம். காணி, பூமி, நிலம், புலம் என்றும் பெரிதாக இல்லை. பெரிய பணக்காரர்களுமல்ல. இப்படிப்பட்ட குடும்பத்தில் பொருளாதாரமும் செழித்திருக்கவில்லை. சாதாரண குடும்பமாகவே ஊரில் வாழ்ந்தோம். அவர்கள் மனதில் வைராக்கியம், கடின உழைப்பு நிறையவே காணப்பட்டிருக்கிறது. பிறருக்குக் கொடுத்து ஒற்றுமையாக உண்டு குடித்து சந்தோஷமாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை எங்கள் குடும்பத்தின் இன்றைய பின்புலம் சான்று பகர்கின்றது என்பதை மகிழ்வுடன் எழுதிக்கொள்கிறேன்.

எனக்கு விருத்தெரிந்த காலத்தில் எனது தாயாரின் வேதனைகள், தியாகங்கள், கடமைகள், செயற்பாடுகளைக் கண்டு பலதடவை வியந்திருக்கிறேன். நிறையவே பிள்ளைகளைப் பெற்ற எனது தாயார் பின்னாளில் எங்களுக்குப் பல விடையங்களை எடுத்துரைத்திருக்கிறார். இதில் எனது மனதைத் தொட்ட ஒரு விடையத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். "தனது வயிற்றில் ஒரு குழந்தை கருத்தரித்து இருக்கும்... பின்னால் ஒருவயது மூன்றுவயது இரு பிள்ளைகள் தனது சேலையைப் பிடித்துக்கொண்டு நிற்பார்களாம், இன்னும்

ஐந்துவயது ஏழுவயதுப் பிள்ளைகள் விளையாடிக்கொண்டு நிற்பார்களாம்" இத்தனைக்கும் மத்தியில் அடுப்பிலுள்ள அவிந்த சோற்றின் சுடுகஞ்சியை வடித்து எடுக்க வேண்டும். வயிற்றிலுள்ள பிள்ளை, பின்னால் சேலையைப் பிடித்துக்கொண்டு நிற்கும் பிள்ளைகள், விளையாடிக்கொண்டு நிற்கும் பிள்ளைகள் என அத்தனை பிள்ளைகளையும் தான் கவனித்துக்கொண்டுதான் சகல வேலைகளையும் செய்ய வேண்டும். அதே வேளை வேலைக்களைப்பால் ஓடோடிவரும் கணவனுக்கு (தந்தை) வேளா வேளைக்கு உணவும் கொடுத்துப் பரிமாறவேண்டும். இப்படியாக எவ்வளவு வலிகளை துன்பங்களைச் சுமந்து உங்களைப் பெற்று வளர்த்தேன் என்று எங்களுக்குக் கூறிய பொழுதுகளில் நாம் கண்கலங்கிய நிகழ்வுகளும் பல உண்டு.

இது சாதாரண ஒருவராலும் செய்யமுடியாத காரியம் என நான் அடித்துக் கூறுவேன். இன்னொரு விடையத்தையும் அவர் கூறியதை இன்றும் என்றும் மறக்கமுடியாத சம்பவத்தையும் உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன். அதாவது பிள்ளைகள் பெற்று வளர்ந்த காலம் அப்போ...ஒரு பெண் பிள்ளை கலியாணம் செய்து கருவுற்றிருப்பாள், மற்றப் பெண் பெள்ளைக்கு மாப்பிள்ளை தேடும் படலம் ஆரம்பித்ததிருக்கும், இன்னொரு பெண்பிள்ளை பூப்பெய்தியிருப்பாள். ஒரே நேரத்தில் மூன்று பெண் பிள்ளைகளையும் பார்க்கவேண்டும். இத்தனைக்கும் மத்தியில் மற்றப்பிள்ளைகளின் உணவு, உடை, கல்வி, பாதுகாப்பு, உறக்கம் என அவர்களையும் பார்க்க வேண்டும். யாவரையும் கவனித்துத் தான் அரைகுறை வயிற்றுப் பசிதீர்த்து இரவு பதினொரு, பன்னிரண்டு மணிபோல் துாக்கத்துக்குச் சென்று அதிகாலை நான்கு ஐந்து மணியளவில் துாக்கம் விட்டெழுந்து மறுநாள் கடமைகளைச் செய்ய வேண்டும்.

இதுதான் தனது பாரியபொறுப்பு கடமை என பின்னாளில் எங்களுக்கு எடுத்துக்கூறியபொழுது இப்படியும் ஒரு பெண்ணா என வியந்திருக்கிறோம். தாயாரின் தயாள குணத்தையும், தியாக உழைப்பையும் பார்க்கும்பொழுது எங்கள் குடும்பத்தின் முதற் பெண்மணியாக. தியாக தீபமாக, கலங்கரை விளக்காக, மெழுகுதிரியாக, குத்துவிளக்காக எரிந்து உருகி குடுப்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்திருக்கிறார் என்பது எவ்வளவு பெரியவிடையம்.
எனது தாயாரின் பல தியாகங்களை எழுதுவதென்றால் பெரிய

ஒரு புத்தகம் எழுதலாம். அவர் இப்பொழுது உயிருடன் இல்லை. இதில் என்ன விடையம் என்றால் மனிதரில் எத்தனை குண இயல்புகள். அத்தனை நல்ல குண இயல்புகளும் என் தாயாரிடம் காணப்பட்டதை இன்று மட்டுமல்ல என்றும் நினைவு கொள்ளக்கூடிய பல விடையங்கள் உண்டு என்பதை இதில் பதிவுசெய்துகொள்கிறேன்.

இத்தனைக்கும் எனது தந்தையாரின் கடின உழைப்பே காரணமாகும். கடும் உழைப்பாளி. தோட்டவேலை, வயல்வேலை, வீட்டுவேலை அனைத்தையும் செய்துமுடிக்கும் பலசாலி. அந்தக் காலத்தில் ஏழோ எட்டுத்தான் படித்தவர். ஓர் வைராக்கியசாலி. சற்று கறுப்பாக இருந்தாலும் மனம் வெள்ளையானது. தொழில், வேலை என்று தொடங்கிவிட்டால் பதினைந்து பதினாறு மணித்தியாலங்களும் தொடர்ந்து வேலைசெய்யக்கூடிய திறமைசாலி. வயது வந்த காலத்திலும் இரண்டு இளைஞர்கள் செய்யக்கூடிய வேலைகளை இவர் தனித்துச் செய்யக்கூடிய ஆற்றல் படைத்தவர் என்பதைப் பின்னாளில் அறிந்து கொண்டேன்.

"வையிரமுத்து" என்ற பெயரில் வைரம் அடங்கியிருப்பதுபோல் மனவலிமை படைத்த எனது தந்தையாரை ஊரவர் அயலவர் யாவரும் "துரை" என்றே அன்போடு அழைப்பார்கள். ஒரு பெரிய துரையைப் போல் பல பிள்ளைகளைப் பெற்றுகொள்வதிலும் துரையாகத்தான் வாழ்த்து வழிகாட்டியவர் என்ற பெருமையையும் எடுத்துக்கூறுவதில் பெருமகிழ்வு கொள்கிறேன். (தற்போது தந்தையார் உயிருடன் இல்லை) இவர் தனது கடும் உடல் உழைப்பால் வருமானங்களைத் தேட, வீட்டின் நிர்வாகக் கட்டமைப்பு முழுவதையும் என் தங்கமான தாயார் "தங்கம்மாவே" செய்து முடித்தார். இன்று பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொள்ளுப்பூட்டப்பிள்ளைகள் என கொடிபோல் படர்ந்து உலகநாடுகள் எங்கும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்னும்போது சிறப்பும் மகிழ்வும்தான். இந்தப் பெற்றோரின் மனங்களையும், உள்ளக் கிடக்கைகளையும், அவர்கள் விட்டுச்சென்ற நினைவுகளையும் நான் ஞாபகச் சின்னங்களாகவே என்றும் போற்றி வாழ்ந்து கொண்டிருக்கிறேன்....இந்த இரு நல் மனங்களையும் என் வாழ்நாளில் மறக்கவே முடியாது. நினைவுகள் அனைத்தும் கற்சிலைபோல் என் மனதில் பதிந்துள்ளன..

# 2 - வழிகாட்டிகள்

பலருடைய வாழ்க்கையில் பலர் வழிகாட்டிகளாக இருந்திருக்கிறார்கள் என்பது வரலாறாகும். இந்த வழிகாட்டிகளால் பலர் வாழ்வின் உச்சத்தை தொட்டிருக்கிறார்கள் என்பது நிஜமே. அந்த வகையில் எனக்கும் இரு வழிகாட்டிகள் இருந்திருக்கிறார் என்பது உண்மையே. இந்த வழிகாட்டிகள் வேறு யாருமல்ல என் உடன்பிறந்த சகோதரர்கள் திரு தியாகராசா, திரு நடராசா என்று கூறும்போது பெருமிதமடைகின்றேன். என்னையும் என் உடன்பிறப்புக்களையும் வழிகாட்டி, நெறிப்படுத்தி நல்லபடி எம்மை வாழவைத்தவர்கள் என்றால் அது இவர்களாகத்தான் இருக்கமுடியும்.

நாங்கள் பெரிய குடும்பம் என்றபடியால் அத்தனைபேரின் கல்வி, தொழில், பாதுகாப்பு, கலியாணம், நல்வாழ்வு என அனைத்திலும் எம்மை வழிநடத்தியவர்கள் என்ற பெருமை இருவரையுமே சாரும். இவர்கள்தான் எனக்கும் வழிகாட்டியாக, முன்னோடியாக (Real Modal) இருந்திருக்கிறார்கள் அப்படிப்பட்ட நல்ல மனம்படைத்த மனிதர்களைப்பற்றிக் குறிப்பிடுவது எனது கடமையாகும். சிறுவயதில் நான் இரண்டாவது சகோதரரின் எழுத்தைப் பார்த்தே எழுதப் பழகிக்கொண்டேன். ஆதலால் பாடசாலையிலும் சரி ஏன் இன்றுவரை எனது எழுத்துக்கள் ஓரளவு அழகானது என்றுதான் கூறுவேன். எனது ஊரில் நிறையப்படித்தவர்கள், பணக்காரர்கள் தொகையினர் இல்லை. அந்தக்காலத்தில் எங்கள் ஊரையே வழிநடாத்திய பெருமையும் சகோதரர் நடராசாவையேசாரும் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்வேன்.

கல்வியின் மகத்துவத்தை உணர்ந்த இவர் எங்கள் ஊரில் "காந்தி" சனசமூக நிலையம் என்ற நூலகத்தை நிறுவிவிட இவர்பட்டபாடுகள் துன்பங்கள் ஆயிரம். பொதுக்காணி ஒன்றில் இக்கட்டிடம் அமைக்க அந்தக் காணிக்காரர்களின் கையொப்பம் வேண்டுவதற்கு அவர்பட்ட துன்பங்கள் சொல்லிலடங்காதவையே. இருந்தும் பல போராட்டங்கள் மத்தியில் இந்த வாசிகசாலையை நிறுவினார். (1953) இது இன்று சகலதுறைகளிலும் முன்னேற்றம் கண்டு யாழ்மாவட்டத்தில் சிறப்பான நூல்நிலையங்களில் ஒன்றாக இன்றும் விளங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும்.

இந்த வாசிகசாலையால் சந்ததி சந்ததியாக எத்தனையோபேர் கல்வியால் உயர்ந்தார்கள். அறிவால் வளர்ந்தார்கள். பொதுச்சேவை என்றால் என்ன என்பதை இவரிடமும் எனது தாயாரிடமும்தான் நான் ஆரம்பத்தில் கற்றுக்கொண்டிருக்கிறேன். எமது ஊரிலும் அயலூர்களிலும் ஏற்பட்ட கடும்வறட்சி, கடும்மழைவெள்ளம், யுத்தம் இடம்பெற்ற காலங்களிலெல்லாம் இவரின் பங்களிப்பு நினைத்துப்பார்க்கமுடியாது. சாவகச்சேரி டீ.ஆர்.ஓ, (இப்பொழுது ஏ.ஜி.ஏ) யாழ் கச்சேரி அரசாங்க அதிபர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் உடனுக்குடன் தொடர்புகளை ஏற்படுத்தி, நிவாரண உணவுப்பொருட்களைப்பெற்று எங்கள் ஊருக்கும் அயல் ஊரவர்க்கும் பகிர்ந்து கொடுத்துப் பலரது பசிதீர்த்த அட்சயபாத்திரம். பொதுத்தொண்டன்.

அடுத்தவர் எனது மூத்த சகோரன் தியாகராசா. எமது குடும்பத்தைத் தலைநிமிர வைத்தவர். உழைப்பால் உயர்ந்தவர். தான் மூத்தவராகப்பிறந்து பல பொறுப்புக்களைச் சுமந்தபடியால் தனது கல்விப்படிப்பையே இடைநடுவில் நிறுத்தி எனது தந்தையாருடன் இணைந்து தொழில் செய்து எங்கள் அத்தனைபேரின் கல்வி, தொழில் ஏன் கலியாணம்வரை உழைத்த உத்தமர். தன்னையே அர்ப்பணித்து தியாகங்கள் பல புரிந்து குடும்பத்திற்கு உழைப்பால் ஒளியேற்றிய தியாகதீபம். கடும்உழைப்பு என்றால் எப்படி, மற்றவர்களை ஏமாற்றாமல் உழைத்து உயர்ச்சிபெறும் வழி, திடகாத்திரமாக வாழ்வது எப்படி, பிறருக்கு உதவுவது எப்படி என்றெல்லாம் எடுத்துக்காட்டாக வாழ்ந்த உத்தமர் இன்று உயிருடன் இல்லாவிட்டாலும் அவரின் வழிகாட்டல் எனக்கு ஒரு பாடமாகவே அமைந்தது.

இருவரின் நல்ல பொதுநோக்குப் பார்வைகளையும் ஆரம்பகாலங்களில் நானும் கற்றுக்கொண்டேன். என்வாழ்வில் வழிகாட்டிகளாக, முன்னோடியாகத் திகழ்ந்த இவர்கள் எனது வாழ்க்கைப் பயணத்தையும் செப்பனிட்டு உயர்ச்சிபெற வைத்தவர்கள் இவகள் ஏணியாய் நின்று என்னை ஏற்றிவைத்தனர். கலங்கரை விளக்காய் நின்று வழிகாட்டியிருக்கிறார்கள் இப்படிப்பட்ட நல்ல மனம்படைத்த சகோதரர்கள் அவர்கள் வாழ்வில் எத்தனையே துன்பங்களையும் துயரங்களையும் சந்தித்துத்தான் அந்தக்காலத்தில் பல பணிகளை திறம்படச் செய்திருக்கிறார்கள் என்பது உண்மையான விடையமாகும்.

அந்தக்காலத்தில் நிலவிய சமூக அநீதிகள், சாதிய ஒடுக்குமுறைகள், ஆலயப்பிரவேசங்கள், அரசியல் தலையீடுகள் யாவற்றிற்கும் முகம்கொடுத்துப் போராடியே வெற்றிபெற்றவர்கள். பொதுப் பிரச்சனைகள், சமூகம்சார்ந்த பல்வேறுபட்ட போராட்டங்கள், கடின உழைப்பு மத்தியில்தான் எங்களையும் எங்கள் ஊர் மக்களையும் உயர வைத்து தாமும் உயர்ந்துகொண்டனர். இப்படியாகப் பாடுபட்டதன் பயனாகப் திரு நடராசா அவர்கள் பின்னாளில் முல்லைத்தீவு மாவட்டம்-பாண்டியன்குளம் கமநலசேவை நிலையம், துணுக்காய் பகுதி ப.நோ.கூ.சங்கம் போன்றவற்றின் தலைவராகவும் ஏனைய பல பொது அமைப்புக்களின் நிர்வாகியாகவும் செயற்பட்டு மக்களுக்குச் சேவை செய்தார். இவை மட்டுமல்ல தான் கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் அரச உத்தியோகம் பார்த்த காலங்களில் தமிழ்-சிங்கள-இஸ்லாமிய நண்பர்கள் பலரின் தொடர்புகளை ஏற்படுத்தி இன்றுவரை அவர்களோடு பயணித்துவருகிறார். அந்த நட்புக்களைப் பேணிவருகின்றார் என்றால் அவரின் நல் மனத்தைப் பாராட்டாமல் இருக்கமுடியுமா. இதன் பயனால்தான் பல ஆண்டுகளாக அகில இலங்கை சமாதான நீதவானாக (JP) தனது முதிர்ந்த வயதிலும் கடமையாற்றிவருகின்றார்.

தற்போது லண்டனில் வசித்து வந்தாலும் அங்குள்ள இந்து ஆலயங்கள் மற்றும் பொதுமன்றங்கள், விளையாட்டுசங்கம் எனப்பல பணிகளை முன்னெடுத்து வருகின்றார்.இந்த நல்ல மனம் படைத்த என் சகோதரர்கள் எங்கள் குடும்பத்திற்கு மட்டுமல்ல, எங்கள் ஊருக்குமட்டுமல்ல, வடபகுதி தென்னிலங்கை எனப்பல இன மக்களுடன் பல பொதுப்பணிகளில் ஈடுபடுவதற்காக இங்கிலாந்தில் தற்காலிகமாக வாழ்ந்தாலும் அடிக்கடி தாயகம் சென்று பல பணிகளை முன்னெடுத்துவருகின்றார். பொதுப்பணிகளே இலட்சியமாகக்கொண்டு வாழ்ந்து புகழ்படைத்துவரும் இவரின் வழிகாட்டலே என்னை எழுத்துத்துறை, சமூகசேவைத்துறை, விளையாட்டு போன்றவற்றிற்கு இன்றுவரைப் பங்காற்ற வழிவகுத்தன என்பதை பெருமையுடன் எழுதிக்கொள்கிறேன். இந்த நல்ல மனம் படைத்தவர்கள் என் வாழ்நாளில் கிடைக்காவிடின் என் நிலை...அடையாளம் தெரியாத ஒரு குடிமகனாக இருந்திருப்பேன். நல்லமனம் படைத்த என் இருசகோதரர்களுக்கும் இவ்வேளையில் நன்றிகள் உரித்தாகட்டும்!..

# 3 - ஆசிரியப்பெருந்தகை

மனிதரில் எத்தனை நிறங்கள் என்ற வகையில் என் ஆசிரியர்களில் ஒருவரை இங்கே குறிப்பிடலாம். இந்து,கத்தோலிக்கம், இஸ்லாம் மதங்களைச்சேர்ந்த ஆசிரியர்களிடம் நான் பாடசாலைக் கல்வியைப் பயின்றபடியால் என் வாழ்நாளில் சகல மதங்களும் ஒன்றே என்ற குறிக்கோளாகக் கொண்டுள்ளேன். மதங்களைப் பற்றி அதிகம் நம்பிக்கை கொள்ளாவிடினும் அவை கூறும் நல்ல விடையங்களைப் பின்பற்றினால் பல நன்மைகள் உண்டு என்பதைப் புரிந்துகொண்டுள்ளேன். இந்த ஆசிரியர்களில் ஒருவரைப் பற்றி, அவரின் நல் மனத்தைப் பற்றி இங்கே குறிப்பிடலாம் என் எண்ணுகிறேன். அவர்தான் கந்தையா மாஸ்டர்.

நான் கல்வி பயின்ற யாழ்.நாவற்குழி மகாவித்தியாலயத்தின் அதிபர். பட்டதாரியான இவர் மிகவும் அன்பானவர் அதேவேளை கண்டிப்பானவர். நான் 8ம்வகுப்புப் படிக்கும்போது அவர் அதிபராக வந்தார். உயர்வகுப்புப் படிக்கும் போது அவர் இளைப்பாறிச் சென்றுவிட்டார். இவரிடம்தான் இனியதமிழை, திருக்குறளை, இலக்கியத்தை, இலக்கணத்தை கற்றுக்கொண்டேன். தமிழில் எழுதுவதிலும் பேசுவதிலும் வாசிப்பதிலும் எனக்கு அதிக ஆர்வம் காணப்பட்டதால் அப்போது வகுப்பில் தமிழ்ப்பாடத்தில் நான் முன்னிலை வகித்ததற்கு இந்த நல்ல மனம் படைத் அதிபரின் வழிகாட்டலே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தத்தமிழ் ஆசான் யாழ் கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவர். ஒவ்வொருநாளும் கொக்குவிலில் இருந்து நாவற்குழிக்கு வந்துபோவார். கறுவல் கட்டையர் ஆனால் வெள்ளை மனம் படைத்த அறிவாளி. தமிழ், சமய பாடங்களில் இவர்தான் உயர்வகுப்புக்களுக்குக் கற்பித்தார். அப்போது எனக்கு வாலிப வயது சில குழப்படிகள் செய்து இவரிடம் தண்டனைகளும் பெற்றிருக்கிறேன். இவர் கல்வியோடு மட்டுமல்லாமல் அந்த ஊர் (நாவற்குழி கிராமசபை) மக்கள் பற்றியும் நன்கு அறிந்து வைத்திருந்தார். திருமணம், மரணவீடு, வாசிகசாலை, மற்றும் விழாக்களுக்கும் வந்துபோவார். இதிலிருந்து இவரையும் எனக்கு நன்றாகப் பிடித்துவிட்டது.

அந்தக் காலகட்டத்தில்தான் அவருடைய மகளின் திருமணம் நடைபெற்றது. அப்போது உயர்வகுப்பு மாணவர்களான எங்களையும் கலந்துகொள்ளும்படி அழைப்புவிட்டார். எங்களுக்கு அப்போ பெரிய ஆனந்தம். பத்து பன்னிரண்டு மாணவர்கள் ஒன்றுசேர்ந்து சைக்கிள் சவாரியாக அவர்வீடு போய்ச் சேர்ந்தோம். அங்கு சென்ற போது அவர் எங்களை அன்போடு வரவேற்று, உபசரித்து, ஒரு நண்பர்போல பழகிக்கொண்டார். இரவு உணவளித்து எங்கள் கூட்டத்தை அன்போடு வழியனுப்பிய அந்த நல்ல மனம் படைத்தவரை இப்போதும் எண்ணி ஆனந்தப்படுகிறேன்.

அவருடைய பண்பு, கண்டிப்பு, பழக்கவழக்கம், ஆற்றல், அறிவு, உபசரிப்பு அத்தனை விடையங்களும் என்னைக் கவர்ந்த விடையங்களாகின. ஆனால் படிப்பில் கோட்டை விட்டால் கடுமையாகவே நடந்து கொள்வார். சிறு தண்டனைகளையும் வழங்குவார். அப்போது அவரைத் திட்டித் தீர்த்த மாணவர்களில் நானும் ஒருவன்தான். அப்படியாக நல்லவழியில் என்னை வழிநடத்தியபடியால்தான் இன்றும் அவரின் வழிகாட்டலை எண்ணி வாழ்ந்துகொண்டிருக்கிறேன். இப்போது அவர் உயிருடன் இல்லை. ஆனால் அவரின் பசுமையான நினைவுகளை எண்ணும் போது ஆனந்தம்தான். அவரின் வழிகாட்டல், அவரின் திறந்த மனத்தை எண்ணி எப்பொழுதும் வியந்து பார்க்கிறேன். ஆம் ஆள் கறுவல் கட்டையானாலும் அவரது மனம் வெள்ளை. மனிதரில் இவரும் ஒரு நிறம் (மனம்) தான்...

## 4 - பகுத்தறிவாளர்

ஒவ்வொரு மனிதனுக்கும் பகுத்தறிவு என்பது நிட்சயம் இருக்கவேண்டும். சும்மா கண்டதையும் கேட்டதையும் நம்பி ஏமாறக்கூடாது. ஒருவிடையத்தை நன்கு அலசி ஆராய்ந்து முடிவெடுத்தலே நன்மையைப் பயக்கும். அந்தவகையில் என்னைக் கவர்ந்த சிறந்த மனம்படைத்தவர் யார் என்றால் ஒரு வயது போன அரச உயர் உத்தியோகத்தர்தான். 1975-1980 ஆண்டு காலப்பகுதிகளில் நான் கடமையாற்றிய துணுக்காய் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து காரியாலய அலுவல்களாக வாராவாரம் வவுனியா கச்சேரிக்குச் சென்றுவருவது வழக்கமான வேலையாகும்.

அப்போது நான் சந்தித்துப் பேசிப் பழகிய மனிதர். உயரத்திலும் உயர்ந்த மனிதர். பகுத்தறிவாளர். அப்போது அவர் வவுனியா மாவட்ட உணவுக்கட்டுப்பாட்டு ஆணையாளராகக் கடமையாற்றினார். அவர் பெயர் சிவப்பிரகாசம்பிள்ளை. நேரடியாக எதையும் பேசுவார். சிறந்த மனம் படைத்தவர். சில சமயங்களின் நகைச்சுவையாக கூடாத வார்த்தைகளாலும் உரையாடுவதை நான் பார்த்திருக்கிறேன். ஒழிவு மறைவு கிடையாது. கடமை உணர்வுடைய சிறந்த மனிதர். இப்படியாக நான் அவருடன் அறிமுகமாகி காரியாலய விடையமாக இவருடன் பேசிப் பழகியபோதுதான் அவரின் குண இயல்புகளைப் புரிந்து கொண்டேன்.

கடவுள் நம்பிக்கையற்றவர். ஆனால் விசுவாசமான மனிதர். அப்போது அவருக்கு வயது சுமார் 55 - 60 இருக்குமென எண்ணுகிறேன். நான் அப்போ இளைஞன். இவர் ஒரு பகுத்தறிவாளர். மூடநம்பிக்கைகளைத் துடைத்தெறியும் வல்லுனர். இவருடன் பழகியதன் பிற்பாடுதான் நான் பல மூடநம்பிக்கைகளை என் மனத்திலிருந்து நீக்கியிருக்கிறேன் என்பது உண்மையாகும். அந்தக்காலத்தில் இந்தியப் பகுத்தறிவாளர் டாக்டர் கோவூரை இலங்கைக்கு அழைத்துப் பல ஊர்களுக்கும் அழைத்துச் சென்று பொதுக்கூட்டங்களை நடாத்தி மக்களின் மூடநம்பிக்கைகளைப் போக்கி, பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பியவர்களில் இவரும் ஒருவர். மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற

கூட்டத்தில் நானும் கலந்துகொண்டேன். ஏதோ அந்த வயதில் நானும் இவரின் கொள்கையில் ஈர்க்கப்பட்டபடியால் இன்றுவரை நானும் மூடநம்பிக்கைகள், சாத்திர சம்பிரதாயங்களில் நம்பிக்கை அற்றவனாகவும், பொதுஅறிவு, பகுத்தறிவு, பொதுநோக்கோடு வாழும் மனப்பக்குவத்தைக் கொண்டிருக்கிறேன். அவரது காரியாலயத்தில் ஒரு நாள் நான் நின்றபோது அவரின் சத்தம் உரத்தகுரலில் கேட்டது. அப்போது அங்கு நின்ற பலர் அதிர்ச்சிக்குள்ளானார்கள். சிறிது நேரத்தின் பின்பு அமைதி நிலவியது.

அப்போது எனது சந்திப்புக்கு நேரம் கிட்டியது. அவரது இருக்கையின் அருகே நான் மிக அமைதியாக இருந்தேன். அவர் உயர் அதிகாரி, ஏற்கனவே சத்தம்போட்டுப் பேசியபடியால் என்மனதும் பயப்பட்டு அமைதியைப் பேணியது. அவர் என் அமைதியைக் குலைத்து எப்படிச் சுகமா?..என்றார்...நானும் ஆம் சேர்.. என்றேன். அவர் காரியாலய அலுவல்களுடன் வேறு பல விடையங்களையும் என்னோடு கதைத்தார். அவரது மனம் குளிர்ச்சியடைந்ததை அவதானித்த நான் அவரிடம்..சேர் பொது லிகிதர் சரிபார்த்து பின்பு பிரதமலிகிதர் சரிபார்த்த கணக்குகளைப் பிறகு நீங்கள் ஏன் சரிபார்க்கிறீர்கள் நீங்கள் ஒப்பம் இட்டால் சரிதானே என்றேன்.. அவர் சிறிது கோபம் கலந்த புன்னகையுடன்.. தம்பி உனக்குத் தெரியாது எத்தனையோபேர் கணக்குப்பார்த்தாலும் நான் ஒருமுறை கணக்குப் பார்த்தால்தான் சரி. மனதுக்கு நிம்மதி.

இப்படித்தான் சில ஆண்டுகளுக்குமுன் லிகிதர் பிரதமலிகிதர் சரிபார்த்த கணக்குகளை நான் சரிபார்க்காமல் ஒப்பமிட்டபடியால் கணக்குகளில் தவறுகள் காணப்பட்டு பொறுப்பு என்தலையில் விழுந்து சிறிது காலம் வேலையில் இருந்து நிற்பாட்டப்பட்டதுடன் குற்றப்பணமும் கட்டிய அரச அதிகாரி நான் என்றார். அப்போதுதான் எனக்கும் புத்தி ஓடி வெளிச்சது. அவருடைய அனுபவப்பாடம் எனக்கும் திருப்பு முனையாகவே அமைந்தது. அன்றிலிருந்து இன்றுவரை யாராக இருந்தாலும் எந்தக் கணக்கையும் ஒருமுறை சரிபார்த்துத்தான் ஒப்பமிடும் பழக்கத்தைக் கடைப்பிடித்து வருகிறேன். அத்துடன் கணக்கு என்பது உடனுக்குடன் செய்து முடிக்கப்பட்டால்தான் பல சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்ற உண்மையையும் புரிந்துகொண்டுள்ளேன்.

இந்த விடையத்தையும் இவரின் குண இயல்புகளையும் ஏன் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால்..இன்றைய இந்த உலகம் பணத்தால் கட்டுண்டு புரள்கின்றது. மோசடிகள், கொள்ளை, சுத்துமாத்து, நம்பிக்கைத்துரோகம், ஏமாற்றுதல், அபகரிப்பு நிறைந்த உலகமாகும். தாய்-தந்தையரை ஏமாற்றும் பிள்ளைகள், சகோதாரர்களிடையே ஏமாற்றுதல், உறவுகளிடையே நண்பர்களிடையே ஏமாற்றுதல் எல்லாம் சர்வசாதாரணமாகிப் போய்விட்டன. நம்பிக்கையற்ற உலகமாக மாறிவிட்டது. யாரையும் உடனே நம்பக்கூடாது. காசு,பவுண், காணி, சொத்து போன்ற அனைத்தும் யாராக இருந்தாலும் எழுத்து வடிவில் இருபகுதியினரின் கையொப்பங்களுடன் இருந்தால்தான் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பல பிரச்சனைகளைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

இதற்காகத்தான் நம்மவர்கள்"ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" "தாய் பிள்ளை என்றாலும் வாயும் வயிறும் வேறு" "உறவு உறவு என்றாலும் பறியில் கை வையாதே" "அண்ணன் தம்பி என்றாலும் எண்ணிக்கொடு" என்றெல்லாம் சொல்லி வைத்துச் சென்றனர் நம் மூதாதையர். எனவே இப்படிப்பட்ட நல்ல மனிதரின் குண இயல்பானது என் வாழ்நாளில் பல மாற்றங்களை ஏற்படுத்தின என்பது நிஜமே. ஆகவே உங்கள் மனங்களில் குடிகொண்டிருக்கும் மூட நம்பிக்கைகளையும் கூடிய அளவு அகற்ற முயற்சியுங்கள். கணக்குகளை ஒருமுறையாவது சரிபார்த்து ஒப்பமிடுங்கள். இவை உங்கள் வாழ்க்கைப் பயணத்திற்குப் பயனளிக்கும் அற்புதமான விடையங்களாகும். அந்த மனிதனின் மனதை நான் இன்றுவரை நேசித்துக்கொண்டுதான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.

# 5 - பிரதேச காரியாதிகாரி (DRO)

இலங்கையில் தற்போதுள்ள உள்ளாட்சி முறைகளில் பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் என்றெல்லாம் நிர்வாகம் நடைபெறுகின்றது. இதற்கு முன்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவு, மாவட்ட அரசாங்க அதிபர் பிரிவு என்றெல்லாம் இருந்தன. அதற்கும் முந்திய காலத்தில்தான் (காரியாதிகாரி) டி.ஆர்.ஓ (DRO) (Divisional Revenue Officer) என்று அழைக்கப்பட்ட பிரதேச காரியாதிகாரி முறை இருந்தது. இந்த டி ஆர் ஓவாகத்தான் திரு தம்பிமுத்து மார்க்கண்டு அவர்கள் அரசால் நியமனம் பெற்று துணுக்காய்க்கு வருகிறார். இவர் ஒரு பட்டதாரி. அரச நிர்வாக சேவைப் பரீட்சையில் (C.A.S) Ceylon Administation Service (தற்போது S.L.A.S என்று அழைக்கப்படுகின்றது) சித்திபெற்று முதல் நியமனம் கிடைக்கின்றது. துடிப்பான இளைஞர், அழகான இளைஞர், மண் பற்றுக் கொண்டவர், கடமையில் கண்ணியமானவர். தமிழ் மொழி பற்றுக்கொண்டவர். மொழி ஆர்வலர். 1968 - 1970 ஆண்டளவில் அப்பிரதேசத்துக்கு நியமனம்பெற்று வருகிறார்.

அப்போது துணுக்காய், வவுனிக்குளம், பாண்டியன்குளம் பிரதேசங்கள் யாழ்ப்பாணம் கச்சேரி ஆளுமைக்குள் இருந்தன. சட்டம், நிர்வாகம் ,ஒழுங்கு, நீதி, அமைதி நிலைநாட்டவேண்டிய பொறுப்புக்கள் யாவும் இவர் கையிலேயே இருந்தன. இந்தப்பிரதேசத்தில் வன்னியை நிரந்தரமாகக்கொண்டு பிறந்து வளர்ந்த மக்கள், யாழ் மாவட்டத்திலிருந்தும் பல கிராமங்களிலிருந்து குடியேறிய மக்கள் எனவும் குறிப்பாகத் தீவுப்பகுதிகளின் மக்களுமே கூடுதலாகக் குடியேறி வாழ்ந்து வந்தனர்.

இதிலும் பல குண இயல்பைக் கொண்டவர்கள், சாதிய சமய, சமூகப் பழக்க வழக்கங்களைக்கொண்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்துவந்தனர். இதனால் மக்களிடையே காணிப்பிரச்சனை, குடிகாரரின் தொல்லைகள், ஊர்ச்சண்டியன்மாரின் அட்டகாசம், குடும்பப் பிரச்சனைகள், இளையோர் பிரச்சனைகள், களவு, கொள்ளை, கொலை என நிறையவே காணப்பட்டன.

அப்போது இப்பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கு இப்பகுதியில் பொலிஸ்நிலையம்கூட கிடையாது. சகல நிர்வாக நீதிப்பொறுப்புக்கள் அனைத்தும் இவரிடமே இருந்தன. இவ்வேளையில்தான் இவரின் நிர்வாகத் திறன் வெளிப்பட்டது. குற்றம் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுத்தார். பொலிஸ்வேலையான அடி தடியில்கூட இவர் இறங்கி நீதி, நியாயத்தை நிலை நாட்டினார். சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி அமைதியை நிலைநாட்டினார். அந்தக்காலகட்டத்தில் ரவுடித்தனம்புரிவோர், குழப்படி செய்வோர், குடிகாரர், சண்டியன்மார் எல்லோரும் இவரைக் கண்டால் குலை நடுக்கம்தான். ஏன் இவரின் ஜீப் வண்டியைக் கண்டவுடன் ஓடி ஒழித்தார்கள். வீதி ஓரம் ஒழித்து ஒதுங்கி நின்றவர்கள் எத்தனைபேர்.

அனைத்து அநியாயங்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்து மக்களின் நீதி நியாயமான அமைதி வாழ்வுக்கு வித்திட்ட திறமையான அரச அதிகாரி என்றுதான் நான் கூறுவேன். இவற்றைவிட இவர் மண்பற்று, மொழிப்பற்றுக் கொண்டு செயற்பட்டார். தமிழர் நிலங்களில் தமிழினமும், தமிழும் கோலோச்சி வாழவேண்டும் என்பதில் தாகம்கொண்டு செயற்பட்டார். பல ஏழை மக்களுக்கு அரசகாணிகளைப் பங்கிட்டுக் கொடுத்து அவர்களை வாழவைத்தார். குடியேற்றத் திட்டமான இப்பிரதேசத்தின் விவசாய பொருளாதார முன்னேற்றத்திற்குப் பல திட்டங்களை வகுத்துச் செயற்பட்டார். வருடாவருடம் முத்தமிழுக்கு விழா எடுத்து கலை விழாக்களைக் கொண்டாடித் தமிழையும் தமிழ் மக்களையும் சிறப்பித்தார். நானும் அந்தப் பிரதேசத்தில் (மல்லாவி-யோகபுரம்) வாழ்ந்தபடியால் இவரைப்பற்றிய விபரங்களை அப்போது அறிந்துகொண்டேன்.

பின்னாளில் அவருடன் பழகும் வாய்ப்பையும் பெற்றிருக்கிறேன். நான் கடமையாற்றிய கூட்டுறவுத் துறையில முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு ஆணையாளராகக் கடமையாற்றியபோது காரியாலய அலுவல்களாக இவருடன் பேசிப் பழகிய அனுபவங்கள் (1977 -1980 காலப்பகுதியில்) பல உண்டு. 1977 ஆகஸ்ட் இனக்கலவரம் நாடுமுழுவதும் தீயாகப் பரவிப் பல உயிர்கள் பறிபோனது வரலாறாகும். இக்கலவரம் மூண்டபோது துணுக்காய், வவுனிக்குள், பாண்டியன்குளம் பிரதேசம் ஒரு முக்கிய பிரதேசமாகக் காணப்பட்டிருந்தது. அங்கே

சிங்கள மீனவர்கள் தற்காலிகமாகக் குடியேறி அங்குள்ள குளங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது இந்தக் கலவரத்தில் சில சிங்கள மீனவர்கள் கொல்லப்பட்டனர். அப்போது மன்னார், மாங்குளம், பகுதிகளில் முகாமிட்டிருந்த இராணுவப் படையினர் பல வாகனங்களில் படை எடுத்து வந்து பல பொதுமக்கள் அரச உத்தியோகத்தர்கள், பெண்கள் என வேற்றுமை பாராது எல்லோருக்கும் அடித்து உடைத்துப் பொருட்களுக்குச் சேதம் விளைவித்து, சொத்துக்களுக்குத் தீயிட்டுக்கொளுத்தி அடடகாசம் புரிந்து சென்றனர்.

இத்தாக்குதலில் நானும் எனது காரியாலயத்தில் என்னோடு வேலை செய்துகொண்டிருந்த பல உத்தியோகத்தர்களும் (ஆண் + பெண் இருபாலரும்) தாக்குதலுக்கு ஆளானோம். இரத்தக்காயங்களுக்கு ஆளானோம். வைத்தியசாலையில் சிலநாட்கள் சிகிச்சை பெற்றோம். அந்தக்காலகட்டத்தில் திரு மார்க்கண்டு அவர்கள் பல உதவிகளைச் செய்துகொண்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு, தங்குமிடம், மருத்துவம், பாதுகாப்பு, ஆலோசனைகள் அனைத்தும் எம்மைப் பாதுகாத்திடப் பேருதவியாக அமைந்தன என்பதை இப்போது எழுதிக்கொள்வதில் அவரின் மனப்பக்குவத்தை பாராட்டுகிறேன்.

அந்தநாள் ஞாபகங்கள் என்றும் என் மனதைவிட்டகலாது. நல்ல மனம்படைத்த இவரின் சேவைகளை எண்ணும்போது ஆச்சரியப்படுவேன். பின்னர் இவர் பதவி உயர்வு பெற்று வவுனியா அரசாங்க அதிபராகவும், வடகிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளராகவும், வடகிழக்கு மாகாணசபை - ஜனாதிபதி செயலக தொடர்பாடலாளராகவும் உயர் பதவிகளை வகித்து இளைப்பாறித் தற்போது லண்டனில் வசித்து வருகின்றார்.

இவர் பதவியில் இருந்தபோதும் ஓய்வுபெற்றபோதும் மண் சஞ்சிகையின் நீண்டகால வாசகராகவும் இருந்துவருக்கிறார். அவ்வப்போதெல்லாம் எனக்குப் பல அறிவுரைகளையும் ஆலோசனைகளைக் கூறி மண் சஞ்சிகையையும் என்னையும் நல்வழிப்படுத்திவருகிறார். சஞ்சிகைக்குப் பல தடவைகள் ஆக்கங்கள் எழுதியிருக்கிறார். இவைமட்டுமல்ல தனது பதவிக்காலங்களிலும் வயதான காலங்களிலும் வடக்கு-கிழக்கு மாகாணத்திலிலுள்ள

ஆதரவற்ற சிறார் இல்லங்களைப் பார்வையிட்டு அறிக்கைகளையும் சிபார்சுகளையும் மண் சஞ்சிகையின் ஆதரவற்றோர் உதவித்திட்டத்திற்கு அவ்வப்போது உதவிகளை வழங்கி மனிதநேயப்பணிகளையும் செய்துவருகின்றார்.

இன்றுவரை அவரின் மனிதநேயப்பணிகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இவர் என் மனம் கவர்ந்தவர் என்பதைக் கூறவேண்டுமானால். நல்ல ஒரு நிர்வாகத்திறன் கொண்ட அதிகாரி. மண்ணையும் மக்களையும் தாய்மொழியையும் நேசித்துவரும் பெரியவர். எந்தக்காரியத்தையும் உடனுக்குடன் செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தவர். இழுத்தடித்து வேலைப்பழுவை வைக்காமல் காரியங்களைச் செய்துமுடிக்கும் இவரின் அனுபவங்கள் எனது வாழ்வில் பல பாடங்களாக அமைந்தன என்பதைப் பெருமையாகக் கூறிக்கொள்கிறேன். உங்களுக்கும் ஒரு பாடமாக அமையலாம். ஆகவே இந்த நல் மனம் படைத்த பழுத்த நிர்வாக சேவை அதிகாரியின் மனக்கிடக்கைகள் என் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தின என்பது உண்மையான விடையமாகும்.

# 6 - சாதாரண மனிதர் (Simple Man)

நம்மில் பலர் பதவி,பட்டம்,பணம், புகழ் கிடைத்துவிட்டால் தங்களை விட்டவர்கள் இந்த உலகில் யாரும் இல்லை... தான்தான் எல்லாவற்றிலும் உயர்ந்தவன் பெரியவன், பணக்காரன், படித்தவன் என்றெல்லாம் தமக்குத்தான் பெருமைகொண்டு அலட்டிக் கொள்ளுவார்கள். ஆனால் ஒரு சிலரோ படித்துப் பட்டம் பெற்றாலும், உயர்பதவி வகித்தாலும், பணம் பெருவாரியாக இருந்தாலும் ஏன் அழகாக இருந்தாலும் எதற்கும் பெருமை கொள்ளாமலும் ஆணவம் இல்லாமலும் மிகவும் இலகுவாக நடந்துகொள்வார்கள்.

மிக இயல்பாக வாழ்ந்துகொள்ளுவார்கள். இதுதான் மனிதவாழ்வுக்குச் சிறந்த அம்சம் என நான் கருதுகிறேன். இப்படிப்பட்ட ஒரு சிறந்த மனிதரைத்தான் நான் சந்தித்தேன். என்னைக் கவர்ந்துகொண்டார். ஒரு அரசாங்க அதிகாரி. இவர் யாழ் சாவகச்சேரி-மந்துவில் கிராமத்தைப் பிறப்பிடமாகக்கொண்டவர். பெயர் பற்குணம். ஒரு பட்டதாரி. திருகோணமலை-தம்பலகாமம், வவுனியா-செட்டிகுளம் (டி.ஆர்.ஓ) காரியாதிகாரியாகக் கடமையாற்றியவர். யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களின் உணவு ஆணையாளராகக் கடமையாற்றியவர். நான் இவரைச் சந்திக்கும் போது வவுனியா கச்சேரியில் மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டதிகாரியாகக் கடமையாற்றினார். எனது காரியாலய அலுவல்கள் காரணமாக இவரை அடிக்கடி சந்தித்து உரையாடியிருக்கிறேன்.

ஒருநாள் வழக்கம்போல் அவரது காரியாலயத்தில் சந்தித்து உரையாடினேன். அப்போது மதிய உணவு வேளை. பூவரசம் இலையால் பொதிசெய்யப்பட்ட சோற்றுப் பாசல். சாப்பிடுக்கொண்டிருந்தார். அப்போது நான் திடீரென அவரது காரியாலய்துக்குள் சென்றுவிட்டேன். அவர் பறவாயில்லை. இதில் இரும் என்றார். நானும் அமைதியாக இருக்கை ஒன்றில் அமர்ந்துகொண்டேன். அவர் சாப்பிட்டபடியே என்னை விசாரித்தார். எந்த ஊர்?... எங்கபடிச்சனீர்?... எவ்வளவுகாலம் வேலை செய்கிறீர்?.. என்றெல்லாம் விசாரித்து ஊர், நாட்டு நடப்புக்களையும் கலந்துரையாடினார். இந்த உரையாடலின் பின்பு மட்டுவிலில் வசித்த எனது மைத்துனருடன் மட்டுவில் மகாவித்தியாலயத்தில் படித்ததாகவும்

கூறினார். அப்போது எனக்குச் சிறிது ஆர்வம் ஏற்படவே அவரைப்பற்றி விசாரித்து அறிந்து கொண்டேன். அப்போ நான் எண்ணினேன். அட இவரிலும் குறைந்த பதவிகளில் இருப்பவர்கள் கோட், சூட், ரை எல்லாம் கட்டிக்கொண்டு மிடுக்காக கச்சேரியில் வேலை செய்கிறார்கள் இந்தாள் ஒரு அரைக்கை சேட், ஒரு சாதாரண நீளக்காற்சட்டையோடு சிம்பிளாக இருந்து பூவரசம் இலையில் சாப்பாடு, அமைதியாகத் தன்கடமைகளைச் செய்கிறாரே என வியந்துகொண்டேன்.

பின்பு ஒருநாள் நான் மட்டுவிலிலுள்ள மோகனதாஸ் சனசமூகநிலைய விளையாட்டுப் போட்டிக்குப் போயிருந்தேன். அங்கு ஒருவர் தனது பழைய மாணவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார். சாரம் அணிந்திருந்தார். பலர் கூடியிருந்தனர். நானும் கிட்டப்போய் பார்த்தேன். யாருமல்ல இவர்தான் அங்கு இலகுவாக நண்பர்களுடன் பேசிச்சிரித்து மகிழ்ந்துகொண்டு நின்றார். நான் இவரைப்பார்த்து அதிசயித்தேன். எட ஒரு உயர் அதிகாரி, ஒரு பட்டதாரி, இவரிடம் கோட்,சூட், ரை எல்லாம் உண்டு. ஏன் அரசாங்க ஜீப் வண்டியும் இவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்தாள் சிம்பிளாகச் சாரத்துடன் சையிக்கிளில் வந்து நிற்கிறாரே... எவ்வளவு சிம்பிளான மனிதர். அந்தக்காலத்தில் க.பொ.த. பரீட்சையில் சித்தியெய்தாதவர்களெல்லாம் கலர்..கலராகச் சேட்டுக்களும் விதம்...விதமாக நீளக்காற்சட்டையும் கூலிங்கிளாசும் போட்டுக்கொண்டு திரிபவர்களை ஒரு கணம் யோசித்துப் பார்த்தேன்.

இவர் படித்த படிப்பு பட்டப்படிப்பு. வகித்த பதவி அரசாங்க உயர்பதவி. நிறைந்த சம்பளம், நல்ல அறிவாளி எந்தக்குறையும் இல்லாத மனிதர். தனது எளிமையான வாழ்க்கை முறையால் எல்லோரையும் கவர்ந்திருக்கிறார். தான் என்ன படித்து எங்கு சென்றாலும் தனது பழைய மாணவர்களை நண்பர்களை மறக்காமல் அங்கு வந்து சந்தித்து உரையாடி மகிழ்கிறாரே. இதுதான் பெருந்தன்மை. இவர் உண்மையில் ஓர் இலகுவான மனிதர்தான் (Simpel Mann) என உணர்ந்து கொண்டேன். அன்றிலிருந்து நானும் இலகுவாக எல்லோருடனும் பழகவேண்டும் வாழவேண்டும் என்னும் வாழ்க்கைப்பாடத்தைக் கற்றுக்கொண்டேன். "நிறைகுடம் தளம்பாது குறைகுடங்கள்தான் தளம்பும்" என்ற விடயத்தை நான் அறிந்துகொண்டேன் நீங்களும் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன்.

# 7 - படைப்பாளி

ஒரு சமூகப் படைப்பாளியானவர் தான்வாழும் சமூகத்தின் கண்ணாடி போன்றவராவர். தான் படைக்கும் படைப்புக்கள் அன்றும், இன்றும் ,என்றும் நிலைத்து நிற்க வேண்டும். சமூக மாற்றத்திற்கான படைப்பாளியாகத் திகழவேண்டும். சமூகத்தின் சமகாலப் படைப்புக்களை உண்மையாக ஆணித்தரமாகப் படைக்க வேண்டும். மக்கள் மனதை ஈர்த்து அவர்களின் கலை இலக்கிய எழுத்துப் பணிகளுக்குத் தீனி போடவேண்டும். இப்படிப்பட்ட படைப்பாளிகளின் படைப்புக்களே மக்கள் மனதில் அதாவது சாதாரண வாசகர் மனங்களில் நிலைபெற்றுவிடும். உயர்ச்சி பெற்றுவிடும்.

அந்த வகையில்தான் என்மனதைக் கவர்ந்த படையப்பாளியான க.குணராசா அவர்கள் (செங்கையாழியான்) தமிழுக்கும் தமிழர்களுக்கும் நன்கு தெரிந்தவர்தான் இந்தப் படைப்பாளி. 25.01.1941ம் தேதியில் பிறந்தவர் 28.02.2016 தேதியன்று தனது 75வது வயதில் காலமாகிவிட்டார். அவரின் இறப்புச்செய்தி என்னையும் கதிகலங்க வைத்தது. இவர் ஒரு பட்டதாரி, அரசாங்க உயர் அதிகாரி, சிறந்த படைப்பாளி. இவர் எழுதிய புவியியல் பாடப்புத்தகங்கள், கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், ஆராய்ச்சிக்கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள், நகைச்சுவைகள், துணுக்குகள் என்பன இலங்கையில் மூன்று மொழிகளிலும் வெளிவந்து ஒரு சரித்திரத்தைப் படைத்திருப்பது போற்றுதலுக்குரிய விடையமாகும்.

இப்படியான பெரும் படைப்பாளியோடு நானும் பழகியிருக்கிறேன். அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்திருக்கிறேன் என்னும்போது மகிழ்வுதான். என் மனதுக்குப் பிடித்த முதுபெரும் எழுத்தாளராகக் கண்டுகொண்டேன். நான் பாடசாலையில் படிக்கும் போதே இவரின் புத்தகங்களைப் புவியியல் பாடத்தில் படித்து அதிக புள்ளிகளைப்பெற்றுப் பரீட்சையில் சித்திபெற்றிருக்கிறேன். இவரின் அத்தனை படைப்புக்களையும் படித்துச் சுவைத்திருக்கிறேன். இவரின் கதை உருவாக்கத்தில் இலங்கையில் வெளிவந்து சாதனை படைத்த "வாடைக்காற்று" திரைப்படத்தைப் பார்த்து ரசித்திருக்கிறேன்.

சுமார் 35 -36 வருடங்களின் முன் நாம் இருவரும் பேசிப்பழகி, உறவாடியவர்கள். இந்த நல்ல மனம் படைத்தவரின் குண இயல்புகளைப் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்வுதான். அப்போது இவர் வவுனியா - செட்டிகுளம் பிரதேச டி ஆர் ஓ வாகக் (DRO) கடமையாற்றி இடமாற்றம் பெற்று துணுக்காய் உதவி அரசாங்க அதிபராகப் பதவி ஏற்று வந்தார்.

அவருடைய காரியாலயமும் நான் வேலைபார்த்த காரியாலயமும் சுமார் நூறு மீட்டர் தூரத்தில்தான் அமைந்திருந்தன. அங்கு அவர் கடமையாற்றிக்கொண்டிருந்த காலத்தில். நான் எனது காரியாலய விடையமாக அவருடைய காரியாலயத்திற்கு அடிக்கடி சென்றுவருவேன். அப்போதுதான் நான் அவருடன் பழகும் பேசும் வாய்ப்புக் கிட்டியது. மிகவும் அழகானவர். இனிமையாகப் பேசுபவர். அவரின் எழுத்துக்களைப்போல் இனிமை, சுவை, மனதை வருடும் பக்குவம் நிறைந்தவர்.

அப்போது நான் எனது தொழிலுடன் "ஈழநாடு" பத்திரிகையின் நிருபராகக கடமையாற்றிக் கொண்டிருந்ததை அவர் அறிந்துவிட்டார். பின்பு அடிக்கடி தனது காரியாலயத்திற்கு என்னை அழைத்து செய்திகளையும், பொதுமக்கள் செயற்பாடுகளையும், தனது இலக்கிய முயற்சிகளையும் கூறுவார். நான் ஒவ்வொன்றாகத் தொகுத்து எழுதிப் பத்திரிகைக்கு அனுப்புவேன். அடுத்தநாள் பத்திரிகையில் வெளிவந்ததும் எனக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பார்.

தொடர்ந்த சந்திப்புக்கள் அன்பு நட்பு காரணமாக அவர் குடியிருந்த அரசாங்க குவாட்டஸ் வீட்டுக்கு என்னை அழைத்து கலை, இலக்கிய, எழுத்து, பணிகள்பற்றி எல்லாம் இருவரும் உரையாடிய சம்பவங்கள் ஏராளம். அப்போது அவரின் ஆளுமை, திறமை, ஆற்றல், அறிவுகளைக்கண்டு ஆச்சரியப்பட்டிருக்கிறேன். இவ்வளவு ஆற்றல் படைத்த படைப்பாளியின் பேனாவைப் பற்றிச் சிந்தித்திருக்கிறேன். இவ்வளவு அமைதியான, அழகான மனிதரிடம் ஆழமான எத்தனையோ விடையங்களை நானும் கற்றறிந்துகொண்டேன்.

"கோழி ஒரு முட்டை இட்டுவிட்டு உலகத்தைக்கூப்பிட்டுக் கொக்கரிக்கும் ஆனால் ஆமையோ ஆயிரம் முட்டைகளை போட்டுவிட்டு அமைதியாகக் கிடக்கும்" இப்படித்தான் இன்றைய மனிதர்களும் படைப்பாளிகளும், எழுத்தாளர்களும், கலை இலக்கிய எழுத்துத்துறையினரும் ஊடகங்களும் ஒரு படைப்பைப் படைத்துவிட்டு ஊர் உலகத்தை அழைத்து விழா எடுத்துப் பொன்னாடை, புகழ் எனமுடியும் ஆனால் இந்த மாபெரும் படைப்பாளி ஆயிரம் படைப்புக்களைப் படைத்துவிட்டு அமைதியாக இருந்தார். செயற்பட்டார். இறுதியில் அழியாப்புகழுடன் அமைதியாகவே சென்றுவிட்டார்.

இவர் இந்த உலகத்தைவிட்டுப் பிரிந்தாலும் இவரின் படைப்புக்கள் இன்றும் என்றும் புகழ்பெற்று விளங்குகின்றன. இவரின் பாடப்புத்தகங்களை உயர்வகுப்புக்கள் பல்கலைக்கழக மாணவர்கள் பயன்படுத்துகின்றனர் என்னும் போது எவ்வளவு பெருமை. அவர் விட்டுச் சென்ற மொழியும் படைப்புக்களும் அனைத்துச் சமூக மக்களுக்கும் என்றும் பயன்படக்கூடிய அரிய பொக்கிஷமே. இப்படிப்பட்ட நல்ல படைப்பாளிகளின் மனக்கிடக்கைகள் என்றும் அழியாப் புகழ்பெற்று விளங்கும் என்பது நிஜமாகும். ஆகவே நாம் ஒவ்வொருவரும் கோழியைப்போல் வாழாமல் ஆமையைப்போல் வாழ்ந்து சரித்திரம் படைப்போம்!..

## 8 - மக்கள் சேவையே மகேசன் சேவை

வாழ்வில் நம்மில் பலர் தொழில், வேலை என்று செய்யும்போது தமக்குக் கொழுத்த சம்பளம் கிடைத்தால் மட்டும் போதும். தனது பை நிறைந்தால் மட்டும்போதும். மற்றவன் எக்கெதிபட்டாலும் நமக்கென்ன என்ற மனப்பக்குவத்தில்தான் காணப்படுவார்கள். இன்னும் பலர் ஓடி.. ஓடி உழைத்துப் பணத்தை சேர்த்துக் குவித்துவிட்டு ஒரு சதம்கூட வறிவர்களுக்குக் கொடுக்காமல் தான், தன்னுடைய குடும்பம், உறவுகள் என வாழ்ந்து முடித்துவிடுவார்கள்.

இன்னும் பலர் மேடைகளிலும் எழுத்திலும் அது செய்வேன் இது செய்வேன் என்பார்கள் இறுதியில் ஒன்றுமே செய்யாமல் சுயநலமாக வாழ்ந்துவிடுவார்கள். ஆனால் ஒரு சிலர் மக்களுக்குச் சேவை செய்வதையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்திருப்பவர்களை நாம் கண்டிருக்கிறோம். எங்களோடு வாழ்ந்தும் இருக்கிறார்கள். இப்டிப்பட்ட வெள்ளை மனம் படைத்த ஒருவர் பற்றித்தான் இங்கே குறிப்பிடுகிறேன்.

மறக்கமுடியாத நல்ல மனம்படைத்த மனிதர்களில் என்மனம் கவர்ந்த இன்னொருவர் இவர் துணுக்காய் பிரதேச உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றியவர். பெயர் கார்த்திகேசு. பருத்தித்துறை புலோலியைப் பிறப்பிடமாகக்கொண்டவர். சுமார் முப்பத்தைந்து வருடங்களின் முன்பு எனது காரியாலய விடையமாக நான் இவருடன் பழகும் வாய்ப்புக் கிட்டியது. நான் ஈழநாடு பத்திரிகையின் நிருபராகக் கடமையாற்றியபடியால் இவரிடம் அடிக்கடி சென்று செய்திகள் சேகரிக்கும் சம்பவங்கள் நிறையவே இருந்தன. இவர் உயரம் சற்று குறைவானாலும் நல்ல மொத்தமான உடம்புக்காரர். சற்று கோபக்காரர். என்றாலும் மக்களிடத்தில் பழகுவதற்கும் மக்களுக்குச் சேவை செய்வதிலும் வல்லவர். எப்பொழுதும் இலகுவானவர்.

இவர் ஒரு உதவி அரசாங்க அதிபர் சுமார் 25 -30 ஆண், பெண் அரச உத்தியோகத்தர்களின் பொறுப்பதிகாரி. அந்தப் பிரதேச மக்களின் சேவகராகவும் ஒரு பணியாளரைப் போலவும்தான் அவர் நடவடிக்கைகள் அப்போது காணப்பட்டன. இப்படிப் பட்ட உயர் அதிகாரி சில வேளைகளில் தனது வீட்டு உடையான சாரத்தோடும்

தனது அலுவலக அறையில் இருந்து கடமையாற்றியதை நான் பல தடவைகள் கண்டிருக்கிறேன். அப்போது நான் அவரைப் பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கிறேன். என்னைப்பொறுத்த அளவில் சாரம் கட்டிக்கொண்டு தனது காரியாலயத்தில் இருந்து கடமைகளை ஆற்றிய உதவி அரசாங்க அதிபர் இவர் ஒருவராகத்தான் இருக்கும் என நம்புகிறேன். இவரின் இயல்பான மனத்தையும் சுலபமான நடவடிக்கைகளும் என் மனதையும் கவர்ந்தது என்றுதான் கூறுவேன். ஆனால் ஒரு கடிதம் எழுதினால் குறைந்தது பத்துப்பேருக்காவது அதன் பிரதிகளை அனுப்பி வைப்பார். அவ்வளவு நிர்வாகச் செயற்பாடுகளில் திறமைசாலி. காரியாலய நிர்வாக முறைகளை நான் இவரிடமிருந்தும் பல பாடங்களைக் கற்று முன்னேறியிருக்கிறேன்.

இவரின் மனைவி, பிள்ளைகள் பருத்தித்துறையில் வாழ, இவர் தனக்குக்கொடுத்த அரசாங்க குவாட்டஸ் வீட்டிலேயே தங்கி வாழ்ந்து வந்தார். ஆனால் இவர் ஒருவரின் சாப்பாட்டுக்கு மூன்று வேலைக்காரர்கள் எப்போதும் காணப்படுவார்கள். தனியே ஒருநாளும் சாப்பிடமாட்டார். மற்றவர்களுடன் சேர்ந்து மற்றவர்களுககுக் கொடுத்து தானும் உண்டு மகிழும் உணர்வைக்கண்டு நான் பல தடவைகள் வியந்திருக்கிறேன். மற்றவர்களுக்குக்கூறி மகிழ்ந்திருக்கிறேன். இவருடைய வீட்டிற்கு நான் சென்றுவந்தபோதெல்லாம் தேநீர் பழங்கள் உண்டு குடிக்காத நாட்களே கிடையாது. தனது வீட்டு அறை ஒன்றில் எப்போதும் பழங்கள் குலையாகவும் சீப்பாகவுத் பெரும்தொகை காணப்படும். பழங்கள்மீது இவருக்கு உள்ள பிரியம் அப்படிப்பட்டது. காகத்தின் நல்ல குணம் போல் எப்போதும் தனது நட்புக்களையும், தனது காரியாலய உத்தியோகத்தர்களையும் அழைத்து ஒன்றுகூடி உண்டு குடித்து மகிழ்ந்த இந்த நல்ல மனம் படைத்த மனம் யாருக்குத்தான் வரும்.

மறக்கமுடியாத பல சம்பவங்களில் இதுவும் ஒன்று. நான் நேரில் கண்டுகொண்டது. அவரின் காரியாலய வழமையான நேரம். பல பொதுமக்கள் காணப்பட்டனர். சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர். வறியவர்போல் தோற்றமளித்தார். அந்தப் பெண்மணி கண்ணீர் சொரிய அவர்முன் நின்று, ஐயா... எனது கணவர் யானை அடித்து இறந்துவிட்டார். எனது மூத்த மகன் குடிகாரன் அவன் வீட்ட வருவதில்லை, இரண்டாவது மருந்து குடித்துச் செத்துப்போனான்.

இளைய மகனும் மகளும் காசில்லாமல் பள்ளிக்கூடம் போகமாட்டோம் என்று நிற்கிறார்கள், எனக்குப் பிழைப்பு நடாத்த வழியில்லை. அந்த விதானையார் எங்களுடைய உணவுமுத்திரை அரைவாசியை வெட்டிப்போட்டார். நான் என்னசெய்ய ஐயா.. அந்த முருகக்கடவுளும் பிள்ளையாரும் கூட எங்களைக் கைவிட்டுதுகள் ஐயா.. என்று கூறி அழுதார்.

இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த அவர் திடீரென எழுந்து மேசையில் அடித்துச் சத்தம்போட்டார். கோபப்பட்டார். மனிசர் வாழமுடியாது.. இதுக்க முருகனும் பிள்ளையாரும்.. "கடவுளும் மண்ணாங்கட்டியும்..முருகன், பிள்ளையார், அம்மாள் கோவில்கள் அனைத்துக்கும் பம்ஸ் அடியுங்கோடா" என்று சத்தமிட்டார். அப்போது அங்கு குழுமியிருந்த அதிகாரிகள், பொதுமக்கள் எல்லோரும் அமைதியானார்கள். எனக்கும் சிறிது நெருடலாகவே இருந்தது. இவ்வளவு ஆட்களுக்கு முன் இந்த ஆள் கோவில்களுக்குப் "பம்ஸ்" அடிக்கச் சொல்லுதே என்று ஆச்சரியப்பட்டேன்.

அன்றுதான் இவர் ஒரு கம்யூனிஸ்ட் எனப் புரிந்து கொண்டேன். பொதுவுடமைச் சித்தாந்தங்களில் அதிக ஈடுபாடுடையவர் என்பதைப் பின்னாளில் அறிந்துகொண்டேன். ஆதலால் அவரை எனக்கு நன்றாகப் பிடித்துவிட்டது. மக்கள் பசியாலும் பட்டினியாலும் நோயாலும் செத்துமடிய இந்தக் கடவுள்களைக் கும்பிட்டு என்ன பயன் என்றும் எண்ணினேன். பின்னர் அந்தப் பெண்மணிக்கு உரிய உணவு முத்திரைகளையும் கொடுத்து, குடிக்கத் தண்ணீரும் கொடுத்து வழியனுப்பிய காட்சி இன்றும் என் மனதைவிட்டகலவில்லை.

இவரைப் போன்ற ஒரு அபூர்வமான அரச அதிகாரிகளை நான் என் வாழ்நாளில் கண்டதே இல்லை. மக்களுக்காகவே சேவை என்ற மனப்பாங்கில் மக்களுக்குச் சேவை செய்து மக்களோடு வாழ்ந்த இந்த மனிதரிடம் கடமை உணர்வு, சேவை மனப்பான்மை, அன்பு, விருந்தோம்பல், பகட்டில்லாத வாழ்வு போன்ற பல நல்ல அம்சங்களை நான் கற்றுக்கொண்டேன். வாழ்வில் இவரைப் போன்ற மனிதர்களை நாம் சந்திப்பது, அவர்களுடன் பழகுவது. அரிதான விடையம்தானே. மனிதரில் எத்தனை நிறங்கள். இவரும் ஒரு நிறம் (மனம்) தானே!...

# 9 - சைவப்பிரியர்

மனிதர்களில் எத்தனை நிறம், குணம் போல உணவை உண்டு குடித்து மகிழ்வதிலும் பல வேறுபாடுடைய மனிதர்கள் காணப்படுகிறார்கள். ஆதிகாலத்தில் மனிதன் வேட்டையாடி மிருகங்களையும் பறவையினங்களையுமே உண்டு வந்தான். இயற்கையாக ஓடிய ஆறுகளிலும் குளங்களிலும் தனது தண்ணீர்த் தேவைகளை நிறைவேற்றிவந்தான். பரிணாம வளர்ச்சியில் விஞ்ஞான வளர்ர்சியில் படிப்படியான மாற்றங்களுக்கு உட்பட்ட மனிதனின் உணவுப்பழக்க வழக்கங்களிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன.

இலைகுளைகள், காட்டுத் தாவரங்கள், கிழங்குவகைகள், பழவகைகளையும் மாமிச உணவுகளையும் அன்று உண்டுவந்த மனிதரின் உணவுவகைகள் இன்று பல ஆயிரக்கணக்காக விரிவடைந்து எத்தனை ஆயிரம் வகை உணவுகளை மனிதர் உண்டு களிக்கிறார்கள். இப்படிப்பட்ட உணவு வகைகளில்தான் மனிதர்கள் பலர் அசைவ உணவுகளையும் இன்னும் பலர் சைவ உணவுகளையும் உண்டு வாழ்கிறார்கள். என்னோடு பேசிப்பழகிய ஒரு சைவப்பிரியரைப்பற்றியே குறிப்பிடவிரும்புகிறேன்.

நான் வாழ்ந்த வன்னிப்பிரதேசத்தில் காடுகளும் காணிகளும் அதிகமாகக் காணப்பட்டபடியால் நிறை உணவுகளுக்குப் பஞ்சமே கிடையாது. மரக்கறிவகை உணவுகளும் மாமிச உணவுகளும் தாராளமாகவே அப்பிரதேசத்தில் கிடைக்கும். மீன் உணவுகளுக்குத் தட்டுப்பாடு நிலவினாலும் இறைச்சி உணவுகளுக்குத் தட்டுப்பாடு கிடையாது. மான், மரை, பன்றி, ஆடு, மாடு, கோழி எனப் பலவகையான உணவுகளை நான் உண்டு வாழ்ந்திருக்கிறேன். வெள்ளிக்கிழமை தவிர்ந்த அனேகமான நாட்களில் மாமிச உணவுகள்தான் அன்று கிடைத்தது எனக்கூறலாம்.

நான்வேலை செய்த காரியாலயத்திற்கு அருகாமையில் வைத்தியசாலை, பாடசாலை, நிலஅளவை திணைக்களம், வீதி புனரமைப்புத் திணைக்களம், மாவட்டக் காணி அலுவலகம், உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைமை அலுவலகம், பஸ் நிலையம் வைத்தியசாலை, வைத்தியசாலை, கடைகள்

வேலைத் திணைக்களம், காணி அலுவலகம், பாடசாலை எனப் பல அலுவலகங்கள் இருந்தன.இந்தப் பல அரசாங்க அலுவலகங்களில் ஒன்றுதான் மாவட்டக்காணி அலுவலகம். (District Land Office) இதை டி.எல்.ஓ (DLO) அலுவலகம் என்று அழைப்பார்கள். அநேக உத்தியோகத்தர்கள் யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இருந்து வந்துதான் அங்கு கடமையாற்றிக்கொண்டிருந்தனர். அப்போது இவர்கள் அனைவருக்கும் உணவு கொடுப்பது ஒரே ஒரு சாப்பாட்டுக்கடையான தம்பர் கன்ரீன் என்றால் ஒரு சிறப்புத்தான். பல அரச உத்தியோகத்தர்களுக்கு மூன்றுநேரமும் உணவளித்தது என்றால் அன்று இந்தத் தம்பு கடைக்கே சிறப்புத்தான். தம்பர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர். பல ஆண்டுகளாகக் குடும்பமாக இந்தக் கடையை நடாத்தி வந்தார்.

அப்போ சகல உத்தியோகத்தர்களும் மதிய, மாலை உணவுக்காக இவரின் கடையில் கூடித்தான் உணவு தொடக்கம் அரசியல்வரை அனைத்தும் நடந்தேறும். இரவில் தம்பரும் சில உத்தியோகத்தர்களும் சாராயப் போத்தலுடன் உறவாடி மகிழ்ந்த சம்பவங்களையும் நான் பலதடவை கண்டுகளித்திருக்கிறேன். யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சியிலிருந்து வரும் பஸ் வண்டிகளின் சாரதிகள், காப்பாளர்கள்கூட சில சமயங்களில் சாராயப் போத்தல்களை விநியோகித்த சம்பவங்களையும் நான் நேரில் பார்த்திருக்கிறேன். அந்தப் பகுதியில் வேறு நல்ல உணவுக்கடைகள் இல்லாமையாலும் அனேக உத்தியோகத்தர்கள் கடனில் சாப்பிடுவதாலும் அதாவது ஒவ்வொருநாளும் சாப்பிடுவார்கள் மாதம் முடிய சம்பளம் எடுத்துக் கணக்கை முடிப்பார்கள். அதலால் தம்பர் கடையில் எப்போதும் சனக்கூட்டம்தான்.

இந்த மாவட்டக் காணி அலுவலகத்தின் தலைமை அதிகாரி, மாவட்டக் காணி அதிகாரியாக இருந்தவர்தான் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வெங்கடாசலம் வேலுப்பிள்ளையாவர். விடுதலைப் புலிகளின் தலைவர் திரு பிரபாகரன் அவர்களின் தந்தைதான் இவர். இவரது குடும்பம் வல்வெட்டித்துறையில் வசித்துவர, இவர் துணுக்காயில்தான் அரசாங்கத்தின் வீடான குவாட்டஸில் வசித்து வந்தார். இவர் ஒரு சைவப் பிரியர். மிகவும் அழகானவர். மிகவும் நேர்மையானவர். அமைதியாகச் செயலாற்றும் நல்லதோர் அரச அதிகாரி. அப்போது மிகப்பெரும்

நீர்ப்பாசனக் குளமாகிய வவுனிக்குளம் நீர்ப்பாசனக் குளத்தின் திட்ட முகாமையாளராகவும் அவர் கடமையாற்றிக்கொண்டிருந்தார்.

இந்த சைவப்பரியர், வெள்ளை மனிதருடன் எனக்குப் பழகும் வாய்ப்பும் அப்போது கிட்டியது. எனது காரியாலய விடையமாகப் பலதடவைகள் அவரை அவரது காரியாலயத்தில் சந்தித்து உரையாடியிருக்கிறேன். திறந்த மனம், நேர்மையான செயற்பாடு, அமைதியான மனம் என அவரின் முன்மாதிரிகளைக் கண்டு வியந்திருக்கிறேன். தம்பரின் கன்ரீனுக்கு அவரும் காலை, மதிய உணவுக்கு வருவார். பலர் அசைவ உணவு உண்ணுவார்கள். ஆனால் இவர் சைவ உணவுதான் உண்பார். அசைவ உணவு உண்ணும் எங்களுக்கு அருகே இருந்து தானும் சைவ உணவை உண்டுகொள்ளுவார். எந்தவித அருவருப்போ, மன உழைச்சலோ அவரின் முகத்தில் காணப்படாது. ஆனால் எங்களுக்குத்தான் மனதில் சங்கடமாக இருந்த சம்பவங்கள் ஏராளம். அவர் இப்பொழுது உயிருடன் இல்லாவிடினும் தம்பர் கடையிலும் அவருடன் பலதடவைகள் உரையாடி மகிழ்ந்த சம்பவங்களும் அனுபவங்களும் இன்றும் நினைவில் நிற்கின்றன.

அந்தக் காலத்தில் ஒவ்வொரு திணைக்களங்களிலும் வேலை செய்பவர்களிடையே கிரிக்கட்கோட்டிகள் நடைபெற்றுவந்தன. அப்போ நாங்கள் துணுக்காயிலிருந்து கிளிநொச்சி "றொட்றிக்கோ"விளையாடரங்கிற்குச் சென்று கிரிக்கட் போட்டிகளில் கலந்துகொள்ளுவோம். அப்போது இரண்டு, மூன்று ஜீப் வண்டிகளில் நாம் சென்றுவருவது வழக்கமாகும். (சுமார் 45 - 50 கிலோ மீட்டர்) சில சமயங்களில் ஜீப் வண்டிகள் தேவைப்படும்போது தனது காரியாலய ஜீப் வண்டியைப் பல தடவைகள் எமக்குத் தந்து உதவினார்.

பொதுச்சேவை என்றாலும் அதாவது அந்தக்காலத்தில் மக்களிடையே நிலவிய காணி, நிலம், குடியேற்றம், தண்ணீர் விநியோகம், விவசாய அபிவிருத்தி என அவர் ஆற்றிய பங்களிப்புக்களில் நேர்மை, திறமை, சேவை என்பன என்றும் நினைவுகூரப்படுகின்றது. இப்படிப்பட்ட நல்லதோர் மனிதருடன், நல்ல மனம்படைத்த பெரியவருடன் நான் பழகி வாழ்ந்ததை என்றும் நினைத்துப் பார்க்கிறேன். அந்த வெள்ளை நிற மனிதரைப்போலவே அவரின் வெள்ளை மனமும். வெள்ளை உள்ளமும் என்றால் மிகையாகும்.

# 10 - உடுவை என்ற உயிர்ப்புள்ள மனிதன்

"நாம் அறிந்த மொழிகளிலே தேன் தமிழ்மொழிபோல் உலகில்காணோம்" என்று நாம் பெருமை பேசுவோம். அந்தஅளவுக்கு இனிமையானது.,இலக்கணமானது. உலகில் தோன்றிய மொழிகளில் பழமையானது. பாரம்பரியங்கள் நிறைந்ததுதான் எமது செம்மொழியாம் தமிழ்மொழி. இந்த அற்புத மொழியைப்போல்தான் ஒரு அற்புதமனம் படைத்த உடுவை என்று செல்லமாய் அழைக்கப்படும் அன்பர் உடுவை தில்லை நடராசா அவர்கள். இவரின் அன்பும், நட்பும் கிடைத்தது பெரும் பாக்கியமாவே கருதுகிறேன்.

வடபகுதி உடுப்பிட்டி என்ற ஊரில் பிறந்தபடியால் அவர் தனது ஊரையும் முன்னிலைப்படுத்தி தில்லையில் எழுந்தருளிய நடராசப் பெருமானைப்போல் தில்லைநடராசா என்னும் பெயர் கொண்டார். இவர் ஒருசாதாரண குடும்பத்தில் பிறந்தாலும் உச்சத்தைத் தொட்டிருக்கும் கல்விமான், அரசஉயரதிகாரி, கலை இலக்கியவாதி, எழுத்துலக ஜாம்பவான், இணைய இயக்குனர், விமர்சகர், பேச்சாளர், நடிகர், சமூகச் சிந்தனையாளர் எனப்பல பக்கங்களைக் கொண்டிருந்தாலும் நல்ல மனம்படைத்த நல்லதோர் மனிதராக நான் கண்டுகொண்டேன்.

இவரின் நட்பும் அன்பும் மரியாதையும் கிடைத்தது பெரும் அதிஸ்டசாலிதான் நான். கடந்த நாற்பது ஆண்டுகளுக்குமுன் இவரைப்பற்றி அறிந்தேன். நானும் கலை, இலக்கிய, எழுத்துத் துறைகளில் ஆர்வம் கொண்டிருந்தபடியால்தான் இவரைப்பற்றி அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. நான் அப்போது கடமைபுரிந்த வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இவரும் கடமைபுரிந்திருக்கிறார். ஆதலால் அறிந்து கொள்ளும் வாய்ப்புகிட்டியது..

திரு உடுவை தில்லைநடராசா அவர்கள் சாதாரண குடும்பத்தில் பிறந்தார். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்கல்லூரியில் கல்விபயின்றவர். அரசாங்க பொது லிகிதர் பதவியில் தெரிவாகியவர். பின்பு தனது முயற்சி, திறமை, ஆளுமை, கல்வி, தமிழ் என உயர்ந்து தமிழர் போற்றும் பெருமகனாய் உயர்ந்தார்.

இவர் தொழில்புரியாத திணைக்களங்கள் இல்லை என்றேகூறலாம். வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும், கிழக்குமாகாணம் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் சுமார் 50 ஆண்டுகள் பணிபுரிந்தவர். அவைமட்டுமல்லஉணவுஆணையாளர், தேர்தல் ஆணையாளர், உள்ளூராட்சி ஆணையாளர், கூட்டுறவுஆணையாளர் பதவிகளோடு, கிளிநொச்சி, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராகவும் பதவி வகித்தவர். இறுதியாக இலங்கை கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளராகவும் கடமைபுரிந்து ஓய்வுபெற்றார். ஓய்வு பெற்றாலும் இப்போதும் அரசசேவையில் சேவை செய்துகொண்டிருக்கிறார்.

அவர் அடிக்கடி என்னோடு பேசுவார். மூன்று தடவைகள் ஜேர்மனிக்கு வந்துசென்றபோது பேசிப்பழகி, உண்டுமகிழ்ந்து, கலை, இலக்கிய, எழுத்துகளோடு என்னோடும் இங்குள்ள நண்பர்களோடும் இணைத்து கொண்ட பொழுதுகளை எல்லாம் மறக்க முடியாது அற்புத நாட்கள்தான். பேசுவதற்கும் பழகுவதற்கும், இனிமையானவர். அன்பானவர், பெருமை இல்லாதவர்.

இந்தப் பெரிய அரசஉயர்அதிகாரி, எழுத்துலக ஜாம்பவான் தமிழறிஞர், சமூகத்தால் மதிக்கப்படும் பெரியவர் என்னைப்போன்ற சாதாரண நண்பர்களோடு பழகுவதும் ஒருமித்த கருத்தோடு ஒன்றிவாழ்வதையும் நினைக்கும்போது இந்தஎழில்மிகு மனிதனின் பொன்னான மனதை எப்படி உரைப்பது. எந்தளவு உச்சத்துக்கு உயர்ந்தாலும் அன்றும்இன்றும் என்றும் சாதாரண நன்பனைப் போல் பழகுவதை நினைத்து எப்போது பெருமிதம் கொள்வேன்.

இப்போ அவர் அடிக்கடி சொல்லும் வார்த்தைகள்சில... நான் நல்ல கல்வி பெற்றிருக்கிறேன். அனுபவம் பெற்றிருக்கிறேன். நான்சுமார் 20 நாடுகளைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். தமிழ் சிங்கள், இஸ்லாமிய நண்பர்களோ அதிகம், இன்றும் எழுதிக்கொண்டிருக்கிறேன். உடல்நிலை நன்றாக இருக்கின்றது பணப்பிரச்சனை எதுவும் இல்லை. இன்னும் மேலாக நான்படித்த பாடசாலையில் எனதுபெயரில் ஒருநூல்நிலையமும் இயக்குவதற்கு அவ்வப்போது பணமாகவும், பரிசாகவும், நூலாகவும் உதவிக்கோண்டு உங்களைப்போன்ற நண்பர்களோடு பேசிப்,

பழகிச், சிரித்து வாழ்கிறேன். இதைவிட எனக்கு என்னவேண்டும்?... எனச்சிரித்த முகத்துடன் கூறி மகிழ்வதைப் பார்க்கும்போது பலதடவைகள் நான் ஆச்சரியப்பட்டிருக்கிறேன்.

ஆம் இப்படிபட்ட நல்ல மனம்படைத்த மனிதர்கள் மனிதநேயம் மிக்கவர்களோடு, அவர்களோடு நாங்களும் வாழ்வது காலத்தின் சிறப்பாகும். இந்த நல்லமனிதனின் பால் போன்ற வெள்ளைமனமும், அன்பும், அடக்கம், பண்பும், பணிவும், ஆற்றலும், ஆழமான அறிவும் ஒன்று சேர்ந்தே இவரை உச்சத்துக்கு கொண்டு சென்றிருப்பதை என்னால் உணர முடிந்தது. இன்றைய காலகட்டங்களில் இப்படிப்பட்ட நல்ல மனம் படைத்தவர்களைக் காண்பதோ மிகக்கடினம். ஆனாலும் இந்த அன்பு மனிதனின் நட்பானது என்றும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. இவரின் வழியில் நாங்களும் இந்த உலகில் வாழ்ந்து சிறப்புச் சேர்ப்போம்!..

"போதுமென்றமனமே பொன்செய்யும் மருந்தாகும்"

# 11 - குளப்படிப் பையன்

நம்வர் வாழ்வியலில் அனேகமான குடும்பங்களில் ஐந்து, ஆறு பிள்ளைகள் காணப்படுவது இயல்பான விடையமாகும். இது இன்று மாற்றமடைந்து புலம்பெயர் நாடுகளில் இரண்டு . மூன்று பிள்ளைகளோடு வாழ்வோர்தான் அதிகமாகக் காணப்படுகிறார்கள். எது எப்படி இருப்பினும் குடும்பத்தில் நிறையப் பிள்ளைகள் இருப்பது ஒரு வகையில் சிறப்புத்தான். சண்டை, சச்சரவு, அடி, தடி. போட்டி, பொறாமை என ஒரு புறம், அன்பு , பாசம், பரிவு, விட்டுக்கொடுத்தல், விருந்தோம்பல், கூட்டு வாழ்வு இவை அனைத்தும் பெறமுடியாத சந்தோஷங்கள்தான் அதிகம். ஆகவே ஒரு ஆண்-பெண் எனப் பல பிள்ளைகள் ஒரு குடும்பத்தில் இருந்துவிட்டால் குடும்பம் ஒரு குவலயம்தான்.

சிறுவனாக நான் இருக்கும்போது தெரிந்தும் தெரியாமலும் பல குளப்படிகளைச் செய்திருக்கிறேன். அந்த வயது குளப்படி வயதுதானே. அந்த வயதில் குளப்படிகள் செய்யாவிடின் இவன் பிள்ளையில்லை என்றும், குளப்படி செய்யாத பிள்ளை அது பிள்ளையல்ல என்றும் நம்மவர் பலர் கூறுவதையும் நான் இப்போ கேட்டிருக்கிறேன். நான் வாழ்ந்த ஊரில் என்னுடைய வயதை ஒத்த சிறுவர்கள் பலர் தோழர்கள். கிரிக்கட் விளையாடுவது, குளத்தில் நீந்தி விளையாடுவது, கோயில்கள், விழாக்கள், விளையாட்டுப் போட்டிகளுக்குப் போவது, நாடகம், சினிமாவுக்குப் போவது மட்டுமல்ல தோழர்களோடு சேர்ந்து நுங்கு, இளநீர், ஈச்சம்பழம், மாங்காய் பறித்து உண்பது, குடிப்பது எல்லாம் அந்தநாட்களின் இனியவைதான். இவைகளில் பல சம்பவஙகள் எனது தோழர்களுடன் நிகழ்ந்தவையே. அந்த நினைவுகள் ஒரு பொற்காலம் என்றுதான் நான் கூறுவேன்.

எனது வயதை ஒத்தவன். அவன் பெயர் செல்வநாயகம். அவனை எல்லோரும் "வவா" என்றே அழைப்பார்கள். அவன்தான் எங்களில் பத்து பன்னிரண்டுபெருக்கு லீடர். கட்டைக் கறுவல். நல்ல புத்திசாலி குளப்படிக்காரப் பையன். அவன் வீட்டில் அவன் ஒரே ஒரு பையன். அப்போ அவன் செல்லமானவன். வீட்டில் என்ன கேட்டாலும் அவனுக்குக் கிடைக்கும். அவன் செல்வந்தன். நாங்கள் பலர் எப்போதும்

அவனைச் சுற்றித் திரிவோம். அவனோடு சுற்றினால்தான் எங்களுக்கும் ஏதும் அப்பப்போ கிடைக்கும். இனிப்பு, ரொபி, கடலை, ஐஸ்கிறீம், தும்புமிட்டாய், மாவிள், பந்து இவைதான் அன்றைய எங்கள் தேடற்கரிய சொத்துக்களை ஆசைப்பட்டுத் தேடி அலைவோம் என்று கூறலாம்.

இதில் வேடிக்கை என்னவென்றால் அப்போ நாங்கள் அதாவது எனக்கு நேரே மூத்த அண்ணர் என்னைவிட இரண்டு வயது கூடியவர். நல்லூர் கோவிலுக்குப் போக வேண்டும் என்றால் முதலில் ஆடு,மாடுகளுக்கான உணவிலிருந்து வீட்டிலுள்ள அனைத்து வேலைகளும் செய்து முடிக்க வேண்டும். பாடசாலைப் படிப்புக்கள் சரிவரச் செய்யவேண்டும். தவமிருந்து அம்மா சொல்லாமலே பல வேலைகளைச் செய்து முடித்து அம்மாவிடம் கெஞ்சி மண்டாடியபின் அம்மா 50 சதம் ஒரு ரூபா எனத் தருவார். அது அப்போ எங்களுக்குப் பெரிய தொகை கிடைத்தது போல இப்போ எண்ணுகிறேன்.

இந்தக் காசைக் கொண்டுபோய்த்தான் சமாளிப்போம். ஆனால் இவன் வவாவிடம் பத்து, பதினைந்து ரூபா வைத்திருப்பான். எங்கட காசைச் செலவழித்துவிட்டு பின்பு அவன் பின்னாலே அலைவது வழக்கமான விடையமாகும். எங்களுடைய ஊரிலிருந்து நல்லூர்கோவில் சுமார் பத்து கிலோமீட்டர் தூரமாகும். வழக்கமாக நடந்தே போய்வருவோம். சர்க்கரைத்தண்ணீர், மோர்த்தண்ணீர், சர்பத் பந்தல்கள் எல்லாம் எங்களை வாஞ்சையுடன் வரவேற்க அவைகளைத் தரிசித்து குடித்துப் பரிமாறி வருவது ஒரு களைப்புமே தெரியாது. அந்த வயதில் அவை எவ்வளவு ஆனந்தம். மாணவர்களாக இருந்தபோதெல்லாம் பல தடவைகள் ஒரு சைக்கிளில் நாலுபேர் கூடப் பயணித்த சம்பவங்களும் ஏராளமாகும்.

நான்பிறந்து வளர்ந்த நாவற்குழி-வேலம்பராய் என்னும் சிற்றூருக்கு அருகாமையிலுள்ள ஊர்களான சாவகச்சேரி, கைதடி, மட்டுவில், நுணாவில், மறவன்புலவு, கோவிலாக்கண்டி, தச்சன்தோப்பு, அரியாலை எனத்தொடர்ந்து நல்லூர், யாழ்ப்பாணம் என இந்த ஊர்களில் நடைபெறும் விழாக்கள், கோயில் திருவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் என நடைபெற்றால் எங்கள் கோஸ்டி வவாவின் தலைமையில் அங்கு நிற்கும்.

அப்படி அந்தக் காலத்தில் இரவிரவாக அலைவது ஒரு சந்தோஷம் தான். இப்படியாக ஒரு நாள் எமது அயலூரான கைதடிக்கு எமது கோஸ்டி நாடகம் பார்க்கச் சென்றது. நாடகம் நடுச்சாமம் தாண்டி முடிவடைந்தது.. பஸ், ரெயின், ஏன் சயிக்கிளும் கிடையாது. இரவிரவாக நடந்துதான் வீட்டுக்கு வருவோம். அதிகாலை மூன்று, நான்கு மணிபோலத்தான் வீதிகளால் பலத்த சத்தம்போட்டுக்கொண்டு விளையாடிக்கொண்டு வருவோம். நல்ல தூக்கத்தில் கிடப்போரை எழுப்புவதற்காக நாங்கள் செய்த அட்டூழியங்கள் கொஞ்சமில்லை. தகரப்படலைகளுக்குக் கல்லெறிதல், ஐயோ!...ஐயோ!.. என்று கத்துதல், வீட்டுப் படலைகளைத் திறக்கமுடியாதபடி பெரிய கற்களைத் தூக்கிப் படலைகளோடு வைத்தல், வயல்களில் கட்டப்பட்டிருக்கும் மாடுகளின் கயிறுகளை அவிட்டுவிட்டுக் கலைத்துவிடுதல், மின்சார மற்றும் றெயின் கம்பங்களுக்குக் கல்வீசுதல் இப்படியாக அந்த நாட்களில் வவாவுடன் சேர்ந்து செய்த அட்டூழியங்களை இப்போது பட்டியலிட்டால் நீங்கள் அதிசயப்படுவீர்கள்.

சரியோ..பிழையோ..."வவா" உடன் சேர்ந்து அன்று அதாவது 45 - 50 வருடங்களுக்கு முன்னர் செய்த குளப்படிகளை இப்பொழுதும் எனது நண்பர்கள், உறவுகளுக்குச் சொல்லிச் சிரித்து மகிழ்வேன். அவன் தலைமையில் செய்த குளப்படிகளுக்கு நானும் பங்காளிகளில் ஒருவனாக இருந்திருக்கிறேன் என்று இப்போது நினைக்கையில் ஒருபக்கம் வெட்கம் மறுபக்கம் சிரிப்புத்தான். அவன் இப்போது உயிருடன் இல்லை. விபத்து ஒன்றிச் சுமார் பத்து வருடங்களின் முன் இறந்துவிட்டான். அவன் இல்லாமலப் போனாலும் அந்தக் குளப்படிக்காரப் பையனை, கறுவல் கட்டையனின் குண இயல்புகளை இப்போ எண்ணும்போது கவலையும் சிரிப்பும்தான்...

# 12 - நாற்பது ஆண்டுகள் கடந்த நட்பு

சுமார் நாற்பது ஆண்டுகள் தாண்டிய நட்பு இன்றுவரை நீடிக்கின்றது என்னும்போது சந்தோஷம்தான். எங்கள் இருவரிடையேயும் இருந்த ஆழமான நட்பு, அன்பு, கருத்துப்பரிமாற்றம், கொள்கை, விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு போன்ற அம்சங்களே முக்கிய காரணமாகும். அன்றுதொட்டு இன்றுவரை இந்த நட்புத் தொடர்கிறது. அவன் ஒரு ஊரில் (நெடுந்தீவு) நான் ஒரு ஊரில் (நாவற்குழி) பிறந்தோம். பின்பு சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேல் மல்லாவி - துணுக்காய் பிரதேசத்தில் வாழ்ந்தோம் ஒன்றாய் ஒரே தாபனத்தில் வேலை செய்தோம். இப்போ சுமார் முப்பது முப்பத்தைந்து ஆண்டுகள் இருவரும் வெளி நாடுகளில் அவன் கனடாவில் நான் ஜேர்மனியில்.

இவன்தான் நல்ல மனம் படைத்த நண்பன் விஜயகுலசிங்கம் (தவம்) இவனை மல்லாவி துணுக்காய்ப் பகுதிகளில் தவம் மனேச்சர் என்றுதான் பலரும் அழைப்பார்கள். ஏனெனில் அவன் கூட்டுறவுச்சங்கத்தின் கிளை ஒன்றில் மனேஜராகக் கடமையாற்றினான். நான் தலைமைச்சங்கத்தின் பொதுலிகிதராகச் சேர்ந்து பின்னர் கணக்காளராகக் கடமையாற்றினேன். அப்போது (1975) ஆரம்பித்த நட்பு இன்றுவரை உடையாமல் இருவரும் காப்பாற்றி வருகிறோம் என்பது பெருமைதான்.

அன்றைய காலங்களில் மல்லாவி, துணுக்காய், பாண்டியன்குளம், வவுனிக்குளம் பிரதேசங்களில் என்ன விழாக்கள் நடைபெற்றாலும் கலைவிழா, விளையாட்டுப்போட்டி, ஆண்டுவிழா, கோவில் விழா, பாடசாலை விழா எதுவாயினும் நாம் இருவரும் அங்கு நின்று சிறப்பிப்போம். இவன் ஒரு சிம்மக்குரலோன். (மைக்) ஒலிவாங்கி இவன் கைக்கு வந்துவிட்டால் காணும். சொல்லத்தேவையில்லை பல மேடைகளைக் கலக்கு கலக்கென்று கலக்கிவிடுவான். இதற்கு நானும் அவ்வப்போது சில குறிப்புக்களை அவனுக்கு எடுத்துச் சொல்லிவிட்டால் போதும் அதை வைத்துக்கொண்டு மேலும் தன் குரல்வளத்தால் பலரை மதிமயங்க வைத்துவிடுவான்.

னுபவிக்க வேண்டும்.

இதனால் பலரின் அபிமானத்தையும் பெற்றுக்கொண்டான். இதைவிட இவன் ஒரு விளையாட்டு வீரனும்கூட. நல்ல நடிகன், கதைவசனம் பேசுவதில் வல்லவன். மேலாக நல்ல முயற்சிகாரன், உழைப்பாளி. பிறருக்குக் கொடுத்து உண்டு, குடித்து, மகிழ்வதில் நல்ல பண்புடையவன் என்றுதான் கூறுவேன்.

அப்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த காலம் இருபத்தைந்து வயதுகூட நிரம்பாத வயது. துடிப்பான வாலிபன். சுமார் நூற்றி ஐப்பதுபேர்வரை வேலை செய்த சங்கத்தில் பணியாளர் தொழிற் சங்கத்தின் (Employes Union) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பல ஆண்டுகள் கடமையாற்றிவிட்டே அவன் வெளிநாடு வந்தான். இவன் தனது பதவிக்காலத்தில் தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்டு உழைத்துப் பல தொழிலாளர்களின் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டார். வடமாகாண கூட்டுறவுப்பணியாளர்கள் சங்க மகாநாடுகள் யாழ்ப்பாணம், திருக்கேதீஸ்வரம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடைபெற்றபோது இவர் ஆற்றிய உரைகள் இன்றும் என்னால் மறக்கமுடியாதுள்ளன. ஏனெனில் அவ்வப்போது நான் எடுத்துக்கொடுத்த குறிப்புக்கள், தரவுகளை வைத்தே அநேகமான அவரது உரை அமைந்தது சிறப்பான விடையமாகும். இப்படி அந்த நாட்களில் ஏனைய நண்பர்களுடன் கண்டி, பேராதனை, குருநாகல், கொழும்பு, கச்சதீவு போன்ற இடங்களைத் தரிசிக்க இவர் ஆற்றிய உதவிகள் எண்ணிலடங்காதவையே...

இப்படிப்பட்ட நல்ல மனிதன்தான் எனக்கும் விமானச்சீட்டு அனுப்பி ஜெர்மனிக்குக் கூட்பிட்டார். (1983) என் உடன்பிறப்புகள், உறவுகள் எனக்குச் செய்யாத பல உதவிகளை இவர் அன்று எனக்குச் செய்தபடியால்தான் நான் ஜேர்மனிக்கு வந்துசேர்ந்து ஓரளவு நன்றாகவே வாழ்ந்துகொண்டிருக்கிறேன். 1983 தொடக்கம் 1987வரை ஜேர்மனியில் என்னோடு ஒன்றாக வாழ்ந்த நண்பன் 1987ல் கனடா நாட்டிற்குச் சென்று குடியேறி இன்று நல்லபடியாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்.இவை மட்டுமல்ல தனது நான்கு ஆண், நான்கு பெண் சகோதரர்களையும் தாய் தந்தையரையும் கனடா நாட்டிற்கு அழைத்துக்கொண்டார். இவரின் கடும் உழைப்பு, முயற்சி, காரியமாற்றும் திறன் யாருக்கும் வராது. என்னால் முடியாது.

அப்படிப்பட்ட திறமைசாலி. இப்போ வடகிழக்கு, வன்னிப்பிரதேசங்களில் வறுமையால் வாடுவோர், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விதவைப் பெண்கள், ஆதரவற்ற சிறார்கள் எனப்பலதரப்பட்டோருக்கான நிதிஉதவிகளையும் கல்வி, கணணி சார்ந்த பண உதவிகளையும் பல அமைப்புக்களை ஏற்படுத்திச் செய்துகொண்டிருப்பது பாராட்டுதலுக்குரிய விடையமாகும். இதற்காக இவர் வருடாவருடம் தாயகம் சென்று நேரடியான செயற்திட்டங்களைப் பார்வையிட்டு ஆலோசனை வழங்கி, நிதிஉதவிகளைச் செய்துவருவதும் குறிப்பிடத்தக்க விடையமாகும். மனிதநேயம் மிக்க பணிகளை மேற்கொண்டுவரும் இவர் சொல்லிலும் செயலிலும் ஒன்றித்து நீண்டகாலம் தோழனாக என்னோடு பயணித்துவரும் இவரின் குணத்தை எப்படிச் சொல்வேன். நல்ல நட்பை எண்ணி வியக்கின்றேன். அவர் நல்ல மனம் சிறப்பாக வாழட்டும் என இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்திப் பதிவு செய்கிறேன்....

# 13 - பூவரசம் தடியும் பொலிசும்

இது ஏதோ "கள்ளன் பொலிசு" சிறுவயது விளையாட்டுக் கதை என்று நினைத்துவிடாதீர்கள். அன்று வாலிப வயது. ஏன்னோடு வேலை செய்த நண்பர்களான விஜயகுலசிங்கம், ஜெயரட்ணசிங்கம், தேவன், நானும் என நாலுபேரும் நல்ல கூட்டாளிகள்தான். இலங்கையின் பல பாகங்களையும் பல தடவைகள் சுற்றிப்பார்த்தோம். அந்த வயதில் எத்தனை சேட்டைகள், பெண்களுடன் நகைச்சுவைகள் பகிடிவதைகள் செய்து மகிழ்ந்திருக்கிறோம். ஒன்று கூடி உண்டு குடித்து மகிழ்ந்திருப்போம்.

அப்படித்தான் அன்று ஒருநாள் யாழ்ப்பாணத்தில் திரைப்படம் பார்க்கத் திட்டமிட்டு நாம் நாலு பேரும் துணுக்காயிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற பஸ்வண்டி தாமதமாகியதால் நடுச்சாமம் இரண்டாவது காட்சிக்கு (2and Show) ரிக்கட் பெற்று சினிமா பார்த்த களிப்போடு வீதியால் நடந்து வந்தோம். அப்போது நேரம் நடுநிசி இரண்டு மூன்று மணி இருக்கும். யாழ் ஆரியகுளம் சந்தியில் பொலிஸ் ஜீப் வண்டி ஒன்று குறுக்கே நின்றது. படார் என இறங்கி ஓடிவந்த பொலிசார் எங்களைப் பிடித்து விசாரித்தார்கள். நாங்கள் படம்பார்த்துவிட்டு வருகிறோம் எனக்கூறினோம்.

ரிக்கட்டைக் காட்டச் சொன்னார்கள். நாங்கள் ரிக்கட்டை எங்கேயோ தொலைத்துவிட்டோம் என்று கூறினோம். உடனே இன்னும் இரண்டு பொலிஸ்காரர்கள் பொலிஸ் வண்டியிலிருந்து பூவரசம் தடியோடு கீழே இறங்கி வந்து, நால்வருக்கும் நல்ல சாத்தல்...சாத்தினார்கள். அடி தாங்கமுடியாமல் குளறியவேளை ஒருவரை ஒருவர் பார்க்கச் சிரிப்பாகவும் இருந்தது. விட்டார்களா பொலிசார் வெளுவெளென்று வெளுத்துக்கட்டினார்கள். எங்களை ஓடவிட்டுத் துரத்தித் துரத்தி அடித்தார்கள். அந்தக் கல் மனம் படைத்த பொலிசாரின் குணங்களை எண்ணினால் இன்றும் கோபமும் சிரிப்பும்தான்..

அடிவேண்டிய நோவுடனும் ஓடிய களைப்புடனும் நண்பன் ஜெயரட்ணசிங்கம் வீட்டுக்குச் சென்று படுக்கப்போனோம். நித்திரை வரவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தோம் மறுபுறும் நோவும் ஏற்பட்டது. இப்படி எத்தனை நகைச்சுவைச் சம்பவங்கள்

எண்ணிலடங்காதவையே. யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் நடைபெற்ற தினகரன்விழா, மற்றும் விழாக்கள், கட்சிக்கூட்டங்கள், கிரிக்கட் போட்டிகள் என ஒன்றுமே அப்போது விட்டு வைக்கவில்லை. அப்போது அநேக நாட்கள் எங்களுக்குப் பசி தீர்த்த யாழ் சிற்றிபேக்கரியின் பாணும் பருப்பும் ஆகா இப்போது நினைத்தாலும் வாய் ஊறும். வீதிக்குழாய்களின் குடிநீரும் நாங்கள் அணிந்து திரிந்த பாட்டா சிலிப்பர், யாழ் திரை அரங்குகள், பெண்களுக்குப் பின்னால் ஒருவர் அலைய அவருக்கு மற்றவர்கள் துணைநின்ற சம்பவங்களையும் இப்போ நினைக்கும் போது வெட்கமாகவும் வேடிக்கையாகவும் இருக்கின்றனவே. அப்போது ஒருவரிடம் பணம் இல்லாவிடினும் மற்றவர்கள் ஒன்று சேர்த்து (சின்டிக்கேட் போட்டு) எல்லா அலுவல்களையும் நன்றாகவே முடித்துவிடுவோம்.

இப்படியாக வாழ்கையில்தான் 1977ம் ஆண்டு ஆகஸ்ட் இனக்கலவரமும் நாட்டில் வெடித்தது. அப்போது மன்னாரிலிருந்தும் மாங்குளத்திலிருந்தும் துணுக்காய்க்கு வந்த இராணுவத்தினர் எமது தலைமைக் காரியாலயத்துக்குள் நுழைந்து தாக்கினார்கள். ஐம்பது அறுபதி சைக்கிள்களை அடித்துநொறுக்கிப் பக்கத்திலுள்ள ஆழமான கிணற்றில் போட்டார்கள். அதில் பல பணியாளர்களும் பொதுமக்களும் தாக்கப்பட்டனர். நானும் தாக்கப்பட்டேன் என்னோடு பலர் இரத்தக் காயங்களுக்கு உள்ளானார்கள். பின்னர் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றோம். இராணுவத்தின்ரின் தாக்குதலுக்கு அஞ்சி மூன்று நாட்களாகக் காட்டுக்குள் ஒழித்து இருந்துவிட்டு அகதிகளாக இடம்பெயர்ந்து மீண்டும் வீடு திரும்பினோம்.

பின்னர் இனக்கலவரம் ஓய்வுபெற்றுச் சகஜய நிலை தோன்றியது. சிறிது காலத்தால் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட "சன்சோனிக் கமிஷன்" (இளைப்பாறிய உயர்நீதி மன்ற நீதியரசர்கள்) முன் தோன்றி யாழ்ப்பாணத்தில் பல தடவைகள் சென்று எமக்கு நடைபெற்ற அநியாயங்களுக்கு நீதிகேட்டு எடுத்துரைத்தோம். அவ்வளவுதான் இன்றுவரை இந்த விசாரணைக்கு எதுவித பதிலும் கிட்டவில்லை. இப்படியா நல்லதோ, கெட்டதோ இந்த நால்வரும் மனம் ஒத்துச் செயற்பட்டிருக்கிறோம். தூயமனம் படைத்த இந்த நண்பர்களை வாழ்நாளில் ஒருபோதும் மறக்கமாட்டேன்!...

# 14 - இஸ்லாமிய நண்பர்கள்

நான் சிறுவனாக இருக்கும் போதே எனது குடும்பத்தினர் இஸ்லாமிய குடும்பங்களோடு தொடர்புகொண்டிருந்ததை அறிந்தேன். காரணம் எனது சகோதரர் யாழ் மத்திய கல்லூரியில் கல்வி கற்றுவந்தபோது இஸ்லாமிய மாணவர்களுடன் ஒன்றாகப் படித்தபடியால் இத்தொடர்பு ஏற்பட்டிருந்தது. அந்த நட்பின் காரணமாக குடும்ப உறவாக வளர்ந்தது. பின்னர் அவர்களும் நாங்களும் ஒரே குடும்பத்தவர்கள் போலாக மாறியது. இதனால் நல்ல உறவு ஏற்பட்டது என்றே கூறுவேன். குறிப்பாக மன்னார் மாவட்டத்தின் விடத்தல்தீவு, திருக்கேதீஸவரம், கீரிமன்னார், மன்னார் பகுதிகளில் பூர்வீகமாகக்கொண்டு வசித்து வந்த இந்த இஸ்லாமியக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே எங்கள் குடும்பத்துடன் நண்பர்களாகினார்கள். குறிப்பாக இரண்டு குடும்பங்கள் எங்கள் குடும்பத்துடன் நெருங்கிப் பழகினர்.

காதர், காஜாமுகைதீன், சுல்தான், யுனைதீன், அமரதீன் என்ற நண்பர் குடும்பங்களின் தொடர்பு நெருக்கமாகவே இருந்துவந்தன. இன்றுவரை சுமார் அறுபது ஆண்டுகளுக்கு மேல் இந்த நட்பு, உறவு தொடர்கின்றது. நன்மை-தீமைகள் என்றால் நாம் போய்வருவதும் அவர்கள் வந்து போவதும் சகஜமாகியது. உண்டு,குடித்து,மகிழ்ந்து அளவளாவிய சம்பவங்களை நினைத்தால் இப்போது பசுமையான நினைவாக அலை மோதுகின்றன.நாட்டில் அரசியல் நிலமை வளர்ந்து மோசமாகியது கவலையளித்தது. சில இஸ்லாமியர்கள் செய்த தவறுகளுக்காக ஒட்டுமொத்த இஸ்லாமிய மக்களையும் அதாவது காலாதிகாலம் பூர்வீகமாக வாழ்ந்த இஸ்லாமிய மக்களை விரட்டி அடித்தது மாபெரும் தவறான செயலாகும்.

அன்று விடுதலைப்புலிகள் அமைப்பு செய்த வரலாற்றுத்தவறால் அனைத்து இஸ்லாமிய மக்களும் வடபகுதியில் இருந்து முற்றாக வெளியேற்றப்பட்டது மாபெரும் துரோகமாகும். அவர்கள் இடம்பெயர்ந்து பிறமாவட்டங்களுக்குச் சென்று குடியேறி வாழ்ந்து வந்தாலும் எத்தனையோ துன்பங்களுக்கும் ஆளானார்கள் என்பது வரலாறாகியது. இவர்கள் தமது வாழ்விடங்களைவிட்டு வெளியேறியபோது எனது

குடும்பத்தவர்களும் பல உதவிகளைச் செய்து கண்ணீருடன் வழியனுப்பியதாக அறிந்து நானும் கவலைப்பட்டேன். தேங்காய்ப்பூவும் பிட்டும், அரிசியும் பயறும் கலந்த கஞ்சி போன்றதுதான் இந்த இஸ்லாமியர்களுடன் இருந்த உறவு என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட நல்ல உறவுகளைப் பிரித்து வேடிக்கை பார்த்து துவேஷத்தை ஏற்படுத்தி பிளவை உண்டுபண்ணும் பல அரசியல் வாதிகளும் இயக்கவாதிகளும் இன்றும் இருந்துகொண்டிருப்பது இரு இனங்களின் உறவுகளை பிரிவடையச் செய்கின்றது. பிழை யார்தான் விடுவதில்லை. எல்லோரும் பிழை விடுவது இயல்புதானே. மன்னிப்போம் மறப்போம் என்று வாழ்ந்தால் எல்லோருக்கும் நன்மையே..

நானும் பல எழுத்துலக நண்பர்களும் ஜேர்மனி எழுத்தாளர் சங்கத்தை கடந்த இருபது ஆண்டுகளாக நடாத்தி வருகின்றோம். இந்தச் சங்கத்தின் ஊடாகவே முதுபெரும் எழுத்தாளர், ஊடகவியலாளர், பதிப்பாளர், ஆவணக்காப்பாளர், பட்டதாரி எனப் பன்முக ஆளுமை மிக்கவரான கலாபூணம் புன்னியாமீன் என்னும் பெயர்கொண்ட இஸ்லாமிய நண்பர் என்னோடு அறிமுகமானார்.

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த இவரின் தொடர்பு கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்தன. கலை, இலக்கிய, எழுத்து சமூகப் பணித்துறைகளுக்கு அர்ப்பணித்த பெரியவர் என்னையும் இத்துறையில் பிரகாசிக்க வழிவகுத்த பெருமகனை, எனது வழிகாட்டிகளில் ஒருவராக இருந்து செயற்பட்ட நல்ல மனம் படைத்த மனிதரை என்நாளும் நினைவுகொள்கிறேன். அவர் கடந்த 2016ம் ஆண்டு பங்குனி மாதம் இயற்கை எய்தியது எனக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியது.

ஆனால் அவர் என்போன்றோருக்குச் செய்த உதவிகளையும் இலக்கியப் பணிகளை என்றும் இந்த உலகம் நினைவு கொள்ளும். போற்றும். வாழ்த்தும். நாங்களும் இஸ்லாமியர்களும் மதம், கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம், பழக்கவழக்கம், உணவு, உடை போன்ற பல விடையங்களில் மாறுபட்டிருந்தாலும் பேசும் மொழி தமிழ் என்ற ரீதியில் இரு சமூகங்களும் ஒரே இனத்தவர்களே. ஏன் அன்றும் இன்றும்

தமிழ்மொழி வளர்ச்சிக்கு இஸ்லாமியர்கள் ஆற்றிவரும் பங்கானது அளவிடமுடியாததாகும். அவர்களால்தான் நம் நாட்டில் தமிழ் செழித்து வளர்கின்றது என்றும் பெருமையாகக் கூறலாம். இவற்றைவிட முகமறியாத பல இஸ்லாமிய நண்பர்கள், எழுத்தாளர்கள், சமயப்பெரியார்கள், அரசியல் வாதிகள், கல்விமான்களும் என்னோடு பேசிப் பழகிவரும் நல்ல மனங்களை வாழ்த்துகிறேன். ஆகவே இஸ்லாமிய மக்களோடு கைகோர்த்து சகோதரத்துவம் பேணி ஐக்கியமாக எந்நாளும் ஒன்றுபட்டு வாழ்வோம் வளர்வோம்!....

# 15 - நகைச்சுவை மன்னன்

மனிதவாழ்வில் நகைச்சுவை என்பது மிகவும் முக்கியமான தொன்றாகும். நகைச்சுவை, சிரிப்பு இவற்றைக் கேட்டுச் சிரிக்கும்போது நமது உடலிலுள்ள பல நரம்புகள் உணர்ச்சி பெறுவதால் நோய் நொடிகள்கூட நம்மை அணுகாது என்று விஞ்ஞானிகள் தமது ஆராய்ச்சிகள் மூலம் நிரூபித்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் நகைச்சுவை உணர்வுகள், சிரிப்புக்கள் வாழ்வோடு ஒட்டிவிட்டால் ஆயுளும் கெட்டியாகிவிடும் என்பதும் உண்மையே.

நம்மில் பலர் இருக்கிறார்கள் எப்பொழுதும் தூங்கி வழியும் முகமாகும். சிரிப்பே இல்லாத மனிதர்கள். இவர்களை இருண்ட மனிதர்கள் என்றும் சிலர் கூறுவார்கள். சிலர் மனதுக்குள் எவ்வளவு கவலை இருந்தாலும் எப்போதும் சிரித்த முகத்தடன் காணப்படுவார்கள். இது ஒவ்வொருவரும் வளர்க்கப்படும் சூழல், குடும்பச்சூழல், சமூகப் பழக்க வழக்கம், பழகும் மனிதர்களைப் பொறுத்து மாறுபடுகின்றன. சிலரைப் பார்த்தால் எப்போதும் சிரித்த முகம், கலகலப்பான பேச்சு, நகைச்சுவை உணர்வுகலந்த பேச்சு நடவடிக்கைகள். தானும் சிரித்துப் பிறரையும் சிரிக்க வைத்துக்கொண்டே இருப்பார்கள். இது எல்லோராலும் இயலாத விடையமாகும். சும்மா சொல்லக்கூடாது பிறரைச் சிரிக்க வைப்பது என்பது மிகவும் கடினமான கலையாகும்.

அகில உலகப்புகழ் பெற்ற சார்ள்லி சப்ளினின் நகைச்சுவைகளைப் பாருங்கள். ஏன் நமது கலைஞர்களான கிருஸ்ணன், நாகேஸ்,மனோரம்மா, கவுண்டமணி, செந்தில், வடிவேலு போன்றோரின் நகைச்சுவைகளை எங்களால் மறக்கமுடியுமா. நம்நாட்டுக் கலைஞர் "சிரித்திரன்"சுந்தர் அவர்கள் மறைந்தாலும் அவர்களின் அந்த நகைச்சுவைகள் என்றும் எம் மனதில் புகுந்துகொண்டதால் எங்களுக்கு மறைமுகமாக உடலாரோக்கியம் கிடைக்கிறது என்றுதான் கூறுவேன். ஆகவே நாம் நகைச்சுவைப் புத்தகங்களையும் படிக்கவேண்டும். நகைச்சுவைமிக்க மனிதர்களோடு பழகவேண்டும். நகைச்சுவை நிகழ்வுகளை ரசிக்கவேண்டும். நகைச்சுவை உணர்வுகளை அனுபவிக்க வேண்டும்.

நாமும் சிரித்துப் பிறரையும் சிரிக்க வைக்கவேண்டும். இந்த இலக்கு நம் வாழ்வில் பல நன்மைகளைக் கொண்டுவரும் என்பது உண்மையான விடைமாகும்.

நான் நாட்டில் வேலை செய்தபோது எனது காரியாலயத்தில் முப்பது-நாற்பது பேர்வரை ஆண்-பெண் எனக்கூடியே வேலை செய்திருக்கிறேன். அங்கே அப்போது எனது வயதுடைய நண்பன். வாலிப வயது. அவன் சரியான பகிடிக்காரன். எவ்வளவு சீரியசான விடையங்களையும் இலகுவாகவே எடுத்துக் கொள்வான். அழுதவர்களைச் சிரிக்க வைப்பான். சிரிப்பவர்களை அழவைப்பான். சில சமயங்களில் மேலதிகாரிகளின் கண்டிப்புக்குள்ளாகும் போது அவர்கள் முன்னிலையில் மௌனம் காப்பான். அடுத்த நிமிடம் எங்கள் முன் தோன்றும் போது சிரித்துக்கொண்டு நிற்பான்.

எனது கணக்குப்பகுதியில்தான் அவனது வேலை. பதவி வேறு வேறாக, சம்பளம் வேறாக இருந்தாலும் நாங்கள் ஒரே நண்பர்கள் எந்தவித ஏற்றத்தாழ்வுகளும் கிடையாது. கணக்காளராக நான் வேலை செய்த காலத்தில் அவன் சில கணக்குப் பதிவுகளில் சில பிழைகளை விட்ட பொழுது நான் அவனைத் திட்டித்தீர்த்துக் கண்டித்திருக்கிறேன். ஆனால் சிறிது நேரத்தில் அதை எல்லாம் சரிசெய்து சிரித்த முகத்துடன் என்னோடு உரையாட எனது கோபமும் ஆத்திரமும் மறைந்து ஓடிவிடும். இப்படிப்பட்ட மறக்கமுடியாத நகைச்சுவையாளனின் பெயர் தேவன். நான் தாயகத்தில் வாழ்ந்த காலத்தில் என்னோடு ஒரே காரியாலயத்தில் சுமார் ஐந்துவருடங்களுக்கு மேல் ஒன்றாக வேலை செய்தவன். அவன் இப்போது தாயகத்தில்தான் (பரந்தன்) வாழ்ந்துகொண்டிருக்கிறான்.

ஒரு சம்பவம் ஒருநாள் காரியாலயத்தில் வேலை செய்துகொண்டிருந்தோம். அப்போது காரியாலய சேவகருக்கும் (பீயோன்) இவனுக்குமிடையே தகராறு ஏற்பட்டுவிட்டது. அவனைப்பார்த்து பியோன் சொன்னான் "அத்தனை பல்லும் கொட்டுவன்" என்று ஆவேசமாகக் கூறினான். தேவனுக்கு எந்தவித கோபமும் வரவில்லை. சிரித்தான்... என்ன "நாட்கூலிக்குக் கொட்டப்போறியா?...அல்லது கொன்றாய்க்காகக் (Contract) கொட்டப் போகிறியா" எனச்சிரித்தபடி கேட்டான்.

அப்போது காரியாலயத்தில் கடமையிலிருந்த அதிகாரிகளும் பணியாளர்களும் கல..கலவெனச் சிரித்தார்கள். இந்த நேரத்தில் இப்படியான பதில்கூற யாருக்குத்தான் மனம்வரும். இந்தச்சம்வம் இன்றும் எனது மனதில் நிற்கின்றது. இது போல் எத்தனையோ நகைச்சுவைச் சம்பவங்கள் பகிடிகள் அவனிடமிருந்து கற்றுக்கொண்டேன். எழுதுவதென்றால் ஒரு புத்தகமாகவே எழுதலாம்.

ஆகவே நாம் வாழ்நாளில் சிரித்து வாழவேண்டும். நகைச்சுவையும் வாழ்வில் ஒரு அம்சம்தான். நகைச்சுவை உணர்வுகள் இல்லாதவர் ஒரு மனிதரல்ல என்றும் ஒரு அறிஞன் கூறியுள்ளான். இதில் எவ்வளவு உண்மை உள்ளது என்பதை இதை அனுபவித்தவர்களுக்கு நன்றாகவே தெரியும். "வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டு ஓடிவிடும்"என்று தெரியாமலா அனுபவசாலிகள் எடுத்துரைத்தார்கள். எனவே பிறர் சிரிக்க நாம் வாழ்ந்திடாமல் நாம் சிரித்து பிறரையும் சிரித்து மகிழ வைப்போம். எல்லோரும் சிரித்து வாழ்ந்தால் எந்தவித நோயும் நம்மீது அணுகாது. சிரிப்பால் நீண்டகாலம் உயிர்வாழலாம் என்பதையும் அறிந்து வாழ்வோம்!...

# 16 - முதலுதவி

முதலுதவி என்னும் போது ஒருவருக்கு ஆபத்து வந்தால் அல்லது நமக்கு உயிர் ஆபத்து வந்தால் எப்படித் தப்பித்துக்கொள்ளலாம், அதற்குரிய முதல் நடவடிக்கைகள் என்ன? என்பனவற்றை அறிந்து வைத்தல் எனக்கூறலாம். தனக்கு ஆபத்து எதுவும் நேர்ந்துவிடாமல் தப்பித்துக் கொள்ளவும் பிறரை ஆபத்திலிருந்து காப்பாற்றிக்கொள்ளவும் இந்த முதலுதவி பற்றி நாம் ஒவ்வொருவரும் கட்டாயம் அறிந்திருத்தல் அவசியமாகும்.

வெளிநாடுகளைப் பொறுத்த அளவில் பல வேலைத் தளங்களில் இந்த முதலுதவிப் பயிற்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. சில தாபனங்கள் இந்தப் பயிற்சியின் சான்றிதழ் இருந்தால்தான் ஒருவரை வேலைக்கு அமர்த்துவார்கள். இன்னும் பல வேலை வழங்கும் தாபனங்கள் அங்கு கடமைபுரிவோருக்குக் கட்டம் கட்டமாக முதலுதவிப் பயிற்சியை அளித்துவருவதும் வழக்கமான விடையமாகும்.

நான் 1992 - 2002 ஆண்டு காலப் பகுதியில் டுசில்டோவ் என்ற நகரதடதில் அமைந்துள்ள Hilton International Hotel என்ற தாபனத்தில் கடமைபுரிந்தேன். சாதாரண தொழிலாளியாகச் சேர்ந்து பின்னர் மேற்பார்வையாளராகப் பதவி உயர்வு பெற்றுப் பல சான்றிதழ்களையும் பல பரிசுகளையும் அவ்வப்போது பெற்றிருக்கிறேன். நான் கடமைபுரிந்த பதினைந்து ஆண்டுகளில் பலவகையான மனிதர்களைச் சந்தித்திருக்கிறேன். பல நாடுகள், பல நிறங்கள், பல மொழிகள், வேறுபட்ட கலாச்சார பழக்க வழக்கங்களைக் கொண்ட மனிதர்களோடு ஒன்றாகப் பழகியிருக்கிறேன். உண்டு குடித்து ஆடிப்பாடி மகிழ்ந்திருக்கிறேன். வாழ்க்கையில் பல அனுபவங்களையும் பெற்றிருக்கிறேன்.

வேலை செய்யும் காலத்தில் பல பயிற்சி வகுப்புகள் கருத்தரங்குகளில் பங்குகொண்டிருக்கிறேன். இந்த நாட்டு மொழியைச் சரிவர எழுதப் பேசத் தெரிந்துகொள்ளாவிடினும் ஊகிப்பு, முயற்சி, ஓரளவு ஆங்கில அறிவு இருந்தமையினால் அந்தப் பயிற்சி வகுப்புக்களையும்கருத்தரங்குகளையும் கிரகித்து, கேட்டு, படித்து அறிந்துகொண்டமை சிறப்புத்தான்.

ஒருநாள் முதலுவி பயிற்சி வகுப்பு இடம்பெற்றது. முப்பதுபேர்வரை பல நாட்டவரும் பங்குகொண்டனர். அதில் நானும் பங்குகொண்டேன். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இரண்டுபேரால் இந்தப் பயிற்சி, செய்முறைப் பயிற்சி நடாத்தப்பட்டது. காலை பத்து மணியளவில் ஆரம்பித்த வகுப்பு மாலை ஐந்துமணிவரை நீடித்தது. அப்போது வேலை செய்யும் இடத்தில் தீ பிடித்தால் ஒருவர் எப்படித் தப்பித்துக்கொள்ளலாம், பிறரை எப்படிக் காப்பற்றலாம், பொருட்களுக்குச் சேதம் வராமல் தடுக்கலாம், என்ன..என்ன வழிமுறைகளைக் கையாள வேண்டும் என்றும் பல வித விளக்கங்கள் அளிக்கப்பட்டதுடன் பல செய்முறைப் பயிற்சிகளையும் செய்து காண்பித்தனர்.

தேநீர் இடைவேளை, மதிய இடைவேளை எல்லாம் முடிந்து, மீண்டும் சில பயிற்சி வகுப்புக்கள் இடம்பெற்றன. அப்போது பயிற்சியளித்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி எனக்கு அருகில் இருந்த ஆபிரிக்க நாட்டர் ஒருவரைப்பார்த்து "நீர் வேலை செய்யும் இடத்தில் தீ பிடித்தால் உடனே என்ன செய்வீர்" என ஒரு கேள்வியைத் தொடுத்தார். அவன் சற்று யோசித்தான் பின்பு கூறினான் "நெருப்பைக் கண்டவுடன் வெளியே ஓடிப்போய் "ரைக்ஸி" பிடித்துக்கொண்டு வீட்ட ஓடுவேன்" என்று எதுவித கூச்சமும் இல்லாமல் பதிலளித்தான். சொல்லவும் வேண்டுமா. வகுப்பே சிரிப்பில் மூழ்கியது. சிரிப்பொலி ஓய பல நிமிடங்கள் சென்றன. அவன் அன்று சொன்ன அந்தப் பதிலை இப்போ நினைக்கையிலும் சிரிப்புத்தான்.

அப்போதுதான் எங்களுடைய இராமாயணக் கதையும் ஞாபகத்துக்கு வந்தது."இரவிரவாய் இராமாயணப் படலம் விடிந்தால் இராமன் சீதைக்கு என்னமுறை" என்ற கதைதான். உங்களுக்கும் அப்படிப்பட்ட பல அனுபவங்களும் கிடைத்திருக்குமென எண்ணுகிறேன். அப்போதுதான் நான் யோசித்துக்கொண்டேன். பயப்படாமல் வெட்கப்படாமல் பிறர் என்ன தங்களைப் பற்றிச் சிந்திப்பார்கள் என்று எல்லாம் எண்ணாமல் பதிலளிக்கும் மனம்படைத்தவர்களும் இவ்வுலகில் வாழ்ந்துகெண்டுதான் இருக்கிறார்கள். இப்படியாகப் பதிலளிக்கும் போது சில பேருக்குச் சில சந்தர்ப்பங்களில் நன்மையும் ஆகலாம் கெடுதியும் விளையலாம் எனவே எதற்கும் ஓரிருமுறை யோசித்துப் பதிலளிப்பதே சிறந்ததாகும்!...

# 17 - பிச்சைக்காரர்

இன்று உலகிலுள்ள மக்கள் தொகையில் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கையும் கணிசமான தொகையாகக் காணப்படுகின்றது. உலகில் எந்த நாட்டில் பிச்சைக்காரர் இல்லை. எந்த வசதிபடைத் நாடுகளிலும் பிச்சைக்காரர் இருந்துகொண்டே இருப்பார்கள். இவர்களுக்கு நிறம், மதம், நாடு, மொழி, பால், போன்ற எந்த வேறுபாடுகளும் கிடையாது. பலர் பிச்சைக்காரர்களின் பிள்ளைகளாகப் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து பிச்சைக்காரர்களாகவே இறுதியில் ஆதரவற்றோராய் மடிந்துவிடுவார்கள். சிலரைப் பார்த்தால் பெரிய பணக்காரர்களாக வாழ்வார்கள் இறுதியில் ஒன்றும் இல்லாமல் பிச்சைக்காரர்களாகி வாழ்ந்து முடித்துவிடுவார்கள். இப்படிப் பலதரப்பட்ட மனிதரின் வாழ்வுவட்டம் சுழற்றுகொண்டே இருக்கின்றது.

உடல் ஊனமுற்றவர்கள், நோயாளிகள், ஏழைகள் பிச்சை எடுத்துப் பிழைப்பதே இன்று பல உலக நாடுகளில் மாறிவிட, இன்னும் பலர் கை, கால் ஆரோக்கியம் இருந்தும் தொழில் ஒன்றும் செய்யாமல் பிச்சை எடுத்து வாழ்வதே இலகுவான வழி என்பதையும் கண்டுபிடித்துவிட்டார்கள். இன்னும் பல கொடியவர்கள் இந்தியா போன்ற நாடுகளில் நடைபெறுவது உடல் ஊனமுற்றவர்களையும் ஏழைகளையும் இன்னும்பல தரகர்களையும் பிச்சை எடுக்கும் தொழிலுக்கு அமர்த்தி பெரும் பணக்காரர்களாகப் பிழைப்பு நடாத்துகிறார்கள்.

சட்டமும் ஒழுங்கும் பொலிசும் பாதுகாப்பும் ஒன்றுமே செய்யமுடியாத நிலைதான். இன்றைய இந்தப் பிச்சைக்காரர்களைப் பார்த்தால் பலர் விலையுயர்ந்த கைத்தொலைபேசிகளைப் பாவனையில் வைத்திருக்கிறார்கள். சிலர் காணி, பூமி, வீடு, வளவு, பொருள், பண்டம் எனப் பெரும் சொத்துக்களையும் கொண்டிருக்கிறார்கள். இதனால் யார் உண்மையான பிச்சைக்காரர் எனத் தெரியமல் பிச்சை போடுபவர்கள் திண்டாடும்கின்றனர் என்பதும் வேடிக்கைதான்.

ஒரு சில பிச்சைக்காரர்கள் தியாகிகள்தான் பிச்சை எடுக்கும் பணத்தில் தமது குடும்பங்களின் கல்விச் செலவைப்பார்க்கிறார்கள்.

வைத்தியச் செலவுக்கு உதவுகிறார்கள், அன்றாட உணவுத்தேவைக்குப் பயன்படுத்துகிறார்கள். இல்லாதோருக்குக் கொடுக்கிறார்கள். ஆனால் சில பிச்சைக்காரர் சேரும் பணத்தில் குடிபோதையில் ஈடுபட்டு தன்னையும் தனது குடும்பத்தையும் சீரழிக்கிறார்கள். இப்படிப் பலதரப்பட்ட இயல்புடையவர்களும் மனம் படைத்தவர்களும் இப்பூமியில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

நான் சுமார் இருபது வருடங்களாக டுசில்டொவ் என்ற நகரத்தில் வேலை செய்தேன். எனது வீடு டுஸ்பேர்க் என்ற நகரமாகும் ஒவ்வொருநாளும் வீதியில் ஓடும் ட்ராம் வண்டியில் (Tram) தான் போய்வருவது வழக்கமாகும். அப்போது நான்போகும் வண்டியில் பல பிச்சைக்காரர்கள் தினமும் பயணிப்பார்கள். அந்தப் பிச்சைக்காரர்களைப் பற்றிய பல விடையங்களை அறிந்து உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். எல்லோரும் வெள்ளை இனத்தவர்கள். ஆண்-பெண் என இருபாலரும் அடங்குவர் வயதும் இருபது முப்பதுக்கு மேற்பட்டவர்கள்தான். ஒரு கூட்டமாக இந்தப் பிரயாண வண்டியில் காலையில் ஏறிவந்து டுசில்டோவ் நகரமையத் தொடரூந்து நிலையத்தில் இறங்குவார்கள்.

இறங்கி நாலாபக்கமும் குழுக்களாகப் பிரிந்து சென்று நகரப்பகுதிகள் அனைத்துக்கும் அதாவது மக்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளெல்லாம் அலைந்து திரிந்து பிச்சை எடுப்பார்கள். அதிலும் சிலர் பல தந்திரங்களைக் கையாள்வார்கள். கோப்பி, தண்ணீர், சாப்பிட என்று கூறிப் பிச்சை கேட்பார்கள். இன்னும் சிலர் பிள்ளைக்குப் பால், பால்மாவு, உணவு வேண்ட என்றும் பிச்சை கேட்பார்கள். இன்னும் சிலர் கையில் தாம் கொண்டு திரியும் நாய்க்குட்டிக்குச் சாப்பாடு வேண்ட எனவும் காசு கேட்பார்கள்.

இன்னும் சிலரைப் பார்த்தால் மிகவுத் தந்திரசாலிகள். உதாரணத்திற்கு அதாவது தமது கையில் இரண்டு யூரோ வைத்துக்கொண்டு இன்னும் ஒரு யூரோ தாருங்கோ சாப்பாடு வேண்டப் போகிறேன் என்று கேட்பார்கள். இப்படி எத்தனையோ வித்தைகளைக் காட்டிப் பேசிக்கதைத்துப் பணம் கேட்பார்கள். இவர்களை நம்பிப் பிச்சை கொடுத்துவிடும் எத்தனையோ பேர் இருந்தார்கள்.

இவர்கள் மதியம் பன்னிரண்டு-ஒருமணியளவில் ஓரிடத்தில் கூடுவார்கள். பிச்சை எடுத்த காசை எண்ணிக் கணக்கிடுவார்கள். சிற்றுண்டிகள், பியர், சிகரட், கோப்பி என வேண்டித் தமது தாகத்தைத் தீர்த்துக் கொள்வார்கள். எல்லோரும் ஓரிடத்தில் இருந்து தின்று, குடித்து, புகைத்து மகிழ்வார்கள். தாம் அழைத்துவரும் நாய்களுக்கும் உணவு கொடுத்து மகிழ்வார்கள். சிறிது நேரத்தின்பின் பழையபடி மீண்டும் குழுக்களாகப் பிரிந்து சென்று தமது தொழிலைச் செய்வார்கள்.

இவர்களில் சிலர் கடைகளில் களவெடுத்து பொலிஸில் மாட்டுப்படும் சம்பவங்களும் நடைபெறும். இன்னும் சிலர் பிச்சை எடுக்கும் பணத்தில் போதைப்பொருட்களை வேண்டிப் பாவித்துவிட்டு நிலைதடுமாறி விழுந்து கிடக்க அம்புலன்ஸ் வண்டிகள் வந்து அவர்களை ஏற்றிச்செல்லும். இவை பெரிய நகரங்களில் அன்றாடம் நடைபெறும் பல விடையங்களாகும். இப்படியாகக் குழுவாக அலைந்து திரிந்து பிச்சை எடுத்து வாழ்வதே இவர்களின் தொழிலாக மாறிவிட்டன.

ஆம் பிச்சைக்காரர் உருவாகுவதற்குப் பல காரணங்கள் உண்டு. இதை ஒரு ஆய்வாக மேற்கொண்டால் பற்பல விடையங்கள் அறிந்து கொள்ளலாம். நம் பிறந்த தேசத்திலும் அரசியல், சமூக, பொருளாதார, திட்டமிடல் போன்ற பல காரணங்களால் பலர் பிச்சைக்கார வாழ்வுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். பலர் இதை விட்டால் வேறு வழி இல்லை என்று வாழ்நாள் தொழிலாகவும் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

இன்னும் பலர் பிச்சை எடுப்பவர்களைப் பாலியல் தொழிலாளர்களாகவும் மாற்றிப் பிழைக்கின்றனர். பிச்சை எடுக்கும் சின்னஞ்சிறிசுகள் கூட பாலியல் வதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வாழ்கிறார்கள் என்பதும் வேதனைக்குரிய விடையமாகும். இப்படியாகப் பிச்சைக்காரர்களில் பலவிதமான மனம், குணம் படைத்தவர்களை நாம் அன்றாட வாழ்வில் காண்கின்றோம். பிச்சை எடுப்பதையும் பிச்சை கொடுப்பதையும் இல்லாது ஒழித்துவிட கல்வியை வளர்த்து பொருளாதாரத்தை மேம்படுத்தித் திட்டங்களை வகுத்துச் செயற்பட்டால்தான் விடிவு கிடைக்கும்!...

## 18 - மொழி

"அம்மா" என்று அமுத மொழிபேசி, அழுது கண்ணீர் வடித்து இறுதி யாத்திரை போகுவரை எமது மொழி எம் உடலோடு ஒட்டித்தான் இருக்கும். எமது தாய் மொழி எப்போ இழக்கப்படுகிறதோ அப்போ எமது இன அடையாளத்தையும் இழந்துவிடுவோம். உலகில் எத்தனை ஆயிரம் மொழிகள் தோன்றின. பல நூற்றுக் கணக்கானவை அழிந்துவிட்டன. சில நூற்றுக்கணக்கானவை வழக்கிலிருந்துவர அவற்றிலும் சில மொழிகள் தேய்ந்து அழிந்து வருகின்றன. இன்னும் சில மொழிகள் ஒன்றோடொன்று கலந்து விடுகின்றன.

மனித வாழ்வில் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு, சண்டை சச்சரவு இல்லாமல் அமைதியாக வாழ வேண்டும். பகிர்ந்து உண்டு வாழவேண்டும் என்பதற்காக மொழியின் தோற்றம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. மொழிகள் தோன்றுவதற்கு முன்னர் மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று எண்ணும் போது எமக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும். மொழிகளின் தோற்றமும் வளர்ச்சியும்தான் மனிதனின் படிப்படியான பரிணாம வளர்ச்சியில் பெரும் பங்காற்றியிருக்கின்றன என்னும்போது மொழிகளுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

எமது தாய் நாட்டில் அறுபது எழுபது வருடங்கள் தாண்டிய இனமுரண்பாடுகள் நீண்டுகொண்டு செல்வதற்கு மொழிப்பிரச்சனையும் ஒன்றுதான். காலாதிகாலம் ஆண்ட அரசுகளும் அரசியல்வாதிகளும் விட்ட தவறுகளால் இரு இனங்களும் இரு மொழிகளையும் கற்கத் தவறியமைதான் இந்த அளவிற்கு இன முரண்பாடுகள் வளர்ந்து இவ்வளவு பேரழிவுகளை ஏற்படுத்தின என்பதை நாம் புரிந்து கொள்ளல் வேண்டும்.

பூதாகரமாக மூண்ட பல இனக்கலவரங்களால் பல்லாயிரம் உயிர்கள் சொத்துக்கள் மாண்டுமடிய இன்னும் பல்லாயிரம் பேர் சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ, இன்னும் லட்சக்கணக்கானோர் பல வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துகொண்டமை வரலாறாகும். இன்று சுமார் இருபத்தைந்துக்கும் அதிகமான நாடுகளில் தமிழர்கள் தமிழ்மொழி

பேசி வாழ்ந்தாலும் தமிழருக்கு என்று ஒரு நாடு கிடையாது. ஒரு சில நாடுகளில்தான் தமிழ்மொழி அங்கீகரிக்கப்பட்ட மொழியாக விளங்குகின்றது. நமது மொழியின் தோற்றம், வளர்ச்சி, பரம்பல் பற்றி ஆராய்ந்தால் பெரிய கட்டுரையே எழுதலாம்.

இப்பொழுது புலம்பெயர்ந்து வந்த ஒரு தமிழனைப்பற்றி நோக்குவோம். தாய் நாட்டில் இடம்பெற்ற இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு ஜேர்மனியில் குடியேறி சுமார் முப்பது வருடங்கள் உருண்டுவிட்டன. ஆனால் இந்த நாட்டு மொழியை இன்னும் எழுத, பேச, வாசிக்கத் தெரியாத பல நூற்றுக் கணக்கானோரில் நானும் ஒருவன்தான். இதனால் பல பாதிப்புக்களைச் சந்தித்திருக்கிறேன். தாயகத்தில் நான் கற்ற கல்வி, பயிற்சி, வேலை, அனுபவத்திற்கு ஏற்ற வேலை இங்கு கிடைத்ததா இல்லை. உதாரணத்திற்கு நாட்டில் ஆசிரியர் வேலை செய்தவருக்கு இங்கு தோட்டத்திலும் உணவுச்சாலைகளிலும்தான் வேலை. இப்படியாக நாட்டில் நாம் செய்த வேலைகளுக்கு ஏற்ற வேலைகள் இங்கு கிடைக்காமைக்கு நாம் இந்த நாட்டு மொழியை நன்கு கற்றுக்கொள்ளாமையும் ஒரு பெரும் காரணமாக அமைந்துவிட்டது எனலாம்.

தெரிந்தோ...தெரியாமலோ இந்தத்தவறு நமது எதிர்காலத்தை பாதித்துள்ளமை உண்மைதான். நாம் இங்கு இருபது, இருபத்தைந்து, முப்பது வருடங்கள் ஒரு தொழில் நிறுவனத்தில் வேலை செய்தாலும் பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்காமைக்கு எமக்கு மொழி அறிவு போதாமையே காரணமாகும். நாம் இந்த நாடுகளில் குடியேறிய காலங்களில் இந்த நாடுகளின் அரசுகள் இந்த நாடுகளின் மொழிகளைக் கட்டாயம் படிக்கும்படி கட்டாயப் படுத்தவில்லை. எல்லோரையும் முகாம்களில் அடைத்து வைத்து சாப்பாடு தந்தார்கள், உபசரித்தார்கள். நாமும் சொகுசு வாழ்வு கிடைத்துவிட்டது என்று எண்ணி இந்த நாடுகளின் மொழிகளைப் படிக்காமல் விட்டது மாபெரும் தவறானவிடையமாகும்.

இந்த நாட்டு அரசும் நாமும் விட்ட தவறுகளால் பிற மொழிகளைப் படிக்காமல் விட்டிருக்கிறோம். காசு பணம் என அப்போ அலைந்தபடியால்தான் இப்போதும் மொழி தெரியாமல் அலைந்து திரியும் இனங்களில் ஒன்றாகத் தமிழினமும் உருவெடுத்திருக்கின்றது.

ஆனால் இன்று மொழி படித்து பரீட்சையில் சித்தியடைந்தால்தான் வதிவிட உரிமை, மற்றும் சலுகைகள் என்ற காரணங்களால் நம்மவர் பலர் தள்ளாத வயதிலும் பிறமொழியைப் படிக்கிறார்கள். இதிலும் நமது பெண்கள்தான் கூடுதலானோர் மொழியைப்படித்து வருவதும் புலத்து ஆண்களின் சுயநலப் போக்கு என்றுதான் கூறவேண்டும்.

நாம் இந்த நாடுகளில் முப்பது நாற்பது வருடங்கள் வாழ்ந்தாலும் இந்த நாடுளின் மொழிகளைக் கற்காமல் விட்டது எவ்வளவு பெரிய தவறு. நம்மில் அநேகம்பேர் இந்த நாடுகளில் காலடி வைக்கும்போது இரண்டு மூன்று வருடங்களில் நம் நாட்டுப் பிரச்சனை முடிந்துவிடும் அதற்கிடையில் உழைக்கிறதை உழைத்துக்கொண்டு ஊருக்குப் போய்விடலாம் என்றுதான் எண்ணினார்கள். ஆனால் காலத்தின் கோலம் வேறாக மாறியது. முள்ளிவாய்க்கால்வரை சென்ற பிரச்சனை இன்றும் முடிந்தபாடில்லை. நாமும் நாட்டுக்குத் திரும்பப்போவதில்லை என நிலமை மாற்றமடைந்து இந்த நாடுகளிலேயே வேரூன்றிவிட்டோம். நம் அடுத்த சந்ததிகளும் இங்கு நிரந்தரமாக வாழ ஆரம்பித்துவிட்டார்கள்.

மொழி என்பது எவ்வளவு முக்கியமானது. எமது வாழ்வோடு பின்னிப் பிணைந்தது. பல மொழிகளைக் கற்பதில் அறிந்துகொள்வதில் எந்தத் தவறும் கிடையாது. அவை எப்போதும் நமக்குப் பயன்படும். உதாரணத்திற்கு நம்மவர் புலம்பெயர் நாடுகளில் இருபத்தைந்து முப்பது ஆண்டுகள் வாழ்ந்தாலும் நமது நோய்களைக்கூடச் சரிவர டாக்டரிடம் எடுத்துக்கூற முடியாமல் திண்டாடுகிறார்கள். இப்படிப் பல பிரச்சனைகளை எதிர்கொண்டுவருவதும் உண்மையான விடையமாகும்.

இவைமட்டுமல்ல பிற மொழிகளைச் சரிவரத்தெரியாத காரணத்தால் நமது பதவி உயர்வுகள் தடைப்பட்டன. சம்பள உயர்வுகள் கிடைக்காமல் போயின. ஏன் சில சமயங்களில் மொழி புரியாமல் அவமானப் பட்டிருக்கிறோம். வேதனைப் பட்டிருக்கிறோம். வெட்கப்பட்டிருக்கிறோம். ஆகவே நாம் இந்தப் புலம்பெயர் நாடுகளில் எவ்வளவு காலம் வாழ்ந்தோம், எவ்வளவு பணம் வைத்திருக்கிறோம், எவ்வளவு ஆடம்பரமாக வாழ்கிறோம் என்பது முக்கியமல்ல. எத்தனை மொழிகளைக் கற்றுக்கொண்டோம் என்பதே நம்முன் இருக்கும் கேள்வியாகும்.

இங்கு பிறந்து வாழும் நம் சந்ததிகள் இன்று நான்கு ஐந்து மொழிகளைக் கற்று நல்ல வேலைகளைச்செய்து நல்ல வருவாய்பெற்று நன்றாகவே வாழ்கிறார்கள். இது நமக்கெல்லாம் பெருமையாகத்தான் இருக்கின்றது. ஆகவே நாம் விட்ட தவறுகளை நமது சந்ததிகளும் தொடராமல் பல மொழிகளையும் கற்று, உழைத்து, உயர்ந்து முன்னேறி வாழ நாம் வழிகாட்டிகளாக இருப்போம். எந்த மொழியையும் நாம் கற்றிடவேண்டும். நல்லவை பலதையும் கற்கும் போது நாம் பண்டிதன் ஆகவேண்டாம் பண்புள்ள மனிதனாக வாழ்வோம் என்பது என்மனதை வருடிய மொழிமீதான சிறிய பற்றும் பார்வையுமாகும். உங்கள் மனதையும் இவ்விடையம் தொட்டுச் செல்லட்டும்!....

## 19 - வருத்தப்படாத வாலிபர் சங்கம்

"வருத்தப்படாத வாலிபர் சங்கம்" என்றவுடன் சினிமா நடிகர் சிவகார்த்திகேயனின் சினிமாப்படம்தான் நம்மில் பலருக்கு ஞாபகம் வரும் என்று நினைக்கிறேன். இவ்விடையம் சினிமா அல்ல. இது நம்மவர்களின் ஒரு விடையமாகும். இது சங்கமில்லை, சபையில்லை, மன்றமில்லை, தலைவர் இல்லை செயலாளர் இல்லை, பொருளாளரும் இல்லை அங்கத்தவரும் இல்லை காசும் இல்லை. அப்படிப்பட்ட சங்கம் தான் இந்த நண்பர்கள் குழு.

தாம் விரும்பிய வேளையில் கூடுவார்கள், பேசுவார்கள், சாப்பிடுவார்கள், அகமகிழ்வார்கள் ஏன் தண்ணியும் அடித்து மகிழ்வார்கள். கடந்த முப்பது வருடங்களுக்கு மேல் இயங்கும் இவர்கள் ஒருநாளும் சண்டை பிடித்ததில்லை. எப்போதும் இப்போதும் இனிமையான தமிழ் நண்பர்கள் வட்டம்தான் இந்த வருத்தப்படாதவாலிபர் சங்கம்.

இலங்கையில் இனக்கலவரம் நடைபெற்றபோது 1977, 1981, 1983 ஆண்டுகளில் பெருந்தொகையிலான தமிழர்கள் இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குத் தப்பி வந்தார்கள் என்பது வரலாறாகும். அப்படி வந்தவர்களில் பெருந்தொகையினர் ஜேர்மனியிலும் காலூன்றி இன்று முப்பது நாற்பது வருடங்கள் உருண்டோடி விட்டன. இவர்கள் இலங்கையின் பல மாவட்டங்களிலிருந்தும் இங்கு வந்து சேர்ந்தனர். இவர்களில் Essen, Mulheim, Oberhausehn, Duisburg என அருகருகேயுள்ள நகரங்களிலும் பெருமளவு தமிழர்கள் குடியேறி வாழ்ந்து வந்தனர்.

கத்தோலிக்கம், இந்து மதங்களைச் சேர்ந்த தமிழர்கள் வாழ்ந்தபோது, அதாவது அன்றைய காலங்களில் சைவக்கோவில்கள் எதுவும் இல்லாத காரணத்தால் எல்லோரும் மனஆறுதல் மற்றும் அமைதி வேண்டி கத்தோலிக்க தேவாலயங்களுக்குச் சென்று வழிபடுவதும் ஒரு நிகழ்வாக இருந்துவந்தது. ஞாயிற்றுக் கிழமைகளில் தேவாலயங்களுக்குச் சென்றுவந்த தமிழர்கள் மற்றும் தைப்பொங்கல், தீபாவளி, புதுவருடம் போன்ற நிகழ்வுகளையும் கொண்டாடி மகிழ்ந்து வந்தனர்.

இப்படியாகக்கூடி மகிழ்ந்தபோது அரசியல், இயக்கம், சமயம், சாதி,மதம் போன்ற சில அழுக்குகளை விரும்பாத சில தமிழ் நண்பர்கள் ஒன்று சேர்ந்தனர். இந்த நண்பர்கள் வட்டம்தான் இவர்கள். இவர்களுக்கு இப்போ ஐப்பது அறுபது வயதை எட்டிப்பிடித்துவிட்டது. இவர்கள் தான் கடந்த முப்பது முப்பத்தைந்து வருடங்களாக நட்பைப் பேணி அன்பாக ஒன்றுகூடி வருகிறார்கள். குடும்பமாக ஒன்றுகூடுவார்கள், அகமகிழ்வார்கள். ஆனால் எல்லாம் அளவோடு, நட்போடு. வேற்றுமைகள், காழ்ப்புணர்ச்சி இல்லாமல் பழகுவார்கள். இவர்களின் ஆழமான நட்பால்தான் இந்த "வருத்தப்படாத வாலிபர் சங்கம்" நீண்டு நிலைத்து வருகின்றது. ஆனால் சிலர் கூறுவார்கள் இது"வருத்தப்படாத வயோதிபர் சங்கம்"என அன்பாகவும் பகிடியாகவும் அழைத்து இன்புறுவார்கள்.

இந்தச் சங்கத்தினர் குறைந்தது இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூடுவார்கள். ஒன்றுகூடி அகமகிழ்ந்து இன்புறுவார்கள். மனம்விட்டுப் பேசுவார்கள். குடும்ப நன்மை தீமைகளில் பங்குகொள்வார்கள். அரசியல், நாட்டு நடப்பு, வீட்டுநடப்பு எல்லாம் அலசி ஆராய்ந்து நகைச்சுவை பகிர்ந்து, பழைய நினைவுகளை மீட்டு மகிழ்வார்கள். அருமையான நண்பர்கள் வட்டம். ஆனபடியால்தான் முப்பது நாற்பது வருடங்கள் இவர்களின் நட்பு நீண்டு நிலைக்கின்றது. நானும் இந்த வட்டத்தினருடன் நெருங்கிய உறவைப் பல ஆண்டுகளாகக் கொண்டுள்ளபடியால் எனக்கும் பெருமகிழ்வுதான். "வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் பறந்தோடிவிடும்" இது இங்கு நிஜமாகவே நான் கண்டுகொண்டுள்ளேன்.

இந்த வட்டத்தில் குறிப்பாக முல்கைம் நகர மொழிபெயர்ப்பாளர் ரகுநாதன், ஒபகௌசன் நகர ராஜ்குமார், கமிலஸ், எசன் நகர பாலா, ஆர்ன்ஸபேர்க் நகர பரிமளராசா, கபிலன், டியூஸ்பேர்க் நகர கனகலிங்கம் (அமரர்) முல்லைமோகன் மற்றும் என்போன்ற சிலரையும் குறிப்பிட்டுக் கூறலாம். சுமார் முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தொடரும் நட்பானது எவ்வளவு உயர்ந்தது. விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, அன்பு, நட்பு போன்றவை இன்றும் இவர்களிடையே சிறந்து விளங்குவது பாராட்டுக்குரிய விடையமாகும்...

இவர்கள் சும்மா வீண் பொழுது போக்குவதற்காக ஒன்று கூடுகிறார்கள் என்று கூறமுடியாது. வயது ஏறினாலும் இளமை குன்றாது கலை, விளையாட்டு, நாடகம், பாடல், ஆடல், நடிப்பு, பொதுச் செவைகளிலும் நீண்டகாலம் உழைத்துவரும் நண்பர்களாவர். வருங்கால நமது சந்ததிகளின் முன்னோடிகளாகவே திகழ்கிறார்கள். இவை மட்டுமல்லாமல் தாயகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பணிகளிலும் நீண்டகாலம் உதவிவருகிறார்கள். பணம் ,பொருள் என வேறு பல உதவிகளை"மண்" சஞ்சிகையூடாகவும் வேறுபல சமய, தொண்டு நிறுவனங்கள் ஊடாகவும் நீண்டகாலம் செய்துவரும் இவர்களின் மனிதநேயப் பணிகளை இங்கே குறிப்பிடலாம். இவர்களைப் பாராட்டுவோம்.

அன்புக்கு இலக்கணமாய் நம்பிக்கையோடு ஒன்றுபட்டு வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த நட்பு வட்டத்தினர் பல சமய, பிரதேச, ஊர் வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் எதுவிதமான வேறுபாடுகளும் இல்லாது, பாராபட்சம் பாராது, ஏற்றத்தாழ்வுகள் இல்லாது தம் பிள்ளைகளையும் ஒன்றுகூட வைத்து, நல்லதோர் ஐக்கியப்பட்ட, மனிதநேயம்மிக்க பிள்ளைகளாக உருவாக்கி விட்டுள்ளனர். பல பிள்ளைகள் இங்கு பிறந்து வளர்ந்து, கல்விகற்று, பட்டங்கள் பெற்று நல்ல தொழில் செய்வதற்கு இந்த நட்பு வட்டத்தினரின் ஆதரவும் செயற்பாடுகளும்தான் காரணம் என்றும் கூறலாம்.

இப்படிப்பட்ட நல்ல மனம் படைத்தவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியுமா....போட்டியும் பொறாமையும் ஏற்றத்தாழ்வுகளும் மலிந்த, நிறைந்த எங்கள் சமூகத்தில் நல்ல மனம்படைத்த மனிதர்களைக் காண்பதை நான் சிறப்பான ஒரு விடையமாகவே கருதுகிறேன். அவர்களுடனான எனது நீண்டகால நட்பு, அன்பு தொடர்வதை எண்ணிச் சந்தோஷப்படுகிறேன். எனவே நீங்களும் நல்ல நட்புகளைத் தேடிக்கொள்ளுங்கள். அன்பாக வாழலாம். நல்லமனம் படைத்த "வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின்" அத்தனை பேரையும் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். நல்ல மனங்கள் படைத்தவர்கள் எப்போதும் நன்றாகவே வாழ்வார்கள் என்பதை உங்களுக்கு ஒருதடவை எடுத்துக்கூறுகின்றேன்!....

# 20 - வெள்ளி விழா (25)

வெள்ளிவிழா என்றால் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு செய்யும்போது கொண்டாடப்படும் நிறைவு நாளாகும். இதே போல்தான் 10, 25, 50, 60, 75, 100 ஆண்டுகள் நிறைவையும் சகல இன,மத,நிறங்களைக் கொண்ட மக்கள் கொண்டாடி மகிழ்வது ஒரு வழக்கமாக இருந்து வருகின்றது. மனிதரைப்பொறுத்த அளவில் இப்படியாக ஆண்டுகள் நிறைவு காணும்போது பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள் என வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா, வைரவிழா, நூற்றாண்டுவிழா என்றெல்லாம் கொண்டாடி மகிழ்வார்கள். இதேபோல்தான் சங்கங்கள், மன்றங்கள், அமைப்புக்கள் நூல்நிலையங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில் நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், வங்கிகள் எனப் பல நிறுவனங்கள் விழா எடுத்துக் கொண்டாடி மகிழ்வது சகல இனத்தவர்களுக்கும் பொதுவான ஒரு விழாவாகவே இவ்விழாக்கள் நடாத்தப்படுகின்றன.

இங்கு அதாவது தமிழர்கள் புலம்பெயர் நாடுகளைப் பொறுத்த அளவிலும் பலதரப்பட்ட விழாக்கள் நீண்டகாலமாக நடைபெற்றுவருவது வழக்கமாகும். புதுப்புது விழாக்களைத் தமிழர்கள் எப்படி எல்லாம் உருவாக்கிக் கொண்டாடுகிறார்கள் என்பதும் வேடிக்கைதான். ஒரு நண்பர் தான் ஜேர்மனியில் காலூன்றித் 25 ஆண்டுகள் நிறைவு பெற்றதற்கு விழாக் கொண்டாடி மகிழ்ந்தது மட்டுமல்ல, தான் சீட்டு என்னும் தொழிலையும் தொடர்ந்து நடாத்தி இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு கண்டதாகவும் பெருமையுடன் கூறி மகிழ்ந்தார்.

இந்த இருபத்தைந்து வருடங்களிலும் சுமார் பதினைந்து இருபது சீட்டு வாடிக்கையாளர்களைத் தன்னகத்தே கொண்டு தானும் கறுப்புப்பணம் சம்பாதித்ததாகவும் வாடிக்கையாளர்களும் பெருமளவு கறுப்புப் பணத்தைச் சம்பாதித்துக்கொண்டனர் எனவும் புகழ்ந்துகொண்டார். இதில் வேடிக்கை என்னவென்றால் இதனால் பிச்சைக்காரர் ஆகியவர்கள், தற்கொலை செய்துகொண்டவர்கள், நாட்டைவிட்டு ஓடியவர்கள், குடுப்பப்பிரச்சனைகளால் பிரிந்த குடும்பங்கள் எனப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

அகதி (Asyl) இன்னொருவர் தான் வெளிநாட்டில் கால்வைத்து இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவுசெய்து வெள்ளிவிழா கொண்டாடிவிட்டதாகவும், தான் ஊரில் வாழ்ந்த காலத்தைவிட வெளிநாட்டில்தான் கூடிய காலம் உல்லாசமாக வாழ்ந்து வருவதாகவும் பெருமைப்பட்டுக் கொண்டார். இதை விட தான் முந்திவந்த அகதி என்றதை மறந்து இப்ப வந்தவர்களைப் பார்த்து அகதி என்று ஏளனம் செய்கிறார். இப்படிப்பட்டவர்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள்.

இன்னொரு நண்பர் தான் வெளிநாட்டுக் வந்து இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு செய்துவிட்டதாகவும் இந்த இருபத்தைந்து ஆண்டுகளும் முறைப்படி பதிந்து வேலை செய்யவில்லை எனவும் இந்த நாட்டு அரசை ஏமாற்றி அவ்வப்போது களவாக வேலைசெய்து பணம் சம்பாதித்ததாகவும் கூறினார். இதைவிடப் பெரிய உண்மை என்ன வென்றால் தான் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அரச உதவிப்பணத்தில் (Sozial Money) அரசபணத்தைச் சுரண்டி வாழ்ந்து வருவதாகவும் கூறினார்.

அடுத்து ஒரு பெருங்குடி மன்னன். பெருமை என்னவென்றால் தான் மது குடிக்கவும், சிகரட் புகைக்கவும் ஆரம்பித்து வெள்ளிவிழா கொண்டாடிவிட்டதாகவும் பெருமைப்பட்டார். இவர் தனது ஆயுட்காலத்தை இருபத்தைந்து வருடங்களால் குறைந்துக் கொண்டுவிட்டார் என்பதை உணராத பெருங்குடி மகனாவர். இப்டியாக மது, சிகரட், மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களும் இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்து நம்மிடையே வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

குடும்பப் பாசத்துக்குரியவர் ஒருவர் கூறினார் தான் வெளிநாடுவந்து இருபத்தைந்து ஆண்டுகள் கடந்துவிட்டதாகவும் ஆனால் இன்னும் தாய்நாட்டுப்பக்கம் போகவில்லை என்று தனது நாட்டுப்பற்றை பறைசாற்றியதுடன் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக தன்னைப் பெற்று வளர்த்த தாய், தந்தையருக்கும் உடன்பிறப்புக்களுக்கும் ஒரு கடிதம்கூட எழுதவில்லை என்றும் உதவிகள் ஏதும் செய்யவில்லை என்றும் பெருமையாகக் கூறிக்கொண்டார்.

இன்னொரு உத்தமனின் வெள்ளிவிழா தான் இந்த நாட்டில் கடை நடாத்தி இருபத்தை ஆண்டுகள் நிறைவு செய்து விழாக்கொண்டாடினார். இன்னொருவர் இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து முறைப்படி அரச அங்கீகாரம் பெற்று வேலை செய்து உழைத்து வீட்டையும் நாட்டையும் உறவுகளையும் உயர்வடையச் செய்ததாகக் கூறி மகிழ்ந்தார். அவை மட்டுமல்ல தான் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பொதுச் சேவைகளிலும் ஈடுபட்டு வருவதாகக்கூறினார். உண்மையில் இது பாராட்டப்பட வேண்டிய விடையமாகும். பெருமைக்குரிய விடையமாகும். நல்ல விடயம்தான் தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வைக்கும் உயர்ந்த மனிதன் என்றே கூறவேண்டும்.

இன்னு ஒரு விடையம் புலம்பெயர் நாடுகளில் இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து பலர் பொதுச்சேவைகள் செய்து கொண்டிருக்கிறார்கள். எழுதிக்கொண்டிருக்கும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், நாட்டிய ஆசிரியர்கள், நாடக இயக்குனர்கள், கல்விப்பணிசெய்துகொண்டிருப்பவர்கள், ஆலய சமயப் பணிகளைச் செய்துகொண்டிருப்பவர்கள் எனப் பல தரப்பினரும் தமது பணிகளைச் செய்துகொண்டிருப்பதால்தான் நம் தாய்த்தமிழ் வளர்ந்து செழிப்புற்றுவருவது உண்மையே. இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள், போற்றப்பட வேண்டியவர்களே..

இப்படியாக இந்த வெள்ளிவிழா (25) என்பதற்குப் பல அர்த்தமுள்ள விழாக்கள் வெளிநாடுகளில் நம்மவர்களிடையே நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கின்றன. பல மனம் படைத்த பல மனிதர்கள் நம்மினத்தவர்கள் இன்னும் சில ஆண்டுகளில் பொன்விழா(50) நூற்றாண்டுவிழா (100) கொண்டாடினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. ஒவ்வொரு மனங்களின் வெளிப்பாடுகளே இந்த விழாக்களை நிர்ணயிக்கின்றன. நாம் எவ்வளவு ஆண்டுகள் வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல.. என்ன செய்தோம்...எப்படி வாழ்ந்தோம்... என்பதையே நாம் சிந்திக்க வேண்டும். ஆகவே நீங்களும் ஏதாவது ஆண்டுவிழாவைக் கொண்டாடி மகிழுங்கள். ஆனால் அவை அர்த்தமுள்ளதாகவும் யாவரும் மகிழ்ச்சி அடையக்கூடியதாகவும் அமையட்டும். வெள்ளிவிழா, பொன்விழா, நூறாண்டுவிழாக்களை நோக்கி நகரட்டும். நல்ல மனங்கள் மகிழ்வுறட்டும்.

# 21 - காசு விழுங்கி

இன்று உலகையே ஆட்டிப்படைத்து வருவது இந்தப் பணம்தான். இந்தப் பணம் இல்லாவிடின் உலகமே ஆட்டம் கண்டுவிடும். பண்டைய காலங்களில் இந்தப் பணத்திற்குப் பதிலாக தானியங்கள், பண்டங்கள், ஆடு, மாடு, குதிரை போன்ற மிருகங்களும் ஏனைய பொருட்களும் பரிமாறப்பட்டிருக்கின்றன. இவற்றைவிட தங்கம், வெள்ளி, பித்தளை, வெங்கலம், செம்பு, இரும்பு போன்ற பொருட்களும் பண்டமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. நாகரீக வளர்ச்சி, கண்டுபிடிப்புகள், அறிவியல் வளர்ச்சி போன்றவை முன்னேற்றம் கண்டிடவே மனிதன் பணம் என்ற காசைக் கண்டுபிடித்தான். மிகவும் இலகுவாகப் பரிமாற்றம் செய்வதற்கு காசு, சில்லறை நாணயங்கள் அன்றும் இன்றும் மனிதருக்கு உதவி வருவதை நாம் அறிவோம்.

அட அப்படிப்பட்ட பெறுமதியான காசை யார்தான் விழுங்கி ஏப்பம் விடுவார்கள். சற்று ஆச்சரியம்தானே..நான் இங்கு கூற வருவது காசு விழுங்கி மெசின்களையாகும். அதாவது இன்று பல நாடுகளில் பல சூதாட்ட மையங்களிலும் போக்குவரத்துச் சாதனங்களிலும் (தொடரூந்து, கப்பல்) பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களிலும் இந்தக் காசுவிழுங்கி மெசின்கள் பொருத்தப்பட்டிருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். பொதுமக்கள் அதிகமாகக்கூடும் இடங்களில் இந்த மெசின்கள் பொருத்தப்பட்டு தினம்..தினம்..பல்லாயிரக்கணக்கான காசுகளை விழுங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்த மெசின்களுக்குக் காசைப்போடுவதற்கு அடிமைகளாகி காசைக் கொட்டித் தீர்த்துவிட்டு வெறுங்கையுடன் வீடு செல்பவர்கள் பலர். இதனால் வறுமைக்குத் தள்ளப்பட்டவர்களும், குடும்பப் பிணக்குகள் வந்து உயிரை மாய்ப்பவர்களும், பொருள் பண்டம், சொத்துக்களை விற்று நடுத்தெருவுக்கு வருபவர்களும் பலர் இருக்கிறார்கள். ஆனால் இன்னும் சிலரோ இந்த மெசின்கள் சத்தி எடுத்துக் கொட்டித் தீர்த்த பணங்களால் கோடீஸ்வரர்களாகிவரும் சம்பவங்களும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

பெரிய சூதாட்ட மையங்களை இங்கே "காசினோ" (Casino) என்றும் வேறு பல பெயர்களைச் சொல்லியும் அழைப்பார்கள். இந்த மையங்களில் தேநீர் கோப்பிக் கடைகளும் சிற்றுண்டிக்கடைகளும் உணவுச்சாலைகள், விடுதிகள், இரவு விடுதிகள் என ஒருங்கே அமைந்திருப்பதும் உண்டு. இந்த வியாபார மையங்களால் பலர் தொழில் வாய்ப்பைப் பெற்று வருவதுடன் பல முதலாளிகளும் பெரும் பணக்காரர்களாக மாறிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட கசினோ ஒன்றில்தான் நான் கடந்த பத்து வருடங்களாகக் களஞ்சியச்சாலையில் வேலை செய்துவருகிறேன். இங்கு இந்தப் பத்து வருடங்களில் நான் கண்டவை, அறிந்தவை, உணர்ந்தவை பற்றிய விடையங்களையும் பல தரப்பட்ட நிற, மத, மொழி, நாட்டு மக்களோடும் பழகிய அனுபவங்களையும் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

நான் வேலைசெய்யும் இந்த நிறுவனத்தில் இரண்டு மாடிக்கட்டிடங்களிலும் முந்நூறுக்கு மேற்பட்ட காசுவிழுங்கி மெசின்களும் ஐந்நூறுக்கும் மேற்பட்ட தானியங்கி கமராக்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன. காலை பதினொரு மணிக்குத் திறக்கப்படும் இரவு பன்னிரண்டு ஒரு மணிவரை திறந்திருக்கும். வெள்ளி, சனி நாட்களில் அதிகாலை மூன்று நான்கு மணிவரை திறந்திருக்கும். இந்நாட்களில்தான் காசுபோட்டு விளையாடுபவர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகவும் இருக்கும். பல பிற நகரங்கள், பல அயல் நாடுகளிலிருந்தும் வருகை தந்து காசு மெசின்களில் காசைக் கொட்டி விளையாடுவார்கள்.

ஆண் பெண் பேதமின்றி, பணக்காரர் எழை என்ற பேதமின்றிப் பெரிய...பெரிய முதலாளிமார்கள், பணக்காரர்கள் மட்டுமன்றி இதற்கு அடிமையாகிப் பலர் காசைக் கொட்டித் தீர்த்துவிட்டு வெறுங்கையோடு போக..... இன்னும் சிலர் வெற்றிபெற்று பெருந்தொகையான பணங்களை அள்ளிச் செல்வர். அதிஸ்டமும் முயற்சியும் முதலும் ஒன்று சேரும் போது அவர்களது வாழ்வும் வளமும் மாற்றம் கண்டு விடுகின்றனவே. இந்தக் காசு விழுங்கி மெசின்களோடு உறவாடி மகிழும் நம்மவர் சிலரையும் பல தடவைகள் கண்டிருக்கிறேன். போதைவஸ்த்து, மதுபானம், சிகரட் போன்ற சில கெட்ட பழக்கங்களைப் போல இதற்கும் அடிமையாகி பணத்தையும் இழந்து பிச்சைக்காரர்களாகி குடும்பம், பிள்ளைகளை இழந்து

நடுத்தெருவுக்கு வந்த நம்மவர்களையும் கண்டிருக்கிறேன். இவர்கள் மட்டுமல்ல யப்பான், சீனா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்ற நாட்டவர்களும் இங்கு பெருமளவு பேர் வந்து செல்வதையும் நான் கண்டிருக்கிறேன். அதுவும் காலை பதினொரு மணிக்குத்தான் இந்த நிலையம் திறக்கும் என அறிவித்தல் எழுதப்பட்டிருந்தாலும் அவர்கள் அரை மணித்தியாலம் ஒரு மணித்தியாலம் முந்தி வந்து வாசலில் காவல் நிற்பார்கள். அவ்வளவு ஆவல் காசை மெசின்களுக்குக் கொட்டுவதற்கு என்றுதான் கூறவேண்டும். இந்த அளவுக்கு இந்தக் காசு விழுங்கி மெசின்கள் மனிதரை அடிமையாக்கி ஆட்டிப்படைத்து வருகின்றன.

சூதாட்டம் என்பது பண்டைய அரசர்கள் காலங்களிலும் இருந்திருக்கின்றன. அரசர்கள் பலர் தோற்றுப்போய் தமது மனைவி, பிள்ளைகள், சொத்துக்கள் ,அரச பதவிகளைக்கூடப் பறிகொடுத்து அவலப்பட்டிருக்கிறார்கள். இதை வரலாற்று ரீதியாக நாம் அறிந்திருக்கிறோமல்லவா...எனவே தேவையில்லாத தொழில்களில் ஈடுபடுவதும், காசைக் கரியாக்குவதும், காசை இப்படிப்பட்ட மெசின்களில் கொட்டித் தீர்ப்பதும் வேண்டாத வேலைகளாகும். நன்றாக உழைத்து நன்றாகப் பிறருக்குக் கொடுத்து நன்றாக வாழவேண்டும் என்னும் இலக்கைக் கொண்டிருந்தால் எந்தக் கெடுதல்களும் நம்மை நாடி வராது. நாம் எந்தவித கெட்ட பழக்க வழக்கங்களுக்கும் அடிமையாகக்கூடாது."துஸ்டரைக் கண்டால் தூர விலகு" என்பது போல் நாமும் இப்படிப்பட்ட தீய பழக்கங்களிலிருந்தும் தூர விலக வேண்டும். மனித மனம் ஒரு பொல்லாத குரங்கு...மனதைக் கட்டுப்படுத்தி , மட்டுப்படுத்தி வாழ்வோமானால் வாழ்வில் சந்தோஷம் தான்.......

# 22 - நேயம்

நேயம் என்னும் போது பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல், அதரவு கொடுத்தல், ஒற்றுமையாக வாழ்தல், உறுதுணையாக வாழ்தல் என்றும் கூறலாம். மனித நேயம் இன்று நின்று நிலைப்பதால்தான் இந்த உலகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இருந்தும் பல நாடுகளில் இந்த நேயம் அற்றுப்போகவே உயிரழிவுகள், பொருள் சொத்து அழிவுகள் நிகழ்ந்தவண்ணமே இருக்கின்றன. இன்றைய அவசர உலகில் மனிதன் தன் தேவைகளையும் ஆசைகளையும் ஆடம்பரங்களையும் கூட்டிக்கொண்டதால் நேயம் தேய்ந்து வருவதை நாம் காண்கின்றோம். நாம் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, இன்ப துன்பங்களில் பங்குகொண்டு நேயமுடன் வாழ்வோமானால் அதுதான் சிறந்த வாழ்வாக அமையும். போட்டியும் பொறாமையும், நிற, இன, மத, குல, மொழி போன்ற வேறுபாடுகளையும் களைந்து எல்லோரும் மனிதர்கள் என்ற பண்போடு, நேயத்தோடு விழுமியங்களைப் பேணி வாழ்வதே சிறப்பான அம்சமாகும்.

இங்கு நேயம் பற்றி நான் கண்ட சம்பவத்தை குறிப்பிடுகிறேன். நேயம், அன்பு, ஆதரவு, உதவுதல் என்பன மனிதர்களுக்கு மட்டுமன்றி பிற உயிர்களுக்குக் காட்டுதலும் நேயம்தான். ஒரு நாள் நான் வேலை செய்யும் தாபனத்தில் இரண்டாம் மாடியில் நின்றுகொண்டிருந்தேன். சற்று விலகி யன்னல் வழியே என் பார்வையைச் செலுத்தினேன். அங்கு புறா ஒன்று நிலத்தில் கிடந்து சாவா?..வாழ்வா?..எனப் பறக்க முடியாமல் துடித்துக்கொண்டிருந்தது. அப்போ அவ்வழியால் வந்த ஒரு நடுத்தர வயதுத் தம்பதியினர் நடந்துகொண்ட முறையைப் பார்த்து நான் வியந்தேன்...விழிப்புற்றேன்...

அந்தப் புறாவைத் தூக்கித் தடவி, மேலும் கீழுமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். அது பறக்கமுடியாமல் சிறகை அடித்துப் போராடிக் கொண்டிருந்தது. அப்போது தாம் கொண்டுவந்திருந்த தண்ணீர்ப் போத்தலைத் திறந்து தண்ணீர் பருக்கினர். உற்சாகமடைந்த புறா மீண்டும் சிறகை அடித்துப் பறந்து கீழே விழுந்தது. இதற்கு ஏதோ நோய் என்றும் வைத்தியம் செய்தால் உயிர்தப்பும் என எண்ணிக்கொண்டனர்.

சிறிது நேரத்தின் பின்பு அந்தப் பெண்மணி தன் கைத்தொலைபேசியை எடுத்துக் கதைக்கும் சத்தம் கேட்டது. அந்தப் புறாவை விட்டு விலகாமலே அந்தத் தம்பதிகள் அந்த இடத்திலேயே சுமார் அரை மணிநேரம் காவல் நின்றனர். சிறிது நேரத்தின் பின்பு சிறிய வான் ஒன்று அந்த இடத்தில் வந்து நின்றது. அதிலிருந்து வெள்ளைக்கோட் அணிந்த இருவர் இறங்கி வந்து அந்தத் தம்பதிகளிடம் கதைத்து விடையத்தை அறிந்து கொண்டார்கள். அப்புறாவை மென்மையாகத் தூக்கி ஒரு பெட்டிக்குள் வைத்து தமது வாகனத்தில் ஏற்றியதுடன் அந்தத் தம்பதிகளுக்கு நன்றி தெரிவித்து விடைபெற்றனர்.

நாய், பூனை, புறா, கிளி உயிர் என்றால் என்ன மனித உயிர் என்றால் என்ன?..நேயம் என்றால் எல்லாம் சரிசமன்தானே. ஒரு உயிருக்கு இங்கு எவ்வளவு பாதுகாப்புக் கொடுக்கிறார்கள். ஒரு உயிரைப் பாதுகாக்க எவ்வளவு பணம் செலவழிக்கிறார்கள். உயிரை எப்படி மதிக்கிறார்கள். எல்லா உயிர்களும் நீண்டகாலம் வாழவேண்டும் என எண்ணுகிறார்கள். ஒருவருக்கொருவர் ஏன் பிராணிகள், பறவைகள், மனிதர்கள் யாராயினும் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கக்கூடாது என்பதில் எவ்வளவு அக்கறையாகச் செயற்படுகிறார்கள். நேசிக்கிறார்கள்.

ஆனால் நம் நாட்டிலும்சரி போர், உள்நாட்டுப் போர் நடைபெறும் நாடுகளிலும் சரி, வன்முறைகள், வேறுபாடுகள் நிலவும் நாடுகளிலும் சரி தினம்...தினம் எவ்வளவு உயிர்கள் அழிகின்றன. மனிதர்களுடன் மற்றைய உயிரினங்களும் கணக்கில்லாமல் அழிகின்னறன. நேயத்தைப்பற்றியோ அன்பு, ஆதரவு, உறவுகள் பற்றியோ சிந்திக்கிறார்களா?..வன்முறைக் கலாச்சாரத்தில் மூழ்கி, சாதி மத, நிற, மொழி பேதங்களில் நனைந்து, ஆதிக்கம், அரசியல், அடிமை எனத் தினமும் மனிதனும் நேயமும் அழிந்து வருவதை நாம் நேரடியாகக் கண்டுவருகிறோம்.

நம்நாட்டில் நடந்த, நடந்துமுடிந்த போரால் எத்னை ஆயிரம் பிஞ்சுகள் அழிந்தன. எத்தனையோ நாடுகளும் நேயம் விரும்பிகளும் பார்த்துக்கொண்டிருந்தனர். எத்தனை நாடுகளின் உதவிகளால் எத்தனை ஆயிரம் உயிர்கள் மாண்டு போயின. இத்தனை இழப்புக்கள்

முடிந்தும் நம் பிறந்த தேசத்தில் இன்றும் வன்முறைகளும் உயிர்ப் பறிப்புகளும், கற்பழிப்புக்களும் படுகொலைகளும் வழிப்பறிப்புகளும் அரசியல் பழிவாங்கல்களும் இன்னோரன்ன வேறுபாடுகளும் அழிந்தனவா?..ஒழிந்தனவா? மனித நேயம் அழிந்து வருவதுடன் மானிட வாழ்வே கேள்விக்குறியாக்கப்பட்டு வருவது நிஜமான விடையமாகும்.

முன்னைய காலத்தில் புறாவின் பசியைத் தீர்க்க சிபிச்சக்கரவர்த்தி என்ற அரசன் கால்த்தொடையின் தசையை வெட்டிக் கொடுத்தான் எனப் படித்திருக்கிறோம். உண்மையோ..பொய்யோ.. எதுவாக இருந்தாலும் ஒரு மனிதன் பிற உயிர்களை எப்படி நேசித்தான் என்ற அரிய நேயத்தை அறிந்துகொண்டோமல்லவா. ஆகவே நாமும் பிறர் மனங்கள் புண்படாமல், மனிதனுக்கு மனிதன் உதவியாக, ஏனைய உயிரினங்களின் பாதுகாவலர்களாக, இல்லாதவர்களுக்கு கொடும்கும் மனிதர்களாக நேயத்துடன் வாழவேண்டும். நம் மனங்களின் எண்ணங்களை விரிவுபடுத்தி, தெளிவுபடுத்தி, உலக இயக்கத்தைப் புரிந்துகொண்டு வாழவேண்டும். எல்லோரும் மனிதர்கள், எல்லா உயிர்களும் அற்புதமாகவே படைக்கப்பட்டன என்ற உண்மையைப் பேணி நேயமுள்ள மனிதர்களாக வாழ்வோமாக!....

# 23 - கரிபடிந்த கல் மனங்கள்

மனித மனங்கள் குரங்கு என்ற விலங்கினத்தின் மனத்தோடு ஒப்பிடுவார்கள். ஒவ்வொரு மனிதனுடைய மனமும் பிறக்கும்போது வெள்ளை மனம்தான் பின்பு அவனை வளர்க்கும் பெற்றோர், குடும்பச்சூழல், சமூகச்சூழல், பொருளாதாரம் போன்ற காரணிகள் அவனின் மனதை மாற்றிவிடுகின்றது. இச்சூழல்களால்தான் மனிதன் நல்லவனாகவும் கெட்டவனாகவும் உருவாகின்றான். குரங்கு இனமானது கொப்புகள் எல்லாம் தாவிப்பாய்ந்து தனது பசியைத் தீர்த்துக்கொள்கின்றது.

இதேபோல்தான் பல மனிதர்களின் மனங்களும் கண்ட கண்ட இடங்களெல்லாம் தாவிப் பாய்ந்து தமது ஆசைகளையும் தேவைககளையும் நிறைவு செய்துவிடுகிறார்கள். குறிப்பாகப் பெண்களின் மனதை இப்படியும் கூறுவார்கள்."ஆழ் கடலின் ஆழத்தை அறிந்துவிடலாம் ஆனால் ஒரு பெண்ணின் மன ஆழத்தை அறியமுடியாது" என்று. இன்னொன்று "பெண் மனது வைத்தால் முடியாத காரியங்கள் எதையும் செய்து முடிப்பாள்" இது நம்மவர்களின் கண்டுபிடிப்பல்ல. அனுபவரீதியாக அறிந்துகொள்ளப்பட்டதாகும்.

மனிதப் பிறப்பில் குருடு, செவிடு, ஊமை, நொண்டி என்றெல்லாம் வலது குறைந்தோரை குறைத்து மதிப்பிட்டே அழைப்பார்கள் நம்மவர்கள். இன்னும் சிலர் உடல் ஊனமுற்றோர், மாற்றுத்திறனாளிகள் என்றெல்லாம் அன்போடு, ஆதரவோடு, பண்போடும் அழைப்பார்கள். ஆண்டவன் படைப்பிலே இப்பிறப்பு எல்லாம் இயல்பாக இருப்பினும் இவர்களைச் சமூகத்தில் கையாளும் விதம்தான் கவலையளிக்கும் விடையமாகும். வளர்ந்த நாடுகளில் பாராபட்சம் காட்டாமல் வாழ்வார்கள். ஆனால் இலங்கை இந்தியா போன்ற கீழத்தேச நாடுகளிலும் வறிய நாடுகளிலும் நிலமை வேறாகவே இருந்து வருகின்றது. இந்த மாற்றுத் திறனாளிகளின் வாழ்வோ இந்த நாடுகளில் கேள்விக்குறியாக்கப்பட்டிருப்பதுடன், அவர்களை ஒதுக்கி, பின்தள்ளி வைத்து வேடிக்கை பார்ப்பவர்கள்தான் அதிகம்பேர். இது அறியாமையின் வெளிப்பாடு என்றுதான் கூறவேண்டும். வெளிநாட்டில் வசிக்கும் எனது உறவுக்காரர் ஒருவருக்கு நான்கு பிள்ளைகள். வளர்ந்த பிள்ளைகள்.

மூத்த பெண்பிள்ளையை விசாப்பிரச்சனையால் வெளிநாட்டுக்கு அழைக்க முடியாமல் போய்விட்டது. இந்தப்பிள்ளையை வெளிநாட்டுக்கு அழைக்க எத்தனையே முயற்சிகள் மேற்கொண்டும் முடியாமல் போய்விட்டது. இந்தப் பிள்ளைக்குக் காது கேட்பதும் குறைவாக இருந்தது. ஆனால் அழகான இளம்பெண். எங்களுடைய தமிழில் செவிடி, செவிடு என்று ஏளனமாக அழைத்து இப்படிப்பட்டவர்களை ஏளனப்படுத்துவோரும் உண்டுதானே. ஆண்டுகள் உருள, கலியாண வயதும் ஏற்றம் கண்டது. வெளிநாட்டில் ஒரு ஆடவரைக் கண்டுபிடித்துப் பேசிச் சீதனம் கொடுத்து இந்தியாவில் கலியாணம் முடிந்தது. பதினைந்துநாள் இல்லற வாழ்வில் அந்த ஆடவன் செவிடு என்று சொல்லிவிட்டு அந்தப் பெண்ணை விட்டுவிட்டு வெளிநாட்டிற்குப் பறந்துவிட்டான். மண முறிவும் ஏற்பட்டுப் பெண் விரக்தியுடன் நாட்டுக்குத் திரும்பினாள்.

இன்னும் சில வருடங்கள் ஓடியன. பேற்றோர் அவளை வெளிநாட்டுக்குக்கூப்பிடப் பெருந்தொகைப் பணத்தைச் செலவழித்தும் அந்தப்பிள்ளையை அழைக்க முடியாமல் போய்விட்டது. மீண்டும் இன்னொரு கலியாணம். சீதனம் பெருந்தொகை கொடுத்து ஊரில் நடைபெற்றது. சீதனம் வேண்டிக்குவித்த படுபாவி அந்தப் பிள்ளையுடன் ஒன்றாய்ப் பேசிப்பழகி உறவாடிவிட்டு சிறிது நாட்களால் அவளின் சீதனக்காசில் இன்னொரு கலியாணம் செய்துவிட்டு அரபு நாடு ஒன்றுக்குப் பறந்துவிட்டான்.

இந்தப் பெற்றோர் என்ன செய்வார்கள். இந்தப் பிள்ளைதான் என்ன செய்வார்கள். ஏமாற்றிப் பிழைத்து மற்றவர்களின் வாழ்வைச் சீரழிக்கும் இவர்களைப்போல் எத்தனைபேர் இன்றும் நம்மவர்கள் மத்தியில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இவளைப்போல் அழகான நல்ல மனம் படைத்த தேவதைகளின் வாழ்க்கை அவலம்தான். விரக்தியின் விளிம்பில் மனமுடைந்த அவள் வெளிநாட்டுக்கும் தன் பெற்றோரிடம் செல்லமுடியாத நிலை. ஊரிலும் திருமணம் செய்து வாழமுடியாது. தனிமை வாழ்வும் கசந்தது. அவளின் பாதுகாவலர்களாக இருந்த வயதான ஒரு கணவன்-மனைவியுடன் வாழ்ந்துகொண்டிருந்தாள். மனவேதனையில் விரக்தியின் எல்லைக்குச் சென்ற அந்த வெள்ளைப்புறா தற்கொலைக்கே முடிவெடுத்தாள். வீட்டில் யாரும்

இல்லாத நேரம் பார்த்து கயிற்றில் தொங்கித் தன்னுயிரை மாய்த்துக்கொண்டாள் என்ற செய்தி என் மனதையும் வாட்டி வதைத்தது. மனிதருக்கு உடல் ஊனம் என்பது ஒரு குறைபாடா?.. காது கேளாதவர், கண்தெரியாதவர், நடக்கமுடியாதவர் எவரும் இந்தப் பூமியில் சாதனைகள் செய்யவில்லையா?.. உடலில் எல்லாம் இருந்தும் சாதனை செய்யாதவர்கள் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளின் சாதனைகளை எண்ணிப்பார்க்கவேண்டும்.

இதைவிட்டுப் பணத்திற்கும், பட்டாடைக்கும், பகட்டு வாழ்வுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பலர் இன்றும் நம் சமூகத்தில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இந்த விடையத்தை இன்றைய சமூகம் யோசிக்கின்றதா?..நமது பெற்றோர்களில் குறிப்பாகச் சீதனம் கேட்பதும், குற்றம் குறை காண்பதிலும் முன்னணி வகிப்பவர்கள் பெண்களே. இது நியாயமா?..நேயமா?.. உங்கள் சந்ததிகளும் நாளைக்கு விபத்திலோ அல்லது இயற்கையாகவோ உடல் ஊனமுற்றால் உங்கள் மனம் எவ்வளவு வேதனைப்படும்.

உடல் ஊனம் என்பது உண்மையிலேயே ஒருபோதும் குறைபாடில்லை. அவர்களிடமும் அபார திறமைகளும் சக்தியும் அறிவும் ஆற்றலும் உண்டு என்பது நிரூபணமாகியிருக்கின்றன. வெளிநாடுகளைப் பாருங்கள் எத்தனை ஆயிரம் உடல் ஊனமுள்ளவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் அவர்களும் சரிசமமான பிரஜைகளாக வாழ்கிறார்கள். இவ்வளவு கால மாற்றம் நிகழ்ந்துவிட்டாலும், விஞ்ஞானம், கணனி, தொழில் நுட்பங்கள் வளர்ச்சி கண்டிருப்பினும் நம்மவர்களைப் பொறுத்த அளவில் நம் நாட்டில் இப்படியாகப் பாதிக்கப்பட்வர்களின் மறவாழ்வு என்பது அவலவாழ்வாகத்தான் காணப்படுகின்றது. ஆகவே நீண்டகாலமாகக் கரிபடிந்த நமது மனங்களைத் தீட்டவேண்டும். நமது பற்களிலும் நமது உடலிலும் உள்ள கரிகளையும் அழுக்குகளையும் அகற்றுவது போல் நமது மனங்களின் கரிகளை அகற்றுவோம். இயலாதவர் வாழ்வுக்கும் உதவுவோம்!...ஒளியேற்றுவோம்!..

# 24 - ஆதங்கம்

ஆதங்கம் என்னும்போது ஏக்கம், இயலாமை, முடியாமை, ஆசைகள்,தவிப்பு என்றும்கூறலாம். ஒருசிலருடைய ஆதங்கம் குறுகியகாலத்தில் நிறைவேறிடும். ஆனால் பலரின் வாழ்வில் ஆதங்கமானது நீண்டகாலமாக மனதில் இருந்து கொண்டே இருக்கும். அன்பாக, காதலுக்காக ஆதங்கப்படும் மனங்கள் அவை கிடைத்து விட்டால் சந்தோசம்படும். மனிததேவைகள் ஆசைகள், விருப்புகள் இன்றைய உலகில் அதிகரித்துகொண்டே செல்கையில் மனித மனங்களின் ஆதங்கமும் பெருகிக்கொண்டே போகின்றது. மனிதனுக்கு மண் ஆசை பொன்ஆசை, பெண்ஆசை என இவை மூன்றும் இருக்கும் வரை எப்போதும் மனம் ஆதங்கப்பட்டுக் கொண்டே இருக்கும். ஒவ்வொருமனிதரும் வாழும சமூகச்சூழல், நாகரீகச்சூழல், பொருளாதாரச்சூழல் போன்றவற்றினால் ஆதங்கம் என்பது மனிதரிடையே வேறுபட்டே காணப்படுகின்றது.

புலம்பெயர் சூழலில் இருபத்தைந்து வருடங்களுக்கு மேல் வாழ்பவர்கள் நம்மவர்கள் தொண்ணூறு வீதத்திற்கும் அதிகமானவர்கள் என நினைக்கிறேன். இந்தக் கால்நூற்றாண்டுகாலத்தில் பலதரப்பட்ட நம்மவர்களின் ஆதங்கத்தை அதாவது நிறைவேறாத ஆசைகளையும் அவர்களின் தவிப்புக்களையும், மனக்கிலேசங்களையும் கண்டிருக்கிறேன். அவர்களிடமிருந்து கற்ற ஆதங்கங்களையும் இயலாமைகளையும் மனஏக்கங்களையும் இங்கே குறிப்பிடுகிறேன். இவற்றில் பல உங்களுக்கும் பொருந்தலாம் என எண்ணுகிறேன்.

ஒருவர் தான் இலங்கையில் படித்த படிப்பு செய்த அரசஉத்தியோகத்துக்கு இங்குவேலை கிடைக்கவில்லை என்ற ஆதங்கம். அங்கே ஆங்கில மொழியைப் படித்துவேலை செய்தும் ஜேர்மனி நாட்டில் அந்த ஆங்கிலம் உதவாததால் ஆதங்கம். இன்னுமொருவர் நாட்டில் நல்லாகப் படிக்காவிட்டாலும் இங்குவந்து கொழுத்த சம்பளத்தில் வேலை செய்ய... படித்த தமிழருக்கு என்னை விட நிறையப் படிக்காதவன் இங்குவந்து என்னைவிடக் கூடுதல் சம்பளம் பெறுகிறானே என்ற மனஆதங்கம் .இன்னொருவர் தான் யாழ்ப்பாணத்தில் உயர் குடியில் பிறந்தவர் என்றும் இங்கு வந்து

எல்லாத் தமிழர்களுடனும் சமமாக கழுவுதல் துடைத்தல் போன்றவேலை செய்யவேண்டுமே என்ற ஆதங்கம்.

இன்னொருவர் இங்கு 20-25 வருடங்கள் வாழ்ந்தும் இந்தநாட்டு மொழியைச் சரியாக எழுத முடியவில்லை,பேசமுடியவில்லை, என்றமன ஆதங்கம். ஒருபெண்மனி கூறினார் எனது வருத்தங்களைச் டாக்டரிடம் சரிவர கூறமுடியவில்லை பேசுவதற்கு இந்தமொழிபெரிய இடர்பாடாய் இருக்கிறதே எனஆதங்கம் இன்னொருபெற்றோர் தமது பிள்ளைகளுக்குக் கல்லூரி அதாவது முதல்தரப்பாடசாலை கிடைக்கவில்லேயே என்ற ஆதங்கம். அத்துடன் சிலபெற்றோருக்கு நமதுபிள்ளைகளுக்கு நல்ல பல்கலைக்கழகம் கிடைக்கவில்லை என்றும் பின் நல்ல அரசாங்க உத்தியோகம் டொக்டர் ,எஞ்சினியர், வழக்கறிஞர் கிடைக்கவில்லையே எனஆதங்கம்.

ஒருநாள் ஒருவீட்டில் தாய் ஒருவர் பிள்ளைகளுக்குக்கூறிய அறிவுரையைப் பாருங்கள். மகளேகுறைந்த சாதி தமிழ்ப் பெடியனைக் கலியாணம் செய்து போடாதே. நாங்கள் எங்கட சாதியிலைபேசிச்செய்வம் இல்லை என்றால் வெள்ளைக்காரரைசெய். ஆனால் குறந்த சாதி தமிழ்ப் பெடியனை மட்டும் செய்துபோடாதே, இதுவும் ஒருதாயின் ஆதங்கம்தான். இப்படியாகச் சாதி, மதம், நிறம், குறிப்பு, பிரதேசம், ஊர் எல்லாம் பார்த்து, மணம் செய்து பின்பு மண முறிவு டைவேஸ் வரை எட்டி விட பிறகு என்ன செய்யலாம் என ஆதங்கப்படும் மனங்கள் இந்தப் புலம்பெயர் தேசங்களில் ஆயிரம்!...ஆயிரம்!....

இன்று புதிதாகச் சிலதமிழர்குடும்பங்கள் மதம்மாறி வாழ்வதற்கு ஆதங்கப்படுகிறார்கள். அற்ப சொற்ப சலுகைகளுக்காகச் சில மதங்களில் ஆசை வைத்து ஆதங்கத்துடன் அலைந்து திரிவதையும் காண்கிறோம். இன்னும்பலர் பணத்தைப் பெருக்கி, ஆடம்பரவீடு, ஆடம்பரக்கார், ஆடம்பரச் சொத்துக்களைக் குவித்து இன்பம் காணபெரும் ஆதங்கம் கொண்டுள்ளனர். ஐந்து ஆறு பிள்ளைகள் பெற்றுவெலை செய்யாமல் அரச உதவிப்பணத்தில் ஓகோ என்று வாழ்பவனைப் பார்த்து ஒருபிள்ளை பெற்றகுடும்பத்தின் ஆதங்கமும் உண்டுதான்.

இளசுகளைப் பொறுத்த அளவில் பல்கலைகழகம போகமுடியவில்லையே என்றும் நல்லவேலை கிடைக்கவில்லை என்றும் நல்லவடிவான கணவன் அல்லது மனைவி கிடைக்கவில்லையே என்றும் ஆதங்கம். இன்னும் பல இளசுகள் உண்டு கொழுத்ததால் தமது உடல்நிறையைக் குறைக்க முடியவில்லையே என ஆதங்கம். சிலர் தாம் நிறை குறைவாகப் பிறந்துவிட்டேனே என்றும் கோபப்படுவர்களும் கலர் குறைவாகப் பிறந்துவிட்டேனே ஆதங்கப்படுபவர்களும் உண்டு.

பொதுவாக மனிதனுக்கு ஆசைகள் விருப்புகள் அதிகரிக்க, அதிகரிக்க இந்த ஆதங்கப்படும் மனநிலையும் அதிகரிக்கின்றது இன்று புலத்திலும்சரி,தாய்நிலத்திலும்சரி பல ஆயிரக்கணக்கான ஏக்கங்களுடன் ஆதங்கப்பட்டு அலைந்து திரியும் பலஆயிரம்பேரில் நானும் ஒருவன்தான். எங்கள் வாழ்வியல் பின்னணியும், சமூகப்பழக்கங்களும், அறியாமைகளும் நாம் இப்படி ஆதங்கப்பட்டு வாழ்வதற்கு முக்கிய காரணிகளாகும். நம்மனத்திலுள்ள ஆசைகளைக் குறைத்துக் கொள்வோமானால் ஆதங்கப்படும் மனவேதனகளும் குறைவடையும். இதனால் நம்வாழ்வு சிறப்பதற்கும் வழியுண்டு என்பதைப் புரிந்துகொள்வோமாக!!

# 25 - பணம்!... பணம்!...

இன்றைய உலகம் பணத்தால் தான் உருள்கின்றது,புரள்கின்றது. ஏன் இயங்குகின்றது என்று கூறலாம். அந்த அளவுக்குப் பணப்புழக்கம் உலகில் கடுகதி வேகத்தில் அதிகரித்திருப்பதால் மனிதன் பணத்தை நோக்கிய ஓட்டத்தில் ஓடிக்கொண்டே இருக்கிறான். முன்னைய காலங்களில் அதாவது பணம் புழக்கத்திற்கு முன்னைய காலங்களில் பொருள், பண்டம், ஆடு ,மாடு,குதிரை, பன்றி போன்ற மிருகங்கள் ஒருவருக்கிடையே விற்றல் வேண்டல் நிகழ்வுகள் இடம் பெற்றிருக்கின்றன. ஏன் அழகான பெண்களைக் கூட விற்பனை செய்யும் முறைகள் முன்னைய காலங்களில் இடம் பெற்றமை வரலாறாகும்.

மனித அறிவு நாகரீகம்,விஞ்ஞான கண்டுபிடிப்புகள் வளர்ச்சியின் படியில் பணப்புழக்கம் அறிமுகமாகியதன் பின்பு பணமே ஆதிக்கம் செலுத்தியது. இதன் வளர்ச்சிப் போக்கில் இன்று உலகமே பணப்புழக்கத்தால் கட்டுண்டு கிடப்பதை நாம் காண்கின்றோம். குறிப்பாக தமிழர் வாழ்வியலில் பணப்புழக்கமானது இன்று அதி வேகமாக அதிகரித்திருப்பதை நாம் காண்கின்றோம்.எதை எடுத்தாலும் பணம், எதிலும் பணம், எப்பவும் பணம் என்னும் மனோநிலையே மேலோங்கி இருப்பதை நாம் காண்கிறோம்.

"பணம் இல்லாதவன் பிணம்" "பணம் இருந்தால் எதுவும் செய்யலாம்"."பணம் பந்தியிலே குணம் குப்பையிலே" என்று எல்லாம் நம்மவர் பழமொழிகள் இருக்கின்றதல்லவா. இன்றைய உலகில் பணம் இருந்துவிட்டல் எந்தக் கடினமான காரியத்தையும் செய்து விடலாம் என்னும் நிலை காணப்படுகின்றது.எவ்வளவு உயர்ந்த கல்வி, தொழில், நல் ஒழுக்கம் இருந்தாலும் பணம் ஒன்று இல்லாவிடில் அவர் தூசாக மதிக்கப்படுவது இயல்பாகிவிட்டது.ஆனல் கல்வி, அறிவு, நற்குணம் இல்லாதவனிடம் பணம் அதிகமாக இருந்துவிட்டால் இந்த உலகம் அவரை மதிக்கின்றது. இதுதான் தற்போதைய நிலைமையாகிவிட்டதே!..

நான் சிறுவனாக இருந்த காலத்தில் பணத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்காத நம் சமூகம் இன்று பணம் என்றால் வாய்பிழக்கும் அவாவில் வளர்ந்துவிட்டது.மனித நேயத்துடன் நல்ல கருமம் ஆற்றும் நல்ல மனிதர்களைவிட கொள்ளையடித்து பணக்காரராகிய அறிவிலிகளுக்கு நம் சமூகம் பெரிய முக்கியத்துவம் கொடுப்பதை நாம் அன்றாட வாழ்வில் காண்கின்றோம்.

நிலத்திலும் புலத்திலும் நம்மவர்களின் வாழ்வில் பணத்தால் பல மாற்றங்கள் நிகழ்ந்து இருப்பது உண்மையே.ஆனால் பணம் என்னும் பேயால் சகோதரர்கள்,கணவன், மனைவி, உறவுகள், நண்பர்கள், பெறோரிடம் பல பிரச்சனைகளும்,கொத்து வெட்டுகளும்,கொலைகளும் நிகழ்ந்திருப்பதை காண்கின்றோம், ஏன் நிஜத்திலும் இடம் பெற்றுவரும் சம்பவங்கள் ஆயிரம்...ஆயிரம்....

நமது நல்வாழ்வுக்குப் பணம் தேவை தான் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். உழைத்துப் பணத்தை சம்பாதித்து முன்னேறவேண்டும். ஆனால் நம்மில் சிலர் சொகுசு வாழ்வு வாழ்வதற்கு மற்றவர்களை சுரண்டி,கொள்ளையடித்து, ஏமாற்றி, வஞ்சகம் செய்து, அபகரித்து வாழும் நிலைக்கு வந்துவிட்டார்கள் என்பது வேதனை தரும் விடையமே.ஏன் தாய்-தந்தை,சகோதரங்கள்,உறவுகளைக்கூட பகல் கொள்ளையடித்து தாம் உல்லாச வாழ்வு வாழ்வதை இங்கே சுட்டிக்காட்டியே ஆகவேண்டும்.

காசு பணம் வாழ்வுக்குத் தேவைதான் ஆனால் வாழ்வே பணம் என மாறக்கூடாது.எமது வருமானதிற்கு ஏற்ப செலவு செய்து சிக்கனமாக வாழவேண்டும். தமது உழைப்பில் சில வீதத்தை இல்லாதவர்களுக்கு கொடுத்து வாழலாம் அல்லவா. ஆனால் இன்றைய போக்கில் பலர் காசு,வருமானம் இல்லாவிடினும் கடன்பட்டு,பிறரை வருத்தி,பிறர்பணத்தை அபகரித்து தாம் நவநாகரீக உல்லாசபுரியில் வாழ்கிறார்கள்.

இந்த வாழ்வு நிலைக்காது. சில காலம் ஆகா...ஓகோ என வாழலாம், ஆனால் அமைதியான நிம்மதியான, பிறர்போற்றும் வாழ்வு கிடைக்குமா?...இதைவிட '"அர்ப்பனுக்கு மவுசு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்" என்று கூறுவார்கள் அல்லவா. சிலருக்குப் பணம் கிடைத்து விட்டால் அவர்கள் குணமே மாறிவிடும். அவர்களின் நடவடிக்கைகளே மாற்றங்கண்டுவிடும்.

ஆகவே பணத்தை உழைத்துச்சேமிக்க வேண்டும். சேமித்த பணத்தில் ஒரு பகுதியை பிறருக்குக் கொடுத்து உண்ணுதல் வேண்டும். நாம் செய்யும் உதவிகளால் ஏழைகளின் வயிறு நிறையவேண்டும். கல்விக்காக ஏங்கும் இதயங்களின் கண்கள் திறக்க உதவ வேண்டும். துண்டு துணி இல்லாதவர்கள் உண்டு களிக்க வேண்டும். பணத்தை பதுக்கி வாழாமல் பிறருக்கு கொடுத்து வாழ்ந்தாலே அப்பணம் எமக்கு நின்று நிலைக்கும். ஒரு வேளை கஞ்சிக்கு அல்லல்படும் உறவுகளின் மனங்கள் குளிர்ந்துவிடப் பணத்தை நல்ல வழியில் பயன்படுத்துவோம்!.

## 26 - டாக்டர்!... டாக்டர்!...

நமது சமூகத்தில் ஒரு டாக்டர் என்றால் அவருக்குத் தனிக் கௌரவம், பெருமை, புகழ்தான். உண்மையிலே டாக்டர் தொழில் என்பது கடவுளுக்கு அடுத்தபடியான தொழில் என்று கூறுவார்கள். நம்மைப்படைத்த கடவுளைப்போல் நாம் டாக்டர்களையும் வழிபடுவது இயல்பாகும். டாக்டர் தொழில் என்பது எவ்வளவு புனிதமானது. உயிர் காக்கும் மனிதக் கடவுள் என்றும் கூறுவார்கள் நம்மவர்கள்.

நமது சமூகத்தில் ஒரு சின்னஞ்சிறு பிள்ளையிடம் நீ படித்து எதிர்காலத்தில் என்னவாய் வர விருப்பம் என ஒரு கேள்வியை தொடுத்தால், உடனே அந்தப் பிள்ளை டாக்டராகத்தான் வர விருப்பம் எனப் பதில் கூறும். இன்னும் சில பிள்ளைகள் எஞ்சினியர், லோயர், என்று பதில் கூறுவார்கள். இந்தப்பதில் எங்கிருந்து வருகின்றது. நமது சமூகத்தில் டாக்டர்,எஞ்சினியர், லோயர், எக்கவுண்டன் என்றால் பெருமதிப்பு மட்டுமல்ல,கௌரவம், புகழ் என்று சந்ததி சந்ததியாக நாம் பழக்கப்பட்டு விட்டோம். இத்தொழில்களுக்குத்தான் நல்ல வருமானம் ஒரு புறம் சமூகத்தில் ஒரு அந்தஸ்தையும் தேடிக் கொள்ள விரும்புகிறோம்....

டாக்டர் போன்ற பட்டப்படிப்புகளை படிக்க நாம் நம்பிள்ளைகளுக்கு எவ்வளவு அழுத்தங்களையும் சுமைகளையும் திணிக்கின்றோம். நம்மவர்களிடையே ஒரு புள்ளிவிபரத்தை எடுத்தால் முக்கால்வாசிப்பேர் தகுதியும் சுயவிருப்பமும் கொண்டு இத் தொழிலுக்குப் படிப்பதும் இல்லை. இத் தொழிலுக்கு வருவதுமில்லை. பெற்றோர் உறவுகளின் நெருக்கடி,அழுத்தங்களாலே இத்தொழிலுக்கு வந்து பின்னர் தம்மை மாற்றி அதாவது மனநிலையை மாற்றி தாமும் பணவருவாயையும், சமூக அந்தஸ்த்து மரியாதைகளை உயர்த்திக் கொள்கிறார்கள் என்பது உண்மையான விடையமாகும்.

ஆனால் எல்லாரும் டாக்டராக வந்து நல்லாய் உழைக்க வேண்டும் என்னும் நோக்கில் பலர் இருக்க ஒரு சிலர் ஏழைகளுக்கு, இயலாதவர்களுக்கு, நோயாளிகளுக்கு உதவ வேண்டும் என்னும் நோக்குடன் இத்தொழிலைப்படித்துப் ,பட்டம் பெற்று, தொழில்புரிவோர் உண்மையில் கடவுள் தான்: இவர்கள் போற்றப்படவேண்டியவர்களே.

நம்மவர்கள் டாக்டர் தொழிலை விரும்பிப் படிப்பதற்கு பொருளாதாரம், சமூக அந்தஸ்த்து, புகழ், பெயர் என்பன முதன்மை வகிக்கின்றன. காலாதிகாலம் இவற்றில் கட்டுண்டு எமது சமூகம் கிடக்கின்றது. மனநிலை இப்படியாக வளர்ந்துவிட்டது. இவற்றைவிட நம்மவர்களின் சீதனக் கொடுமையும் இத்தொழிலோடு பின்னிப்பிணைந்திருப்பதால் நமது சமூகத்தில் இத் தொழிலுக்கு பெரும் மகிமை இருந்துவருவதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.

ஒரு நாட்டில் ஒரு டாக்டரை உருவாக்க அந்த நாடு எவ்வளவு பணத்தை கொட்டிச் செலவழிகின்றது. மக்கள் ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழவேண்டும் என்னும் நல் நோக்கத்திற்காக ஒவ்வோரு அரசும் இத்தொழிலுக்கு அதி முக்கியத்துவம் கொடுத்து வருவது நல்ல விடயமாகும். ஆனால் பல டாக்டர்கள் அரசு பணத்தில் இலவசமாகப் படித்து பட்டம் பெற்றுக்கொண்டு அதிக வருவாய் தேடி பிறநாடுகளுக்கு ஒடிவிடுகிறார்கள்.

உதாரணத்திற்கு நமது நாட்டு தமிழ் டாக்டர்களை நோக்கினால் நமது நாட்டுப் பல்கலைகழகங்களில் படித்துப் பட்டம் பெற்று டாக்டராகியவர்களில் சுமார் 4000-5000 வரையிலான டாக்டர்கள் இங்கிலாந்தில் குடிகொண்டு விட்டனர். இத் தொகையினரில் அநேகமானோர் இன்று இங்கிலாந்தில் பெரும் பணக்காரர்களாகிவிட்டார்கள். இதைவிட கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற ஆங்கில நாடுகளிலும் நம் மொழி டாக்டர்கள் பெருந்தொகையினர் குடியேறி வாழ்ந்து வருகின்றார்கள்.

இலங்கை நாட்டுப் பணத்தில் படித்துப்பட்டம் எடுத்து விட்டுப் பிறநாடுகளில் இத் தொழிலை செய்கின்றார்கள்.இவர்களால் நம் நாடு, நம் இனம் கண்ட பலன் என்ன என்ற கேள்வி எழுகின்றது. போர்க்காலங்களில் அல்லது போர்முடிந்து இவ்வளவு காலங்களில் வெளிநாடுகளில் வசிக்கும் எத்தனை டாக்டரகள் நம் தாய் நாடு திரும்பி சொற்ப காலங்களாவது இத்தொழிலைச் செய்து நம் சமூகத்தின் துயர் போக்கினார்களா?. ஒரு சில வைத்தியர்கள் தாயகம் சென்று உதவிவருவது போற்றுதலுக்குரியதே. ஆனால்

சுயநலம் மிக்க நமது சமூகத்தில் உதித்த பல்லாயிரம் டாக்டர்கள் இவ்விடையத்தை ஒரு தடவை சிந்தித்துச் செயற்பட்டால் நல்லது என நான் நம்புகிறேன்.

ஆம் டாக்டர் தொழிலானது புனிதமானது மறுபிறவியெடுக்க உதவும் தெய்வங்கள். கடவுளுக்கு அடுத்தபடியில் வைத்துப் போற்றப்படுபவர்கள்.இப்படிப்பட்ட மனித தெய்வங்களின் மனங்களின் மாற்றங்களால் நம் சமூகம் பயன்படவேண்டும். மனித நேயமும் மனித உயிர்காக்கும் நேயமும் வளர்ந்து உயர்ச்சிபெற்றால் தான் நம் சமூகம் நல்லதோர் ஆரோக்கிய சமூகமாக வாழமுடியும் என்பது என் கருத்தாகின்றது!..

## 27 - என்ன?... சாதி?...

"சாதி இரண்டொளிய வேறில்லை சாற்றுங்கால் நீதி வழுவா நெறிமுறையில் மேதினியில் இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர் பட்டாங்கிலுள்ளபடி" என்று ஔவையார் எடுத்துரைத்தார். அதாவது ஆணும் பெண்ணும் தான் உலகத்தில் சாதி வேறு ஒன்றும் கிடையாது என அவர் மனிதர்களுக்கு இடித்துச் சொன்னார். அதாவது இல்லாதோருக்குக் கொடுத்து வாழ்பவன் உயர்ந்தவன் என்றும் கொடுத்து வாழாதவன் தாழ்ந்தவன் என்றும் எடுத்துரைத்தார். இப்படி சாதிகள் எதுவும் இல்லை என்றும் மனித குலம் எல்லாம் ஒரே சாதியென்று பல அறிஞர்கள் நன்றாகவே கூறியிருகிறார்கள். எழுதியிருக்கிறார்கள்.

ஆனால் மனிதன் தான் வாழ்ந்த பௌதீகச் சூழல், பொருளாதார வளங்கள்,நிறம்,குணம், நாடு, மதம், பிரதேசம் எனப்பிரிவுப்பட்டு தானகவே ஆக்கிக்கொண்டது தான் இந்தச் சாதி, சமயவேறுபாடுகளாகும். பொருளாதார வருவாயைப் பெருக்கித்தான் சுக போக வாழ்வை மேம்படுத்துவதற்காக மனிதன் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டதுடன் பாகுபாடுகளையும்,வேற்றுமைகளையும் காலூன்ற வைத்து அவை இன்றுவரை கோலோச்சிக்கொண்டுதான் இருக்கின்றன.

இந்தச் சாதியப்பாகுபாடுகளை பாராட்டி வளர்ந்துவிடுவதில் உலகில் இந்தியாதான் முதலிடம் வகிக்கின்றது. பல்லாயிரம் கோவில்கள் இருந்தாலும் பல்லாயிரம் சாதிய சமய பிரிவினைகளும் அங்கு இருப்பதுமட்டுமல்லாமல் இன்றும் சாதியத்தின் பெயரால் படுகொலைகள், கற்பழிப்புகள்,நில அபகரிப்புகள்,சுரண்டல்கள் போன்ற பல வேறுபாடுகள் நிறையவே இந்தியாவில் காணப்படுகின்றன. றொக்கட்விட்டு உலகை வியக்கவைக்கும் இந்தியாவில் சாதியக் கொடுமைகளும் வன்முறைகளும் கொடிகட்டித்தான் பறக்கின்றன.

ஏன் நம் தாய் நாட்டிலும் இன்றும் இத்தனை அழிவுகளுக்குப் பின்புமே சாதியக் கொடுமைகள் மறைந்ததா?.... இல்லவே இல்லை.

தற்போது மீண்டும் தலைதூக்கி இருப்பதாக அண்மையில் இடம் பெற்ற பல சம்பவங்கள் எடுத்துரைக்கின்றன.இந்த சாதிய வேறு பாடுகள் தமிழனுக்கு இரத்தத்தோடு கலந்தது என்று தான் கூறவேண்டும்.

நிலத்திலோ புலம்பெயர்ந்த நாடுகளிலோ இந்த சாதிய முறைகள் இல்லை என்று சொல்லமுடியாது. எல்லாம் நன்றாக நடந்துவிட தனது வீட்டில் திருமணம் என்று ஒன்று வந்துவிட்டால் அல்லது காதல் சமாச்சாரம் ஒன்று வந்து விட்டால் சாதி, சமயம்,மொழி, நிறம், பிரதேசம், ஊர் என்று எல்லாம் புலன் விசாரணை ஆரம்பமாகி இறுதியில் காதலுக்குத்தடை,கலியாணத்திற்குத் தடை எல்லாம் ஏற்படுத்தி காதலையும், அன்பு,பாசத்தையும்,கலியாணத்துக்கும் சாவு மணி அடித்து விடுவதில் நமவர்கள் வலு திறைமைசாலிகள் தான்.

ஒரு சம்பவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.... யாழ்ப்பாணத்துக் கணவன் மன்னார் மனைவி வெவ்வேறு சாதி சமயம். இவர்களுக்குப் பிறந்த ஆண்பிள்ளையும் ,மட்டக்களப்பைச் சேர்ந்த கணவன் வவுனியாவை சேர்ந்தவ மனைவி வெவ்வேறு சாதி சமயத்தைச் சேர்ந்தவர்கள் இவர்களுக்குப் பிறந்த பெண் பிள்ளையும் மனம் விரும்பிக் கலியாணம் செய்து கொண்டார்கள். இவர்களுக்கும் ஒரு பிள்ளை பிறந்தது. அப்போ....இந்தப் பிள்ளை என்ன சாதி?....இந்தப்பிள்ளையின் பெற்றோர் என்ன சாதி?...யாராவது என்ன சாதி என்று சொல்லமுடியுமா?... அப்படிச் சொன்னால் அவருக்குச் சர்வதேச நோபல் பரிசும் கிடைக்கும். ஆகவே மனித சாதிதான் ஒருசாதி என்பது விடையாக அமையும்.

நிலத்தில் அப்படியே சாதியக் கட்டமைப்புகள் கறைபடிந்து கிடந்தாலும் புலம் பெயர் நாடுகளில் சாதியகட்டமைப்புகள் உடைந்து அழிந்துவருவது நல்ல விடயமாகும்.இங்கு வாழும் இளம் சந்ததிகள். இந்த அமைப்பு முறைகளுக்கு சாவு மணி அடித்து வருவது பாராட்டுக்குரிய விடயமாகும். அறிவியல்,விஞ்ஞான,

கணணியுகம் வளர்ச்சி கண்டு வருவதால் நம்முடைய சந்ததிகளின் மனங்களிலும் அதிக மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இருப்பினும் பல பழசுகள் இங்கும் தமது சந்ததிகளுக்கு இந்த வேற்றுமைகளைச் சொல்லிக்கொடுத்து இன்பம் காண்கின்றனர். திருந்தாத மனங்கள் இந்தப்பூமியில் வாழ்ந்து தான் என்ன பிரயோசனம்.

இப்படிச் சாதி முறைகளை கடைப்பிடிக்கவும் அவற்றை பாராட்டவும் இன்றும் பலர் விழிப்பாக இருந்து வருவது வேடிக்கையும் வெட்கப்படவேண்டிய விடயமாகும். உதாரணத்துக்கு இங்கு முகமறியாத இரு தமிழர்கள் சந்தித்து விட்டால் போதும், சாதியை அறிவதற்காக...எந்த ஊர்..? எந்தக்கிராமம்.. ?குறிச்சி " இவர் சொந்தமா ..? அவர் கிட்டவா..? இவரைத் தெரியுமா ..? அவரைத் தெரியுமா...? என்றெல்லாம் விசாரணை செய்து சாதியை அறிய துடியாய்த்துடித்து இன்பம்கண்டுவிடுவார்கள்.

இந்த வேடிக்கை மனிதரை எப்படிக் கூறுவது. பல்லாயிரம் ஆண்டுகள் பல அறிஞர்கள், பல கோவில்கள், பல சமயங்கள், சாத்திரங்கள், சம்பிரதாயங்கள், கலை, பண்பாடுகள் எடுத்துகூறியும் மனிதமனங்கள் திருந்தியனவா? ...இல்லை....தயவு செய்து நம் சந்ததிகளுக்கு இதை எடுத்துக்கூறி சாதி என்னும் விஷத்தை ஊட்டாதீர்கள். சமயம் என்னும் வேறுபாட்டைப்பாராட்டி பிரிவினையை வளர்க்காதீர்கள். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று சொல்லிக்கொடுத்து நம் சந்ததிகளை நல்ல மனம் படைத்தவர்களாக வாழ வழிவகுத்தால் அதுவே நம் செயற்கரிய நல்ல விடையமாக அமையும்...

# 28 - செல்வியாகவே!...

பல வருடங்களின் முன் செல்வி சாந்தினி வெளிநாடு ஒன்றிக்கு வந்து சேர்ந்தாள். அவளின் பெயருக்கு ஏற்றவாறு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவவில்லை. காரணம் ஐந்தும் பெண்களாய் பிறந்தனர். வீட்டில் சாந்தினி தான் மூத்தவள். வயது வந்த ஐந்து குமர்கள். வேலைவாய்ப்பு இல்லை வறுமை தாண்டவமாடியது. கல்வியையும் இடை நடுவில் விட்டு சிறு வேலை ஒன்று செய்து கொண்டிருந்தாள்.

ஐந்தும் பெண் என்றபடியால் ஊர் உறவுகள் எல்லாம் ஒன்றையாவது எங்கேயும் திருமணம் செய்து வையுங்கோ என்ற நெருக்குதல் தந்தை, தாய் முயற்சி செய்தனர். பணம், காணி, பூமி நகை இல்லாததால் திருமணம் பெரிய பிரச்சனையாகவே அவளுக்கு இருந்தது. அப்பொழுது தான் கலியாணப்புறோக்கர் இவளைக் கண்டுகொண்டார்.

ஆம் வெளிநாட்டு மாப்பிள்ளை வெளிநாட்டில் இருபது வருடம், நல்ல பணக்காரர்,வசதியான குடும்பம், அழகானவன் என்றெல்லாம் கூறிய கலியாணப்புறோக்கர் அவளின் தாய் தந்தையினரின் சம்மதத்தைப் பெற்றனரேயொளிய அவளின் எதுவித சம்மதமும் கேட்கவில்லை. அவளும் வறுமைவாட்ட வெளிநாடு போனால் மற்றைய சகோதரங்களை வாழவைக்கலாம் என எண்ணிப் பச்சை கொடி காட்டினாள்.இருமாதங்களால் ஆயிரம் கற்பனைகளுடன் வெளிநாடு வந்து தன்னை மணம் முடிப்பவனிடம் வந்து சேர்ந்துவிட்டாள்.

வெளிநாடு வந்து திருமணம் முடிந்த போது தான் அவனின் பூரண சுயரூபம் முழுவதும் அவளுக்கு தெரியவந்தது.அவன் ஏற்கனவே கலியாணம் செய்து இரண்டு பிள்ளைகள். முதல் மனைவியோடு ஏற்பட்ட பிரச்சனையால் பிரிந்து வாழ்கிறார்கள்.கலியாண விடுதலைப் பத்திரமும் பெறாமல் சுகந்தினியை இரண்டாம் கலியாணம் செய்து கொண்ட உண்மையும்

தெரியவந்தது. இதுமட்டுமா சுகந்தினிக்கு 25 வயது அவனுக்கு 45 வயது. வயதும் சரியான முரண்பாடு மொத்தத்தில் முழுவதும் பொய்யான திருமணமாக முடிந்துவிட்டது. இந்த நிலையில் சாந்தினி என்ன செய்வாள்.அவனைவிட்டிட்டு நாட்டுக்கு போகமுடியாது அவனோடு வாழவும் பிடிக்கவில்லை.பொறுக்கமுடியாமல் தற்கொலைக்கும் முயற்சித்த போது அவள் காப்பாற்றப்பட்டாள்.

வெளிநாட்டு வாழ்வு உருண்டது.இவனைப்போல் எத்தனையோ சத்தியவான்கள் புலம் பெயர் நாடுகளில் எத்தனை பெண்களின் வாழ்வை சீரழித்து வருகின்றார்கள். வயது தான் வித்தியாசம் மட்டுமல்ல. பழக்கவழக்கம் தொழில், வீடு குணம், நடை எல்லாவற்றிலும் முரண்பாடுகளும், கீழ்த்தரமான செயற் பாடுகளும் அவள் மனதை வெகுவாகவே பாதித்தன. இருதலைக் கொள்ளியாக வாழ்க்கை மாறியது.அனல்மேல்பட்ட புழுவாய் சாந்தினி துடித்தாள். தாய், தந்தை, சகோதரிகளின் வாழ்வை சிந்தித்தாள். அவனோடு வேண்டா வேறுப்பாக வாழ்வை தொடர்ந்தாள்.

சிறிது காலம் உருண்டோடியது அவள் வேலைக்குச் சென்று காசு உழைத்து தனது பெற்றோர் குடுப்பத்துக்கு உதவி வந்ததால் மூன்று சகோதரிகளுக்கு ஊரில் திருமணம் முடிந்தது. உழைப்பு ஒன்றே தன்னைக் காக்கும் என்ற துணிவோடு ஓடி ஓடி இரவு பகலாக உழைத்துக்கொண்டிருக்கும் போது கணவனின் சுயரூபம் மேலும் புலப்பட்டது. பொறாமை,சுயநலம், என மாறி பணப் பிரச்சனையும் உருவெடுத்ததுமட்டுமல்லாமல் நம்பிக்கையீனம் வளர்ந்து இருவரும் பிரிந்து வாழும் நிலைக்குத்தள்ளப்பட்டனர்.

பிரிந்து வாழ்ந்த சுகந்தினி தனிமையில் வாழ எங்கள் இனக்காமுகர்களும் விட்டுவைப்பார்களா ? அவளை அடையப் பலர் முயற்சித்தார்கள். முயற்சி பயனளிக்காததால் கட்டுக் கதைகளையும் கட்டினர் சில காமுகர்கள் .எல்லாவற்றையும் தாங்கி மன உறுதியுடன் வாழ்வில் போராடி தனது இளமையை தியாகம் செய்து உழைப்புத்தான் தனது உற்ற நண்பன் என எண்ணினாள். செயற்பட்டாள். பணத்தை உழைத்துச் சேர்த்தாள்.

உடல்நிலை சோர்வு ஏற்பட்டாலும் உழைப்பை கைவிடாமல் தொடர்ந்தாள்.பணமும் நிறையவே சேர்த்துவிட்டாள்.

அன்று தூக்கத்திலிருந்து விழித்த அவள் தாய், தந்தையருக்கு ஒரு கடிதம் வரைந்தாள்.... அன்புடன் அம்மா...அப்பா.... சகோதரிகள்.... நான் நலம்!..உங்கள் நலத்திற்கு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்... எனது கடிதம் உங்களுக்கு கவலையை தந்தாலும் எனது முடிவை உங்களுக்கு அறியத்தருகிறேன்.

நீங்கள் பார்த்துப் பேசி முடித்தவரை விட்டுப்பிரிந்து ஐந்து வருடங்களாக நான் தனியாகத் தான் வாழ்கிறேன். அவனைப்பற்றி நிறையவே எழுதலாம். சுருக்கமாக எனக்கும் அவனுக்கும் இருபது வயது வித்தியாசம். ஏற்கனவே கலியாணம், பொம்பிளைப்பொறுக்கி,பொய் பிரட்டுக்காரன்,சோம்பேறி, இது காணாது என்று எனது உழைப்பையும் சிறிது காலம் சுரண்டி வாழ்ந்துவிட்டான். ஆதலால் தான் அவனைவிட்டுப் பிரிந்து ஐந்து வருடங்கள் தனிமையில் வாழ்ந்தேன். உங்களுக்கு இந்த விடயங்கள் ஒன்றும் கூறாமைக்குப் பல காரணங்கள் உண்டு. கவலைப்படவேண்டாம்.

ஆம் நேரில் வருகிறேன். மீண்டும் உங்கள் மூத்த பிள்ளையாக, 'மீண்டும் செல்வியாக? நாட்டுக்குத் திரும்புகிறேன். வருகிற கிழமை 10 ம் திகதி வருகிறேன். நீங்கள் கொழும்புக்கு வாருங்கோ. எல்லாவற்றையும் நேரடியாகக் கதைப் போம். "மீண்டும் செல்வியாக" என்ற வார்த்தைகளால் பெற்ற மனங்கள் தீயிலிட்ட புழுக்கள் போல் துடித்தன....

# 29 - அன்பு இல்லையேல்...

நேயம் என்னும் போது மனிதர்களுக்கு மட்டும் காட்டப்படும் நேயம் என்று சொல்லமுடியாது. பிற உயிர்களிடம் அன்பு, பாசம், பரிவு காட்டுவதும் நேயமாகும். செடி கொடிகளாகட்டும், பறவைகளாகட்டும், மிருகங்களாகட்டும், எப்படிப்பட்ட உயிர்களானாலும் அவற்றிடையே அன்பு, ஆதரவு, இரக்கம் காட்டுவது, அவற்றிற்கு உதவுவது, அவை அல்லல்படும்போது பரிவுகாட்டுவது யாவும் நேயம் என்ற பெரும் சக்தியைக் குறிப்பதாகக் கருதலாம்.

நாம் வாழும் காலங்களில் பிறரிடம் நேயம் காட்டுகிறோமா?.. அல்லது பிற உயிர்களிடம் நேயம் காட்டுகிறோமா? அயலவர், உறவுகள், நட்புக்களிடம் நேயம் காட்டுகிறோமா என்பதை எல்லாம் நாம் சற்று சிந்திக்கவேண்டும். நேயம் என்பது நிறம், மதம், மொழி,சாதி,சமயம், நாடு, பிரதேசம் என்ற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதாகும். யாரையும் அடையாளப்படுத்தி நேயம் வருவதில்லை. இயற்கையாக நாம்வாழும் சூழல், பழக்கவழக்கம், வழிகாட்டல், கல்வி, பொதுஅறிவு, மனிதப்பண்பாடு என்ற அடிப்படையில் நேயம் வேறுபடுவதையும் நாம்காண்கிறோம். நாம்வாழும் காலம்வரை பிறருக்கு அன்புகாட்டி, ஆதரவு வழங்கி, நேயத்துடன் வாழ்ந்தால்தான் நாம் வாழ்வதற்குரிய தகுதியைபெறுகிறோம்.

இங்கு நான் நேரில் கண்டு கொண்டவிடயத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன். நான் வாழும் வீட்டிற்குப்பக்கத்து வீட்டுக்காரர் ஒருஜேர்மனியர், வயதும் 65-70 இருக்கும் என நம்புகிறேன். பெரியவீடு அவரும் அவரது மனைவியும்தான் வசித்துவருகிறார்கள் .சுமார் பத்துவருடங்களாக இந்த இடத்தில்தான் நானும் வசித்துவருகிறேன். ஆனால் அவர்வீட்டுக்கு நான்போனது கிடையாது. அவரும் என் வீட்டுக்கு வந்ததும் கிடையாது. வீதிகளில் கண்டால்..ஹலோ!... அவ்வளவுதான். இதுதான் வெளிநாட்டு வாழ்க்கை. இறந்தாலும் தெரியாது, இருந்தாலும் தெரியாது, அவரவர்பாடுதான். சோலி, சுறட்டு, வீண்பேச்சு ஒன்றும்கிடையாது. இதுவும் ஒருவழியில நல்லதுபோல் தான் தோன்றுகின்றது.

அந்த வெள்ளைக்கார மனிதனின் அன்றாட நடவடிக்கைகள் என்னை நன்றாகவே கவர்ந்துவிட்டன. நேயமிக்க செயற்பாடுகள், பிற உயிர்களிடத்தில் காட்டும் அன்பு, நேயம், அளவிடமுடியாத செயற்பாடுகள் பல...பல....தன் வீட்டோடு பெரிய பூந்தோட்டம் உண்டு. காலையில் எப்போதும் அந்தப்பூங்கன்றுகள், செடி, கொடி, மரங்களைத் துப்பரவுசெய்து, நீர்ஊற்றி, நிலத்தைப் பண்படுத்துவதும், அவற்றோடு கதைத்துப்பேசி மகிழ்வதும் அவருடைய அன்றாட கருமமாகும். பிற்பாடு 8-9 மணியளவில் பறவைகளுக்குத் தண்ணீர் வைப்பதும், பறவை உணவுகளை கடையில் வேண்டிவந்து ஆங்காங்கேபோட பறவைகள் கூட்டமாகவந்து பசியாறிச்செல்லும் நேயம் மிக்க காட்சி கண்கொள்ளாக்காட்சிதான். அத்தனை வேலைகளுக்கும் இவரது வயதான மனைவியும் உறுதுணையாகச் செயற்படுவார்.

இவைமட்டுமல்ல வீட்டில் மீதமாகிவிடும் பாண்துண்டுகள், இறைச்சி மற்றும் உணவுப் பொருட்களை எல்லாம்சேர்த்து இரவு ஒன்பது பத்துமணியளவில் தனது வீட்டுக்கு முன்பாகவுள்ள சிறியகாட்டுக்குக் கொண்டுசெல்வார். நானும் இவர் என்ன செய்கிறார் என்று நோட்டம் விட்டபொழுதுதான் விடையம் விளங்கியது. பசியால் அலைந்து திரியும் நரிகளுக்கு அந்த உணவைப் போடுவார். நரிகளும் கூட்டமாகவந்து அந்த உணவுகளைப் பசியாறிக்கொண்டு செல்லும். இது அவர் தினமும் செய்யும் வேலையும், உயிரினங்களுக்குச் செய்து வரும் நேயம்மிக்க செயற்பாடுமாகும்.

இதைவிடக் கடுமையான வெயில் காலங்களில் தண்ணீர் நிரம்பிய பாத்திரங்களை வீட்டிற்கு முற்பகுதியில் வைப்பார். நரி, பறவைகள் வந்து நீர்குடித்துச் செல்வதும் வழக்கமாகும். கடும் வெயிலால் மரங்கள் வாடி நின்றால் தனது வீட்டுத்தண்ணீர்ப் பைப்பைப் பொருத்தி மரங்களுக்கும், வீதிக்கும் நீர்பீச்சி அடிப்பார். செடி, கொடி, பூங்கன்றுகளுக்குக் கடையில் பசளைகள் வேண்டிவந்து போடுவார். தான் வளர்க்கும் நாய், பூனை செல்லப்பிராணிகளுக்கும் நேரத்திற்குநேரம் நல்ல உணவு. இப்படியாகத் தனது பணத்தைச் செலவழித்து பிற உயிரினங்களின் துயருக்கு உதவுவார். இதை நான் நேரில் பார்த்துப் பல தடவைகள் ஆச்சரியப்பட்டிருகிறேன்.

நமது வாழ்க்கையை பாருங்கள். பிறருக்கு, ஏன் உடன்பிறப்புகள், உறவுகள், நட்புக்களோடு ஆகட்டும் நாம் நேயம் காட்டி வாழ்கின்றோமா?... காசு பணம் கொடுக்காவிடினும் அன்பு, ஆதரவு, நேயத்தைப் பரிமாறுகிறோமா?... நம்மைச் சுற்றிவாழும் மனிதர்களுக்குக்கூட அன்பு காட்டாத நாம் பிற உயிரினங்களுக்கு எப்படி? அன்பு காட்டுவது. ஒரு சிலர் மற்றவர்களுக்குத் தெரியாமல் உதவிசெய்து கொண்டிருக்கிறார்கள் அவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். ஆனால் சிலரோ ஏன் பல எழுத்தாளர்கள்கூட மேடைகளில் பேசுவதும் எழுதுவதிலும் மகா கெட்டிக்காரர். அதாவது அடுக்கு மொழியில் பேசுவதும் வசனவித்தைகள் காட்டி ஏழுதுவதும் தொழிலாகப் போய்விட்டது. ஆனால் ஒரு சதம்கூட தான தர்மம் செய்யமாட்டார்கள்.

இவற்றை நாம் சிந்திக்கிறோமா?.. பண ஆசையும், சுய நல வாழ்வும், சுயபோக ஆடம்பர வாழ்வும் மட்டும்தான் எங்கள் நோக்கமும் குறிக்கோளுமாகும். இப்படியாக நமது வாழ்வு மாறியது ஏனோ?... ஆகவே மனித உயிர்களாகட்டும் அல்லது வேறுஎந்த உயிர்களிடத்திலாகட்டும் அன்புகாட்டி வாழவேண்டும். பிற உயிர்களை நேசித்து வாழவேண்டும்.. இதுதான் சிறந்த வாழ்வாக அமைந்துவிடும். நேயத்தை வளர்ப்போம். நேசம்காட்டி வாழ்வோம்!...

# 30 - அம்மா!...

"அம்மா" என்ற வார்த்தைக்கு உலகில் நிகரேதும் உண்டோ. அம்மாதான் முதல் தெய்வம். எங்களை கருச்சுமந்து உயிர்கொடுத்து பெற்றெடுத்து, நீராட்டி,சீராட்டி, அன்பு காட்டி வளர்த்தவள் இந்த உலகில் தாய் மட்டும்தான்.இறைவன் தனக்காகவே தாயைப் படைத்தான். இந்தத் தாயானவள் தான் முதல் தெய்வம், வழிகாட்டி, உலகை காட்டியவள். நாம் பாலகராய் இருக்கும்போது எங்களுடைய அழுக்குகளை தன் கையாலே சுத்தம் செய்து,தன்னை தியாகம் செய்தவள்.தன் பசியையும் பொருட்படுத்தாது எங்களுக்குப் பால் தந்து, வேளைக்கு உணவு தந்து பசி போக்கிய பத்தினி என்றால் அது உலகில் ஒரே ஒருவர் என்றால் அம்மாதான்.

இப்படி அம்மா செய்த தியாகங்கள் சொல்லிலடங்குமா ! தன்னைவருத்தி ஒரு வேலைக்காரியாக, ஒரு மருத்துவிச்சியாய், ஒரு காவலாளியாய், ஒரு சுத்தம் செய்பவளாய், ஒரு சமையல் காரியாய் இருந்து செயற்பட்டு, எங்களுக்குக் கல்வியூட்டி, அறிவூட்டி, உலகைகாட்டி, திருமணபந்தத்தில் பூட்டி, வாழ்வை காட்டிய அம்மா என்பவளை நாம் தினமும் தெய்வமாக வழிபடும் தேவதையாக நமக்குக் காட்சியளிப்பவளை நாம் வாழ்நாள் பூராவும் வணங்குவோம்.

அப்படிப்பட்ட அம்மாக்கள் இன்று உலகில் படும் துன்பங்களும் சொல்லிலடங்காதவையே.பணஆசை, பெண்ணாசை, பொன் ஆசை, மண் ஆசை பிடித்து அலையும் மனிதஜென்மங்கள் இன்று பெற்றவளை துன்பப்படுத்துவதும், அவளின் பணம், பவுண்,சொத்துக்களை அபகரிப்பதிலும் குறியாக இருப்பதும் ஏன் ?...மேலாக அவர்கள் செய்த தியாகங்களை மறந்து அவர்களை கவனிக்காமல் விடுவதும்,ஆதரவற்று விடுவதும்,முதியோர் இல்லங்களுக்கு அனுப்புவதும் அன்றாடநிகழ்வாக மாறியிருப்பது கவலைக்குரியவிடையமாகும்.

பெற்றவள் கண்கலங்கினால் அவள்பெற்றவர்கள் உருப்படமாட்டார்கள் என்பார்கள். இது எவ்வளவு உண்மையான விடயமாகும்.தாயகத்திலும் சரி,புலம் பெயர் நாடுகளிலும் சரி வயதான பெற்றோர் படும் துன்பங்கள் எண்ணிலடங்காதவையே. குறிப்பாக புலம் பெயர் தேசங்களில் பிள்ளைகள் தம் பெற்றோரை இங்கு வரவழைத்தது பாசமாக இருந்தாலும் பலரின் செயற்பாடுகள் சுயநலத்திற்காகவே இவர்களை தங்களுடன் வைத்திருக்கிறார்கள். தம் பிள்ளைகளைப் பார்ப்பதற்கும்,வீட்டைத்துப்பரவு செய்வதற்கும் என ஒரு வேலைக்காரியாகப் பயன்படுத்துகிறார்கள். இதைவிட அவர்களுக்குக் கொடுக்கப்படும் அரசு உதவிப்பணங்களையும் சுரண்டும் மூட்டைபூச்சிகளாகவும் பல பிள்ளைகள் வெளிநாடுகளில்....

நான் இங்கு ஒரு பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு போயிருந்தேன்.லட்சகணக்கில் செலவு செய்து சுமார் ஐநூறு பேர் வரை ஆடம்பரவிழா . ஒருவயதானவரின் மகனின் மகளுக்குத்தான் பிறந்தநாள் கொண்டாட்டம்.அவரின் ஊரவர்கள் இருநூறு பேர் வரை ஆடம்பரமாக வீடியோ ஒலி,ஒளி காட்சிகள்,எல்லா வர்ண வேடிக்கைகள் முடிந்து நிழல்படங்களும் வரிசையில் நின்று எடுத்து முடித்தார்கள்.

அந்த விழாவை நடாத்தியவர் எனது நண்பன். அவரின் தாயாரும் வேறு ஒரு நாட்டிலிருந்து அந்த விழாவுக்கு வந்திருந்து உற்றார், உறவுகள், அறிந்தவர்கள், அறியாதவர்களோடு எல்லாம் அந்த அம்மா கதைத்து மகிழ்ந்து கொண்டிருந்தார். அப்போது எனது நண்பரை அணுகி ஏனடப்பா உன்னுடைய அம்மாவை மேடைக்குகூப்பிட்டு உன் பிள்ளையோடு படம் எடுக்கவில்லை, குடும்பப்படம் ஏன் எடுக்கவில்லை என்று கேட்டேன். அப்போ என் நண்பன் கூறினான்.மச்சான் அவ போட்டோவிற்கு வடிவில்லை,வயது போட்டுது,போட்டோவிற்கு வேண்டாம் என்று நான் தான் கூறிவிட்டேன் என்றான்.

அடப்பாவி...உனக்கு உயிர்தந்த, தோலும் தசையும் தந்து உன்னை உருவாக்க எவ்வளவு காலம்,எத்தனை தியாகங்கள் செய்த உன் தாய். உனக்கு வடிவில்லாதவளாய் தெரிகிறாள்...

அவளில்லாமல் நீ எங்கிருந்து வந்தாய்... வானத்திலிருந்து குதித்தாயா?.. உனது காசுபணமும், ஆடம்பர வாழ்வும், போலிக்கவுரவமும் உன் கண்களை மறைக்கிறதா?.. நீ இப்போ தாயை ஒதுக்குகிறாய்... நாளை உன்ர பிள்ளை திருப்பி உனக்குச் செய்யும் இதை மறந்திடாதே...... என்றெல்லாம் திட்டித் தீர்க்க முடியாமல், அவனின் சில நண்பர்களுக்கு இவ்விடயத்தைக் கூறிவிட்டு நான் மண்டபத்தைவிட்டு வெளியேறினேன்.

பெற்றவர்களை கண்கலங்காமல் பார்ப்பதும் அவர்களின் துன்பங்களில் பங்கெடுப்பதும்,அவர்களின் தேவைகளை, ஆசைகளை உடனிருந்து நிறைவேற்றுவது பிள்ளைகளாகிய எங்களின் தலையாய கடமையல்லவா....இதை நாம் எத்தனை பேர் சரிவரச் செய்கிறோம். பெற்றோரை பராமரித்து உதவுவதற்குக் கூட இன்று பிள்ளைகளிடையே சண்டை சச்சரவு நிறைந்த வாழ்வாக மாறிப்போய்விட்டது. ஆகவே நாம் எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்வோம் என்பதை மறந்திடாமல் கண்ணால் காணும் தெய்வங்களை எந்நாளும் போற்றி வணங்குவோம். "அம்மா" என்ற சொல்லுக்கு ஆயிரமாயிரம் அர்த்தங்கள் உண்டு. இந்த ஆயிரமாயிரம் அர்த்தங்களுக்கு ஒரு மகா சக்தியாக விளங்குபவள் நம்மைப் பெற்ற அம்மாவே!...அம்மாவே!...

# 31 - நம்பர் - சாத்திரம்

தமிழர்களின் வாழ்வியலில் இன்று நம்பர் சாத்திரம் பார்ப்பது முக்கிய விடையம் ஒன்றாகிவிட்டது என்றுதான் கூறவேண்டும். இன்று பல மனித மனங்கள் கஸ்டம், துன்பம், துயரம் ஏற்பட்டுவிடும் என இதைப் பார்த்துத்தான் வாழ்க்கையை ஓட்டும் நிலையாக மாறிவிட்டது. சிலர் இதில் அதீத நம்பிக்கை கொண்டு எந்தக்காரியத்தைச் செய்ய முற்பட்டாலும் திகதி, நாள், நட்சத்திரம், சாத்திரம் பார்க்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திகதி, சாத்திரம் பார்ப்பவர்களில் இன்று அநேகம் பேர் தோல்விகளைச் சந்தித்துவருவதும் உண்மைதான்.

இந்த நம்பரும் சாத்திர சம்பிரதாயங்களும் அடிப்படையில் பொருளாதாரத்தை ஈட்டும் நோக்கமாகத்தான் இருக்கும். அல்லது வாழ்வை வளம்படுத்தலாம் என்னும் நோக்மாகவே காணப்படும். சுருக்கமாகச் சொல்லப்போனால் இதை ஒருவரை ஒருவர் ஏமாற்றிப்பிழைக்கும் ஒரு வழிமுறை என்றுதான் கூறவேண்டும் வாழ்க்கையில் நட்டங்களையும் தோல்விகளையும் சந்திக்கும் மனித மனங்கள் அதிலிருந்து விடுபடவும், தமது சமூக அந்தஸ்த்தை மேம்படுத்துவதற்கும், சிறிது மன ஆறுதல் பெற்றுக்கொள்ளவும் இந்த சாத்திர திகதிகளை நாடிச் செல்கின்றனர். ஆனால் இவை எதுவும் நிரந்தரத் தீர்வைத் தராது என்பதை உணருவோர் மிகச்சிலரே.

பிறரை ஏமாற்றாமல், பிறர் மனங்களைத் துன்பப்படுத்தாமல், சாதி, மத, நிற பேதங்களைப் பாராட்டாமல் பிறருக்கு உதவி செய்து கடும் உழைப்பால் உயர்ந்துள்ள ஒரு மனிதன் இந்தச் சாத்திர சம்பிரதாயங்களை நாடமாட்டான். எப்போதும் நேர்மையாக உழைத்து முன்னேறவேண்டும் எனப்பாடுபடுபவனுக்கு ஏன்தான் இந்தச் சாத்திரமும் திகதியும். அவனுக்கு எந்நாளும் நல்ல நாள்தான். எந்தத்திகதியும் நல்ல திகதிதான்.

இன்றைய காலகட்டத்தில் ஒரு பிள்ளை பிறந்தவுடனேயே சாத்திரம் பார்த்து திகதி பார்த்து நாள், நட்சத்திரம் பார்த்து, குலம் கோத்திரம் பார்த்துத்தான் பெயர் வைக்கிறார்கள். பின்பு அந்தப் பிள்ளை

வளரும்வரை ஏன் வேலை, திருமணம், காசு, உழைப்பு, நட்புவரை சாத்திரம் பார்த்து வாழும் நம்மவர்கள் நிறையவே வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

புலம்பெயர் நாடு ஒன்றில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். குடும்பத்தில் ஒரே ஒரு மகன் அவனுக்குப் பெண்தேடி குடும்பம், குலம், கோத்திரம், சமயம், சாதி, பிரதேசம், ஊர், திகதி, நட்சத்திரம், எல்லாம் பார்த்துப் பெண் ஒருத்தியைத் மணம்முடித்து வைத்தார்கள். இருவரின் மனப்பொருத்தம் பார்க்காமல் பெற்றோரின் விருப்த்தின் பேரில் திருமணம் முடித்து வைத்தார்கள். இரண்டு ஆண்டுகளின் பின் பிள்ளை ஒன்று உண்டாகியதை அறிந்த உறவுகள் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

திகதி, நாள், நட்சத்திரம், நேரம் எல்லாம் பார்க்கும் கணவன் தன் மனைவிக்குக் கட்டளை இட்டான்... தான் விரும்பிய நாளில்தான் பிள்ளை பெறவேண்டும். அதாவது (10-10-10) பத்தாம் திகதி பத்தாம் மாதம், பத்தாம் ஆண்டு பிள்ளை பிறந்தால்தான் தனக்கு அதிஸ்டம் என எண்ணினான். ஒரு பெண்ணின் உடல் நிலையை அறியாமல் இயற்கையின் நியதியை உணராமல் மூடநம்பிக்கையில் மூழ்கிய இவன் மனைவிக்குத் தெரியாமல் வைத்தியர்களின் அனுமதியைப் பெற்று வலுக்கட்டாயமாக அறுவை சிகிச்சை செய்து பிள்ளையைப் பெற்றபோது பிள்ளை இறந்துவிட்டது. அவனது மனைவியும் இறந்துவிட்டாள். ஆசை மனைவியையும் அருமைப் பிள்ளையையும் பறிகொடுத்துப் பரதேசியான நிலமையே எஞ்சியது.

நாள், நட்சத்திரம், திகதி, சாத்திரம் எல்லாம் பார்த்து இறுதியில் நடந்த சம்பவம் எத்தனை ஆயிரம் மனங்களை கவலைக்குள்ளாக்கின. இவர்போன்றவர்கள் இன்னும் பல்லாயிரம்பேர் தாய் நிலத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். "சாத்திரங்களும் சம்பிரதாயங்களும் வேண்டாத வேடிக்கைகள்" என்றான் மகாகவி பாரதி... பாரதி கூறினால் என்ன.வள்ளுவன் கூறினால் என்ன இன்றும் மூடப்பழக்க வழக்கங்களில் நம்பிக்கைகொண்டு நம்மவர்கள் பலர் வாழ்வைச் சாகடிப்பதுடன் பிறரையும் மனம் நோகவைக்கும் சம்பவங்களே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இன்று நாம் எத்தனையாம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்?..எங்கு வாழ்கிறோம்..எப்படிப்பட்ட சூழலில் வாழ்கிறோம் என்பதைச் சிந்திக்கிறோமா?.. இன்றைய விஞ்ஞான, கணனி, இயந்திர உலகில் மனித வாழ்வு எப்படி...எப்படி..எல்லாம் சாதனைகளை நிலைநாட்டி உயர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கையில்.. நம்மில் பலர் இன்றும் "குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்" ஒரு வட்டம் போட்டு மூட நம்பிக்கைகளில் மூழ்கி அதற்குள்ளேயே ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே நாம் தற்கால உலக நடப்புக்களைப் புரிந்துகொண்டு வாழவேண்டும். மூடநம்பிக்கைகளைக் கைவிட வேண்டும். அறிவியல் ரீதியாக சிந்தனையைத் தீட்டவேண்டும். கல்வியில் உயர்ந்து மூட நம்பிக்கைகளைக் கைவிட்டு வாழ்வில் உயரவேண்டும். நாமும் மூடநம்பிக்கைகளில் மூழ்கிடாமல் பிறரையும் அதில் விழவிடாமல் பாதுகாக்க வேண்டும். நல்ல பொதுஅறிவுள்ள, சிந்தனை, ஆற்றல் மிக்கவர்களாக வாழ்வதற்கான மனித சமூதாயத்தைப் படைத்திடுவோம்!...

## 32 - விவாகரத்து என்னும் வினை

மணம்முறிவு, ஒத்துவராமை, ஒன்றுபடாமை, பிரிந்துசெல்லல், ஜீவனாம்சம் என்று எல்லாம் சொல்லப்படும் விவாகரத்து இன்று உலகில் மலிந்து காணப்படுகின்றது. சிலர் சட்டப்படி விவாரத்துப் பெற்று வாழ, சிலர் எதுவித எழுத்து வடிவிலான கடிதங்கள் இன்றியும் பிரிந்து செல்கின்றனர். இரு மனங்களும் ஒன்றுபடாத காரணம் மட்டுமல்ல சில அக புறக்காரணிகளும் இந்த விவாகரத்துக்கு துணைபோகின்றன என்றுதான் கூறவேண்டும். குறிப்பாகச் சாதி, மத, நிறம், பணம், ஊர், பிரதேசம் போன்ற புற காரணிகளையும் குறிப்பிட்டுக் கூறலாம்.

நமது சமூகத்தைப் பொறுத்த அளவில் விவாகரத்து என்றால் என்ன?.. என்று தெரியாமல் வாழ்ந்த சமூகமாகும். இன்று பிற நாட்டவர் வாழ்க்கை முறைபோல் சர்வசாதாரணமாக விவாகரத்து இடம்பெற்று வருகின்றது. இதில் கல்வி கற்றவர்கள் என்று கூறப்படுபவர்கள்தான் அதிகம்பேர் எனவும் ஒரு புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. இன்றைய சட்ட திட்டங்கள், நிதி, பாதுகாப்புகள் வலிமையாகவும் இறுக்கமாகவும் இருப்பதால்தான் விவாகரத்தும் கூடிக்கொண்டு வருகின்றது.

விவாகரத்துக்குப் பல அக, புறக் காரணிகள் கூறப்பட்டாலும் இரு மனங்களையும் குடும்ப சூழலையும் சமூக சூழலோடு ஒட்டியதாக அமைந்துவிடுகின்றது. முன்னைய காலத்தில் அடிபட்டு, சண்டை, சச்சரவால் விவாகரத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய காலம் சட்டப்படி அமைதியாகப் பிரிந்து செல்கின்றனர். ஆண்-பெண் என இருபாலரும் இதில் தவறு இழைக்கின்றபடியால்தான் இந்தப்பிரிவு ஏற்படுகின்றது. பேசி முடிக்கும் திருமணம் மட்டுமல்ல.. காதல் கல்யாணங்களிலும் விவாகரத்து என்பது சர்வசாதாரணமாக மாறியிருப்பது கவலைக்குரிய விடையமாகும்.

புலம்பெயர் தமிழர் வாழ்வியலின் இன்றைய நிலையைப்பார்த்தால் விவாகரத்து என்பது பெருகிவருவது ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. எடுத்தேன்?..கவிட்டேன்?..போட்டு உடைத்தேன்?...என சிறிய.. சிறிய சர்ச்சைகளும் உடனடி விவாகரத்தில் போய் முடிந்துவிடுகின்றன

இன்றைய இளைய சமூகமானது ஒரு அவசர உலகில் வாழ்ந்துகொண்டிருப்பதால் இந்தக்கடுகதி வாழ்க்கையில் விவாகரத்துக்களும் அவசர..அவசரமாக நடந்து முடிகின்றன என்னும்போது ஆச்சரியம்தான். கணவன்-மனைவி அல்லது உறவுகளிடையே ஆழமான அன்பு, பாசம், விட்டுக்கொடுத்தல், புரிந்துணர்வு, பொறுமை, உறவு போன்றவை அருகிவர விவாகரத்துச் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. ஐரோப்பா, கனடா நாடுகளில் நம்மவர்களின் விவாகரத்து வீதம் அதிகரித்துவருவதாகத் தெரியவந்துள்ளது.

யார் காரணம்?..என்ன காரணம்?..எப்படி இது ஏற்படுகின்றது?..இரு பாலரிடையேயும் ஏற்படும் கருத்து வேறுபாடுகள், அவசர முடிவுகள், குடும்ப சூழல், சமூகப்பார்வை போன்றவைகளும் இதற்குக் காரணம் என்றும்கூறலாம். தனித்து வாழலாம் என்று அவசர முடிவுகளை எடுப்பதால் பின்னர் பல சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளும் அன்பு, பாசம், பரிவு, அரவணைப்பு, வழிகாட்டல் போன்றவற்றை இழந்து எதிர்காலத்தில் பல கெடுதிகளைச் சந்திக்கின்றனர். அம்மா-அப்பா விவாகரத்து செய்வது போல் தாமும் உடனடி முடிவெடுத்து சந்ததி சந்ததியாக விவாகரத்துப் பெற்று வாழ முற்படுவதும் ஏனோ?...

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொருவரும் சுதந்திரமாக, தன்னிச்சையாக முடிவெடுத்து வாழ நினைப்பது தவறல்ல. ஆனால் இவை பிறர் சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதும், அடிமைப் படுத்துவதுமாக அமையக்கூடாது. இந்த உலகில் யாரும் யாருக்கும் அடிமை இல்லை!.. யாரும் வல்லவரும் அல்ல. எல்லோரிடமும் எல்லாத் திறமைகளும் இருப்பது குறைவு. இது மனித இயல்பு. எனவே ஒருவரைக் குறைத்து மதிப்பிடுவதோ அல்லது அவரின் திறமைகளை, ஆளுமையை அவமானம் செய்வது கூடாது.

இன்று புலம்பெயர் சூழலிலே பலர் விவாகரத்துப் பெற்று வாழ்வதற்குப் பல காரணிகள் உண்டு. இதில் பணம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இவற்றைவிட குடிப்பழக்கம், போதைப்பொருள் பாவனைப் பழக்கம், புகைத்தல் பழக்கம் போன்றவைகளும் விவாகரத்து என்ற

நிலைக்குக் கொண்டுபோய் விட்டுள்ளது. பல குடும்பங்கள் சீரழிந்து சின்னா பின்ன மாகியிருக்கின்றன. இருவரும் உழைப்பதால் சிலரிடையே பல ஏற்றத்தாழ்வுகளும் தலை தூக்குகின்றன. வேலைநேரம், பிள்ளை வளர்ப்பு, வீடுஅழகுபடுத்தல், வாகனம் வேண்டுதல், வீடு வேண்டுதல், வங்கிக்கடன், போன்றவற்றில் இருவரிடையேயும் சமபங்கு ஒத்துழைப்பு இல்லாமை, ஏற்றத்தாழ்வு மனப்பான்மை, விட்டுக்கொடுக்காமை, நான் என்ற அகங்காரம், அன்பு அரவணைப்பு கிடைக்காத காரணங்களாலும் பல குடும்பங்களில் பிளவுகள் ஏற்படுகின்றன.

புள்ளிவிபரங்களின்படி கூடுதலான தவறுகளை ஆண்கள்தான் விடுகிறார்கள். அப்படிப் பல தவறுகளை அடுக்கடுக்காக விடடுவிட்டு பெண்ணின்மீது முழுப்பழிகளையும் சுமத்திவிட்டு ஆண்கள் சுலபமாகத் தப்பித்துக் கொள்வதுதான் நடைமுறையில் உள்ளது. இது எமது சமூகத்தின் வரட்டுக் கௌரவம். இதற்காக முழு ஆண் வர்க்கத்திலும் தவறு உண்டு என்று கூறவில்லை. பெண்களிலும் தவறுகள் உண்டுதான்.

நல்ல கல்வி, ஆழமான சிந்தனை, நல்ல பழக்க வழக்கம், நல்ல வழிகாட்டல், உலக நடப்பு, உலக அறிவு, சமூகம்மீதான பார்வை, உளஅன்பு, பாசம், விட்டுக்கொடுத்தல். ஒருவரை ஒருவர் மதித்தல், குடும்பச்சுமையில் இருவருக்கும் சமபங்கு போன்ற நல்ல விடையங்களில் இருவரும் ஒன்றுபடவேண்டும்.

இரு மனங்களும் உள்ளத்தால் ஒன்றுபட்டு நான் பெரிது நீ பெரிது போன்ற ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க வேண்டும். உழைப்பு, வசதி, வாய்ப்புக்கள், பணம் பொருள் குடும்பத்தில் பெருகலாம் ஆனால் குடும்பம் என்ற ஆணிவேர் மரமாகிப் பூத்துக்குலுங்கி விழுதுகள் பரப்பி வாழ இரு மனங்களும் ஒரு மனதாகச் செயற்பட்டு வாழ்ந்தால் அந்த வாழ்வுதான் சொர்க்க வாழ்வாக மாறிவிடும். வாழப்பிறந்த மனிதர்கள் நன்றாக வாழவேண்டும்..மனங்களை வென்றால் வாழ்வில் வெற்றியும் கிடைத்துவிடும். விவாகரத்து என்ற விடையமே ஒழிந்துவிடும். சந்தோஷம் மலர்ந்துவிடும்...குடும்பம் குதூகலித்துவிடும்!...

## 33 - பேசிய மனங்கள்

நம்முடைய மனம் ஒரு நாளைக்கு எவ்வளவு விடையங்களைப் பேசுகிறது, சிந்திக்கிறது, செயல்படுகிறது.நமது மனம் தான் முழுக்காரியங்களுக்கும் தூண்டு கோலாக இருக்கின்றது. நமக்கு ஏற்படும் நன்மைகள் ஒரு புறம், தீமைகள் மறுபுறம். கஸ்டம், துன்பம், நட்டம் வந்தவுடன் துவண்டு விடுகிறோம். சந்தோஷம், இலாபம், நல்லவை நடந்துவிட்டால் நம் மனது எவ்வளவு துள்ளிக் குதிக்கின்றது. குறிப்பாக ஒருவர் சந்தோஷமாக வாழவோ, அல்லது மனவேதனையுடன் வாழவோ நமது மனம் தான் அடிப்படைக் காரணமாகும். இதைவிட எந்த ஒரு கடினமான காரியங்களையும் மனம் வைத்துச் செயற்பட்டால் அது இலகுவாகவே முடிவடைந்துவிடும். அப்படியான மாபெரும் சக்தி நம் மனதுக்கு உண்டல்லவா !....

புலம் பெயர் தேசத்தில் வாழும் நான் ஒருநாள் நீண்டதூ ரம் சுமார் ஐந்து மணித்தியாலங்கள் வரை தொடரூந்தில் பயணிக்க வேண்டி இருந்தது. நான் எங்கு சென்றாலும் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் உண்டு. ஆதலால் வாசிப்பில் மூழ்கிவிட்டேன். தொடரூந்து ஒரு தரிப்பிடத்தில் நின்று புறப்பட்டது. சிறிது நேரத்தில் தமிழ் குரல்கள் இருவர் புன்னகை பூத்தனர். நானும் பதிலுக்கு புன்முறுவல் செய்து கொண்டேன். அவர்கள் அடுத்த பக்கத்து இருக்கைகளில் அமர்ந்து வீட்டு நடப்பு, நாட்டு நடப்பு, என அலசிக் கொண்டிருந்தனர். நான் புத்தகம் வாசிப்பில் மூழ்கிவிட்டேன்

அப்போது ஒருவர் மற்றவரைப் பார்த்து அண்ணே !...இன்னும் இருபத்தைந்து, ஐம்பது வருடங்களில் புலம் பெயர் நாடுகளில் வசிக்கும் நம் சமூகத்தவர்களின் நிலை எப்படியிருக்கும், ஒரு கேள்வியைத் தூ க்கிப்போட்டார். இது என்ன வித்தியாசமான கேள்வியாகக் கிறக்கிறது என எண்ணிய நான் எனது காதையும் கூமையாக்கிக் கொண்டேன். அட தம்பி !...நீ முறையான கேள்வி கேட்கிறாய்! இருந்தாலும் எனது அறிவுக்கு எட்டியவாறு சிந்திக்கிறேன். ஒவ்வொன்றாகத்தான் கேள் தம்பி என்றார்.

தொடரூந்து ஓடிக் கொண்டிருந்தது. அவர்கள் கொண்டுவந்த "புறோச்சின்" உணவை பரிமாறி தேநீரும் குடித்துக்கொண்டனர். கதை தொடர்ந்தது. முதல் தம்பி எங்கட இனம் குறைவடையும், மொழிகுறைவடையும், கலாச்சாரம் பண்பாடு மாறும் எனச் சொல்ல, மற்றவர் எப்படி என்று வினாவைத் தொடுத்தார். இங்கு பிறந்து வளர்ந்த பிள்ளைகள் பல,கலாச்சார, நிற, மத, மக்களோடு தான் வாழப்போகிறார்கள். அப்போது எங்கள் இனப் பிள்ளைகள் வேற்று இன மக்களுடன் திருமண பந்தத்தில் இணைவார்கள். அப்படி இணையும் போது இனக்கலப்பு ஏற்படும் நிறக்கலப்பு, மதக்கலப்பு எல்லாம் ஏற்படும் அப்போ அமெரிக்காவில் வாழும் அமெரிக்கா- ஆபிரிக்கா கலப்பு இனத்தவர்கள் போல் தான் எமது இனமும் மாறும் என்றார்.

மற்றவர், அண்ணே... நமது மொழிக்கு என்ன நடக்கும் ,மொழியைப் பொறுத்தவரையிலும் இங்குவாழும் பிள்ளைகள் பல மொழிகளைக் கற்கிறார்கள். காலவட்டத்தில் பல்மொழி வித்தகராக வந்தாலும் நமது தாய் மொழியாம் தமிழுக்கு தேய்வு ஏற்படும். நமது மொழி அழியாவிடினும் இன்னும் சில வருடங்களில் நம் தமிழை எழுதுவோர், பேசுவோர், வாசிப்போர் குறைவடைந்து கொண்டுதான் செல்லும். ஏன் இப்பவே பல வீடுகளில் நம்மொழி பேசப்படுவதில்லை. பிறமொழிகளைப் பேசி வந்தால் கௌரவம் என எண்ணுவோரும் உண்டு தானே.

தமிழ் பாடசாலைகள் இங்கு இருந்தாலும் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படும். இதேபோல்தான் சைவக்கோவில்களும் வழிபாடும், பண்பாட்டு, கலை,கலாச்சார நிகழ்வுகளும் குறைவடைந்து விடும். சில சமயங்களில் கும்பிடுவதற்கோ, விழாக்கள், பண்டிகைகளை நடாத்த ஆட்கள் தட்டுப்பாடும் நிலவும். இவைமட்டுமல்ல கலாச்சார உடைகள் குறைவடையும், பண்பாட்டு விழாக்கள். மத அனுட்டானங்கள் குறைந்துவிடும். இப்பவே தேவாரம் படிப்பதற்கு ஆட்களைத் தேடி அலைந்து காசு கொடுத்துத்தானே தேவாரம் படிக்கிறோம்.... அப்போ இன்னும் இருபத்தைந்து ஐம்பது வருடங்களில் எப்படி இருக்கும் என எண்ணிப்பாரும் தம்பி. தமிழர்களின் வாழ்வில்

இப்படியெல்லாம் நிகழுமா ?அண்ணே அப்போ இவ்வளவு அழிவுகள் வருமெனச் சொல்கிறீகளே...ஆமாம் தம்பி. இன்னும் நிறைய மாற்றங்கள் வரும் ஆனால் சாதி, மதம், பிரதேசம் பார்க்கும் மனம்படைத்த தமிழர் தொகை படிப்படியாகக் குறைவடைந்துவிடும் எனத்தான் எண்ணுகிறேன்...

இப்படிப் பல சங்கதிகள் இருக்கின்றது. உதாரணத்துக்கு ஊரிலிருந்து உறவுகளிடமிருந்து கடிதம் வந்தால் அந்தக்கடிதத்தை வாசிக்கத் தெரியாமல் அக்கடிதத்தை மொழிபெயர்பாளரிடம் தேடிச் சென்று காசு கட்டித்தான் வாசித்து அறிவார்கள். ஏன் இங்கு பிறக்கும் பிள்ளைகளுக்கு இப்போ தமிழ்ப்பெயர் சூட்டப்படுவது குறைவடைந்து வருவதால் நாளடைவில் பிறமொழி இனப்பிள்ளைகள் போல் தான் பேசுவார்கள், எழுதுவார்கள், வாழ்வார்கள். ஒட்டுமொத்ததில் நிறத்தில் தமிழராக இருந்தாலும் அவர்களின் வாழ்வியல் கோலங்கள் வேறாகவே இருக்கும்.

ஆதலால் முகவரி தொலைத்த 'முகங்களை இழந்த இனமாகவே மாறும் என்பது எனக்கு இப்பவே தெரிகின்றது. இன்னும் பல பல மாற்றங்கள் எதிர்காலத்தில் நிகழும் என்பதே உண்மை....இது சத்தியம் தம்பி என்றார். தொடருந்து ஒரு தரிப்பிடத்தில் நின்றது. அவர்கள் எனக்கு ஒரு புன்முறுவலை தூவிவிட்டு விடைபெற்றனர்.

இவர்கள் உரையாடிய விடையங்களில் எவ்வளவு உண்மை இருக்கிறது. எவ்வளவு சிந்திக்கவேண்டியவை இருக்கின்றன என்று நானும் யோசித்தேன். இந்த இருமனங்களும் பேசிக்கொண்டவை சிறிது நேரமாயினும் வரப்போகும் இருபதைந்து.. ஐம்பது வருடகால நிகழ்வுகளுக்கு கட்டியங்கூறியது போல் தான் இருந்தது. ஆமாம் மாற்றங்கள் நிகழும், நிகழ்ந்துகொண்டே இருக்கும்.

கால வெள்ளத்தில் அடிபட்டு, அள்ளுண்டு போய் விடுவோமே என்ற பயமும் எனக்கு ஏற்பட்டது. யார்

சொன்னாலும் சொல்லாவிட்டாலும், தடுத்தாலும், தடுக்காவிட்டாலும் தமிழர் வாழ்வில் அதுவும் புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழர்களின் எதிர்காலம் பல மாற்றங்களை சந்தித்தே தீரும் என்ற உண்மை தென்பட்டது. இதில் பேசிய இரு மனங்களும் என்னைமட்டுமல்ல உங்களையும் சிந்திக்கவைக்கும். ஆம் பேச வைக்கும் என நம்புகிறேன்! இவர்கள் பேசிய விடயங்கள் சிறிது....பேசாத விடயங்கள் பல...பல... என எண்ணிக் கொண்டேன்!.. பேசிய இரு மனங்களுக்கும் நன்றிகள்!...

## 34 - ஏமாறாதே?... ஏமாற்றாதே?...

மனிதவாழ்வில் ஏமாற்றுதலும் ஏமாறுதலும் அன்றுதொட்டு இன்றுவரை இருந்தே வந்திருக்கின்றது. ஆதிகால மனிதன் உணவுக்காகவும் பாதுகாப்புக்காகவும் வாழ்வியலுக்காகவும் ஒருவரை ஒருவர் அல்லது ஒரு குழுவை இன்னொரு குழு ஏமாற்றித்தான் வாழ்ந்து பழக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏமாற்றுச் செயலில் மனிதரிடையே இனம், நிறம், மதம், மொழிக்கு அப்பாற்பட்டு ஏமாற்று வித்தைகளைப் புரிபவன் இந்த மனிதன்தான். சரி ஏமாற்றும் மனிதர்கள் என்றால் ஏமாறும் மனிதர்களும் அன்றுதொட்டு இன்றுவரை இருந்துகொண்டிருப்பதால்தான் ஏமாற்றுபவன் தனது வேலையைச் செய்கிறான். இந்த ஏமாற்றுத் தந்திரத்தால் பண்டைய காலங்களில் எத்தனையோ அரசுகளும் மன்னர்களும் சரிந்து வீழ்ந்த சம்பவங்களும் உண்டுதானே.

மனிதன் அறிவியல் விஞ்ஞான, தொழில் நுட்பங்களில் முன்னேற்றம் கண்டாலும் இந்த ஏமாற்றுப் பழக்கமும் ஏமாறுதலும் இருந்துகொண்டுதான் அதாவது இன்னும் வளர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. உலகில் மனிதனுடை தொகை அதிகரிக்க ஆசைகளும் தேடல்களும் பல மடங்காக அதிகரித்துக்கொண்டுள்ளன. இதனால் மனிதனின் ஏமாற்றுப் பழக்கமும் வளர்ந்தது என்றுதான் கூறவேண்டும். இன்றைய வர்த்தக உலகில் மனிதன் மட்டுமல்ல வியாபார தாபனங்கள், கம்பனிகள், தொழிற்தாபனங்கள், கல்விச்சாலைகள், ஏன் சகல துறைகளிலும் இந்த ஏமாற்றலும் ஏமாறுதலும் இருந்து மக்களைச் சுரண்டிப் பணம் சம்பாதித்து உல்லாச வாழ்வுக்கு வழிவகுக்கிறார்கள்.

நமது தமிழரின் வாழ்வியலிலும் அன்றாடம் இந்த நிகழ்வு நடைபெறுகின்றன. தாயகத்திலும்சரி புலம்பெயர் நாடுகளிலும்சரி இதனால் பலர் பல துன்பங்களைச் சந்தித்துவருகிறார்கள் என்பது உண்மையான விடையமாகும். குறிப்பாக புலம்பெயர் தேசங்களில் நடைபெறும் சில சம்பவங்களை உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன். இன்று நம் சந்ததிகள் எத்தனையோ துறைகளில் பல முன்னேற்றங்களைக் கண்டாலும் சில விடையங்களில் தோல்வி என்றே கூறலாம்.

உதாரணத்திற்கு மூன்று சிறு பிள்ளைகளுடன் ஒரு குடும்பம். குடும்பத்தலைவர் வேலைக்குப் போய் உழைத்தாலும் சிறுவர்களுக்கு இங்குகொடுக்கப்படும் அரசகொடுப்பனவு மாதாந்தம் கிடைக்கும் தொகையை கடந்த பல வருடங்களாகச் சீட்டு என்னும் கறுப்புப்பணம் சம்பாதிக்கும் திட்டத்தில் முதலீடுசெய்து பெருந்தொகைப் பணத்தில் ஊரில் வீடு, காணி, சொத்து எல்லாம் சேர்த்து எல்லாவற்றையும் தனது உடன்பிறப்புக்களின் பெயரில் எழுதி வைத்தார். காலச்சக்கரம் சுழலப் பிள்ளைகளும் வளர்ந்து தாய்-தந்தையரிடம் கணக்குக் கேட்க ஆரம்பித்தனர்.

எங்களுக்கு நல்ல உடுப்பு வேண்டித்தரவில்லை, விளையாட்டுப் பொருட்கள் வேண்டித்தரவில்லை, நன்றாகப்படிக்க வழிவகைகள் செய்துதரவில்லை, பல நாடுகளுக்கும் சுற்றுலாகூட்டிக்கொண்டு போகவில்லை, வாழ்வதற்குரிய நல்ல வசதியான வீட்டை வாடகைக்கோ சொந்தமாகவோ வேண்டவில்லை, எப்போதும் படி... படி..எனத் திணித்தீர்கள். எங்களின் ஆசைகளுக்கு விருப்பங்களுக்கு இடம்கொடுத்தீர்களா? அப்போ நீங்கள் உழைத்தகாசு எங்கே?... எங்களுக்கு அரசாங்கம் அது இது என இவ்வளவுகாலமும் தந்த பணம் எங்கே? எனக் கேள்விகளுக்குமேல் கேள்விகளைக் கேட்டுக் குடைந்தெடுத்தனர். இங்கு வளரும் பிள்ளைகளுக்குச் சரியான பதிலைச் சொல்லியே ஆகவேண்டும். இல்லையேல் பிள்ளைகள் பொலிசுக்கும் போய்விடுவார்கள் என்பதும் பலருக்குத் தெரிந்த விடையம்தானே.

இதற்கிடையில் இவரும் மனைவியும் ஊரில் சேர்த்த சொத்துக்களுக்கும் பெரும் இடி வந்து விழுந்தது. அவரின் உடன்பிறப்புக்களும் வெளிநாட்டில் இவர்கள் நல்ல வசதியாகத்தானே இருக்கிறார்கள் என்று இவரிடமும் மனைவிடமும் ஏதோ ஒரு வழியில் கையொப்பம் பெற்று ஊரிலுள்ள இவர்களதுஅனைத்துச் சொத்துக்களையும் தமது பெயருக்குப் சட்டமுறைப்படி எழுதிப் பங்கிட்டுக் கொண்டார்கள். இது நடைபெற்றுப் பலகாலம் ஆனால் அவர் இன்றும் தனதுவீடு, தனதுகாணி,தனதுசொத்து என்றும் பிற்காலத்தில் தான்போய் ஊரில் உல்லாசமாக வாழலாம் எனக்கனவுகண்டுகொண்டிருந்தார். ஆனால் நடந்ததோ வேறு...சொந்த உடன்பிறப்புக்களே எல்லாவற்றையும் சுற்றி வழித்தெடுத்த கதையாகி இவர் ஏமார்ந்த சோணகிரியானார்.

இத்தனைகாலம் இவர் தனது பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் கவனிக்காமல் தனது சுயலாபமாகச் சிந்தித்து சொத்துக் குவிக்கப்போய் இன்று சொத்தும் இல்லை, பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றமும் இல்லாமல் வயதும் ஏறிய நிலையில் தவிக்க. இவரது மனைவியும் பிள்ளைகளும் இவரைவிட்டுப் பிரிந்து, வேறு வாடகைவீட்டுக்குப் போய் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவரோ ஒரு வேளை தேநீர் வைத்துத்தரவே ஆளில்லாமல் தனியாக வாழும் சூழலுக்குத் தள்ளப்பட்டு அலங்கோலப்படுகின்றார்.

மனிதரில் எத்தனை நிறங்களைப்போல மனிதரில் எத்தனை குணம்படைத்தவர்கள் இந்தப்பூமிப்பந்தில். இன்னொரு கதை. ஒரு வீதம்கூட கணனி அறிவை பெற்றுக்கொள்ளாமல் எந்த நேரமும் காசு..காசு என அலையும் பெற்றோர்களின் ஒருசில பிள்ளைகள் எந்த நேரமும் கணனி, கைத்தொலைபேசியுடன் காலத்தைக் கழித்து, ஆபாசப் படங்களைப் பார்த்து கெட்டுப்போன பிள்ளைகள் எத்தனை. போதைவஸ்த்துக்கு அடிமையாகி உயிர்துறந்த பிள்ளைகள் எத்தனை. கணனிகளில் மோசடி செய்து பணம்சம்பாதித்துப் பிடிபட்டுச் சிறை சென்ற பிள்ளைகள் எத்தனை. ஏன் சொந்தச் சகோதரங்கள், தாய் தந்தையரின் வங்கி இருப்புகளை கணனியில் மோசடி செய்து அள்ளிக்கொண்ட பிள்ளைகள் எத்தனை. வயதான பெற்றோரின் வருமானங்களை சுருட்டிக்கொண்ட பிள்ளைகள் எத்தனை இப்படியே அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆகவே நாம் இந்த உலகமயமாக்கலுடன் இணைந்து ஒத்து ஓடிக்கொண்டே இருக்கவேண்டிய கட்டாயத்தில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இல்லையேல் நாம் உயிருடன் இருக்கும்போதே நமது உறுப்புக்களை எடுத்துக்கொண்டு சென்றுவிடுவார்கள். இதுதான் இன்றைய உலகம். விழிப்பாயிரு இல்லையேல் விழிபிதுங்க வைத்துவிடுவார்கள்!..ஆகவே மற்றவர்களை ஏமாற்றாமல் நாமும் ஏமாறாமல் இருப்பது இன்று அவசியமான விடையமாகும்!...

ஏமாறாதே ஏமாறாதே!...ஏமாற்றாதே ஏமாற்றாதே!...

# 35 - பொறுமையின் சிகரம்

என்பாசத்துக்கும், நேசத்துக்கும் என்வாழ்வில் என்னோடு கலந்தவள்தான் என் அன்பு மனைவி இராஜேஸ்வரி. இல்லறவாழ்வில் முப்பத்தொன்பது வருடங்கள். இன்பம் துன்பம், நன்மை, தீமை எனவும் கடமை, கண்ணியம், விட்டுக்கொடுப்பு, பணிவு, அறிவு, மதித்தல், போன்ற அனைத்து விடயங்களிலும் அன்பு என்னும் ஆயுதத்தால் என்னை ஆளுபவளும் அவளே.

பொறுமைக்கு, இலக்கணமானவள் உள்ளத்தூய்மை மிக்கவள். எப்போதும் எந்நேரமும் எங்கும் எனதுநலனில் அக்கறைகொண்டவர். மிகவும் பொறுமைசாலி, இதை நான் எழுதத்தேவையில்லை. ஏனென்றால் அவரோடு பழகிய அத்தனைபேரும் கண்டுகொண்ட விடயமாகும். இவரின் கல்வி, ஆற்றல், பழக்கவழக்கம், அன்பு,பண்பு, மரியாதை, புரிந்துணர்வு போன்றவிடயங்களும் "நான்" என்று சொல்லாத பண்பும் மனவலிமையும் நிறைந்தவர், இவர் எனக்கு மனைவியாகக் கிடைத்தது பெரும்புண்ணியம்.

கல்வியில் உயர்ந்தவர், எழுத்து, பாடல், சமயம், கல்வி கலைத்துறையில் நல்ல ஈடுபாடும், ஆற்றலும் மிக்கவர். இவர் இப்படிச் சமூக அக்கறையோடு, குடும்ப அக்கறையோடு இவ்வளவுகாலமும் பொறுமையைக் கடைப்பிடித்தபடியால்தான் உயர்ந்து நிற்கிறார். எனது பிள்ளைகள் மூவரையும் கல்வியில் சிறக்கவைத்து மூவரையும்பட்டதாரியாகிய பொறுப்பு கடமை கூடியபங்கு இவரையேசாரும்.

பிள்ளைகளைச் சமூக அக்கறையுள்ள நல்ல மனிதர்களாக்கிய பெருமையும் இவரையேசாரும்..எப்போதும். எந்த வேளைகளிலும் பொறுமை. பொறுமைதான். ஆழ, அமர, பொறுமையாகப் பேசுவதும், சிந்திப்பதும், செயற்படுவதும் இவரின் குண இயல்பாகும். கடந்த முப்பது ஆண்டுகளாக ஜேர்மனியில் வெளிவரும் "மண்" கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் வளர்ச்சிப் பாதைக்கும் பெரும் பங்காற்றிவருகின்றார்.

ஜேர்மன் தமிழ் கல்விச் சேவையிலும் இணைந்து நீண்டகாலம் கல்விப்பணியில் சேவையாற்றிவருவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

என்ன இவர் தன் மனைவியைப்பற்றி இதில் எழுதிச் சுயநலம் தேடுகிறார் என எண்ணிவிடாதீர்கள். அமைதியாய் வாழ்வது நல்லதுதான். சொல்ல வேண்டியவிடயத்தை தக்கசமயத்தில் சொல்லாமல் விடுவதும் தவறுதானே. இதில் எனக்கு எந்தவித முரண்பாடும்கிடையாது. ஒருவருடைய திறமை, முயற்சி, கல்வி, அறிவு போன்றவற்றை உலகிற்கு எடுத்துக் காட்டவேண்டியது ஒரு எழுத்தாளனின் கடமைதானே.

உண்மையை எடுத்து நோக்கினால் என்மனைவி என்னைப் புரிந்துகொண்டு, என்பணிகள், சேவைகளை அறிந்து கொண்டு என்னோடு இவ்வளவு காலமும் ஒத்துழைத்து வருவதை என்னால் எடுத்துரைக்க விடாமலும்முடியாது. அந்தவகையில் என்வளர்ச்சியிலும், முயற்சியிலும், கலை, இலக்கிய, எழுத்து, பொதுபணிகளில் தோழோடுதோள் நின்று, உற்றதுணையாக இருந்து வாழ்விலும் வளத்திலும், மீட்சியிலும், எழுச்சியிலும் காத்துக் கருணை பொழிந்து மனிதராய் வாழவைத்து கொண்டிருப்பவரை வணங்கி வாழ்த்துகிறேன்.

ஒரு பெண்ணானவள் தனது வாழ்நாளில் எத்தனையோ துன்பங்களைச் சுமந்துதான். தனது குடும்பதையும் தான்வாழும் சமூகத்தையும் மேம்படுத்துகிறாள். அதற்காகத்தான் பெண்ணுக்குக் குடும்பத்தின் குலவிளக்கு என்று அழைத்தார்கள். உண்மைதான். சகலவழிகளிலும் என்னை உயர்ச்சி பெறச்செய்து, புகழ்ச்சியடையச்செய்து பொதுப்பணிகள் செய்ய தன்னை அர்ப்பணித்து, பொறுமையின் சிகரமாக நின்று மெழுகுவர்த்திபோல் தியாக ஒளி தந்துகொண்டிருக்கும் என்மனைவி என்றும் என்அன்புக்குரியவளே !..

குடும்பம் என்றால் பிணக்குகள், பிரச்சனைகள், பணக்கஷ்டங்கள், குடும்பசிக்கல்கள் என வந்தே தீரும். இவை அனைத்தும் வந்தபோதும் மனந்தளராமல் மிகவும் பொறுமையாக எல்லா விடையங்களையும் கையாள்வதில் வல்லவராவர்.

எனது பிள்ளைகள் சிறுவயதுகளில் குழப்படி செய்தவேளைகளில் கண்டித்திருக்கிறேன். அடித்தும் தண்டித்திருக்கிறேன். ஆனல் இவரோ ஒருபிள்ளைக்கும் ஒருநாளும் அடித்ததை நான் காணவில்லை. இந்த 39 வருடகால இல்லற வாழ்வில் எந்தப்பிள்ளையையும் யாருடைய பிள்ளையாய் இருந்தாலும் எவரையும் கண்டித்துப் பேசியதும் கிடையாது. மற்றவர்கள் மனம் நோகும்வண்ணம் பேசியதும் கிடையாது.

அவ்வளவுக்குப் பொறுமையும், மன்னிக்கும் பண்பும் எப்படி இவரின் மனத்துடன் ஒட்டிக்கொண்டது. இவரின் பெற்றோரின் பழக்கவழக்கம் தான் காரணமாகும் என எண்ணுவேன். ஆழமான கல்விஅறிவும், உலகஅறிவும்,அனுபவமும், வாழ்ந்த சூழலும் இவரைப் பொறுமைசாலியாக உருவாக்கியிருக்கலாம். ஆனால் துன்பங்கள், கஷ்டங்கள் வந்தபோதெல்லாம் மனம் துவழாமல், சந்தோஷம், மகிழ்வு வந்தபோதெல்லாம் மனம் புழுங்காகிதம் கொள்ளாமல் எனக்கும் என்பிள்ளைகளுக்கும் ஒரு வழிகாட்டியாய் வாழ்ந்துகொண்டு இருக்கிறார் என்னும்போது பெருமையாகத்தான் இருக்கின்றது.

என் வளர்ச்சிக்கும், பிள்ளைகளின் உயர்ச்சிக்கும், குடும்பம், உறவுகள், நட்புக்கள் வட்டத்தில் மதிக்கப்படுபவராக விளங்குவதற்கு இவரின் பொறுமை, அளவான பேச்சு, நல்லமனம், நல்ல பண்பு, தியாகம்தான் மூலகாரணம் என நான் நினைக்கிறேன். இப்படிப் பொறுமையுள்ள பெண்மணி ஒருவரை நான் என்வாழ்நாளில் காணவில்லை என்றுதான் கூறுவேன். என்னைக் கரம்பிடித்தபடியால் அவளும், அவளைக் கரம்பிடித்தபடியால் நானும் ஒருவரோடு ஒருவர்கலந்து ஒன்றாய்வாழ்கிறோம். இவரின் நல்மனதுக்கு என்றும்நான் அடிமைதான்!!...

# 36 - உலக நட்பு வட்டம்

நட்பு என்பது அன்பு, பாசம், நேசிப்பு என்ற அடிப்படையில் புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு என்ற அளவில் நமது நட்பு நீடிக்கின்றது. அந்த வகையில் எனது வாழ்க்கையில் என்னோடு பழகிய நல்ல மனங்கள், நினைவு கொள்ளத்தக்கவர்களே. தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் நல்ல நட்பு வட்டங்களைக் கொண்டிருப்பது மகிழ்வுதான். சாதி, மதம், பிரதேசம், என பிரித்துப்பார்க்கும் நம் சமூகத்தின் எல்லை கடந்து என்னோடு இன்றுவரை பழகிவரும் உலக நட்புக்களின் நல் மனங்கள் என்றும் என் இதயத்தை வருடுகின்றது.

இவர்களில் என்னைவிட வயது கூடியவர்களும் பலர் உண்டு. வடக்கு-கிழக்கு என பல மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் அல்ல. இலங்கையின் பல பாகங்களிலும் வாழும் நட்புக்களையும் ,புலம்பெயர் வாழ் நட்புக்களையும் குறிப்பிடுகிறேன். இவர்கள் அனைவரும் இன்று வாழ்ந்துகொண்டிருப்பதுடன் பலர் பல விதமான சமூக,எழுத்து,கலை, இலக்கிய, தமிழ்ப்பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் என்மீது கொண்ட பற்றும் இந்த நட்பு நீண்டு நிலைக்கக் காரணமாயின. அவர்களின் நல்மனங்கள் தான் அன்றும் இன்றும் என்றும் வாழும் எனக் கருதுகிறேன்.

குறிப்பாகச் சிலரைக் குறிப்பிடுகிறேன். இவர்கள் அனைவரும் அன்றுமுதல் இன்றுவரை தொடர்பில் இருந்து கொண்டே இருக்கிறாரகள். கொழும்பில் உடுவை தில்லை நடராசா(கல்வி அமைச்சின் இளைப்பாறிய செயலாளர்).தேவராஜ்(தமிழ்தந்திபத்திரிகை ஆசிரியர்). ஞரனசேகரன் ("ஞானம்"இதழாசிரியர்). வவுனியாவில் தமிழ்மணி அருந்தவராசா.மட்டக்களப்பில் கோபாலரட்ணம்,(ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர்) குகநாதன், (பத்திரிகை ஊடகத்துறை) தமிழழகன் (அரசியல் பிரமுகர்) அவர்களும் புலம் பெயர் தேசங்களான கனடாவில் மட்டுவில் ஞரனக்குமாரன் (கவிஞர்). யோகேந்திரலிங்கம் ("உதயன்" பத்திரிகை ஆசிரியர்). பெறாமகன் சௌந்தரராசா (நண்பர்கள் சங்கத்தலைவர்). துரைராசா(உலகத்தமிழ்ப் பண்பாட்டுச் சங்கத்தலைவர்)

ரஞ்சன் (கூட்டுறவுக்கல்லூரி ' நண்பன்) பிரான்ஸ் நாட்டில் வண்ணைத்தெய்வம் (கவிஞர்) சுவிஸ் நாட்டில் கல்லாறு சதீஸ்(எழுத்தாளர்). விஜயகௌரி (எழுத்தாளர்) அருந்தவராசா (எழுத்தாளர்) டென்மார்க் நாட்டில் ஜீவகுமாரன்(எழுத்தாளர்) திருமதி லங்காதிலகம் (எழுத்தாளர்) நோர்வேயில் எழுத்தாளரும் சினிமா நடிகருமான வ.ஐ.ச. ஜெயபாலன் மற்றும் பாடகர் நடிகர் (நவாஸ்) நமசிவாயம் சிவரஞ்சன், (எழுத்தாளர்) அவுஸ்திரேலியா மூத்த எழுத்தாளர்கள் லெ.முருகபூபதி, சிசு. நாகேந்திரன் போன்றோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இங்கிலாந்தில் நூலகவியலாளர் செல்வராசா, ஊடகவியலாளர்களான (எனது மருமகன்) பரா பிரபா, அனஸ். திரு, திருமதி யோகரட்ணம், நடாமோகன், பொதுச்சேவையாளர் செல்வராசா, எழுத்தாளர் இராசமனோகரன், எழுத்தாளர் திருமதி புஸ்பவதி சிவநாதன் போன்றோர் நட்புகள் என்றும் நிலைத்து நிற்கின்றன. அனைவரும் நல்ல மனம் படைத்தவர்கள் என்றே கூறுவேன். எப்போதும் பொது நோக்கோடு செயற்படுவார்கள். மொழி, கலை, இலக்கியம், எழுத்து ஊடகத்துறையில் பங்காற்றியவர்களும் பங்காற்றிக் கொண்டிருப்பவர்களும் அதிகம்பேர். இவர்களின் ஆலோசனைகள், ஆற்றல்கள் அளவிட முடியாத அனுபவங்கள் யாவும் மனிதநேயம், மனிதப் பண்பாட்டை நோக்கியவாகவும் இருந்து வருவதால் இவர்களின் மன இயல்புகளை பாராட்டவேண்டும். போற்ற வேண்டும்.

மனிதரில் எத்தனை நிறங்கள் என்பதுபோல் உலக நட்பு வட்டத்திலும் பல மனம் படைத்த நல் இதயங்கள் என்னோடு நட்பாய், அன்பாய் வாழ்வதை எண்ணி ஆனந்தப்படுகிறேன். நட்பு நீடிப்பதற்கு ஒவ்வொருவரின் மனம் தான் காரணமாகின்றன. இந்த வகையில் எனக்குக் கிடைத்த உலக நட்புக்கள் போற்றுதற்குரியவர்களே. என்னுடையதும் அவர்களுடையதும் வாழ்வும், வளமும் செழிக்க யாவரின் மனங்களும் சுத்தமாகவே இருக்கின்றன. இந்தச் சுத்தமான மனங்கள் வாழ்நாள் பூராவும் சுகமாகவே வாழ்வார்கள். என்ற பரிபூரண நம்பிக்கையோடு வாழ்வோம்!.... நீங்களும் நல் மனம் படைத்த நல்ல நட்புக்களை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்!..

# 37 - போதைவஸ்த்து

"குடி குடியைக்கெடுக்கும்" என்று கூறுவதில் எவ்வளவு உண்மை பொதிந்திருக்கிறது. இதைப்போல்தான் புகைத்தல், போதைப்பழக்கம் பெண்கள் விவகாரம், ஓரினச்சேர்க்கை போன்ற செயல்களும் நம் குடியை மட்டுமல்ல நாம் வாழும் சமூகத்தையும் நாட்டையும் பாதிக்கும் செயலாகும். ஒவ்வொரு மனிதனும் வாழும் நாடு, சூழல், நட்பு, வளர்ப்புமுறை போன்ற பல காரணங்களால் வாழ்க்கையில் வேறுபடுகின்றான். உணர்வுகள் ஒரேமாதிரியாக இருந்தாலும் பழக்கவழக்கம் குடும்பசூழல் நட்புவட்டத்தை ஒட்டியே மனிதன் இந்தக் கெட்ட பழக்கங்களுக்கு ஆளாகிறான்.

போதிய கண்டிப்பு, வளர்ப்புமுறை,கட்டுப்பாடற்ற வாழ்க்கைமுறைகளால் சிலர் தடம்மாறி வாழ்வில் பல இன்னல்களைச் சந்திக்கிறார்கள். இன்றைய உலக நடப்பில் பாடசாலைப்பிள்ளைப் பருவத்திலேயே இந்தக் கெட்டபழக்கங்களுக்கு ஆளாகிறார்கள். அதுவும் இந்தப்பாலியல் வயதானது பொல்லாதது. இதற்கு அடிமையாக இந்த வயதுதான் ஆரம்பப்படியாக அமைகின்றது. இப்படியாக ஆரம்பிக்கும் இந்தப்பழக்கம் பலரின் வாழ்வை சிதறடித்து சின்னா பின்ன மாக்கிவிடுகிறது. இதன் விளைவாக எத்தனை ஆயிரம் இளம் பிஞ்சுகள் தமது வாழ்கையை கருக்கிக்கொள்கிறார்கள் என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

முன்னர் நம் சமூகம் போதைப்பொருட்களை கண்டு, கேட்டறியாததுதான் இன்று தாயகத்தை நோக்கினால் எங்கும் போதை எதிலும் போதை என்ற நிலைக்கு வந்துவிட்டது. அரசு மற்றும் பாதுகாப்பு வழங்கவேண்டிய பாதுகாப்பு படைகளின் ஏனோ தானோ என்ற போக்கால் இன்று இப்பொருட்கள் தாராளமாக விற்பனை செய்யப்படுகின்றது. இறக்குமதி, வர்த்தகம் விற்பனையில் ஈடுபடும் மாவியாக் கும்பல்களால் நம் சமூகம் மட்டுமல்ல இலங்கைச்சமூகம் முழுவதுமே பாதிக்கப்பட்டுவருகின்றது. சட்டம் ஒழுங்கு நீதி நியாயங்கள் அறவே அழிந்து சமூகச் சீர்கேடுகள் தலை தூக்கிவருவதையே இன்றைய செய்திகள் தினமும் அறிவித்துக்கொண்டிருக்கின்றன.

கணணி கைத்தொலைபேசி, தொலைக்காட்சிப் பாவனை அளவுக்கதிகமாகக் காணப்படுவதால் போதைப்பாவனையும் அங்கு வெகுவாக அதிகரித்தே காணப்படுகிறன. இவற்றைவிட வெளிநாடுகளில் வாழ்வோர் உதவியால் அளவுக்கு அதிகமான பணம் அவர்களைச் சோம்பேறிகளாக்கிப் பல கெட்ட நடவடிக்கைகளுக்கும் ஈடுபட வாய்ப்பளிப்பதாகவும் இருந்து வருகின்றது. இந்நிலை நீடிக்குமாயின் பாரிய விளைவுகளை நமது தாயக சமூகம் சந்திக்கும் என்பது உண்மையே.

புலம்பெயர் நாடுகளிலும் இப்போதைப் பழக்கங்களுக்குப் பழக்கப்பட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். சிலர் பழகிய பழக்கத்தை விடமுடியாமல் தவிக்கிறார்கள். இன்னும் சிலர் உழைக்கும்பணத்தை இந்தப் போதைகளுக்கே செலவிடுகின்றனர். சிலர் கடனாளிகளாகியுள்ளனர், சிலர் நோய்வாய்ப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் இப்பழக்கங்களால் விற்பனையில் கொள்வனவில் ஈடுபட்டு பின் சிறைத்தண்டனை பெற்று சிறைகளில் வாடுகிறார்கள். இதைவிடச் சிலர் இந்தக்கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகியதால் கல்யாணம் செய்து வாழமுடியாதுள்ளனர். கலியாணச்சந்தையில் முதிர் கன்னிகள் முக்குழிப்பதுபோல் ...கல்யாணவயதில் ஆடவர் பலர் வாழ்வில் ஆட்டம் கண்டு அடங்கிப்போய் கண்ணிருந்தும் குருடர்களாக அறிவிருந்தும் ஆற்றல் இழந்த அடிமைகளாக மாற்றம் கண்டுள்ளனர்.

பொதுவாக போதை மற்றும் குடி சிகரட் பழக்கங்களால் இன்று பல குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வந்துள்ளன. குடும்பப்பிரிவு ஜீவனாம்சம்வரை போய் நிற்கின்றன. பெற்ற பிள்ளைகளோடு கட்டிய மனைவியோடு சந்தோஷமாக வாழமுடியாமல் சகல சந்தோஷங்களையும் தொலைத்துவிட்டு அன்னியப்பட்டு அவலவாழ்வு வாழ்கிறார்கள். இந்தப் போதை வஸ்துக்களை விற்பனை செய்யும் கடத்தல்காரக் கும்பல்கள் பெரும் பணம் சம்பாதிக்கின்றனர். ஒரு சிலர் இதனால் பெரும் பணக்காரர்களாக மாற இன்னும் பல்லாயிரம் பேரின் நல்வாழ்வு அழிந்து வருகின்றது. சிதைந்து வருகின்றது. இதனால் சகல சமூகத்திலும் கொலை கொள்ளை வழிப்பறி கற்பழிப்பு வன்முறைகள் அதிகரித்தே வருகின்றன.

ஆகவே கெட்டபழக்கமுடையவர்கள் இதை விட்டொழிக்கவேண்டும். அரசுகளும் வைத்தியத்துறை பாதுகாப்புத்துறைகள் தமது கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டும். பொதுமக்களும் சமூகங்களும் விழிப்புணர்வு பெறவேண்டும். கல்வி சமூக பழக்கவழக்கங்கள் விரிவடைந்து உயர்ச்சி பெறவேண்டும். பாதிக்கப்பட்டவர்களைப் புறக்கணிக்காமல் அவர்களுக்கான ஆலோசனைகள் வைத்திய உதவிகள் உரியமுறையில் வழங்கப்படவேண்டும்.

படிப்படியாக அவர்களுக்கு உதவிகள் வழங்கி தேவைகளை நிறைவேற்றி நட்பு, சட்டரீதியாகவும், உளவியல் வழியிலும் அணுகவேண்டும். ஆகவே இதனால் பாதிக்கப்பட்டவர்களின் நலனை மீட்டெடுக்க ஏதாவது ஒரு வழியிலாவது நாம் உதவவேண்டும். எக்கேடுகெட்டு அழிந்து போகட்டும் என்று விடாமல் பாதிக்கப்பட்ட எல்லோரும் நம் உறவுகள் என்று எண்ணி எம்மாலான உதவிகளை வழங்கிடுவோம் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வு மீட்சிபெற்று உயர்ச்சிபெற நம் மனங்களை தீட்டுவோம். நல்லமுறையில் வழிநடத்துவோம். வாழ்வோமாக!..

# 38 - போராளிகள்

ஒரு நாட்டின் இன மத நிற மண் அரசியல் தீர்வு வேண்டியும் சமநிலையில் மனிதர்கள் வாழ்வதற்கும் பல நாடுகளில் பாகுபாடுகள் அடிமைத்தனம் வெறிகள் போன்ற பல வேறுபாடுகளை களைந்தெறிவதற்காகவும் போராளிகள் தோன்றி இருக்கிறார்கள். பல நாடுகளில் பல ஆண்டுகளாக நிலவிய சாத்வீக மற்றும் ஆயுதப்போராட்டங்கள் வெற்றிகண்டிருக்கின்றன. ஒவ்வொரு தேசத்திலும் இடம்பெற்ற, இடம்பெற்றுவரும் தேசவிடுதலை என்பது ஒவ்வொரு நாட்டின் பௌதீகச்சூழல் வாழ்வியல் அரசியல், பொருளாதாரச் சூழல்களால் போராட்ட வடிவங்கள் வேறுபடுகின்றன.

போராளி என்பவன் மானிட விடுதலைக்காக தன்னுயிரை அர்ப்பணிக்கின்றான். இன்னும் பலர் போராட்டத்தில் தமது அவையங்களை இழந்து வாழ்நாள் முழுவதும் மனவேதனையுடன் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். ஒரு போராளி தேசவிடுதலைக்காக தன்னுயிரை அர்ப்பணித்து விடுதலை வேள்வியில் ஆகுதியாகி வாழ்நாள் சரித்திரம் படைக்கின்றான்.

போராளிகள் பிறரின் நல்வாழ்வுக்காக தம்முயிரை துச்சமென மதிக்காமல் போராடி மடிகின்றார்கள். இப்படிப்பட்ட போராளிகளின் மனம் எவ்வளவு புனிதமானது. இன்பங்களை துறந்து ஆசா பாசங்களைக் களைந்து உறவுகளை இழந்து விடுதலை என்னும் முத்தைச் சுமந்து இறுதியில் தமது வித்துடலை இந்த மண்ணுக்கு அர்ப்பணித்து உத்தம புரிசர்களாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் தியாகங்களுக்கு நாம் தலைவணங்குவோம்.

நமது தாயகதேசத்திலும் விடுதலை என்னும் வேள்வியில் பல இயக்கங்கள் கட்சிகளைச் சேர்ந்த பல ஆயிரம் போராளிகள் கடந்த நாற்பது ஆண்டுகளில் மாண்டு மடிந்திருக்கிறார்கள். இவர்களோடு இலட்சக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களும் இந்த விடுதலைப் போராட்டத்தில் உயிர்துறந்திருக்கிறார்கள் என்பது

சரித்திரமாகப் போய்விட்டது. மண் இழந்து உடமைகள் இழந்து வீடுகள் இழந்து சொத்து சுகம் இழந்து மாண்டவர்கள் போக எஞ்சிய மக்களின் மீதிவாழ்வும் இன்றுவரை நல்வாழ்வாக அமையவில்லை போரின் எச்சங்களாக ஆதரவற்ற சிறார்கள் விதவைப் பெண்கள், அவையங்கள் இழந்தவர்கள் என எஞ்சியிருப்பதுடன் அவர்களின் எதிர்கால வாழ்வும் கேள்விக்குறியாக்கப்பட்டிருப்பது வேதனை தரும் விடையமாகும்.

போரால் அழிந்த நமது ஊர்கள் கிராமங்கள் நகரங்களைப் பார்ப்பதற்காகவும் வடகிழக்கில் இயங்கிவரும் ஆதரவற்ற சிறார்கள் இல்லங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இல்லங்களை நேரடியாகப் பார்ப்பதற்காகவும் 2015 அக்டோபர் மாதம் தாயகம் சென்றிருந்தேன். அப்போது கிளிநொச்சி முல்லைத்தீவு திருகோணமலை மட்டக்கிளப்பு வவுனியா யாழ்ப்பாண மாவட்டங்களில் பல இல்லங்களை பார்வையிட்டதோடு பாதிக்கப்பட்ட பலரோடு பழகி அவர்களின் வாழ்வாதாரத்திற்கு மேலும் உதவப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இந்த விஜயத்தின்போது பல முன்னாள் போராளிகளையும் சந்தித்து உரையாடி அவர்களின் தற்போதய நிலமைகளையும் அறிந்து கொண்டேன். நெஞ்சை வருடிய பல விடையங்கள் ..போதுவாகப் பார்க்கும்போது முன்னாள் போராளிகளின் எதிர்காலவாழ்வு பல துன்பங்களையும் சோகங்களையும் சுமந்து நிற்கின்றன. எந்த மக்களின் விடுதலைக்குப் போராடினார்களோ அந்த மக்களால் புறக்கணிக்கப்பட்டு வாழ்வதை காணக்கூடியதாக இருந்தது.

வன்னியில் ஒரு போராளி போரில் ஒரு காலை இழந்துவிட்டார் சுமார் 28-30 வயதிருக்கும். அவர் அந்த விழுப்புண்ணுடன் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம்பெற்று தற்போது பிரதேச செயலகம் ஒன்றில் கடமை புரிகிறார். அவர் தனது கடமையுடன் அப்பிரதேசத்தில் போரால் பாதிக்கப்பட்டு கை கால் போன்ற அவையங்களை இழந்த போராளிகளுக்கு மறுவாழ்வு அமைப்பு (ஒளிரும் இல்லம்) ஒன்றை நிறுவி அவர்களின் நல்வாழ்வுக்குப் பல செயற்திட்டங்களை செய்துவருகிறார்.

இன்னொரு போராளி -அவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் -ஆனையிறவுச்சமரில் ஒரு காலை இழந்தவர். ஒரு முன்னாள் போராளிப் பெண்ணை மணந்து தற்போது மூன்று பிள்ளைகள். வாழ்வாதாரம் இல்லை உழைப்பு இல்லை வருமானம் இல்லை அவரது சகோதரர்களும் விடுதலைப்போரில் இறந்துவிட்டார்கள். பிள்ளைகளின் உணவு உடை கல்வி செலவுக்கே வழியில்லை. உதவிகளும் இல்லை. போதாக்குறைக்கு அடிக்கடி பொலிஸ் விசாரணை. இதற்கும் மேலால் தமிழ் சமூகம் தம்மை ஒரு இழிநிலையில்தான் பார்க்கின்றதாகவும் தாம் போரில் இறந்திருந்தால் நின்மதி என கண்ணீர் மல்கத் தனது நிலமையை எடுத்துரைத்தார். அந்தப் போராளியின் துயர்துடைக்க என்னால் சிறு பண உதவிதான் புரியமுடிந்தது.

இப்படி பல முன்னாள் போராளிகள் ஒவ்வொருவர்க்கும் ஒரு கண்ணீர்க்கதை உண்டு. விடுதலைக்காக எந்தமக்களின் நலனுக்குப் போராடி சீர்குலைந்தார்களோ அந்த மக்களின் நன்றிகெட்ட பார்வையும் நோக்கும் செயலும் துரோகத்தனமும் பாராமுகமும் அவர்களின் எதிர்கால வாழ்வை சீர்குலைத்துவருவது வேதனைதரும் விடயமாகும்.

விடுதலைப்போராளிகள் சரி பிழைகளுக்கப்பால் ஏதோ ஒரு வகையில் தியாகிகள்தான் என்பதை நம்மனங்களில் பலர் மறுப்பதும் ஏனோ? சுயநலம் மிக்க நம்மினத்தவர்களில் பலர் இந்த முன்னாள் போராளிகளை மதிக்காமல் அவர்களின் எதிர்கால வாழ்வை மிதிப்பதும் ஏனோ? ஆகவே அவர்கள்படும் மன வேதனையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அந்த நல்ல மனங்கள் நன்றாக வாழவேண்டும். முடிந்தால் உதவலாம் ..முடியாவிட்டால் அவர்களுக்கு துன்பம் ஊட்டாமல் இருக்கவேண்டும். மக்களின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்து உயிர் துறந்த அத்தனைபேரையும் துதிப்போம். முடிந்தது முடிவாகப் போகட்டும் மிகுதியாக அல்லல்படும் அந்தத் தியாகிகளையும் வாழ வழிசெய்வோம்.

# 39 - ஏங்கித்தவிக்கும் மனசுகள்

நமது வாழ்வில் கிடைக்காத காரியங்களுக்கும் கிடைத்த சில முடிவுகளுக்காகவும் மனது ஏங்கித்தவிக்கும். ஒவ்வொருவருடைய வாழ்க்கை முறை வாழ்வியல் சூழல் போன்ற பல காரணங்களால் ஏங்கும் மனங்கள் வேறுபட்டாலும் நமது தேவைகள் ஆசைகள் விருப்புகளோடு தான் இந்த ஏக்கமும் கலந்துள்ளது. நமது தேவைகளையும் ஆசைகளையும் எவ்வளவு கூட்டிக்கொள்கிறோமோ அவ்வளவுக்கு நமது மனதும் ஏங்கித்தவிக்கும். புலம்பெயர் சூழலில் ஏங்கித் தவிக்கும் நமது இனத்தவர்களின் ஏக்கங்களோ பல விதம். அவற்றில் ஒரு பெண்ணின் ஏக்கங்கள் பற்றியதாகவே இச்சிறிய கட்டுரை அமைகின்றது.

நான்கு பெண்களில் மூத்தவளாகப் பிறந்தவள்தான் பரிமளா. தாயகத்தில் பல்கலைக்கழகப்படிப்பை முடித்துப் பட்டம் பெற்ற கையோடு வெளிநாட்டிற்கு கல்யாணத்துக்காய் அனுப்பப்பட்டாள். வீட்டில் நான்கு பெண்பிள்ளைகளை வைத்துக்கொண்டு ஒன்றும் செய்ய முடியாது நீ வெளிநாட்டுக்குப் போனால் மற்றைய சகோதரிகளுக்கும் வழிபிறக்கும் என்ற பெற்றோரின் வேண்டுதலால் தனது படிப்பு தொழில் தேடும் விடயங்களை நிறுத்திவிட்டுக் கனத்த மனதுடன் ஏங்கித் தவித்தபடியே வெளிநாடுவந்தாள்.

வெளிநாட்டில் அவள் மனதுக்கு ஏற்ற கணவன் கிடைக்காவிடினும் கிடைத்த கணவனோடு வாழத்தானே வேண்டும். மனதைத் தேற்றி வாழ ஆரம்பித்தாள். ஏக்கமும் தவிப்பும் ஆரம்பித்தன. வெளிநாட்டில் சில ஆண்டுகள் உருண்டன. கணவருக்கும் இந்த நாட்டு மொழி சரியாகப் பேச வாசிக்க எழுதத்தெரியாது. தனக்கும் தெரியாது. அடுத்தடுத்து சுமைகள் கூடியதுடன் இரு பிள்ளைகளும் பிறந்துவிட்டனர். தனக்கும் பிள்ளைகளுக்கும் ஏதும் வருத்தம் வந்துவிட்டால் டாக்டரிடம் சரியாக விளங்கப்படுத்த முடியவில்லையே என்ற ஏக்கம் ஆரம்பமாகியது. வைத்தியர் பாடசாலை தொழில் எல்லாவற்றிற்கும் அந்த மொழி தெரியவில்லையே என்ற மன ஏக்கம்.

தாயகத்தில் தான்படித்த பட்டப்படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்கவில்லையே என்ற ஏக்கம். அங்கே என்னதான் பட்டதாரியானாலும் இங்கு (கூட்டல் கழித்தல் பெருக்கல்) துப்பரவு..அதாவது கூலிவேலை தானே செய்யவேண்டும். இந்த நாட்டு மொழியைப்படித்து நல்லவேலை தேடலாம் என்றால் முடியாதகாரியமாகவும் போய்விட்டது. எல்லாச் செலவுக்கும் கணவனை எதிர்பார்த்து வாழவேண்டிய ஏக்கம் தான் மிஞ்சியது. ஏன் அரசாங்கம் தரும் சோசல்பணம் மற்றும் குழந்தைகள் கொடுப்பனவுப்பணத்தில் மிச்சம்பிடித்து தனது சகோதரிகளின் படிப்புச்செலவுக்கு சிறிது பணம் அனுப்பலாம் என்றால் முடியாது. கணவனின் ஆதிக்கமும் கணவன் வீட்டாரின் நச்சரிப்பும் ஏங்கித் தவிக்கவைத்தன.

இந்த நாட்டு மொழியைச் சரிவரப்படிக்காத காரணத்தால் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுக்க முடியவில்லை என்ற ஏக்கம். பாடசாலை ஆசிரியர்களோடு கதைக்கமுடியாமல் போனதும் பிள்ளைகளின் நலனில் கூடிய கவனம் எடுக்கமுடியவில்லையே என்ற ஏக்கம் குடிகொண்டது. காலம் ஓடியது.இரு பெண்பிள்ளைகளும் வளர்ந்துவிடவே நல்ல தரமான பாடசாலை (Gymnasium) கிடைக்கவில்லையே என்ற ஏக்கம். பிள்ளைகள் வளர வளர ...அவர்களின் பரீட்சை முடிவுகள் ஒவ்வொரு ஆண்டும் அதிக புள்ளிகள் பெறவேண்டும் என்ற ஏக்கம்.

இதற்கிடையில் இருவரும் பருவ வயதை அடைவார்களோ ...அடைந்தால் பின் அவர்களின் பாதுகாப்பு பராமரிப்பு பற்றியும் ஏக்கம் தொற்றிக்கொண்டது. இப்போ இரு பிள்ளைகளும் பிற ஊர்களில்லுள்ள வெவ்வேறு பல்கலைக்கழகங்களில் படிப்பு. அவர்களின் உணவு தங்குமிடம் நல்லபடிப்பு உடை பாதுகாப்பு பயணம் எல்லாம் ஏக்கம் தான். போதாக்குறைக்கு யாரையும் பிறநாட்டவரை திருமணம் செய்துவிடுவார்களோ என்ற ஏக்கம் .இதைவிட தமிழரைக்கல்யாணம் செய்யவேண்டும் நல்ல சாதியில நல்ல ஊரிலை என்றும் ...குறிப்புசாதகம் நிறம் குணம் பணம் என்றெல்லாம் தவியாத் தவிக்கவேண்டியுள்ளதே.

ஒருமகள் கல்யாணமும்...அதாவது தான் விரும்பியபடி ஒரு தமிழ் பெடியனைத்தான் செய்துகொண்டாள்.கல்யாணம் முடிந்தது

என்று நின்மதியாகத்தான் இருக்க முடியுமா? அவர்கள் ஒற்றுமையாக வாழ்கின்றார்களா என அல்லும் பகலும் ஏக்கம்.ஏனென்று பார்த்தால் இங்கு விவாகரத்து என்பதும் சர்வசாதாரணமாக எங்கள் பிள்ளைகளிலும் தொற்றிக்கொண்டுவிட்டது. அடுத்து ஒருபிள்ளை பிறந்தால் போதாதென்று பேரன் பேத்திக்கு ஏக்கம். ஆனால் இளசுகளோ ஒன்றே போதும் என்ற ஏக்கம்.

ஒன்று இரண்டு பேரப்பிள்ளைகள் பிறந்தாலும் அந்தப்பிள்ளைகளை தமது வீட்டில் வைத்துப்பராமரித்து கொஞ்சி மகிழமுடியவில்லையே என்று வயதானவர்களுக்கு இன்றும் ஏக்கம். ஊரில் என்றால் எத்தனை பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் இங்கு ஒன்று இரண்டுதான். அவர்களும் வெவ்வேறு நாடு என்றால் வயதானவர்கள் ஏக்கத்துடன் வாழ்வுதான். இதிலும் கணவன் அல்லது மனைவி வயதாகி இறந்தால் தனிமரம்தான். வயோதிபர் இல்லத்தில் ஒரு மூலையில் மொழியும் பேசமுடியாமல் ஏக்கத்துடன் இறுதிக் காலத்தைக் கழிக்கவேண்டியதே நியதியாகிவிட்டது.

அடுத்து ஊரிலோ அல்லது தற்போது வசிக்கும் நாட்டிலோ உறவுகள் நண்பர்கள் இறந்துவிட்டால் குழறி அழமுடியாதே என்ற ஏக்கம். அப்படிக் குழறி அழுதால் சுற்றத்திலுள்ள மற்ற நாட்டவரிடம் பேச்சு வேண்ட வேண்டும் என்ற ஏக்கம். இதுவும்கூடி அழுதால் பொலிசும் வந்து பிரச்சனை ஏதும் வந்துவிடுமோ என்பதும் ஏக்கம்தான். நம்மவர்களைப் பொறுத்த அளவில் பலருடன் கூடிக் குளறி அழுது தீர்த்தால் மனதுக்கு எவ்வளவோ பாரம் குறைந்துவிடும் என்பது அனுபவ ரீதியாகக் கண்ட உண்மையும் உண்டுதான்.

இருப்பினும் புலம்பெயர் சூழலில் இன்னும் ஆயிரம் ஏக்கங்களுடன் ஆயிரக்கணக்கான தமிழ் உறவுகள் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.உற்றார் உறவுகளைப் பிரிந்து சொந்த பந்தங்களை விட்டு இங்கு நோயாளிகளாகி, ஏன்வந்தோம் ஏன்வாழ்கிறோம் என்று தெரியாமல் ஏக்கங்கள் நிறைந்த மனதுடன்தான் வாழ்வு நகர்கிறது. ஏங்கித்தவிக்கும் மனதுகளில் நானும் ஒருவனாகத்தான் இருக்கிறேன் பரிமளாவைப்போல் எத்தனை ஆயிரம் பரிமளாக்கள் புலம்பெயர் தேசங்களில் ஏங்கித்தவிக்கிறார்கள்.!..

# 40 - மாற்றுத்திறனாளிகள்

மனிதவாழ்வில் இயற்கையாக அவையங்கள் குறைபாடோடு பிறந்தவர்கள் யுத்தம், போர், மற்றும் இயற்கை அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டு தமது அவையங்களை இழந்தவர்களை நமது ஊர் வழக்கில் முடவர்கள், இயலாதவர்கள், நொண்டி, குருடு, செவிடு என்றெல்லாம் நமது சமூகம் பேசுவது வழக்கமாகும். மனிதவாழ்வில் அடுத்த நிமிடம் தமக்கு என்ன நடக்கும் என உணராமல், மற்ற உயிர்களின் ஆசாபாசங்களை புரிந்துகொள்ளாமல், அறிவீனத்தால் இப்படி அழைத்துக் கேவலப்படுத்துவார்கள்.

நாளடைவில் பண்பாடு மனிதநேயத்தைப் புரிந்து கொண்டவர்களால் இவர்களை உடல் ஊனமுற்றவர்கள் மாற்றுத்திறனாளிகள் என்று அழைக்கலாயினர். இந்த மாற்றுத்திறனாளிகளிடமும் அற்புதமான கல்வி அறிவு, திறமை, முயற்சி குடிகொண்டிருப்பதால் இவர்கள் பல சாதனைகளைப்புரிந்து, உயர்ந்து நிற்கிறார்கள். இப்படிப்பட்ட ஒருவரின் விடயத்தை உங்கள் பார்வைக்கு எழுதப்படுகின்றது.புலம்பெயர்ந்து வந்தவர் தான் ஒரு மாற்றுத்திறனாளி.அவருக்கு சிறுவயதிலே இளம்பிள்ளைவாத நோய் வந்ததால் ஒரு கால் பாதிக்கப்பட்டிருந்தது.

அவர் ஜேர்மனிக்கு வரும்போது பாதிப்போடுதான் வந்து சேர்ந்தார். அவர் வந்து அகதிமுகாமில் தங்கி வாழ்ந்த காலத்தில் பல இன்னல்களை அனுபவித்தார். மாடிப்படிகளில் ஏறமுடியாமலும் சில வேலைகளை தனியே செய்ய முடியாமலும் கஷ்டப்பட்டார். இது ஒருபுறம் இருக்க நம்மவர்களின் "நொண்டி", "முடவன்" என்று இழிந்துரைப்பதை பொறுக்கமுடியாமல் வேதனைப்பட்டார்.

அவர் படிப்பை, கல்வியை ஆயுதமாகக் கையில் எடுத்து ஜேர்மன் மொழியைப் படித்துத் தேறினார். நம்மவர்கள் பலர் களவாக வேலைசெய்து கறுப்புப்பணம் உழைக்க இவரோ இந்த நாட்டு மொழியைப் படித்து எழுத, வாசிக்க, பேச நன்கு தேர்ச்சி பெற்றார். ஒரு மொழிபெயர்ப்பாளராக அரச அங்கீகாரம் பெற்றார்.

நம்மவர்களின் சுயநலம் தெரியும்தானே. தமது மொழிபெயர்ப்பு வேலைகளுக்கு அவரைப் பயன்படுத்திப் பல நன்மைகள் பெற்றுக்கொண்டனர்.

அவருக்கு முப்பத்தைந்து வயதை எட்டிப்பிடித்தது. தற்செயலாக சந்தித்தார் ஒரு தமிழ் பெண்ணை. அவளும் இப்படிப்பட்டவர்களோடு வாழ்ந்து அவர்களுக்கு ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தலாம் என முடிவுசெய்தாள்.தன்னையே தியாகம் செய்தாள்.வீட்டார் மற்றும் நம்மவர்கள் பலரின் எதிர்ப்புக்கும் மத்தியில் அவனைக் கரம்பிடித்தாள். அவர்கள் இருவரும் மணம் முடித்து சோடியாக எங்கே சென்றாலும் நம்மவர்கள் கண்கள் சும்மா விடுமா? "நொண்டியை கல்யாணம் செய்தவள்" "இவளுக்கு வேறு ஆண் கிடைக்கவில்லையோ?" என்றெல்லாம் ஏளனம் செய்து இருவரின் மனங்களையும் நோகடித்தனர்.

சிறிது காலத்தால் அவர்களுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அந்தப்பிள்ளையும் பிறக்கும்போது நிறை ஒரு கிலோகூட இல்லை. ஆதலால் நம்மவர் பலர் கூறினார்கள் "இவையளுக்கு ஏன் பிள்ளை" "பிள்ளை நிறை குறைவாகப் பிறந்தபடியால் இது தப்பாது" "இந்தப்பிள்ளை தப்பினாலும் நொண்டியாகத்தான் வரும் " என்றெல்லாம் வசைமொழிகள் பேசி மனங்களை துன்பப்படுத்தினர். ஒவ்வொருவரும் இரண்டு மூன்று பிள்ளைகளுடன் இன்பமாக வாழ்ந்துகொண்டு மற்றவர்கள் மீது அவப்பழி சொல்வதும் கேவலப்படுத்துவதும் நம்மவர்களின் கைவந்த கலைதானே?

"சொல்பவர்கள் எதையும் சொல்லட்டும்" "பழிப்பவர்கள் எதையும் பழிக்கட்டும்" நாங்கள் இருவரும் வாழ்ந்து காட்டுவோம் என உறுதிகொண்டனர். இருவரும் கல்வியை ஆயுதமாக எடுத்துப்படித்து நல்ல வேலையும் செய்து சில ஆண்டுகளில் சொந்தமாக வீடு, கார் என வசதியோடு வாழ வாழ்வில் வசந்தம் வீசியது.அவர்களைப் பழித்தவர்கள் ஏளனம் செய்தவர்கள் எல்லோரும் வியப்பில் மௌனமானார்கள். இந்தப் பிள்ளை எதுவித குறையுமில்லாமல் சாதாரண பிள்ளைகளைப்போல பிறந்து வளர்ந்து கல்வியில் உயர்ந்து பல்கலைக்கழகம் முடித்து இன்று அரசாங்க ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

அவர்களது அடுத்தபிள்ளையும் பிறந்து வளர்ந்து விட்டது. எந்தவித குறையும் இல்லை. அழகான பிள்ளை. இப்போ பீ ஏ பட்டப்படிப்பை முடித்து எம் ஏ பட்டப்படிப்பை முடித்து வங்கி ஒன்றில் உயர் அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார். நம்மவர்கள் நரம்பில்லாத நாக்கால் எதையும் பேசுவார்கள்தானே . மூத்தப்பிள்ளை பிறந்தபோது "கண்ணாடிப் பெட்டிக்குள் கிடக்கிறது இது தப்பாது" "தப்பினாலும் தகப்பனைப் போல நொண்டிதான் என்று ஏளனம் செய்தவர்கள்..இப்போ அந்தப்பிள்ளையின் அழகு வடிவு குணம் நடை பண்பாடு கல்வி என எல்லாவற்றையும் பார்த்து வெட்கப்படுகின்றனர். மௌனமாக நிற்கின்றனர். இத்தனைக்கும் மேல் குறை கண்டுபிடித்தவர்களின் பிள்ளைகளோ பல்கலைக்கழக வாசலும் தெரியாமல் குடி சிகரட் போதை வஸ்துப் பாவனைக்கு அடிமையாகி வாழ்வு சீரழிந்ததுதான் முடிவாகியது.

ஆம் ..குறைபாடுடைய மனிதர்களுக்கு நம் சமூகம் முக்கியத்துவம் கொடுப்பது குறைவு. இவர்களை ஒதுக்கிவைத்து உரிமைகளை பறித்து கேவலப்படுத்துவது என்ன நியாயம். மனிதப்படைப்பில் எல்லோரும் ஆண்டவனின் பிள்ளைகள் தானே. தாய் நாட்டிலும் வெளிநாடுகளிலும் நம்மவர்கள் பலர் வசதிகளுடன் வாழ்ந்துகொண்டு இப்படிப்பட்டவர்களை மனிதர்களாக மதிக்காமல் அவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் இன்றும் இப்படியான மனநிலையில் வாழ்வோரை எப்படி அழைக்கலாம்?

இன்று உலகப்பரப்பில் மாற்றுத்திறனாளிகளின் சாதனைகள் உச்சத்தைத் தொட்டுள்ளன. கல்வி, கணனி, பொருளாதாரம், அரசியல் ,விளையாட்டு, கலை, இசை, விஞ்ஞானம், எனச்சகல துறைகளிலும் உயர்ந்து நிற்கிறார்கள். சாதனை படைக்கிறார்கள். ஆகவே முதலில் மனிதர்களை மதிக்க நம் மனங்களைப் பக்குவப்படுத்த வேண்டும் அவர்களின் சுக துக்கங்களில் கலந்து கொண்டும் எல்லோரும் இன்புற்று சரிசமமாக வாழ துணை நிற்போம்!...

# 41 - ஒரு கலைஞனின் இறுதிப்பயணம்

நல்ல ஒரு மனம்படைத்த ஒரு கலைஞனின் இறுதிப்பயணங்கள். ஒரு சமூகத்தில் ஒரு கலைஞன் என்பவனின் பங்களிப்பானது எவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது. இயல், இசை, நாடகம் என்று கூறப்படும் முத்தமிழின் சிறப்புக்கு வளர்ச்சிக்கு அங்கமாக விளங்குபவர்களும் கலைஞர்கள்தான். ஆணாக இருக்கலாம் அல்லது பெண்ணாக இருக்கலாம் ஒருவரின் கலை, இலக்கிய, எழுத்து, பொதுச்சேவை, நல்நடத்தையை நம் சமூகம் உற்று நோக்குகின்றது. நல்ல ஒரு கலைஞன் என்பவன் அந்தச் சமூகத்தின் கலை கலாச்சாரம், பண்பாடு, விழுமியங்களை கட்டிக்காத்து வளர்த்துவர வேண்டும். கலைகளையும் வளர்த்து தானும் வளரவேண்டும். அதுவே சிறப்பாக அமைந்துவிடும்.

இங்கு அதாவது புலம்பெயர் சூழலில் ஒரு ஈழத்துக்கலைஞனின் மனப்போராட்டம், ஆதங்கம், வாழ்ந்த வரலாறு, தான் வாழ்ந்த சமூகத்தில் தனக்கிருந்த பங்கு, என்னத்தை விட்டுச் சென்றான் என்ற சில விடையங்களையும் அவனது மனக்கிலேசங்களையும் சிறிது பார்ப்போம். புலம்பெயர் நாடு ஒன்றில் காலூன்றிச் சுமார் 25 ஆண்டுகள் அதாவது வெள்ளி விழாவைக் கண்ட கலைஞன்தான் இவர்.தாயகத்தில் பல அரங்குகளைக் கண்டவர். பல்லாயிரம் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். நாட்டில் உயிராபத்துக்கள் நெருங்கவே 1987ம் ஆண்டளவில் புலம்பெயர்ந்து வெளிநாடு ஒன்றில் வாழத்தொடங்கினார். இரு பிள்ளைகளையும் மனைவியையும் விட்டுவிட்டுத்தான் வெளிநாட்டுக்கு வந்து சேர்ந்தவர். இங்கு வந்த கலைஞன் எல்லோரும் வேலை செய்து சம்பாதிப்பதைப் போல தானும் ஒரு கம்பனியில் வேலையை ஆரம்பித்து சில வருடங்கள் ஓடின.

சிறிதுகாலம் கலைத்துறைக்கு ஓய்வு கொடுத்து பணத்துறையைப் பெருக்கிக்கொண்டார். ஓடி...ஓடி உழைப்பு பணம், கார் வசதிகள் பெருகியது. ஊரிலும் வீடு, வளவு, காணி, பணம் எனக் குறைவே இல்லை. பிள்ளைகளும் வசதியான நல்ல பாடசாலைகளில் படிப்பு, ஊர்ச்சமூகத்திலும் நல்ல மதிப்பு..வாழ்க்கை ஓகோ என்று ஓடியது.

ஆனால் நீண்ட வருடங்களாகியும் மனைவி பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அழைக்கவில்லை. தனிமை வாழ்வுதான். ஆண்டுகளும் பல உருண்டுவிட்டன. எப்படி, எங்கு, யார்...யாரோடு வாழ்ந்தாலும் ஆடிய கையும் காலும் பாடிய வாயும் நாக்கும் ரசனையும் சும்மா கிடக்குமா!... காசு இருந்தென்ன..வசதிவாய்ப்புக்கள் இருந்தாலென்ன!..மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டு சந்தோசமாக வாழாத வாழ்க்கைதான் ஏன் என்று சிந்தித்தார். புலம்பெயர் நாடுகளிலும் பல நண்பர்களோடு சேர்ந்து தனது கலை வெளிப்பாடுகளை மேடை ஏற்றிப் பல ஆயிரம் ரசிகர்களை மகிழ வைத்தார். மேடைகள் அதிகரித்தன. நாடுகள் பலவற்றிற்குச் சென்று நிகழ்ச்சிகளை நடத்தினார். இதனால் பெயர் புகழ் வளர்ந்தது. வயதும் ஏறியது.

தாய் நாட்டுக்குப் போய்வருவதோ மிகக்குறைவு. ஐந்து ஆறு வருடங்களுக்கு ஒருமுறைதான் போய்வருவதுதான் வழக்கமாகியது. குடும்ப சந்தோசங்களைத் தொலைத்தாலும், புலம்பெயர் நாடுகளில் அவர் பெயர் புகழ் ஓங்கியது. ஒன்றை இழந்தால்தான் இன்னொன்றைப் பெறலாம் என்று கூறுவார்கள் அதன்படிதான் அவரின் வாழ்வும் ஓடியது. நான்கு ஐந்து நாட்களாக இவர் வேலைக்குப் போகவில்லை. ஒருவரோடும் தொலைபேசியில் கதைக்கவும் இல்லை. வேறுநாட்டுக்குச் சென்றுவிட்டாரோ.அல்லது தாயகம் சென்றுவிட்டாரோ..அல்லது நண்பர் உறவுகள் வாழும் பிற நாடுகளுக்குச் சென்று விட்டாரோ எனப் பலர் விசாரிக்கையில்....

வேலைதந்த கம்பனி முதலாளிதான் இவர் இறந்த செய்தியை கவலையோடு தெரிவித்தான். தனிமையில் வாழ்ந்த இவரின் உடல் அசுத்தமணம் வீசியதால் பக்கத்துவீட்டு வெள்ளைக்காரன் பொலிசுக்கு அறிவித்து பொலிசுவந்து இவரின் பழுதடைந்த உடலை எடுத்துச் சென்றனர். உடலம் சீரழிந்தபடியால் ஊருக்கு அனுப்பமுடியாது என்று கூறிய பொலிசார் அவரது உடலை இங்கேயே அடக்கம் அதாவது எரித்துவிட்டு அதன் சாம்பலை மட்டும் அவரது மனைவிக்கு அனுப்பி வைத்தனர். பணம் என்ற பேயால் அலைந்து, உடலை வருத்தி, குளிர், பனி என உழைத்தார். மனைவியோடு வாழவும் இல்லை. பிள்ளைகளோடு கூடிக்குலாவி அன்பைப் பரிமாறவும் இல்லை. ஒப்பற்ற கலை, புகழ்,

பணம், சொத்துக்கள் இருந்தும் என்ன பிரயோசனம். மனிதன் வாழாமல் சென்றுவிட்டாரே. ஊரிலும் வெளிநாடுகளிலும் எத்தனை ஆயிரம் பேரை மகிழ்வித்த கலைஞன், எத்தனை மேடைகள்கண்ட கலைஞன், புகழ்படைத்த கலைஞன் இறுதியில் தனிமையில் கிடந்து, ஆதரவற்றவர்போல் இறந்து மறைந்துவிட்டாரே!..

நம்நாட்டில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், தம்மைச்சமூகத்துக்கு அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள், மற்றும் படைப்பாளிகள், ஏன் போராளிகளுக்குக்கூட இறுதிக்காலகட்டத்தில் கிடைப்பது பசியும், பட்டினியும், வறுமையும், இயலாமையும்தான். தான் வாழும் சமூகத்தைச் சிந்திக்க வைத்து, அறியாமையை அகற்றி, மூடநம்பிக்கைகளை விலக்கி, வாழ்வை நல்வழிப்படுத்தப் பாடுபட்ட கலைஞர்கள் எழுத்தாளர்கள் இறுதிக்காலங்களில் பட்ட துன்பங்களைச் சுமந்து வலிகளோடு வாழ்ந்து முடிப்பார்கள். இதைத்தான் நம் தாய்நாட்டுச் சமூகம் கொடுக்கும் சன்மானமாக இருந்துவருகின்றது.

ஆனால் புலம்பெயர் வாழ்வியலில் பணம் பொருள் வசதி வாய்ப்புக்கள் இருந்தும் பல கலைஞர்களும் எழுத்தாளர்களும் தமது ஆற்றல்களையும் அனுபவங்களையும் சரியாகப்பயன்படுத்தாபடியால் இறுதியில் இவரைப்போன்ற பல முடிவுகளைத்தான் சந்திக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய விடையமாகும். தனது மனைவியையும் பிள்ளைகளையும் வெளிநாட்டுக்கு அழைத்துச் சந்தோசமாக வாழ்ந்திருக்கலாம். சந்தர்ப்பங்களை தவறவிட்டுவிட்டார் என்று சொல்வதா!..அல்லது உழைத்துக்கொண்டு தாயகம் சென்று பிற்காலத்தில் வாழலாம் என்று சிந்திருப்பாரா!..

தெரியாத புதிர்தான் ஆழமறியமுடியாத மனிதரின் மனதுக்குள் எத்தனை ஆயிரம் பதிவுகள் இருக்கும். எத்தனை ஆயிரம் மனங்களோடு பேசி மகிழ்ந்த இந்த ஒப்பற்ற கல்லைஞனின் மனதுக்குள் என்ன இருந்தது என்று யார் அறிவர்!..மனிதர்களின் மனங்கள் பலவிதம். இவரின் மனமும் ஒருவிதம்தான்!... ஆகவே பட்ட அனுபவங்கள், கேட்டு அறிந்த அனுபவங்கள், அல்லது படித்து அறிந்த அனுபவங்களை நாம் பாடமாகக்கொண்டு நமது எண்ணங்களை அதாவது நமது மனங்களை நல்வழிப்படுத்தி வாழ்வோம்!. மனித மனங்கள்தான் எத்தனை விதம்!...

# 42 - சிசு

மனிதப் படைப்பில் பெண்களின் படைப்பானது முதன்மை பெற்று விளங்குகின்றது. சகலதும் பெண்ணாலேயே படைக்கப்படுவதனால் இந்தப் பூமி பெருமிதம் கொள்கின்றது. பெண் இனம் இந்தப் பூமியில் தோன்றியிருக்காவிடின் இந்த உலகம் எப்படி இருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்த்தால்....ஆதலால்தான் இறைவன் என்பவனால் பெண்கள் படைக்கப்பட்டார்கள் என்று சொல்லப்படுகின்றது. ஒரு பெண்ணானவள் பிறந்து இறக்கும்வரை எத்தனையோ உருவங்களை எடுத்து இந்த உலகத்தை நல்வழிப்படுத்துகிறாள் என்பது மகிமையே.

மனிதரில் எத்தனை நிறங்கள் குணங்கள் என்ற வகையில் ஒரு தமிழ்த் தம்பதிகளின் மன ஓட்டத்தையும் வாழ்வியல் கோலங்களையும் எடுத்து நோக்குவது காலத்தின் கட்டாயமாகும். சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் வாலிபனாய் வெளி நாட்டிற்கு வந்த குமரன் தன் பெயரைப் போல பக்தி உடையவன். சாத்திரம் சம்பிரதாயம் அது இது என நம்பிக்கை நிறைந்தவன். கால ஓட்டத்தில் திருமண வயதை எட்டவே தாய், தந்தையரின் விருப்பப்படி கொழுத்த சீதனமாக வீடு, வளவு, சொத்து, பணம், நகை என எல்லாம் வேண்டியே திருமணமும் நடைபெற்றது. அதாவது வெளிநாட்டு மாப்பிள்ளை என்றால் தற்போது ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு றேட் (சீதனம்) அள்ளிக் கொட்டினால்தான் திருமணம் நிறைவேறும். சீதனக் கொடுமையும் சாதி சமயக்கொடுமைகளும் தமிழர் இரத்தத்தோடு ஒட்டிய விடயம்தானே!..

குமரன்-நந்தினி திருமணம் வெளிநாட்டில் ஓகோ என்றுதான் நடைபெற்றது. நந்தினி நாட்டில் ஏ.எல் படித்தாலும் புலம்பெயர் நாட்டு மொழி அவளுக்குப் புதிதுதானே. படிப்பதற்கு குமரனும் விடவில்லை. வீட்டுவேலைகள் செய்து, தனக்குப் பணிவிடைசெய்து, ருசியாய் சமைத்துத்தந்து, கட்டில் சுகம் தந்தால் போதும் என்பதுதான் அவன் மனப்பதிவாகும். இதுதான் பெண்ணுக்கு இலட்சணம் என்றும் எண்ணிக்கொள்வான்.

திருமணம் முடிந்து ஒருவருடம் ஆகமுன்னர் நந்தினிக்குக் குழந்தை உண்டாகிய விடையத்தை அறிந்து அளவில்லா ஆனந்தம் அடைந்தான். தனக்கு ஆண் பிள்ளைதான் முதல் பிள்ளை பிறக்க வேண்டும் என எண்ணிக் கொண்டான். தனது தாய்-தந்தையருக்குத் தான் மூத்த பிள்ளை. ஆகவே தனக்கும் ஆண்பிள்ளைதான் பிறக்க வேண்டும் என்று அவன் மனம் ஏங்கியது. மூத்தது ஆண் பிறந்தால்தான் ஊரில், சமூகத்தில் மதிப்பு, மரியாதை, கௌரவம் என எண்ணிக் கொண்டான்.

நந்தினியை வைத்தியரிடம் அழைத்துச் சென்று பரிசோதனை செய்தபோது பெண்பிள்ளை உருவாகியிருக்கிறது என்று வைத்தியர் கூறினார். நந்தினிக்குத் தன்னைப் போல ஒரு வாரிசு கிடைக்கப் போகிதே என்ற ஆனந்தத்தில் மிதந்தாள். ஓரிரு நாட்களால் இந்தப் பிள்ளை தேவையில்லை என முடிவுகட்டிய குமரன் அதை அழித்தே தீர வேண்டும் எனத் திட்டம் தீட்டினான். நந்தினிக்கு இந்த நாட்டு மொழி தெரியாத படியினால், நந்தினி இந்தப் பிள்ளை உருவாகினால் உனக்கு உயிர் ஆபத்து வரும் என அம்மா குறிப்புப் பார்த்துச் சொன்னவர். ஆதலால் இது வேண்டாம் எனவும் டாக்டரும் கூறியவர் இது ஆபத்தானது என்று பொய்கூறி ஏமாற்றிக் கருக்கலைப்புச் செய்ய வைத்தான்.

ஓராண்டின் பின் நந்தினிக்குக் கரு உண்டானது. அதுவும் பெண் பிள்ளை என அறிந்த குமரன் மீண்டும் இல்லாத பொல்லாத உருட்டுப் பிரட்டுக்களைச் சொல்லி மீண்டும் அவளின் கருவைக் கலைத்தான். புல் என்றாலும் புரிசன், கல்லென்றாலும் கணவன் என்று நம்பி வாழ்ந்ததாலும் இந்த நாட்டு மொழியைப் புரிந்துகொள்ளாதபடியாலும் அந்த இரு பெண் சிசுக்களும் அழிக்கப்பட்ட துயரம் நந்தினிக்குத் தெரியாமலே நடந்துமுடிந்துவிட்டது.

ஒருநாள் குமரனின் நண்பன் அவன் ஒரு மொழி பெயர்ப்பாளர் குமரனைத் தேடி நந்தினி வீட்டுக்கு வந்தான். அப்போ குமரன் அங்கு இல்லை. வந்த அவனை இன்முகத்தோடு வரவேற்று..இருங்கோ அண்ணா.. அவர் கடைக்குப் போய்விட்டார். ஒரு பத்து நிமிடத்தில் வந்துவிடுவார் என்று கூறித் தேநீரும் கொடுத்தாள்

சிறிது நேரத்தில் மேசையில் கிடந்த ஒரு டொச் கடிதத்தை எடுத்துக் கொடுத்த நந்தினி அண்ணா..இப்படி முன்னர் இரண்டு கடிதங்கள் வந்தது இவர் அதனைக் கிழித்தெறிந்துவிட்டார். இது மூன்றாவது கடிதம் இதை ஒருக்கா வாசித்துச் சொல்லுங்கோ அண்ணா என்று கூறினாள்.

அந்த நண்பனோ கடிதத்தை வாசித்துவிட்டு இரண்டு தடவைகள் நீங்கள் கட்டாயக் கருக்கலைப்புச் செய்ததாகவும் நீங்கள் நல்ல உடலாரோக்கியமாக இருந்திருக்கிறீர்கள். பிறக்க இருந்த பிள்ளைகளுக்கும் குறை ஏதும் இல்லை..அப்போ ஏன் அந்த இரு பிள்ளைகளையும் இல்லாமல் செய்தனீங்கள் என்று சரியான விளக்கத்தைத் தருமாறு கோட்டிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. முன்னர் வந்த இரு கடிதத்திற்கும் பதில் கொடுக்காத படியால் கோட்டில் வழக்குப் பதிவு செய்யப் பட்டிருக்கிறது. ஆதலால் உங்கள் இருவரையும் அழைத்திருக்கிறார்கள் என விளக்கமாகக் கூறினான்.

நடந்த விடையங்கள் அனைத்தையும் எடுத்துக்கூற நந்தினி அழுது புரண்டாள். ஊர், உறவு என்று யாரும் இல்லா இந்த நாட்டில யாரிடம் சொல்லி அழ..எப்படி மனதைத் தேற்றுவது என்று தெரியாமல் அனலில் சிக்குண்ட புழுப்போல துடித்தாள். மொழிபெயர்ப்பாளருடன் இருவரும் சென்று விளக்கமளித்த போது..அந்த உயர் அதிகாரி கூறினார் திட்டமிட்டு இந்த இரு பெண் சிசுக்களையும் கொன்றிருக்கிறீர்கள். வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நீர் ஒரு டபிள் கொலையாளி என குமரனைப் பொலிசார் கைது செய்து கொண்டு சென்றனர்.

நந்தினி பாவம் புரிசனையும் இழந்து, இரண்டு சிசுக்களையும் பறிகொடுத்து தனிமரமானாள். அவள் அரச பெண்கள் விடுதியில் சேர்க்கப்பட்டாள். அங்கு வாழ்ந்துகொண்டு இந்த நாட்டு மொழியை நன்றாகக் கற்றுத் தேறினாள். பேச, எழுத, வாசிக்க நன்றாகக் கற்றுக் கொண்டதுடன் ஒரு மொழியியல் வல்லுனராகவும் உயர்வடைந்தாள். நல்லவீடு, நல்ல கார், நல்ல உத்தியோகம், நல்ல சம்பளத்தோடு வாழ்ந்தாள். சிறிது நாட்கள் நகர்ந்தன. இப்படி வாழ்ந்தால் இந்தச் சமூகத்துக்கு நான் என்னத்தை விட்டுச் செல்லப் போகிறேன்?

நான் இந்தப் பூமியில் வாழ்ந்ததற்கு என்ன செய்தேன் என்று சிந்தித்தாள். முடிவுக்கு வந்தாள். ஆதரவற்றோர் வாழும் இல்லம் ஒன்றை நோக்கிச் சென்றாள். அங்கு சென்று முறைப்படி பதிவு செய்து இரு பெண் குழந்தைகளை தத்தெடுத்துக் கொண்டாள். அவர்களுக்காகவே தனது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டாள். குடும்ப சுகங்களை மறந்து இந்த இரு குழந்தைகளுக்காக ஒரு இலட்சியப் பெண்ணாகவே இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கிறாள்..

குமரனைப்போல எத்தனையோ மூடநம்பிக்கை உள்ளவர்கள், சாத்திரம் சம்பிராதயங்களில் ஊறியவர்கள், கௌரவம் புகழ் என நனைந்தவர்கள் எங்கள் சமூதாயத்தில் உலகெங்கும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். குமரனோ இரட்டைக் கொலைக் குற்றத்தால் சிறைவாசத்தில்..நந்தினியோ அந்த இரு குழந்தைச் செல்வங்களுடன் இலட்சியப் பெண்ணாய் புலம்பெயர் தேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். கணவன்-மனைவி என்ற இரு மனங்களும் வெவ்வேறு திசைகளில். ஆம் மனித மனங்களை அளவிடவே முடியாது. இந்தச் சக்தி வேறு இனங்களுக்குக் கிடைக்காதே!...

# 43 - அன்பு ஊற்றுக்கள

நல்ல அன்பு, நட்பு என்னும்போது அவர்கள் உயிரையும் கொடுப்பார்கள். அப்படிப் புனிதமானது. தூய்மையானது. உள அன்பு கொண்டதுதான் நல்ல நட்பாகும். நம் வாழ்வில் எத்தனையோ மனிதர்களைச் சந்திக்கிறோம். ஆனால் எல்லோருடனும் நாம் நட்புக் கொள்வதில்லை. நமது மனதுக்குப் பிடித்த, நம்மோடு ஒத்துப் போகக்கூடிய நல்ல உள்ளங்களையே நாம் நட்பாக ஏற்றுக் கொள்கிறோம்.

நான் யேர்மனிக்கு வந்து குடியேறி வாழ்ந்து முப்பது வருடங்கள் தாண்டிவிட்டாலும் இன்றும் பல நட்புக்கள் நீண்டு நிலைத்து நிற்பது மனதிற்கு மகிழ்வைத் தருகின்றது. வாழ்வின் உயர்வுக்குப் பல நட்புக்கள் ஆலோசனைகள், உதவிகள், வாழ்த்துக்கள் என அவ்வப்போது வழங்கிவருவதை வாழ்நாளில் மறக்கமுடியாத விடையமாகும்.

புலம்பெயர் வாழ்வில் 20, 25, 30 வருடங்களுக்கு மேல் இன்றுவரை நல்ல நட்பாக என்னோடு இருப்பவர்கள் பலர். எனது எழுத்துலகம், சஞ்சிகை உலகம், நட்பு உலகம் என்ற வகையில் என்னோடு ஒன்றுபட்டு, மனம்விட்டுப் பேசி, ஒத்தாசைகள் வழங்கி, நன்மை-தீமைகளில் பங்குகொண்டு வாழ்பவர்கள் பலர். இவர்களில் பலர் கல்வி, கலை, விளையாட்டு, இலக்கியம், எழுத்து, பொதுப்பணி எனப் பல ஆண்டுகளாகச் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். நானும் இத்துறைகளில் நீண்டகாலம் இருப்பதனால் இந்த அன்பு உள்ளங்களின் நல்ல நட்பானது எனக்குக் கிடைத்த அளவில்லா பெறுமதி என்றுதான் நான் கருதி வாழ்கிறேன்.

என்னோடு நீண்ட காலம் நல்ல நட்பாக வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் பலர். இவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுப் பதிவுசெய்தே ஆக வேண்டும். எழுத்தாளர் புத்திசிகாமணி, யேர்மன் தமிழ்க்கல்விச் சேவையின் தலைவர் சிறீஜீவகன், கவிஞர் அம்பலவன் புவனேந்திரன், எழுத்தாளர் அருந்தவராசா(இலங்கை) மற்றும் எழுத்தாளர்களான பத்மகுணசீலன், முகில்வாணன், பசுபதிராசா

குகதாசன், அறுவை லோகநாதன், சிவறஞ்சன் (நோர்வே) வண்ணைத்தெய்வம் (பிரான்ஸ்) வரதராசன், ரவீந்திரன் (ஊடகவியலாளர்) சபேசன், ஏலையா முருகதாசன், வெற்றிமணி சிவகுமாரன், பாக்கியநாதன், இராசகருணா, சிவநேசன், வில்லுப்பாட்டு ராஜன், கபிலன், பரிமளராசா, முல்லைமோகன்,மொழிபெயர்ப்பாளர் ரகு, மட்டுவில் ஞானக்குமரன் (கனடா) அருந்தவராசா (சுவீர்சர்லாந்து), நயினை விஜயன், சிறிஸ்கந்தராசா, சௌந்தரராசா எசன்நகர பாலா, விக்கி, நெடுந்தீவு முகிலன், இசையமைப்பாளர் பாடகர் பரமேஸ் போன்றோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

அவர்களைப் போன்று எழுத்தாளப் பெண்மணிகளான கலைவாணி,-ஏகானந்தராசா, கீதா-பரமானந்தன், கௌசி-சிவபாலன், கெங்கா ஸ்ரான்லி, மீனா-சிவலிங்கம், வசந்தா-ஜெகதீசன், ஜெயா-நடேசன், சுந்தராம்பாள்-பாலச்சந்திரன், வேணி-கிருபாகரன், ஜெகதீஸ்வரி-மகேந்திரம், நகுலா-சிவநாதன், கலாதேவி-மகேந்திரம், புனிதமலர்-இராஜேஸ்வரன், சாந்தினி-துரையரங்கன் போன்றோரின் நட்புக்கள் கிடைத்தது பெரிய விடையமாகும். மேலாகக் காலம் சென்றவர்களான எழுத்தாளர்களும் சஞ்சிகை ஆசிரியர்களுமான சின்ன இராஜேஸ்வரன், ராஜன் முருகவேள் போன்றவர்களின் நட்புக்கள் கிடைத்ததை என் வாழ்நாளில் மறக்கவே முடியாத விடையமாகும்.

இவர்களுடனான நட்பு நீண்டு நிலைப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. முதல் இவர்களின் நல்ல மனமும் நல்ல குணமுமாகும். நம் மொழியையும் நம் இனத்தையும் உயர் நிலைக்குக் கொண்டு செல்லவேண்டும் என்ற நல்ல நோக்கமாகக் கொண்டே இவர்கள் அனைவரும் என்னோடு நட்புப்பாராட்டி வாழ்கிறார்கள். அடுத்து இவர்கள் அனைவரும் உள அன்போடு மனம் விட்டுப் பேசுவார்கள். போட்டி பொறாமை கிடையாது, ஏற்றத்தாழ்வுகள் கிடையாது. சாதி, மத, பிரதேச, இயக்கம், அரசியல் பேதங்கள் கிடையாது. புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, அன்பு, மதிப்பு நிறையவே உண்டு. பழகும் யாவரும் ஒரு தாய் பிள்ளைகளைப்போல் உறவு கொண்டாடி நல்ல நட்புக்கு இலக்கணமாய் வாழ்கிறார்கள். இந்த நட்புக்கள் எனக்குக் கிடைத்ததைப் பெரும் பேறாகவே நான் கருதுகின்றேன்

"அன்புக்கு உண்டோ அடைக்கும்தாள்" என்று கூறுவார்கள். எனவே நாம் பிறரிடம் உள அன்புகொண்டு நட்பாகப் பழகி, விட்டுக்கொடுப்பனவு செய்து வாழப் பழகவேண்டும். ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து, கருத்துப் பரிமாற்றம் செய்து, மனம்விட்டுப் பேசி ஒன்றுபட்டு வாழ்ந்தால் இன்னும் பல காரியங்களை இலகுவாகவும் சிறப்பாகவும் செய்யலாம்.

இந்த நல் மனம் படைத்த ஒவ்வொரு நட்பும் பல திறமைகளைக்கொண்ட திறமைசாலிகள் என்றே நான் கூறுவேன். ஒவ்வொருவரும் பல திறமைகளைக் கொண்டிருப்பதால் பல துறைகளில் பிரகாசிக்கின்றனர். நீண்ட காலங்களாகப் பல பொதுப்பணிகளை இவர்கள் மேற்கொண்டு வருவதால் நம் இனமும் மொழியும் சமூகமும் உயர்ச்சி பெற்று வருகின்றது என்றுதான் நான் கூறுவேன். இவர்களோடு நான் சேர்ந்தது அல்லது என்னோடு அவர்கள் சேர்ந்ததால் பல நன்மைகளை நாம் வாழும் தமிழ்ச் சமூகம் பெற்றிருக்கிறது என்பது உண்மையான விடையம் என்றே கூறலாம்.

ஆகவே இந்த நல்ல மனங்களின் அன்பு, பண்பு, மரியாதை, நீண்டு நிலைக்கவேண்டும். நிலைக்கும் என்பது உறுதி. "அன்பால் சாதிக்க முடியாதது இவ்வுலகில் ஒன்றுமே இல்லை" எனவே அன்பு என்னும் ஆயுதம் ஏந்தி, ஆனந்தம் அடைவோம். ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து ஏற்றம் காண்போம். என்னோடு பழகிய ,பழகி வாழ்ந்து கொண்டிருக்கும் அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் நல் வாழ்த்துக்கள்!...

# 44 - அழகு தேவதை

அழகு என்றால் யாருக்குத்தான் பிடிக்காது. சேற்றில் வளர்ந்தாலும் செந்தாமரைக்கு ஒரு அழகு. காட்டில் வளர்ந்தாலும் கொடிய மிருகங்களின் குட்டிகளுக்கு அழகு, வீட்டில் வளர்ந்தாலும் செல்லப் பிராணிகளுக்கும் தனி அழகுதானே. இந்த அழகைக்கண்டு மயங்காதோர் யாருளர். இப்படித்தான் அந்தத் தேன்மொழியும். தேனின் சுவையைப்போல ஆடவரை மயக்கும் கொள்ளை அழகுடையவள். ஒரு கட்டளகு ஆடவனைத் திருமணம் செய்ய வெளிநாடு வந்தாள் தேன்மொழி.

அவளைப்போல அவள் ஆடவனும் பேரழகுதான். காலம் உருண்டோட இரண்டு பிள்ளைகளுக்குத் தாயானாலும் அவள் அழகுக் கோலம் எள்ளளவேனும் குறையவில்லை. ஆம் அழகிலும் ஆபத்து இருக்கிறது என்று சொல்வார்கள். அது உண்மைபோலும். சிறிது காலத்தால் அவளுக்குப் புற்றுநோய் பீடித்தவிடையம் யாருக்கும் சொல்லாமல் தனது உற்றதோழிக்கு மட்டும் தெரியப்படுத்தினாள். கணவனுக்கோ பிள்ளைகளுக்கோ தெரியப்படுத்தக்கூடாது என்பதில் மிக அவதானமாக நடந்துகொண்டாள்.

இதனாள் அவள் அடிக்கடி வைத்தியரிடம் போய்வர..ஒரு நாள் கணவன் கேட்டான் ஏனப்பா அடிக்கடி வைத்தியரிடம் செல்கிறீர்கள்... எனக்கொன்றும் இல்லை. இது பெண்கள் சமாச்சாரம் நீங்கள் ஏன் தலையிடுகிறீர்கள் எனச்சமாளித்துவிடுவாள். அழகான இனிப்பு மாம்பழத்தில் புழு நுழைந்ததுபோல..இந்த அழகுதேவதையிலும் சிறிது மாற்றம்தான். ஆனால் அவள் எந்த நேரமும் தனது நோயைக் காட்டிக்கொள்ளாமல் கணவன்முன் சிரித்த முகத்துடன் ஓடி ஆடித் தனது கடமைகளைச் செய்துகொண்டே இருப்பாள்.

காலம் உருண்டது. தனது தோழியையும் அழைத்துக்கொண்டு மீண்டும் ஒருநாள் வைத்தியரிடம் சென்றாள். அப்போது வைத்தியர் சொன்னார் தேன்மொழி உன்ர வருத்தம் உ,ன்னைத் தின்றுகொண்டிருக்கிறது. எல்லாம் உன் உடலுக்குள்ளேயே நடந்தவிடையம். இனி உன்னைக் காப்பாற்ற முடியாது. தயவு செய்து

உன் கணவருடன் கதைக்க வேண்டும். அவரைக்கூட்டிக்கொண்டு வா..இன்னும் ஒருமாதம்கூட நீ உயர்வாழுவியோ என்பது சந்தேகம்தான் எனக்கூற இதைக்கேட்ட இந்த அழகுதேவதையின் மனம் அனலில் இட்ட புழுவாய்த் துடித்தது. ஐயோ!...என்பிள்ளைகள்!...ஐயோ என கணவன்!.. என அழுது புலம்பினாள். கடவுளே நான் என்ன பாவம் செய்தேன் என அலறித்துடித்தாள். அவள் தோழியும் அவளைக் கட்டிப்பிடித்து அழுது ..அவளைச் சமாதானப்படுத்தினாள்.

தோழியும்....இந்தவிடையத்தை உன் கணவரிடம் எடுத்துக்கூறுவோம் வா..என்றாள். ஐயோ வேண்டாம். கணவனுக்கோ பிள்ளைகளுக்கோ இதை வெளிப்படுத்த வேண்டாம் எனத்தோழியிடம் கெஞ்சி மன்றாடி அழுதாள். தயவுசெய்து இந்த விடையத்தை ஒருவருக்கும் கூறவேண்டாம் கூறினால் நான் தற்கொலை செய்துவிடுவேன் என்றும் கூறினாள். அப்படியே செய்கிறேன் நான் ஒருவருக்கும் கூறமாட்டேன் என அவளைச் சமாதானப்படுத்தினாள் தோழி. நாட்கள் சில கடந்தன. திடீரென அவளின் உயிர் பிரிந்தது. கணவனும் பிள்ளைகளும் தவியாய்த் தவித்தனர். இறந்தபின்புதான் அவளது தோழி நடந்த விடையங்களை எல்லோருக்கும் எடுத்துக்கூறினாள்.

"யாம்பெற்ற இன்பம் வையகம் பெறுக" என்றுகூறுவார்கள். இங்கு அதற்கு மாறாக தனது நோய், வேதனை, துன்பம் அத்தனையையும் மறைத்துத் தாங்கிக்கொண்டு, தனது கணவனுக்கோ பிள்ளைகளுக்கோ, உறவுகளுக்கோ தெரியக்கூடாது என்று இருக்கும் மனம் யாருக்கு வரும். தன் இறப்பை முன்கூட்டியே பிறருக்குத் தெரியப்படுத்தி அவர்களையும் வேதனைப்படுத்த விரும்பாமல் வாழ்ந்திருக்கிறாள். தான் துன்பப்பட்டாலும் பிறர் மனம் நோகக்கூடாது கஸ்டப்படுத்தக்கூடாது என்று நினைத்து வாழ்ந்திருக்கிறாள். கொடிய தனது நோயை மறைத்து பிறருக்கு எதுவுமே கூறாமல் வாழ்ந்திருக்கிறாள்.

இவளின் மனதைப் போல யாருக்கு வரும்....உண்மையில் இவள் உடலால் அழகுதேவதை மட்டுமல்ல மனதாலும் அழகுதேவதைதான். பலரது மனங்களை வென்ற இந்த வெள்ளைப்புறா கண்காணாத இடத்துக்குப் பறந்து சென்றுவிட்டது!...

# 45 - ஏனோ?... தானோ?...

மனிதரில் எத்தனை நிறங்கள் போல மனிதரில் எத்தனை குணம் படைத்தவர்களை நாம் அன்றாடம் காண்கிறோம். சிலர் எடுத்த காரியத்தைப் பதறாமல் சிதறாமல் செய்துமுடிக்கும் வல்லவர்கள் மாத்திரமல்ல, பிறரிடம் நன் மதிப்பையும் பாராட்டையும் பெற்றுவிடுவார்கள். ஆனால் சிலரோ எந்தக் காரியத்தையும் தொடங்குமுன்னர் இயலாது, முடியாது, சரிவராது எனக்கற்பனைபண்ணி மனம் சோர்ந்து விடுவார்கள். இதனால் அவர்களுக்குத் தோல்வியே ஒன்றன்பின் ஒன்றாக வந்து சேர்ந்துவிடும்.

இங்கே...புலம்பெயர் வாழ்வியல் சூழலில் நம்மவர் சிலரின் மனப்போக்கையே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எல்லாவற்றிற்கும் ஏனோ?..தானோ?..என்று அக்கறையீனமாகச் செயற்படுவதால் எவ்வளவு நட்டம்..அவர்களின் கடும் உழைப்பு எப்படி அநியாயமாகப் போகிறது என்று சிந்திக்கிறார்களா?..எனக்குத் தெரிந்த ஒருவரல்ல பலரைப் பார்த்திருக்கிறேன். உதாரணத்திற்கு அரசாங்கம், வங்கி, காப்புறுதி, வாடகை, மின்சாரம், பாதுகாப்புத்துறை, போக்குவரத்துத்துறை இப்படிப்பல இடங்களிலிருந்து அன்றாடம் பல கடிதங்கள் வந்து சேரும். இக்கடிதங்களைப் பிரித்துப் படிக்க முடியாத சில தமிழர்கள் இன்றும் புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். மொழிப்பிரச்சனை, வேலைப்பழு, அக்கறையீனங்களால் அசட்டையாக இருந்துவிடுவார்கள் சிலர். பின்பு நீதி மன்றம், பொலிஸ், வருமானத்துறை போன்ற தாபனங்களிலிருந்து வரும் கடிதங்களைக் கொண்டோடித்திரிவார்கள்.

மொழிதெரியாமல், விடையங்களைத் தெரியாமல் இங்குள்ள சட்டதிட்டங்களைத் தெரியாமல் தொலைபேசியில் மணிக்கணக்காகப் பேசிவிட்டு 1000, 2000 எனப் பல ஆயிரம் யூரோக்களை அநியாயமாகக் கட்டுவோர் இன்றும் இருக்கிறார்கள். ஏனோ தானோ என இருந்துவிட்டு இரண்டு மடங்கு மூன்றுமடங்கு தண்டப்பணம் கட்டியவர்களும் வீட்டின் பெறுமதியான பொருட்களைப் பறிகொடுத்தவர்களும் இன்றும் நம்மிடையே இருக்கிறார்கள்தான்.

ஒரு நண்பர் சொன்னார் தான் கட்டுப்பாட்டை மீறிக்கார் ஓடியதற்காக 120 யூரோ தண்டப்பணம் செலுத்தும்படி கடிதம் வந்ததாம். தான் கவனிக்கவில்லையாம் எங்கேயோ ஒரு மூலையில் போட்டுவிட்டாராம். பின்பும் பல கடிதங்கள் வந்ததாம் அவைகளுக்கும் ஒரு பதிலும் போடவில்லையாம். ஆறு மாதத்தால் பொலிஸ் தனது வீட்டுக்கு வந்து விடையத்தைச் சொல்லிக் கடிதங்களை எடுத்துக்காட்டி இந்தத் திகதிக்கு நீதி மன்றத்து வரவேண்டும் என்று சொல்லிச் சென்றார்களாம்.

நீதி மன்ற விசாரணையில் உண்மையை ஒப்புக்கொண்டு நீதிமன்றச்செலவு, பொலிஸ்செலவு, வாகனத்திணைக்களச்செலவு, தபால்செலவு என 1.600 யூரோ தண்டப்பணமாகச் செலுத்தினாராம். இவரைப்போல இன்னும்பலர் வாடகை, மின்சாரம், வங்கி, வட்டி, வரி , வாகனம், காப்புறுதி என வந்த கடிதங்களை அலட்சியம் செய்துவிட்டு பெரும் தொகைத்தண்டப்பணம் செலுத்தியவர்கள், வீட்டின் பெறுமதியான பொருட்களை அரசாங்கம் எடுத்துச்சென்றதைப் பார்த்து அழுது புலம்பியவர்களையும் கண்டிருக்கிறோம். இன்னும் சிலர் பணம் கட்டத்தவறியமைக்குச் சிறைகண்டுவந்த செம்மல்களும் உண்டுதான்.

ஏன்?..ஏன்?..இந்த நாடுகளின் கடும் பனி, குளிர், பசி, பட்டினியோடு வேலை செய்து உழைத்த பணங்களை ஏன் இப்படி அநியாயமாக வீணடிக்கிறார்கள். ஆகவே உங்களுக்கு வரும் கடிதங்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கத்தவறாதீர்கள். கடிதங்களை வாசிக்க மொழி ஒரு தடையாக இருந்தாலும் உங்கள் பிள்ளைகள், நண்பர்களிடம் காட்டி உரிய நேரத்தில் உரிய பணத்தைச் செலுத்தத் தவறாதீர்கள். எனவே பொறுமையாக சிறிது சிந்தித்துப் பாருங்கள். உங்கள் கடும் உழைப்பை வீணடிக்காதீர்கள். இப்படி அநியாயமாகக் கட்டும் பணத்தை ஏழை எளிய மக்களுக்குக் கொடுத்து உதவலாம் அல்லவா?. ஆகவே ஏனோ?..தானோ?..என்று அலட்சியமாக இருந்துவிடாதீர்கள். எப்பொழுதும் விழிப்பாய் இருங்கள். உடனுக்குடன் காரியமாற்றும் பழக்கத்தைக் கடைப்பிடித்தால் வாழ்வில் பல நன்மைகளும் வந்து சேர்ந்துவிடும். ஏனோ?..தானோ?..என்ற மனப்போக்கு ஒருபோதும் வேண்டாம்...வேண்டாம்...

# 46 - சாதனைப் பெண்மணி

இன்றைய உலகில் சாதனைகளும் பலவிதமானவை நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. தனி மனிதர்களாகவும் குழுக்களாகவும் பலவித சாதனைகள் காணப்படுகின்றன. ஒருவர் சாதனை செய்வதற்கு ஆண், பெண், வயது, நிறம், இனம், மதம் போன்ற வேறுபாடுகள் கிடைக்கமாட்டாது. அவருடைய கல்வி, முயற்சி, தேடல், கடினஉழைப்பு, வாழ்க்கைச் சூழல் போன்றவையே அவர் சாதனை செய்ய உறுதுணையாக இருப்பதை நாம் அனுபவரீதியாகக் கண்டுகொள்கிறோம்.

நம் ஒவ்வொருவரிடமும் ஏதோ திறமைகள் பொதிந்து, ஒழிந்திருப்பது நமக்குத் தெரிவதில்லை. சந்தர்ப்பம் வாய்ப்புக்கள் கிடைக்கும்போது, ஊக்கமுடன் செயற்படும்போது நாம் சாதனையாளர்களாகப் பிரகாசிக்கிறோம். எல்லாவற்றிற்கும் மனிதரில் எத்தனை நிறங்கள் போல் மனிதருடைய குண இயல்பே தீர்மானித்துவிடுகின்றது. இதனால் நாம் சாதனையாளர்களாகப் பிரகாசிக்கின்றோம்.

இப்பொழுது ஒரு சாதனைப் பெண்மணியைப் பற்றிய உண்மையை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் மட்டல்லா மகிழ்ச்சி கொள்கிறேன். நீங்களும் படித்துப் பாருங்கள் வாசகர்களே..
அதாவது நான் வாழும் டியூஸ்பேர்க் நகரில்தான் இந்தச் சாதனைத் தமிழ்பெண்மணி வாழ்ந்துகொண்டிருக்கிறார். இவர் 1990ம் ஆண்டு எமது மண் சஞ்சிகை ஆரம்பித்த ஆண்டுதான் எம்மோடு அறிமுகமாகின்றார். அப்போது இப் பெண் ஒரு இள மங்கையாகவே சில ஆக்கங்களை மண் சஞ்சிகைக்கு எழுதியிருக்கின்றார். இவரோடு கடந்த முப்பது ஆண்டுகளாகப் பழகிவருகிறேன்.

காலம் உருண்டோடுகையில் அவர் திருமணம் செய்து கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளோடு சிறப்பாக வாழ்ந்தாலும் தனது இனத்தவர்களின் முன்னேற்றத்தில் பெரும் அக்கறைகொண்டு
உழைத்துவரும் பெண்மணியாகவே நான் காண்கின்றேன். இவர் தனது கடந்தகால வாழ்க்கையில் இந்தநாட்டு மொழியைக்கற்று தையல் கலையையும் டொச்மொழி ஆசிரியரிடமும் தமிழ் ஆசிரியரிடமும்

முறையாகப் பயின்றுள்ளார். இவர் பெயர் திருமதி ஜீவா கிருபாகரன் என்பதை வெளி உலகத்துக்கு அறிமுகம் செய்து வைப்பதில் பெருமையடைகின்றேன்.

இவரின் சாதனையை நோக்கினால்..."யாம் பெற்ற இன்பம் வையகம் பெறுக" என்னும் நல் மொழிக்கு அமைவாகத் தான் கற்ற கல்விஅறிவு, தையல்கலை இரண்டையும் இரு கண்களாகக்கொண்டு பிறருக்குக் கொடுத்துவருகின்றார். இவர் கடந்து மூன்று வருடங்களில் முந்நூறுக்கும் அதிகமான பெண்களுக்கு இக்கலையைப் பயிற்றுவித்திருக்கிறார். இவரிடம் இக்கலையைப் பயின்ற இத்தனை பெண்கள் இன்று தையல்கலையில் சிறந்து விளங்குவதுடன் தமது தேவைகளைத் தாமே செய்து வருமானத்தையும் ஈட்டுகின்றனர். இவை மட்டுமல்லாமல் வருடாவருடம் தையல் கண்காட்சியையும் ஒரு விழாவாக நடத்தி பல்லாயிரம் தமிழ் மக்களின் பாராட்டையும் பெற்றுக்கொண்டிருப்பது சிறப்பான விடையமாகும்.

பாடசாலை, பல்கலைக்கழகம் செல்லும் மாணவிகள் மற்றும் வீட்டுப் பெண்கள், குடும்பப்பெண்கள் என இவரிடம் பயிற்சிபெற்றவர்கள் ஏராளம் பேர். இப்பொழுதும் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதில் என்ன சிறப்பு என்றால் தாய், மகள், பேரப்பிள்ளை என மூன்று தலைமுறையினர் இந்தத் தையல் வகுப்பில் பயிற்சிபெற்றுவருவது மேலும் சிறப்பான செய்தியாக இங்கு பதிவுசெய்கிறேன். தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் வேண்டிய ஆடைகளை அவரவர் தைத்துக்கொள்ளும் அளவிற்கு இவர்களை உருவாக்கிய பெருமை இச்சாதனைப் பெண்மணிக்கே உண்டு என்பது உண்மையாகும்.

மனிதரில் எத்தனை நிறங்களைப் போல இவை அனைத்தையும் செய்வதற்கு நல்ல மனம் வேண்டும். இக்கலையைத் தன்வசப்படுத்தி, பயிற்சியளித்து, செய்முறைப் பயிற்சியளித்து, எழுத்துப் பயிற்சி கொடுத்து இக்கலையில் ஒவ்வொரு பெண்ணையும் பிரகாசிக்க வைப்பது என்பது அபூர்வமான செயற்பாடாகவே நான் கருதுகிறேன்.

இன்றைய அவசர உலகில் இப்படியாகத் தான் பெற்ற அறிவை, ஒருகலையைப் பிறருக்குக் கொடுத்துக்கொணடிருக்கும் இந்தப் பெண்ணை ஒரு சாதனைப் பெண்ணாகவே நாம் கண்டுகொள்கிறோம். இவரின் இச்சாதனை புலம்பெயர் வாழ்வியலில் ஒரு வரலாற்றுப் பதிவாக இடம்பெறுகின்றது என்பதை ஆணித்தரமாகக் கூறிக்கொள்ளலாம்.

எல்லாவற்றிற்கும் இவரின் பெற்றோரின் வழிகாட்டல் கணவனின் ஆதரவு மட்டுமல்லாமல் இவரின் பெருமுயற்சியும் இவரின் மனம் என்னும் குணநடையுமே முக்கிய காரணியாக அமைந்துள்ளது. இவர் மற்றவர்களோடு பழகும்முறை, பேசும் வார்த்தைகள், பயிற்றுவிப்பதில் உள்ள திறமை, இன்முக வரவேற்பு என அத்தனையுமே இவரின் புகழுக்குக் காரணமாக விளங்குகின்றது என்று கூறிக்கொள்ளலாம்.

இக்கலையைப் பயில்வதற்காகத் தூர இடங்களிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும்கூடப் பல பெண்கள் டியூஸ்பேர்க் நகருக்கு வந்து தங்கி நின்றும் விசேட வகுப்புக்களில் தையல்கலையைப் பயின்று வருகிறார்கள். பலர் பயிற்சிபெற்றுச் சென்றிருக்கிறார்கள். தற்போது அயல் நகரங்களுக்கும் சென்று பல வகுப்புக்களை நடத்திப் பலருக்கு இக்கலையைப் பயிற்றுவித்துக் கொண்டிருக்கிறார் என்னும்போது இவரோடு துணையாக இருந்து ஆதரவு கொடுத்துவரும் இவரது கணவன் திரு கிருபாகரன் மற்றும் இவரின் பிள்ளைகளும் பாராட்டப்பட வேண்டியவர்களே. பாராட்டி வாழ்த்துவோம்.

புலம்பெயர் தேசங்களில் இன்று எத்தனையோ தமிழ்ப் பெண்கள் படித்துப் பட்டம்பெற்றுவிட்டு, வீடுகளில் முடங்கிக் கிடக்கிறார்கள். தாம் பெற்ற கல்வியை, அறிவுஆற்றலைப் பிறருக்குக் கொடுக்கமுடியாமல் இருக்கிறார்கள். இதற்கு அகம் புறம் எனக்காரணிகள் காணப்படுகின்றன. இதற்குச் சில ஆண்களும் தடையாக இருக்கிறார்கள் என்ற கசப்பான செய்தியும் உண்டுதான். இந்தவகையில் திருமதி ஜீவா கிருபாகரன் அவர்களின் சாதனை என்பது ஒரு வரலாறாகப் பதிவாகின்றது.

தமிழ்ப் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு உழைத்துவரும் இந்தச் சாதனைப் பெண்மணியை நாம் பாராட்டுவோம். புலம்பெயர் தேசங்களில் இப்படி ஒரு சாதனையை இதுவரை யாரும் நிலைநாட்டவில்லை என்பது உண்மையான விடையமாகும். இக்கலையைப் பொறுத்த அளவில் இவர் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் என்றுதான் கூறலாம். இப்படியாகச் சிறப்புவாய்ந்த இப் பெண்மணியைப்பற்றி வாசித்து அறிந்துகொள்ளும் அனைவரும் பாராட்டுங்கள். நாமும் வாழ்த்துகிறோம்.

"யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக"

# 47 - பொய் சொல்லாதே பாப்பா

மனித வாழ்வில் பொய்யும் உண்மையும் கலந்துதான் காணப்படுகின்றன. "ஆயிரம் பொய் சொல்லி ஒரு திருமணம் நிறைவேறுகின்றது" என்று நம்மவர்கள் கூறுவார்கள். இதில்கூட எவ்வளவு பொய் உண்மை இருக்கின்றது என்பது வேறுவிடையம். நல்ல விடையங்களுக்கு அதாவது ஒரு நல்ல விடையத்திற்குப் பொய்கூறுவதில் தப்பே கிடையாது. அதற்காகக் கண்டதெல்லாவற்றிற்கும் பொய்யும் புரட்டுமாக வாழ்தல் அது வாழ்க்கையே இல்லை.

குறிப்பாகச் சிறுவயதினரிடையே ஒரு போதும் நாம் பொய் சொல்லலாகாது. எந்தச் சந்தர்ப்பத்திலும் பொய் சொல்லவே கூடாது. ஏனெனில் பிஞ்சு மனங்களில் அப்படியே பதிவாகி அவர்களின் எதிர்காலத்தையே பாதிப்புக்குள்ளாக்கிவிடும் என்று நான் கூறவில்லை மாபெரும் அறிஞர்கள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இதற்காகவே மகாகவி பாராதியார் "பொய் சொல்லல்கூடாது பாப்பா" என்று குழந்தைகளுக்கு மட்டுமல்ல அனைவருக்குமே பாடிச் சென்றார்.

எத்தனை அறிஞர்கள், முன்னோர்கள், புலவர்கள் என யாவரும் பொய் சொல்லக்கூடாது என எடுத்துரைக்கின்றார்கள். ஒருவர் பொய் மட்டும் தொழிலாக இருந்தால் அவருடைய வாழ்வும் பொய்மையோடு முடிவடைந்துவிடும். ஆகவே நாம் வாழும் குடும்பம், நட்பு, சமூக வட்டங்களில் எப்போதும் உண்மை பேசி நேர்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் பல நன்மைகள் வந்து சேர்ந்துவிடும்.

நமது சிறார்களிடையே பொய் சொல்லியதால் இறுதியில் நடந்த சம்பவங்களை இங்கு குறிப்பிடுகிறேன். ஒரு குடும்பப் பெண்மணி தனது பிள்ளைகளோடு பிரயாணம் செய்கிறார். அப்போது பயணச்சீட்டுப் பரிசோதகர் வருகிறார். சீட்டுக்களைப் பரிசோதிக்கும்போது, ஒரு பிள்ளையைக் காட்டி எத்தனை வயது என்று தாயாரிடம் கேட்டார். அவர் ஐந்து வயது எனப் பதில் கூறினார். அதைப்பார்த்த அந்தச் சிறுவன் அம்மா சொல்வது தவறு எனக்கு இப்போ ஏழுவயது எனத் தனது மொழியில் பதில் கூறினான். தாய் மகனை முறைத்துப் பார்க்க

பரிசோதகர் பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்த குற்றத்திற்காக 50 யூரோ தண்டப்பணம் அறவிட்டார்.

அடுத்த விடையம் தமது குழந்தைகளுடன் பிறநாடு ஒன்றிற்குச் சுற்றுலா சென்று வருகிறார்கள் ஒரு குடும்பம். வரும்போது விமான நிலையத்தில் சுங்கப் பரிசோதனையில் இது பழைய வீடியோக் கமரா என்று தந்தை பதிலளிக்கின்றார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுமி தனது டொச் மொழியில் இல்லை...இல்லை...இது புத்தம் புதிது. இதை சவுதியிலுள்ள "டியூட்டிபிறீ" சொப்பில் அப்பா வேண்டியவர் என்று பிள்ளை உண்மையைச் சொல்லியது. குழந்தைகள் பொய் சொல்லமாட்டார்கள் என்று உணர்ந்த அதிகாரிகள் தண்டப் பணம் அறவிட்டனர்.

பாருங்கள் இந்த இரண்டு சம்பவங்களையும்... சின்னஞ்சிறிசுகளுக்குப் பொய் கூறக்கூடாது. கூறினால் இப்படித்தான் தண்டமும் கட்டி அவமானப்படவேண்டிய நிலைதான் ஏற்படும். இது ஒரு பாடமாகும். இவைபோன்று நம் வாழ்வியலில் பல சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஆகவே சிறுவர்களோடு, குழந்தைகளோடு சேர்ந்து வாழும் நாம் எப்பொழுதும் உண்மையாக நடந்து கொள்ள வேண்டும். தேவையில்லாமல் பொய்களைக்கூறி அவர்களின் பிஞ்சு மனங்களைக் காயப்படுத்தக்கூடாது.

சிறுபிள்ளையில் நடைபெறும் சம்பவங்கள் குழந்தைகளின் உள்ளத்தில் ஆணிபோல் பதிந்துவிடும். எதிர்காலத்தில் பல சிக்கல்களையும் துன்பங்களையும் ஏற்படுத்தி அவர்களின் வாழ்வையே சீர்குலைத்துவிடும் எனவே பிள்ளைகளோடு ஒன்றாக வாழும் நாம் பொய்கூறாமல் அதிகமாக ஆசைப்படாமல், இல்லாவிடின் இல்லை என்று அவர்களுக்கு விளங்கப்படுத்தினால் அவர்களும் புரிந்து கொள்வார்கள். இதை விடுத்து மற்றவர்களின் ஆடம்பர, பகட்டு வாழ்க்கைபோல நாமும் வாழவேண்டும் என ஆசைப்பட்டு பிள்ளைகளிடையே பொய்யை விதைக்காதீர்கள். "சிறு பொய்யே ஒரு சமூகத்தைப் பாதித்துவிடும்" என்பதைப் புரிந்துகொள்வோம். மனிதரில் எத்தனை நிறங்கள் என்பது போல, மனித மனங்களிலும் பல நிறங்கள் உண்டு- ஆகவே நல்லவற்றை விதைத்து நல்லவற்றை அறுவடை செய்வோம்!..

## 48 - இளம் சந்ததிகளில் சிலர்...

ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு வளர்ந்துவரும் இளம் சந்ததிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இன்றைய இளையோர்தான் நாளைய நாட்டை ஆளப்போகும் தலைவர்கள் என்று அழகாக நம்மவர்கள் எடுத்துரைப்பார்கள். ஒரு சமூகத்தின் மாற்றத்திற்கு அல்லது விடுதலைக்கு அதிகமாக முகம் கொடுப்பவர்களும் இவர்கள்தான். நம் நாட்டில் நடந்து முடிந்த முப்பது, நாற்பது ஆண்டுகால கொடிய யுத்தத்தால் பல ஆயிரக்கணக்கான இளையோரையும் இழந்திருக்கிறோம். சரி பிழைக்கு அப்பால் போராட்டம் என்ற காரணியால் பல்லாயிரம் உயிரிழப்புகளுக்கு பின்பு நம் நாட்டின் இளம் போராளிச் சமூகம் இன்று தேடுவாரற்ற சமூகமாக மாறி ஒரு துர்ப்பாக்கிய நிலையை அரவணைத்துக் கொண்டிருக்கிறது.

இது இவ்வாறு இருக்க புலம்பெயர் இளையோர் வாழ்வியல் சூழலில் பல சாதனைகளைப் படைந்து வந்தாலும் பல சிக்கல்களையும் சந்தித்து வருகிறார்கள். இங்கு பிறந்து வளரும் இளையோர், சிறுவயதில் இங்கு வந்து வளரும் இளையோர் என அடங்குவர். இவர்களில் கல்வி,மொழி, சமயம், கலை, கலாச்சாரம், பண்பாடு, தொழில், சமூகம் எனப் பலதரப்பட்ட விழுமியங்களை அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்வதில் பல நெருக்கடிகளையும் சிக்கல்களையும் சந்தித்து வருகிறார்கள். இவை உருவாகுவதற்கு நமது தமிழ்ப் பெற்றோர்களே மூலகாரணமாக இருக்கிறார்கள் என்ற உண்மையும் உண்டுதான்.

உதாரணத்திற்கு ஒரு இளம்பிள்ளையின் விருப்பு, வெறுப்பு, உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல், இடம்கொடுக்காமல் நீ டொக்டருக்கும் எஞ்சினியருக்கும் எக்கவுண்டனுக்கும்தான் படிக்க வேண்டும் என்று திணிப்பதும் நாங்கள் சொல்லும் பெண்ணையோ ஆணையோ நீ திருமணம் செய்ய வேண்டும், எங்கட சாதி சமயத்தில்தான் செய்ய வேண்டும் எனக் கட்டளை இடுவதும் எங்களோடுதான் காலம் முழுவதும் இருக்க வேண்டும், முதல் பிள்ளை ஆணாகத்தான் பிறக்க வேண்டும் என ஆசைப்படுவதும் இயல்பாகவே நடந்துவருகின்றது. இதற்கும் தாங்கள் பார்க்கும் பெண்ணோ அல்லது ஆணோ சரிவராவிடின் மேலாகச் சொல்லப்படுவது குறைந்த சாதியப் பெண்ணையோ

ஆணையோ செய்யக்கூடாது அதுவும் சரிவராவிட்டால் வெள்ளைக்காரரைப் பார்த்து செய்யுங்கோ என்று புத்திமதி சொல்லும் பெற்றோரையும் இன்று காண்கின்றோம்.

கடந்த பத்து வருடங்களின் முன் நமது நாட்டுப் பிரச்சனை உக்கிரமடைந்த போது பலரும் பல வழிகளில் தெருக்களில் இறங்கிப் போராட்டம் நடாத்தினார்கள். கொடிபிடித்தார்கள், பதாதைகள் தாங்கினார்கள், ஆர்பாட்டம் செய்தார்கள். அப்பொழுது இயக்கத்தில் தீவிரமாகப் பாடுபட்டவாகள் என்று சொல்லிக்கொண்ட நாலு ஐந்து இளைஞர்கள் வீதியில் சந்தித்தபோது அவர்கள் உரையாடிய விடையங்கள் என் காதுகளைத் துளைத்தன. அந்த விடையத்தை உங்களோடு அதாவது அவர்களின் நிறங்களை அல்ல அவர்களின் மனங்களின் போக்கைக்கூற விரும்புகிறேன்.

மச்சான் நான் எங்கட சாதிப் கேளைத்தான் அதுவும் எங்கட ஊர்க் கேளைத்தான் கலியாணம் செய்வேன். என்று கூற மற்றவரும் அதை ஆமோதித்து என்ர அம்மா- அப்பா பார்க்கிற எங்கட சாதிசனங்களுக்குதான் பார்த்துச் செய்வேன் என வழிமொழிந்தார். இது மச்சான் அம்மா-அப்பாவின் விருப்பமும் கட்டளையும்தான் என்றான். அப்ப பிள்ளை பிறந்தால் என்றான் மற்றவன். பிள்ளை பிறந்தால் என்ன மச்சான் பிறந்தநாள் மட்டுமல்ல சாமத்தியவீட்டையும் திருவிழாவாகச் செய்யவேண்டியதுதான். பிறகு கலியாணம் என்றுவரும்பொழுது எங்கட சாதிசனத்தில பார்த்து, எங்கட சொந்தத்துக்க, எங்கட ஊரவரைப் பார்த்துச் செய்வதுதானே! என்றார். இதில் என்ன மாற்றம் மச்சான் என்றான்.

பாருங்கோவன் எங்கட நாட்டில் இவ்வளவு துன்பங்கள்பட்ட பெற்றோர்கள், இளவயதினர் நாட்டில் உக்கிர போர் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலும் இப்படியாக, எங்கு இருக்கிறோம், எப்படி வாழ்கிறோம், உலக நடைமுறை என்ன, மாற்றங்கள் என்ன என்றுகூட எள்ளளவேனும் சிந்திக்காத இளம் சமூகம்கூட இன்றும் புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இந்தக் கரிபடிந்த மனங்களை எண்ணிக் கவலைப்படுவதா?..சிரிப்பதா?..ஆச்சரியப்படுவதா?.. ஆகவே இளம் சமூகமே உங்கள் மனங்களை அகலத் திறவுங்கள்!. குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட நினைக்காதீர்கள். இந்தப் பரந்த உலகில் நன்றாக வாழ உங்கள் புத்தியையும் சிறிது பரவலாக்கிச் சிந்தித்துச் செயற்படுங்கள்!..

# 49 - நவீன அடிமைகள

மனிதனை மனிதன் அடக்கி ஆளுதலும், அடிமைப்படுத்துலும், ஒதுக்கி வைத்தலும் காலாதிகாலம் இந்தப் பூமியில் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. பெரும்பாலும் வறியநாடுகளிலும் சமயக்கட்டுப்பாடுகள் நிறைந்த நாடுகளிலும் அடிமை, மற்றும் கொத்தடிமை அவலங்கள் பெருகிக்கொண்டு செல்வதை நாம் அறிவோம். மனிதனின் நிற, இன, மத, குல, மொழி போன்ற வேறுபாடுகளாலும் ஏனைய அக, புறக் காரணிகளாலும் இந்த உலகில் நவீன அடிமைத்தனங்கள் இன்றும நிலவுகின்றது என்றே கூறலாம். இன்றைய நவீன உலகம் பல நவீன மாற்றங்களைச் சந்தித்தாலும் அடிமைத்தனங்கள் பல வடிவில் இன்றும் பரந்து பட்டே காணப்படுகின்றன.

குறிப்பாகப் பெண்களின் அடிமைப்பட்ட வாழ்வைச் சிறிது உங்களோடு பகிந்து கொள்கிறேன். குறிப்பாகப் புலம்பெயர் தேசங்களில் பல்லாண்டுகள் தமிழ் இனத்தவர் வாழ்ந்து வந்தாலும் ஆண் - பெண் என்ற வேறுபாடுகள், சம உரிமைகள் மறுக்கப்பட்டே வருகின்றன. ஆணாதிக்க சிந்தனையில் ஊறித்திளைத்தவர்கள்தான் நாம். அந்த ஆதிக்க சிந்தனை, உயர்வு-தாழ்வு மனப்பான்மை, பெண் இரண்டாம்தரப் பிரசை என்ற மனப்பான்மை என்று எல்லாம் நம்மவர் சிந்தனையில் வேர் ஊன்றிப் பலகாலம் ஆகிவிட்டது.

இந்த அடிமைத்தளைகளை ஒரு சில பெண்கள் அறிவாலும் வீரத்தாலும் உடைத்தெறிந்து வெற்றிகொண்டு சாதனை படைத்திருக்கிறார்கள். அவர்கள் வாழ்த்தப்பட வேண்டியவர்களே. நவீன பெண்களாக அடக்குமுறைகளுக்குச் சாவுமணி அடித்து வீறுகொண்ட பெண்களும் நம்மிடையே இருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியான விடையமாகும். இருந்தாலும் அறியாமையில் மூழ்கி, கலாச்சாரம் பண்பாடு என்றெல்லாம் கூறித் தம் வாழ்க்கையில் ஒரு வட்டத்துக்குள் நின்று சுழல்பவர்களும் இந்தப் புலம்பெயர் நாடுகளில் பல்லாயிரம் பெண்கள் இருக்கிறார்கள் என்பதும் வருத்தத்திற்குரிய விடையமாகும்.

ஒரு படித்த பெண் தாயகத்திலிருந்து புலம்பெயர் நாடொன்றுக்கு வருகிறாள் என்று வைத்துக்கொண்டால். அதாவது விலைபேசி விற்கப்படுவது போல இன்றும் திருமணம் என்ற பந்தம் நடைபெறுகின்றது. வருங்காலக் கணவனை முன்பின் தெரியாது, பழகவில்லை, குணத்தைத் தெரியாது அவரின் மனம் என்ன நிறம் என்று தெரியாது, நாடு புதிது, அந்நிய மொழி கலாச்சாரம் பழக்கவழக்கம் புதிய சூழ்நிலை. இப்படி வேறுபட்ட பல பிரச்சனைகளோடுதான் காலடி வைக்கிறாள். பல எதிர்பார்ப்புகள் பல தேடல்களுடன் தான் இங்கு வந்து சேருகிறாள். பின் கலியாணம் அது இது எல்லாம் முடிந்ததும் கணவனாலும் வேறுசிலராலும் வேறு பல பிரச்சனைகளும் உருவாகுவதுடன் நவீன அடிமைத்தனங்களுக்குள்ளும் ஒரு பெண் அகப்பட்டுச் சிக்கித்தவிக்கிறாள். இதனால்தான் நம்மவர்களிடையே விவாகரத்துக்களும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

உலக அறிவோ படிப்பறிவோ சற்றுக் குறைவான கணவன்மான்கள் என்ன செய்கிறார்கள். தாய் தந்தையரைப் போல் அளவில்லாத கட்டுப்பாடுகளைத் திணித்துப் பெண்களைத் திக்குமுக்காட வைக்கிறார்கள். கலாச்சாரம் என்ற கட்டுக்கோப்புக்குள் அவர்களை இழுத்து விழுத்தி எப்போதும் பெண்களை இரண்டாம் தரப்பிரசைகளாக வைத்திருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். புலம்பெயர் சூழலில் பிறமொழிகளைப் படித்து அவள் முன்னேறிவிடுவாள் அல்லது நல்ல வேலை பெற்று தன்னைவிடக் கூடுதல் சம்பளம் எடுத்துவிடுவாள், இதனால் தனக்கு மரியாதை இல்லை என்று நினைத்துப் பயந்துவாழும் கணவன்மாரும் நிறையப்பேர் இந்தப் புலம்பெயர் நாடுகளில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இதற்கும் மேலாக இன்னும் பல அடக்குமுறைகள்
கார் பழகி லைசன்ஸ் எடுத்தால் தனக்குப் பிரச்சனை என்று எண்ணுபவர்களும் நீளக்காற்சட்டை அணியக்கூடாது என்றும் எந்தக் குளிரென்றாலும் மழை என்றாலும் சாறிதான் உடுக்க வேண்டும் என்று கட்டளை இடும் ஆண்களும் இருக்கிறார்கள். ஏன் வேலைக்குப் போகக்கூடாது. வேலைக்குப் போனால் வேறு ஆண்களுடன் தொடர்பை ஏற்படுத்திவிடுவாள் என்று எண்ணும் அதி மேதாவிகளும் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

தாங்கள் எல்லாப் பெண்களுடனும் வழிந்து...விழுந்து பேசுவார்கள் பகிடிவிடுவார்கள் கைகுலுக்கிச் சந்தோசம் கொண்டாடுவார்கள். ஆனால் தனது மனைவி எந்த ஆணுடனும் கதைக்கக்கூடாது, எந்த ஆணுக்கும் கை கொடுத்து அளவளாவக்கூடாது என்று எல்லாம் சட்டம் போட்டு அடக்கி ஆழ்வார்கள். இன்னும் சிலர் பெண் என்றால் தனக்குப் பணிவிடை செய்யப் பிறந்தவள். தன் உணர்வுகளுக்குத் தீனிபோட வந்தவள் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளும் இயந்திரம் என்றெல்லம் எண்ணுகிறார்கள். உண்மையில் இது ஒரு நவீன அடிமைத்தனம் என்றுதான் கூறலாம்.

ஆனால் இன்றைய சில பெண்கள் கல்வியில் உயர்ந்து, கணனி தொழில் நுட்பங்களோடு வளர்ந்து ஆண்-பெண் என்று சரிசமமாக வாழ்ந்து சரித்திரம் படைக்கையில்..தாயகத்தில் விடுதலைக்காகப் போராடிய அதுவும் இளம்பெண்களின் எதிர்காலமே சீரழிந்து வாழ்வா?.. சாவா என்ற நிலையும் வறுமை காரணமாக விபச்சாரத்தில் ஈடுபடும் இளம் பெண்களையும் காண்கிறோம். வடகிழக்கில் மட்டும் சுமார் 90.000 விதவைப் பெண்கள் வாழ்கிறார்கள் என்றும் மறுமணமோ? மறுவாழ்வோ? கிடைக்காமல் தினம் தினம் செத்துக்கொண்டிருப்பதை நாம் அறிவோம். இந்தப் பெண்களின் எதிர்காலம்பற்றிச் சிந்திப்போர்தான் எத்தனைபேர்?...

இவற்றைவிடப் பெண்கள் ஒடுக்கப்படுவதற்கும் நசுக்கப்படுவதற்கும் சீதனம் என்னும் கொடிய வலையில் தள்ளிவீழ்த்துவதும் பெண்களாகத்தான் இருக்கிறார்கள் என்னும் கசப்பான உண்மையை நாம் ஒத்துக்கொள்ளுதல் வேண்டும். ஆகவே இப்படிப்பட்ட நவீன அடிமைத்தனங்களிலிருந்து மீட்சியடைவதற்குப் பெண்களே அதிகம் போராடவேண்டும். கல்வி, பொருளாதாரம் , உழைப்பு, முயற்சி, கணனி போன்ற துறைகளில் முன்னேற வேண்டும். இன்றைய கணனி யுகத்தில் பெண்கள் உரிமைகள் மறுக்கப்படுவதும் மிதிக்கப்படுவதும் அறிவிலிகளின் செயலாகவே கருதலாம். பெண்களின் முன்னேற்றம் பெண்களிலிலேயே தங்கியிருக்கிறது என்பதுதான் உண்மையாகும். "பெண்ணை மதிப்போம் மதியாதோரை மிதிப்போம்" இருபாலரும் என்றும் சமமே என்று எப்போதும் எடுத்துரைப்போம்!...

# 50 - வெள்ளிவிழா நாயகர்கள்

"தனிமரம் தோப்பு ஆகாது" என்று தமிழில் ஒரு பழமொழி இருந்தாலும் சில தனிமரங்கள் தனியாகவே நின்று இந்த மானிடருக்கு அதிக பலனைக் கொடுப்பதும் சிறப்பாகும். இதேபோல்தான் சில மனிதர்களின் மனங்களும். பலர் ஒன்று சேர்ந்து செய்யமுடியாத விடையங்களை தனியே நின்று சாதித்துச் சாதனை படைத்தவர்களும் படைத்துக் கொண்டிருப்பவர்களும் நம் முன்னே வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இதனால்தான் என்னவோ "பல எலிகள் சேர்ந்தால் புத்தெடுக்க மாட்டன" எனவும் நம் மொழியில் ஒரு பழமொழியும் உண்டுதான்.

என்னோடு வாழ்ந்துகொண்டிருக்கும் நான்கு பேரை, நல்ல மனங்களை, ஒருவகையில் சாதனை புரிந்து கொண்டிருப்பவர்களை இங்கு பதிவு செய்கிறேன். இவர்கள் அனைவரும் வைரவிழாக்கண்ட வயதினர். வெள்ளிவிழாக்கண்ட பொதுச் சேவையாளர்கள். தாம் சார்ந்த, தமிழ்மொழி சார்ந்த பொதுச் சேவையில் இவர்களின் பங்கு அதாவது புலம்பெயர் தமிழர் வரலாற்றில் சரித்திரத்தில் பதியப்படுவதாக நான் எண்ணுகின்றேன்.

தனியாக நின்று பொதுச் சேவை செய்வது என்பது எவ்வளவு கடினமான விடையம் என்பதை நானும் வெள்ளிவிழாக் கண்ட பொதுச் சேவையாளன் என்ற வகையில் பல விடையங்களை அனுபவித்து அறிந்துகொண்டிருக்கிறேன். அவர்களின் மனங்கள் பட்ட வேதனைகள், சோதனைகள், எதிர்ப்புகள், சோகங்கள், துக்கங்கள், நட்டங்கள், இழப்புக்கள் எனப் பல்வேறு துன்பியல் சம்பவங்களைச் சந்தித்து வந்திருக்கிறார்கள். பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டுதான் பல சாதனைகளைப் புரிந்து வருகிறார்கள். பெயர், புகழ், பதவி, பணம் என்ற போதைகளுக்கு அடிமையாகாமல் அர்ப்பணிப்புடன் தம் பணிகளைச் செய்து வருகிறார்கள். நெஞ்சில் மன உறுதிகொண்டு, எடுத்த காரியம் சரிவர திறம்படச் செய்து முடிக்க வேண்டும் என்ற இலக்கு இவைதான் அவர்களின் தாரக மந்திரம்.

எதிர்காலத்தில் நம்சமூகத்தின் விழுமியங்கள் பதையுண்டு அழிவுண்டு சென்றுவிடக்கூடாது என்ற தூரநோக்கில் செயற்படுபவர்கள்தான் இவர்கள் போன்ற உத்தமர்கள். நான் இங்கு குறிப்பிட்ட நால்வரையும் பற்றித் தனிப் புத்தகமே எழுதலாம். ஆனால் நேரம், காலம் கருதிச் சுருக்கமாகச் சில விடையங்களை அவர்களின் நல் மனங்களை இங்கு பதிவு செய்துள்ளேன்.

யேர்மனியின் தமிழ்க் கல்விச் சேவையின் தலைவரும் எனது நண்பருமான தமிழ்மணி திரு பொ.சிறீஜீவகன் அவர்களைக் குறிப்பிடுகின்றேன். மகாகவி பாரதியைப் போல் அஞ்சா நெஞ்சுறுதிகொண்டவர். துணிந்து செயலாற்றுபவர். எடுத்தகாரியம் திறம்படச் செய்து முடிப்பவர். இப்படிப்பட்ட பல ஆளுமைமிக்கவர். கல்வியே உயிர் மூச்சாகக் கொண்டு உழைப்பவர். ஐரோப்பா வாழ் தமிழ்ச் சந்ததிக்காக கடந்த முப்பது வருடங்களாக உழைத்து வருபவர். கடந்த முப்பது வருடங்களாக யேர்மனி (ஐரோப்பா) தமிழ்க் கல்விச் சேவையின் தலைவராக, பொறுப்பாளராகச் செயற்பட்டு பல்லாயிரம் சிறார்களின் கல்வி வளர்ச்சியில் பெருந்தொண்டாற்றிவருகின்றார் இவை மட்டுமா..சிறந்த கல்வியாளர் பேச்சாளர், எழுத்தாளர், கவிஞர், இலக்கியவாதி, ஆய்வாளர், விமர்சகர், பொதுச் சேவையாளர். மேலாக மனிதநேயச் செயற்பாட்டாளர் எனப்பலவகை ஆளுமைகொண்ட பண்பாளராக இருந்து வருகின்றார். இருபத்தைந்து வருடங்கள் கடந்து என்னோடு அளவில்லா நட்புக்கொண்டு இருவரும் ஒருமித்துப் பயணம் செய்கிறோம் என்றால் அவரின் மனம் குணம்தான் காரணமாகும் என்பது சிறப்பான விடையமாகும்.

அடுத்து யேர்மனியில் வெளிவரும் "வெற்றிமணி" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் அவர்கள். இவரும் பத்திரிகைப்பணியில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகள் கடந்தவராவர். இவரும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக என்னோடு அன்பாகப் பழகிவரும் சிறந்த ஊடகவியலாளராவர். சிறந்த மனம் திறந்த மனம்படைத்த மனிதரான இவர் ஐரோப்பிய தமிழ் ஊடகப் பரப்பில் தனக்கென ஒரு அடையாளத்தைப் பதித்தவர். பல நூற்றுக்கணக்கான எழுத்தாளர்களை வெளி உலகத்திற்குக் காட்டியவர். தமிழ் இளையோரை எழுதத் தூண்டி தாய்மொழி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்துவருபவருமாவர்.

இவரின் பத்திரிகைப் பணியில் தமிழ், கலை, இலக்கியம், நாடகம், சமயம், நடனம், பல்சுவை அம்சங்களுடன் தமிழர்களின் வாழ்வியலோடு, பாரம்பரிய வரலாறுகளையும் எடுத்துரைத்துக் கொண்டிருப்பவர். யேர்மனி, இங்கிலாந்து, கனடா, என மூன்று நாடுகளிலும் ஒரே தடவையில் மாதாமாதம் வெற்றிமணி பத்திரிகையை வெளியிட்டு வருகின்றார். இதுவும் ஒரு சாதனை என்றே கூறலாம். வளர்ந்துவரும் இளையோரின் கல்வி, கலை, முத்தமிழ், ஆன்மீகம் என அவரின் பணிகள் சிறப்புப் பெறுகின்றன. மேலாக அடிக்கடி தாயத்துக்குச் சென்றும் கல்வி,கலை சமூகப்பணிகளையும் மனித நேயப்பணிகளையும் செய்துவரும் நல்ல மனம்படைத்த நீண்டகால ஊடக நண்பராவர். இப்படிப்பட்ட நல் மனங்களின் நட்புக் கிடைத்தது எனக்குப் பெரும் கொடையாகவே கருதுகின்றேன்.

அடுத்து என் மனதில் இடம்பிடித்துக் கொண்டவர் லண்டனில் வசித்துக்கொண்டிருக்கும் அன்புக்குரிய ஊடகவியலாளர், நூலகவியலாளர், ஆவணக்காப்பாளர் நண்பர் செல்வராசா அவர்களே அவர் இந்த நூலகப் பணியைச் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றிக் கொண்டிருக்கிறார். இவர் செய்து வரும் பணிகளை இதுவரை எந்தத் தமிழனும் செய்யவில்லை என்பது சிறப்பாகும். உலகமெல்லாம் பரந்து வாழும் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களைப் பதிவு செய்யும் முயற்சியாக 2002ல் இங்கிலாந்தில் தொடங்கப்பட்ட "நூல்த்தேட்டம்" என்ற நூல் விபரப்பட்டியல் வெளியீட்டு முயற்சி 2017 வரை 11 தொகுதிகளைக் கண்டு 11.000 ஈழத்துத் தமிழ் நூல்களைப் பற்றிய வரலாற்று தகவல்களைத் தன்னகத்தே கொண்டு நிற்கின்றது. 12ம் 13ம் தொகுதிகள் பதிவுக்குட்பட்டு 13.000 நூல்களின் விபரங்களை தமிழ் உலகத்திற்கு எடுத்துக்காட்டிப் பதிவாக்கிய பெருமை இவரையே சாரும்.

இவரோடு கடந்த 17 - 18 வருடங்களாக நான் தொடர்போடு இருப்பதால் இவரின் நல் மனதையும் இங்கே குறிப்பிட்டேன். பணம் பொருள் நேர விரயங்களைத்தாண்டி, அர்ப்பணிப்போடு கனடா, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பா, இலங்கை என இப்பணிக்காக இவர் சென்றுவந்த நாடுகளோ பல.அந்த நாடுகளுக்குச் சென்று அழிந்த,

புதைந்த தமிழ் நூல்களைத் தேடி எடுத்து அவைகளைப் புதுப்பித்து, பதிப்பித்து ஆவணப்பதிவாக்கி அருந்தொண்டாற்றி வருகின்றார். இவரின் பணியை இன்று தமிழுலகம் பாராட்டுகின்றது மெச்சுகின்றது.

அடுத்து எனது மனதில் இடம்பிடித்துக் கொண்டவர் லண்டன் தமிழ் வானொலி அதிபர் திரு.நடா மோகன் அவர்கள். இவரும் ஒரு நல் மனம் படைத்த ஊடகவியலாளராவர். ஐரோப்பாவின் வானொலி வரலாற்றில் சாதனை படைத்த நாயகன். இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து தமிழர்கள் புலம்பெயர் தேசமான லண்டனில் வானொலிச் சேவையைத் தொடங்கி இன்றுவரை பணியைத் தொடர்ந்து கொண்டே இருக்கிறார். புலம்பெயர் தமிழர் வரலாற்றில் இவ்வளவு ஆண்டுகள் உலகப்பரப்பில் வானொலியைத் தொடர்ந்து நடாத்திய பெருமை இவரையே சாரும். இவரின் பணியால் ஆயிரக்கணக்கான சிறுவர்கள், இளையோர் தாய்மொழியோடு பிற மொழிகளிலும் தேர்ச்சி பெற்று வருகிறார்கள். ஆளுமை மிக்க இளம் தலைமுறையை உருவாக்கி வருகின்றார். வானொலியின் நேயர்கள் பலர் 1000 பாடல்களை எழுதியிருக்கிறார்கள். 1000 பாடல்களைப் பாடியிருக்கிறார்கள் 1000 கவிதைகளை எழுதியிருக்கிறார்கள். இவற்றைவிட இசையமைப்பு, நடிப்பு, ஆடல், பாடல் எனப் பலதுறைகளில் பல்லாயிரம்பேரை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

நானும் இந்த வானொலியில்தான் ஐந்நூறுக்கும் அதிகமான கவிதைகளையும், கட்டுரைகள், சிறுகதைகள் என எழுதி வளர்ந்தேன் என்பதும் உண்மையான விடையமாகும். அவரை வாழ்த்துகிறேன் பாராட்டுகிறேன். இவரை நான் ஒரு ஆளுமைமிக்க ஊடகவியலாளராகவே பார்க்கிறேன். பாராட்டுக்கும் புகழுக்கும் அலைந்து திரியும் இன்றைய தமிழ் உலகில் இவர் ஒரு வித்தியாசமான மனிதர். தூரநோக்குப் பார்வை கொண்ட, மனிதநேயம் மிக்க சிறந்த மனிதராகவே நான் இனங்கண்டுள்ளேன்.

இப்படியாக இந்த நால்வரும் எனது நண்பர்களாக இருந்தாலும் இவர்களின் பணிகள் தமிழர் வாழ்வியல் வரலாற்றில் அழிக்கமுடியாத இடத்தைப் பெற்றிருப்பது சிறப்பே. இந்த நல்ல மனம்படைத்த நால்வரையும் இவ்வேளையில் பாராட்டுகின்றேன். போற்றுகின்றேன்.

# நன்றி பகல்கிறேன்!...

இந்நூலை உருவாக்க என்னோடு உறுதுணையாக இருந்த என் மனைவி பிள்ளைகள் மருமக்களுக்கு முதற்கண் நன்றிகள்.

- வாழ்த்துரை தந்த மூத்த எழுத்தாளரும் முன்னாள் அரசாங்க அதிபர், கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளருமான திரு உடுவை தில்லைநடராசா,(கொழும்பு) ஆசியுரை வழங்கிய எனது பயிற்சிக்கல்லூரி ஆசான் , யாழ் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளரும் சமாதான நீதவானுமாகிய திரு இ.இரட்ணம், (யாழ்ப்பாணம்) அணிந்துரை வழங்கிய எழுத்தாளரும் முன்னாள் ஆசிரிய ஆலோசகருமான திரு.க.அருந்தவராசா (சுவிஸ்லாந்து) ஆகிய பெருந்தகைகளுக்கு நன்றிகள்.

- வாழ்த்துரை வழங்கிய ஜேர்மனி எழுத்தாளர் சங்கத்தலைவரும் கவிஞருமான திரு அம்பலவன் புவனேந்திரன் அவர்களுக்கும் ஒத்தாசைகள் புரிந்த உறுப்பினர்களுக்கும் நன்றிகள்.

- கணனியில் சில ஆக்கங்களை அச்சுப்பதிவு செய்து உதவிய யேர்மனிய எழுத்தாளர்கள் திருமதி கெங்கா ஸ்ரான்லி, திருமதி கலைவாணி ஏகானந்தராசா ஆகியோருக்கும் நன்றிகள்.

- கணனியில் ஆக்கங்களை அழகாக வடிவமைத்து அட்டைப்படத்தை வடிவமைத்து தமது நிதியிலேயே இம்மலரை அச்சுப்பதிவு செய்துதந்த எனது மூன்று பிள்ளைகளுக்கும் (சிவதர்சினி, சிவாஸ்கர், சிவகாந்த்) பெரு நன்றிகள்.

- இந்த நூலை வெளியீடு செய்வதற்கு அனுசரணை வழங்கிய யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம், யேர்மனி மண் சஞ்சிகையினருக்கும் நன்றிகள்.

- இந்நூலை வாசித்துப் பயன்பெற இருக்கும் வாசகப் பெருமக்களுக்கும் எனது இதயம் கனித்த நன்றிகளும் வாழ்த்துக்களும்.

- ஆசிரியர் -

# மனிதரில் எத்தனை நிறங்கள்



## வையிரமுத்து சிவராசா யேர்மனி

தாயகத்தில் பிறந்த ஊர் நாவற்குழி-கிழக்கு (வேலம்பராய் என்னும் சிற்றூர்) வாழ்ந்த ஊர் முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி துணுக்காய். கல்விபயின்றபாடசாலை யாழ்.: நாவற்குழி மகாவித்தியாலயம். துறைகள்:- சிறுகதை, கட்டுரை, கவிதை, எழுத்து, மற்றும் கலை, இலக்கியம், கல்வி, விளையாட்டு, சமூகப்பணிகள். தாயகத்தில்... கூட்டுறவுத்துறையில் பத்துவருடங்கள் கடமையாற்றியுள்ளார் (1973 - 1983).

யாழ் ஈழநாடு பத்திரிகையின் வன்னிப்பிராந்தியச் செய்தியாளர் (1973-1983) தாயகத்தில் 10 வருடங்கள் புலம்பெயர் நாடான யேர்மனியில் 35 வருடங்கள் மொத்தம் 45 வருடங்கள் வானொலி, பத்திரிகை, சஞ்சிகை, தொலைக்காட்சி என ஐரோப்பா, கனடா, இலங்கை, இந்தியா, மலேசியா நாடுகளில் வெளிவரும் தமிழ் ஊடகங்களுக்கு எழுதி வருகிறார்.

கடந்த 30 ஆண்டுகளாக யேர்மனியில் 'மண்' என்ற பெயர்கொண்ட கல்வி, கலை, இலக்கிய, சமூக சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகக் கடந்த 20 வருடங்களாகக் கடமையாற்றியுள்ளார்.